# வரலாறு

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

2003 – 04 கல்வியாண்டில் வெளியிடப்பட்ட
பாடத்திட்டப்படி, பாடநூல் மேம்பாட்டுக் குழுவின்
பரிந்துரைக்கிணங்க இந்நூல் புதியதாக தயாரிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் கழகம்
கல்லூரிச் சாலை, சென்னை–600 006.

© தமிழ்நாடு அரசு
முதல்பதிப்பு – 2007

**குழுத்தலைவர்**

முனைவர் **ச.திருவேங்கடம்**
இணைப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை–600 030.

**மேலாய்வாளர்**

முனைவர் **க.விஜயா**
விரிவுரையாளர் (தேர்வுநிலை) வரலாற்றியல் துறை
காயிதேமில்லத் மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)
சென்னை–600 002.

**நூலாசிரியர்கள்**

**திருமதி மா.முத்துமாரி**
முதுகலை பட்டதாரி ஆசிரியை (வரலாறு)
பெருந்தலைவர் காமராஜர்
அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
அம்பத்தூர்,
சென்னை – 600 053.

**திரு வி.ஜபர் அஹமத்**
முதுகலை உதவி தலைமை ஆசிரியர் (வரலாறு)
முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி
திருவல்லிகேணி,
சென்னை – 600 005.

**விலை ரூ.**

பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக் கல்வி இயக்ககம் தமிழ்நாடு.

இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

# முகவுரை

2005–2006 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிப் பாடப் புத்தகங்களை சீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பெற்றோர்கள், வல்லுநர்கள், ஆசிரியர்கள், கல்வித் துறையில் ஆர்வம் உள்ள ஊடகங்கள் தமிழக அரசிடம் முன் வைத்தது. கல்வி வளர்ச்சியில் என்றும் தனிக்கவனம் செலுத்தும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உடனடியாக பாடப்புத்தகங்களைச் சீரமைப்பதற்கு மாநிலத்திட்டக்குழுத் துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர்கள் குழுவை அமைத்தார்.

பாடப்புத்தகங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், கல்லூரி பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், பாடத் திட்டக் குழுவின் தலைவர்கள் ஆகியோரிடம் பாடத்திட்டம், பாடப் புத்தகம் பற்றிய கருத்துக்கள் பெறப்பட்டன. இவ்வாறாக பெறப்பட்ட கருத்துக்களை ஆய்வு செய்து பாடதிட்டங்களில் எந்தவித மாறுதலையும் செய்யாமல் பாடப்புத்தகங்களை மேம்படுத்துவதற்கு பரிந்துரைகளை இக்குழு அரசிற்கு அளித்தது.

இதில் குறிப்பாக வரலாறு பாடப் புத்தகங்களை புதிதாக எழுத வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அனுபவம் வாய்ந்த நல்லாசிரியர்களைக் கொண்டு இப்புத்தகம் புதிதாக எழுதப்பட்டுள்ளது.

இம்முயற்சிக்கு உறுதுணையாகயிருந்து ஊக்குவித்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பணி சீர்பெற அமைவதற்கு பல்வேறு வகையில், பல்வேறு நிலைகளில் உதவி புரிந்த பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர்கள், பாடப்புத்தகக் குழுவின் தலைவர்கள், மறு ஆய்வு செய்த வல்லுநர்கள், மாநிலத் திட்டக் குழு மற்றும் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய பாட புத்தகத்தை மாணவர்கள் நன்று பயின்று, சிறந்த முறையில் தேர்வில் வெற்றி பெற எனது வாழ்த்தினை தெரிவிக்கிறோம்.

**பேராசிரியர் மு.நாகநாதன்**
தலைவர்
பாடநூல் மேம்பாட்டுக் குழு
தமிழ்நாடு அரசு



# முன்னுரை

பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்புவரை வரலாற்றுப் பாடம் சமூக அறிவியலின் ஒரு பகுதியாகவே இடம் பெற்றுள்ளது. இந்திய வரலாற்றின் முக்கிய போக்குகளும் நிகழ்வுகளும் மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டன. மாணவர்கள் மேல் நிலை வகுப்புகளுக்கு வரும்போது வரலாற்றை முறையாகக் கற்க வேண்டியுள்ளது. அப்படி கற்பதன் மூலம் இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். சமய சார்பற்ற மதிப்பீடுகளும் எதிர்காலம் குறித்த முற்போக்கான பார்வையும் அவர்களுக்கு கிடைக்கின்றன.

இந்திய வரலாற்றின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களுக்கு எடுத்தியம்புவதே இந்த நூலின் நோக்கமாகும். பதினொன்றாம் வகுப்பு பாடத்திட்டத்தின்படி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. ஐரோப்பியர் வருகை வரையிலான பண்டைய மற்றும் இடைக்கால இந்திய வரலாறு இதில் இடம் பெற்றுள்ளது.

வரலாற்று உண்மைகளைக் கூறும்போது போதிய கவனம் செலுத்தப்பட்டிருப்பதுடன், புகழ்வாய்ந்த வரலாற்று அறிஞர்களின் தரமான வரலாற்று நூல்களிலுள்ள கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. சமீபத்திய வரலாற்றுத் தகவல்களும் பாடங்களில் இடம்பெற்றுள்ளன.

நமது நாட்டின் அரசியல் புவியியல் தன்மைகள், பண்பாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை புரிந்து கொள்ள ஏதுவாக வரைபடங்களும், உருவப்படங்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வினாக்கள் பொதுத்தேர்வு வினாத்தாள் வடிவத்திலானவை. அத்தகைய வினாக்கள் தேர்வுக்கு கேட்கப்படும் என்பதால் மாணவர்கள் பாடப்புத்தகம் முழுவதையும் நன்கு படித்து அறியவேண்டும்.

இந்நூலை உருவாக்குவதற்கு உதவியாக இருந்த குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

**முனைவர் ச.திருவேங்கடம்**
பாடக்குழுத் தலைவர்
வரலாறு.
மேல்நிலை முதலாம் ஆண்டு.

# மேல்நிலை–முதலாம் ஆண்டு – வரலாறு
# பாடத்திட்டம்

பாடவேளை

அலகு 1

1. இந்திய வரலாற்றில் புவியிலின் தாக்கம் – வேற்றுமையில் ஒற்றுமை 5
2. கற்காலம் – பழைய கற்காலம் – புதிய கற்காலம் – உலோகக் காலம் – ஹரப்பா நாகரிகத்தின் சிறப்பு கூறுகள் 5
3. வேதகாலம் – சான்றுகள் – முந்திய வேதகாலம் (இருக்கு வேதகாலம்) – பிந்திய வேதகாலம் – காப்பியக்காலம் – சமூகபொருளாதார பண்பாட்டு வாழ்க்கை 5

அலகு 2

4. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலைமை – மகதப் பேரரசு 5
5. சமண, சமயத்தின் எழுச்சி – மகாவீரர் – சமணக் கொள்கைகள் – திகம்பரர் ஸ்வேதாம்பரர் பிரிவுகள் – பரவல் – தொண்டுகள் 5
6. புத்த சமயத்தின் எழுச்சி – புத்தக் கொள்கைகள், ஹீனயான, மகாயான பிரிவுகள் – புத்த சமயத்தின் பரவல் – தொண்டுகள் – இரு சமயங்களின் ஒற்றுமை வேற்றுமைகள் 5

அலகு 3

7. மௌரியர்களுக்கு முன் இந்தியா – நந்தர்கள் – பாரசீகப் படையெடுப்பு – அலெச்சாண்டரின் படையெடுப்பும் விளைவுகளும் 5



8. மௌரியர்கள் – சான்றுகள் – சந்திரகுப்தர் – அசோகர் மௌரியர் ஆட்சிமுறை – அசோகரின் தர்மம் – கலை, கட்டிடக்கலை வளர்ச்சி – மௌரியரின் வீழ்ச்சி 10

அலகு 4

9. மௌரியர்களுக்குப்பின் இந்தியா – சுங்கர்கள் – சாதவானர்கள் – குஷானர்கள் – கனிஷ்கர் – காந்தாரக்கலை 10
10. தமிழ்நாட்டு வரலாற்றில் சங்ககாலம் – சான்றுகள் அரசுகள் பற்றிய சுருக்கம் – மக்களின் சமூக சமய பொருளாதார வாழ்க்கை 5

அலகு 5

11. குப்தர்கால இந்தியா – ஆட்சிமுறை – சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள் – ஹுணப் படையெடுப்பும் குப்தர்கள் வீழ்ச்சியும் 10
12. ஹர்ஷ வர்த்தனர் – சான்றுகள் – சமூக, சமய, பண்பாட்டு வாழ்க்கை 5

அலகு 6

13. தென்னிந்திய அரசுகள் 15
    1. பல்லவர்கள் – சான்றுகள் – ஆட்சிமுறை – சமூகப் பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள்
    2. சாளுக்கியர்கள் – கலை வளர்ச்சி
    3. இராட்டிரடகூடர்கள் – கலைத்தொண்டு
    4. சோழர்கள் – சமூகம், பொருளாதர பண்பாட்டு நிலைமைகள்
14. ஆசியநாடுகளுடன் இந்தியா கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பு 5

அலகு 7

15. அரேபியப் படையெடுப்பின்போது இந்தியா – இராசபுத்திர அரசுகள் – அரேபியப் படைபெடுப்புகள் – கஜினி மாமூது – முகம்மது கோரி — 10

16. டெல்லி சுல்தானியர்கள் – அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி மரபுகள் பற்றிய சுருக்கம் – நிர்வாகம் — 20

17. டெல்லி சுல்தானியர்களின் ஆட்சியின் கீழ் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள்

அலகு 8

18. இடைக்கால இந்தியாவின் பக்தி இயக்கம் – இராமானுஜர் – கபீர் – வல்லபாச்சாரியார் – சைத்தன்யர் – குருநானக் – மீராபாய் – சூபி இயக்கம் — 10

19. விஜயநகர பாமினி அரசுகள் – சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள் — 10

அலகு 9

20. முகலாயப் பேரரசு – முகலாய, சூர் மரபு அரசு ஆட்சியளர்களைப் பற்றிய சுருக்கம் — 15

21. முகலாயர் ஆட்முறை – பேரரசு – மைய நிர்வாகம் – அலுவலர்கள் – மாநில நிர்வாகம் – அலுவலர்கள் – பணிகள்

22. முகலாயர்கால சமூக, பொருளாதார, சமய, பண்பாட்டு நிலைமைகள் – முகலாயர் வீழ்ச்சி — 10

அலகு 10

23. மராத்தியர் எழுச்சி – சிவாஜி – ஆட்சிமுறை – பேஷ்வாக்கள் — 10

24. இந்தியாவிற்கு ஐரோப்பியர்கள் வருகை – இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்படுதல். — 10



# பொருளடக்கம்

## நவீன இந்திய வரலாறு


| பாடம் எண். | | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | இந்தியாவின் புவியியல் கூறுகளும் வரலாற்றில் அவற்றின் தாக்கமும் | 1 |
| 2. | வரலாற்றுக்கு முந்தைய கால இந்தியாவும் ஹரப்பா பண்பாடும் | 12 |
| 3. | வேத காலப் பண்பாடு | 30 |
| 4. | சமண, புத்த சமயங்கள் | 40 |
| 5. | மகதத்தின் எழுச்சியும், அலெக்சாந்தரின் படையெடுப்பும் | 51 |
| 6. | மௌரியப் பேரரசு | 63 |
| 7. | மௌரியருக்குப் பிந்தைய கால இந்தியா | 80 |
| 8. | சங்க காலம் | 91 |
| 9. | குப்தப் பேரரசு | 103 |
| 10. | ஹர்ஷ வர்த்தனர் (கி.பி. 600 – 647) | 121 |
| 11. | தென்னிந்திய அரசுகள் - I பல்லவர்கள் | 131 |
| 12. | தென்னிந்திய அரசுகள் - II சாளுக்கியர்கள், இராஷ்டிரகூடர்கள் | 142 |
| 13. | பேரரசுச் சோழர்கள் | 152 |
| 14. | ஆசிய நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவுதல் | 166 |
| 15. | முந்தைய இடைக்கால இந்தியா | 175 |
| 16. | டெல்லி சுல்தானியம் | 185 |

| | | |
|---|---|---|
| **17.** | டெல்லி சுல்தானியத்தின்கீழ் இந்தியா | 205 |
| **18.** | இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கம் | 216 |
| **19.** | விஜயநகர், பாமினி அரசுகள் | 226 |
| **20.** | முகலாயப் பேரரசு | 238 |
| **21.** | முகலாயரின் கீழ் இந்தியா | 258 |
| **22.** | மராட்டியர்கள் | 269 |
| **23.** | ஐரோப்பியரின் வருகை | 279 |

# பாடம் – 1

# இந்தியாவின் புவியியல் கூறுகளும் வரலாற்றில் அவற்றின் தாக்கமும்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *இந்தியாவின் புவியியல் கூறுகள்*
2. *இமாலய மலைகளும் இந்திய வரலாற்றில் அவற்றின் தாக்கமும்*
3. *கங்கைச் சமவெளியும் இந்திய வரலாற்றில் அதன் பங்கும்*
4. *தெற்கத்திய தீபகற்பம் – தென்னிந்திய வரலாற்றில் அதன் தாக்கம்*
5. *இந்தியாவில் காணப்படும் வேற்றுமையில் ஒற்றுமை*

பொதுவாக வரலாற்றுக்கு இரு கண்கள் உண்டு எனக் கூறுவர். ஒன்று காலம். மற்றொன்று புவியியல் அமைப்பு. வரலாற்றின் போக்கை பெரும்பாலும் காலமும் இடமும் நிர்ணயிக்கின்றன என்றும் கூறலாம். குறிப்பாக, ஒரு நாட்டின் வரலாற்று நிகழ்வுகளை அதன் புவியியல் கூறுகளே பெரிதும் நிர்ணயிக்கின்றன. இந்திய வரலாற்றிலும் புவியியலின் தாக்கத்தை காணலாம். எனவே, இந்தியாவின் புவியியல் கூறுகளை அறிந்து கொள்வதன்மூலம் அதன் வரலாற்றை தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

இந்தியத் துணைக்கண்டம் ஒரு தெளிவான புவியியல் அமைப்பைக் கொண்டுள்ளது. இமாலய மலைகள், இந்தோ–கங்கைச் சமவெளி தென்னிந்திய தீபகற்பம் என அதனை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். இத்துணைக் கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், பூட்டான் என்ற ஐந்து நாடுகள் உள்ளன. அவற்றில் இந்தியாவே பெரியதாகும். 28 மாநிலங்களையும் 6 யூனியன் பிரதேசங்களையும் கொண்டதாக அது விளங்குகிறது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியாவின் மக்கள் தொகை நூறு கோடிக்கு மேலாகும்.

**இமாலய மலைகள்**

இந்தியாவின் வடக்குப் பகுதியில் இமாலய மலைகள் அமைந்துள்ளன. இந்தியாவின் வடமேற்குக் கோடியிலுள்ள பாமிர் முடிச்சில் தொடங்கும் இது கிழக்காக நீண்டு கிடக்கிறது. இதன் நீளம் கிட்டத்தட்ட 2560 கிலோ மீட்டர்களாகும். சராசரி அகலம் 240 முதல் 320 கிலோ மீட்டர்களாகும். இமாலயத்தின் மிக உயரமான சிகரம் எவெரெஸ்ட் எனப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து இதன் உயரம் 8869 மீட்டர்களாகும். சைபீரியாவிலிருந்து மத்திய ஆசியா வழியாக வீசும் கடும் குளிர்காற்றிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் இயற்கை அரணாக இமய மலைகள் திகழ்கின்றன. இதனால், இந்தியாவின் தட்பவெப்பம் ஆண்டு முழுவதும் சீரான வெப்பத்துடன் காணப்படுகிறது. குளிர்காலத்தில் இமாலயப் பகுதியில் பனிமூடிக்கிடக்கிறது, எனவே இதன் பெரும்பகுதி வாழ்வதற்கேற்றதாக இல்லை.

படையெடுப்புகளிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் இயற்கைத் தடுப்பாக இமயமலைகள் இருந்துவந்தன என்ற கருத்து நீண்டகாலமாக நிலவி வருகிறது. ஆனால், வடமேற்கு மலைகளில் காணப்படும் சைபர், போலன், குர்ரம், கோமல் போன்ற கணவாய்கள் இந்தியாவையும் மத்திய ஆசியாவையும் இணைக்கும் எளிய வழித்தடங்களாக அமைந்துள்ளன. இந்துகுஷ், சுலைமான், கிர்தார் மலைத்தொடர்களில் இக்கணவாய்கள் உள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இக்கணவாய்கள் மூலம் போக்குவரத்து நடைபெற்றன. படையெடுப்பாளர்களும், குடியேறிகளும் இக்கணவாய்கள் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர். இந்தோ–ஆரியர்கள், இந்தோ–கிரேக்கர்கள், பார்த்தியர்கள், சாகர்கள், குஷானர்கள், ஹூணர்கள், துருக்கியர்கள் போன்றோர் இக்கணவாய்கள்மூலமே இந்தியா வந்தனர். இப்பகுதியிலுள்ள ‘ஸ்வாத்’ பள்ளத்தாக்கும் ஒரு முக்கிய வழித்தடமாகும். மாசிடோனியாவின் அலெக்சாந்தர் இவ்வழியாகத்தான் இந்தியாமீது படையெடுத்தார். படையெடுப்பாளர்களைத் தவிர, சமயப் பரப்பாளர்களும், வணிகர்களும்கூட இவ்வழித்தடங்கள் மூலமாக இந்தியாவுக்கு வந்தனர். எனவே, இந்தியாவிற்கும் மத்திய ஆசியாவிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்புக்கும் பண்பாட்டுத் தொடர்புக்கும் வடமேற்கு மலைகளிலுள்ள கணவாய்கள் வழிவகுத்தன.



காஷ்மீருக்கு வடக்கே காரகோரம் மலைத்தொடர் உள்ளது. உலகின் இரண்டாவது உயர்ந்த சிகரமான மவுண்ட் காட்வின் ஆஸ்டின் இங்குதான் உள்ளது. இமயமலையின் இப்பகுதியிலுள்ள கணவாய்கள் உயரமாகவும் குளிர்காலத்தில் பனி படர்ந்தும் காணப்படுகின்றன. கில்ஜித் வழியாக மத்திய ஆசியாவிற்கு செல்லும் காரகோரம் பெருவழியும் இங்குள்ளது. ஆனால் இத்தடத்தில் மிகக் குறைவான போக்குவரத்தே நடைபெறுகிறது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு உயர்ந்த மலைகளால் சூழப்பட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு கணவாய்கள் மூலம் இப்பள்ளத்தாக்கை சென்றடையலாம். பண்பாட்டிலும் பாரம்பரியத்திலும் காஷ்மீர் பள்ளத்தாக்கு தனிச்சிறப்புடன் திகழ்கிறது. இமாலய மலைகளின் அடிவாரத்தில் நேபாளம் உள்ளது. கங்கைச் சமவெளியிலிருந்து பல்வேறு கணவாய்கள் மூலம் நேபாளத்தை சென்றடையலாம்.

கிழக்கே அஸ்ஸாம் வரை இமயமலைகள் நீண்டு கிடக்கின்றன. பாட் கோய், நாகாய், லுஷாய் போன்ற மலைத்தொடர்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. கடும் மழைக்கும் அடர்ந்த காடுகளுக்கும் இவை பெயர் பெற்றவை. ஆனால், வாழ்வதற்கான சூழல் மிகவும் குறைவே. வடகிழக்கு இந்தியாவின் மலைகளைக் கடந்து செல்வதும் எளிதல்ல. எனவே, இப்பகுதி பெரும்பாலும் தனித்தே காணப்படுகிறது.

**இந்தோ – கங்கைச் சமவெளி**

கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா ஆகிய மூன்று முக்கிய நதிகள் பாயும் பகுதியே இந்தோ–கங்கைச் சமவெளி என்று அழைக்கப்படுகிறது. ஆறுகளில் அடித்து வரப்படும் கரிசல் மண் மிகப்பரந்த இந்த நிலப்பரப்பில் படிவதால் வளம் மிக்க விளை நிலங்கள் இங்குள்ளன.

இமய மலைகளுக்கு அப்பால் சிந்து நதி உற்பத்தியாகிறது. ஜுலம், சீனாப், ராவி, சட்லெஜ், பியாஸ் ஆகியன இதன் முக்கிய கிளை நதிகளாகும். சிந்து நதியால் மிகவும் பயன்பெறுவது பஞ்சாப் சமவெளியாகும். பஞ்சாப் என்ற சொல்லுக்கு ஐந்து நதிகள் பாயும் பகுதி என்று பொருள். சிந்துப் பள்ளத்தாக்கின் கீழ்ப்புறத்தில் சிந்து மாகாணம் அமைந்துள்ளது. சிந்துப் பள்ளத்தாக்கு மிகவும் வளமான நிலங்களைக் கொண்டுள்ளது.

சிந்து பள்ளத்தாக்கிற்கும், கங்கைச் சமவெளிக்கும் இடையே தார்ப்பாலைவனமும், ஆரவல்லி குன்றுகளும் உள்ளன. ஆரவல்லி குன்றுகளில் மவுண்ட் அபு மிகவும் உயரமானதாகும் (5650 அடி) இமயமலைகளில் உற்பத்தியாகும் கங்கை நதி தெற்காக ஓடி பின்னர் கிழக்கு நோக்கி பாய்கிறது. கங்கை நதிக்கு இணையாக ஓடிவரும் யமுனை நதி பின்னர் அதனுடன் ஒன்று கலக்கிறது. இவ்விரு நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி 'தோஆப்' என்று அழைக்கப்படுகிறது. கோமதி, சரயு, காக்ரா, காண்டக் போன்றவை கங்கைநதியின் முக்கிய துணைநதிகளாகும்.



தார் பாலைவனம்

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் கங்கைச் சமவெளியும் பிரம்மபுத்திரா சமவெளியும் ஒன்றிணைகின்றன. இமய மலைகளுக்கு அப்பால் உற்பத்தியாகும் பிரம்மபுத்திரா நதி திபெத் வழியாகப் பாய்ந்து இந்தியாவின் வடகிழக்குச் சமவெளியை அடைகிறது. சம வெளியில் மெள்ள ஊர்ந்து செல்லும் இந்நதியின் பரப்பு மிகவும் விரிவடைந்திருப்பதோடு, பல தீவுகளையும் கொண்டுள்ளது.

நகரமையங்கள் உருவாவதற்கு இந்தோ – கங்கைச் சமவெளி பெரும்பங்காற்றியுள்ளது. குறிப்பாக, நதிக்கரைகளிலும், இரு நதிகள் ஒன்று சேருமிடத்திலும் இத்தகைய நகரமையங்கள் தோன்றி வளர்ந்தன. சிந்து சமவெளியில் ஹரப்பா பண்பாடு செழித்தோங்கியது. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் வேதகாலப் பண்பாடு சிறந்து விளங்கியது. பனாரஸ், அலகாபாத், ஆக்ரா, டெல்லி, பாடலிபுத்திரம் போன்றவை கங்கைச் சமவெளியில் தோன்றி வளர்ந்த முக்கிய நகரங்களாகும். கங்கை நதியுடன் சோன் ஆறு கலக்கும் இடத்தில் பாடலிபுத்திர நகரம் அமைந்திருந்தது. பண்டைக் காலத்தில், மௌரியர்கள், சுங்கர்கள், குப்தர்கள் போன்ற பேரரசுகளின் தலைநகராக பாடலிபுத்திரம் விளங்கியது.

கங்கைச் சமவெளியின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள மிக முக்கியமான நகரம் டெல்லி. இந்திய வரலாற்றின் போக்கை நிர்ணயித்த முக்கிய போர்களான குருஷேத்திரம், தரெய்ன், பானிபட்டு ஆகிய போர்கள் டெல்லிக்கு மிக அருகாமையில்தான் நடைபெற்றன. வளமைக்கும், செல்வத்திற்கும் பெயர் பெற்று விளங்கிய கங்கைச் சமவெளிமீது அயல்நாட்டு படையெடுப்பாளர்கள் அதிக மோகம் கொண்டதில் வியப்பேதும் இல்லை. கங்கைச் சமவெளியை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல்வேறு அரசுகள் போட்டியிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, கங்கை – யமுனை தோஆப் பகுதியைக் கைப்பற்றவும், தம் வசம் வைத்திருக்கவும் பெரும் போட்டியும், போர்களும் நடைபெற்றன.



மேலும், இப்பகுதியில் பாயும் நதிகளும், கால்வாய்களும் போக்குவரத்துக்கு பெரிதும் பயன்பட்டன. பண்டைக் காலத்தில் சாலைகள் அமைப்பது கடினமாக இருந்தது. எனவே, பயணிகளும், வணிகர்களும் படகுப் போக்குவரத்தை அதிகம் பயன்படுத்தினர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு ஆட்சிக்காலம் வரை படகுப் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

**தெற்கத்திய தீபகற்பம்**

வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் பிரிக்கும் கோடாக அமைந்திருப்பவை விந்திய சாத்பூரா மலைகளும், நர்மதை, தபதி ஆறுகளு மேயாகும். விந்திய மலைகளுக்கு தெற்கில் காணப்படும் பீடபூமி தக்காணப் பீடபூமி என்று அழைக்கப்படுகிறது. எரிமலைப் பாறைகளாலான இது வடஇந்திய மலைகளிடமிருந்து வேறுபட்டதாகும். இப்பாறைகள் செதுக்குவதற்கு எளிதாக இருப்பதனால், தக்காணப்பகுதியில் குடைவரைக் கோயில்களும், மடாலயங்களும் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

தக்காணப் பீடபூமியின் இருமருங்கிலும் கிழக்குத் தொடர்ச்சி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் உள்ளன. கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் வங்காள விரிகுடாக் கடலுக்கும் இடையே சோழ மண்டலக் கடற்கரை அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் அரபிக் கடலுக்கும் இடையே உள்ள நிலப்பகுதி கோவா வரை கொங்கணம் எனப்படுகிறது. அதற்கப்பாலுள்ள பகுதி கனரா என்றும் தென்கோடிப் பகுதி மலபார் கடற்கரை என்றும் அழைக்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் ஜீன்னார், கன்ஹேரி, கார்வே போன்ற கணவாய்கள் உள்ளன. மேற்கிலுள்ள துறைமுகங்களை இணைக்கும் வணிகவழித் தடங்களாக இவை விளங்கின. வட இந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் தக்காணப் பீடபூமி ஒரு பாலம் போல செயல்பட்டது. இருப்பினும், விந்திய மலைகளிலுள்ள அடர்ந்த காடுகள் இப்பகுதியை வடக்கிலிருந்த தனிமைப்படுத்துவதாக அமைந்திருந்தன. எனவே, தென்னிந்திய தீபகற்பத்தின் மொழியும் பண்பாடும் நெடுங்காலமாக அவற்றின் தனித்தன்மை மாறாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

தென்கோடியில் புகழ்பெற்ற பாலக்காட்டுக் கணவாய் உள்ளது. காவிரிப்பள்ளத்தாக்கையும், மலபார் கடற்கரையையும் இணைக்கும் வகையில் மேற்குத் தொடர்ச்சி மலையின் குறுக்கே இது அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் இந்தோ–ரோமானிய வர்த்தகத்திற்கான முக்கிய வழித்தடமாக பாலக்காட்டுக் கணவாய் விளங்கியது. தென்னிந்திய தீபகற்பத்தின் மிகவுயர்ந்த மலைச்சிகரம் ஆனைமுடி என்பதாகும். மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள மற்றொரு உயர்ந்த சிகரம் தொட்டபெட்டா. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் அவ்வளவு உயரமானவையல்ல. மேலும், இவற்றில் காணப்படும் இடைவெளிகள் மூலமாகத்தான் பல ஆறுகள் கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள வரிகுடாவில் கலக்கிறது. அரிக்கமேடு, மாமல்லபுரம், காவேரிப்பட்டினம் போன்ற துறைமுக நகரங்கள் சோழ மண்டலக் கடற்கரையில்தான் இருந்தன.

தென்னிந்திய தீபகற்பத்தின் முக்கிய நதிகள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று இணையாகவே பாய்ந்து செல்கின்றன. தீபகற்பத்தின் கிழக்குக் கோடியில் மகாநதி பாய்கிறது. நர்மதை, தபதி நதிகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பாய்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, காவிரி போன்ற பிற நதிகள் மேற்கிலிருந்து கிழக்காக பாய்கின்றன. இந்த நதிகளின் மூலம் கிடைக்கும் நீர்ப்பாசன வசதியால், நெல் விளையும் வளமான நிலப்பகுதிகளை இங்கு காணமுடிகிறது. ரெய்ச்சூர் தோ ஆப் எனப்படும் கிருஷ்ணா – துங்கபத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியை கைப்பற்றுவதற்காக தென்னிந்திய அரசுகள் தொடர்ந்து போட்டியிட்ட வண்ணம் இருந்தன. இவ்விரு நதிகளின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள சமவெளியில் சாதவாகனர்களின் அரசு புகழ்மிக்கு விளங்கியது. கிறித்துவ சகாப்தத்தின் முற்பகுதியில் இச்சமவெளியில் பல்வேறு நகரங்களும் துறைமுகங்களும் செழித்து விளங்கின.

இன்னும் தெற்கே, காவிரிப் பள்ளத்தாக்கு மிகவும் தனித்தன்மைகொண்ட புவியியல் அமைப்பை கொண்டுள்ளது. சோழப் பேரரசின் அமைவிடமாக அது விளங்கியது. பண்டைக் காலத்திலிருந்தே காவிரிப் பள்ளத்தாக்கு மொழி, பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றுக்கு புகழ் பெற்றதாகும்.

தென்னிந்திய தீபகற்பம் நீண்ட கடற்கரையைக் கொண்டிருப்பதால், இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கடல்சார் நடவடிக்கைகளில் பெரிதும் ஈடுபட்டுவந்தனர். பண்டைக்காலம் தொட்டே, கடல் வாணிபம் இப்பகுதியில்



செழித்தோங்கியது. கிழக்கே, ஜாவா, சுமத்திரா, பர்மா, கம்போடியா போன்ற பகுதிகளுடன் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. வாணிபம் தவிர, இந்தியக் கலை, சமயம், பண்பாடு போன்றவையும் இப்பகுதிகளுக்கு பரவியது. தென்னிந்தியாவிற்கும், கிரேக்க – ரோமானியருக்கும் இடையே நிலவிய வர்த்தகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு வரலாற்றுப் புகழ்வாய்ந்தவையாகும்.

**இந்தியா – வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு**

பல்வேறு இனமக்களும் ஒன்று கலந்த காலகட்டம் என்பதனால், பண்டைய இந்திய வரலாறு படிப்பதற்கு பரவசமூட்டுவதாக அமைந்துள்ளது. ஆரியருக்கு முற்பட்ட இனத்தவர், இந்தோ ஆரியர்கள், கிரேக்கர்கள், சைத்தியர்கள், ஹுணர்கள், துருக்கியர்கள் என பல்வேறு இனத்தவரும் இந்திய மண்ணை தங்களது தாயகமாகக் கொண்டனர். இந்தியப் பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்கு ஒவ்வொரு இனமும் தங்களாலான பங்களிப்பை வழங்கியுள்ளன. பல்வேறு இனங்களும் இன்று யார் எந்த இனம் என்று அடையாளம் காணமுடியாத அளவுக்கு ஒன்று கலந்துவிட்டன. காலங்காலமாக பல்வேறு பண்பாடுகளும் ஒன்று கலந்துவிட்டன. வேத இலக்கியங்களில் பல திராவிட அல்லது ஆரியருக்கு முந்தைய கால சொற்களைக் காண முடிகிறது. அதேபோல், சங்க இலக்கியத்தில் பாலி மற்றும் வடமொழிச் சொற்களும் உள்ளன.

பண்டைக் காலத்திலிருந்தே இந்தியாவில் பல சமயங்கள் இருந்துள்ளன. பண்டைய இந்தியாவில் இந்துசமயம், சமண, புத்த சமயங்கள் புகழ்பெற்றிருந்தன. ஆனால், பண்பாட்டளவில் இவை ஒன்றோடொன்று கலந்துவிட்டிருந்தன. இந்திய மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசினாலும், சமயங்களைப் பின்பற்றினாலும், சமூகப் பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டிருந்தாலும் நாடு முழுவதும் ஒரு சில பொதுப் பண்புள்ள வாழ்க்கை முறையைக் காணமுடிகிறது. எனவே, நமது நாட்டில் வேற்றுமை களுக்கிடையே ஒற்றுமையுணர்வு மேலோங்கியுள்ளது என்று துணிந்து கூறலாம்.

பழங்காலத்திலேயே இந்த ஒற்றுமைக்கான விதை ஊன்றப்பட்டது. பரந்த இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரே நாடு என்ற உணர்வு மேலோங்கியிருந்தது. பரதர் என்ற பழங்குடியினரின் பெயரால் இத்துணைக் கண்டம் பாரத வர்ஷம் என்றே குறிக்கப்பட்டு வந்தது. பண்டைய

கவிஞர்களும், தத்துவஞானிகளும் எழுத்தாளர்களும் இந்நிலப்பகுதியை ஒன்றுபட்ட தேசமாகவே கருதிவந்தனர். மௌரியர் மற்றும் குப்தப் பேரரசுகளின் காலத்தில அத்தகைய அரசியல் ஒற்றுமை ஏற்பட்டதையும் இந்திய வரலாறு எடுத்துக் கூறுகிறது.

அயல்நாட்டவரும் இந்நிலப்பகுதியை ஒரே நாடாகவே கருதி வந்தனர். 'ஹிந்த்' என்ற பெயர் சிந்து என்ற நதியின் பெயரிலிருந்தே பெறப்பட்டது. அயலவர்கள் முதன் முதலில் அறிந்த பகுதி சிந்து நதி பாயும் பகுதி என்பதால் இத்துணைக் கண்டத்தை 'சிந்து' என்றே அழைத்தனர். பின்னர் அது கிரேக்கர்களால் இந்தியா என்று அழைக்கப்பட்டது. பாரசீக மற்றும் அராபிய மொழிகளில் 'ஹிந்த்' என்றே குறிக்கப்படுகிறது.

மொழி மற்றும் பண்பாட்டு ஒருங்கிணைப்புக்கான முயற்சிகள் பண்டைக் காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நாட்டின் பொது மொழியாக பிராகிருதம் விளங்கியது. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் அசோகரது கல்வெட்டுக்களில் பிராகிரத மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய காப்பியங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியன நாடு முழுவதும் பரவலாக படிக்கப்பட்டன. வடமொழி இலக்கியங்களான இவையிரண்டும் பல்வேறு இந்திய மொழிகளிலும் எழுதப்பட்டன.

இந்தியப் பண்பாட்டு விழுமியங்களும், கருத்துக்களும் பல்வேறு வடிவங்களைக் கொண்டிருந்தபோதிலும், அடிப்படையில் அவை ஒரு கருத்தையே உணர்த்துவதாக இருந்தது.

இவ்வாறு இந்தியா இன்று பல்வேறு சமயங்களையுடைய சமுதாயமாக மலர்ந்துள்ளது. பன்முகப் பண்பாட்டைப் போற்றும் சமுதாயமாக எழுச்சி பெற்றுத் திகழ்கிறது. இருப்பினும் அடிப்படையில் காணப்படும் ஒற்றுமையுணர்வும், இந்திய சமுதாயத்தின் பன்முகத்தன்மையுமே அதன் ஒப்பற்ற வலிமைகளாகத் திகழ்கின்றன. வருங்கால வளர்ச்சிக்கும் அவை வழிகாட்டுவதாக அமைந்துள்ளன.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் எடுத்துரைக்க முடிந்தவை*

1. *இந்தியாவின் புவியியல் கூறுகள்.*
2. *இமாலய மலைகள் பற்றிய விவரம் மற்றும் அந்நிய படையெடுப்பாளரும், வணிகரும், குடியேறிகளும் வடமேற்கு கணவாய்களை வழித்தடங்களாகப் பயன்படுத்தியது.*
3. *இந்தோ–கங்கைச் சமவெளியின் நதிகள் – வரலாற்று நிகழ்வுகளில் அவற்றின் தாக்கம் – போர்கள் மற்றும் நகரமையங்கள்.*
4. *தென்னிந்திய தீபகற்பம் – நீண்ட கடற்கரைகள் – கடல்சார் நடவடிக்கைகள்.*
5. *இந்தியா எப்படி ஒரு பன்முகப் பண்பாட்டு சமுதாயமாக வளர்ச்சி பெற்று, இன்றுவரை அது எப்படி பாதுகாக்கப்பட்டுவருகிறது என்பது குறித்த விளக்கம்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மாசிடோனியாவைச் சேர்ந்த அலெக்சாந்தர் இந்தியாவிற்கு வந்த வழி

அ. தக்காணப் பீடபூமி ஆ.காரகோரம் மலைத்தொடர்

இ. ஸ்வாத் பள்ளத்தாக்கு ஈ. ஆரவல்லிக்குன்றுகள்

2. இருநதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி

அ. பீடபூமி ஆ. தீபகற்பம்

இ. தோஆப் ஈ. உச்சி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கங்கை நதி உற்பத்தியாகும் இடம் ...........

2. தென்னிந்திய தீபகற்பத்தின் உயரமான மலைச்சிகரம் .........

**III.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | எவெரெஸ்ட் சிகரம் | அ. ஆரவல்லி குன்றுகள் |
| 2. | மவுண்ட் அபு | ஆ. காரகோரம் |
| 3. | தொட்டபெட்டா | இ. இமாலய மலைகள் |
| 4. | காட்வின் ஆஸ்டின் | ஈ. மேற்குத் தொடர்ச்சி மலை |

**IV.** சரியான சொற்றொடரைக் கூறுக. ஒன்று மட்டுமே சரியானது.

அ. நர்மதை நதி கிழக்கிலிருந்து மேற்காகப் பாய்கிறது.

ஆ. காவிரி ஆறு தெற்கிலிருந்து வடக்காகப் பாய்கிறது.

இ. யமுனை நதி தபதி நதியுடன் கலக்கிறது.

ஈ. மகாநதி பஞ்சாப் பகுதியில் பாய்கிறது.



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. கங்கை நதி பிரம்மபுத்திராவுடன் கலக்குமிடத்தில் பாடலிபுத்திர நகரம் அமைந்திருந்தது.

2. தென்னிந்திய தீபகற்பத்திலுள்ள நீண்ட கடற்கரைகள் கடல் வாணிப வளர்ச்சிக்கு சாதகமாக அமைந்தன.

3. பாலக் காட்டுக் கணவாய் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ளது.

4. இந்தியா ஒரு பன்முகப் பண்பாட்டைப் பெற்றுவிளங்கும் சமுதாயமாகும்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. இமாலய மலைகள்

2. தக்காணப் பீடபூமி

3. தென்னிந்திய தீபகற்பத்தின் நதிகள்

4. பன்முகப்பண்பாட்டு சமுதாயம்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. இந்தோ–கங்கைச் சமவெளி இந்திய வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

2. தென்னிந்தியாவின் புவியியல் அமைப்பை சுருக்கி எழுதுக.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. இந்திய வரலாற்றில் அதன் புவியியல் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை மதிப்பிடுக.

2. ‘இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு” – விளக்குக.

# பாடம் – 2

# வரலாற்றுக்கு முந்தைய கால இந்தியாவும் ஹரப்பா பண்பாடும்

**கற்றல் நோக்கங்கள்**


*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *வரலாற்றுக்கு முந்தைய காலம்*
2. *ஹரப்பா நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.*
3. *ஹரப்பா மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள்.*
4. *ஹரப்பா மக்களின் பண்பாட்டு வாழ்க்கை.*
5. *ஹரப்பா நாகரிகத்தின் அழிவு.*

இந்தியாவில் மனித குலத்தின் வரலாறு, வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே தொடங்குகிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்கு எழுத்து வடிவிலான சான்றுகள் கிடைப்பதில்லை. இருப்பினும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்துள்ள ஏராளமான தொல்பொருள் சான்றுகளின் அடிப்படையில் இக்கால வரலாற்றைப் படைக்க முடிகிறது. கற்கருவிகள், மட்பாண்ட ஓடுகள், கலைப்பொருட்கள், உலோகக் கருவிகள் போன்ற பொருட்கள் இவற்றில் அடங்கும். இக்கால மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு தொல்லியலின் வளர்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, வரலாற்றுக்கு முந்தைய காலத்தை, பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம், உலோக காலம் என வகைப்படுத்தலாம். இருப்பினும், இந்திய துணைக்கண்டம் முழுவதற்கும் இந்த காலவரை ஒரே மாதிரியாகப் பொருந்துவதில்லை. வரலாற்றுக்கு முந்தைய காலம் அறிவியலின் துணைகொண்டு நன்கு வரையறுக்கப் படுகிறது. பொதுவாக ரேடியோ கார்பன் முறையே இதற்கு பயன் படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் உயிர்சார்





பொருட்களில் எந்த அளவுக்கு கரியம் குறைந்துள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணக்கிடும் முறையே ரேடியோ கார்பன் முறையாகும். மற்றொரு முறை டென்ட்ரோ காலக் கணிப்பு எனப்படுகிறது. மரத்தின் உள்வெட்டுத் தோற்றத்தில் காணப்படும் வளையங்களின் எண்ணிக்கையைக் கொண்டு காலத்தை கணக்கிடுவதே இம்முறையாகும்.

**பழைய கற்காலம்**

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்விடங்கள் பெரும்பாலும் நீர்நிலைகளுக்கு அருகாமையிலேயே உள்ளன. பழைய கற்கால மக்கள் வசித்த பாறை இடுக்குகளும், குகைகளும் துணைக் கண்டம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. சில இடங்களில் அவர்கள் இலைகளால் வேயப்பட்ட குடிசைகளிலும் வாழ்ந்தனர். இந்தியாவில் காணப்படும் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்கள் வருமாறு :

அ. வடமேற்கு இந்தியாவில் சோன் பள்ளத்தாக்கு மற்றும் பொட்வார் பீடபூமி

ஆ. வடஇந்தியாவில் சிவாலிக் குன்றுகள்

இ. மத்திய பிரதேசத்தில் பிம்பேட்கா.

ஈ. நர்மதைப் பள்ளத்தாக்கில் ஆதம்கார் குன்று



பழைய கற்காலக் கருவிகள்

உ. ஆந்திரப் பிரதேசத்தில் கர்நூல்

ஊ. சென்னைக் கருகிலுள்ள அத்திரம்பாக்கம்

பழைய கற்காலத்தில் விலங்குகளை வேட்டையாடியும், உண்ணக் கூடிய தாவரங்கள் மற்றும் கிழங்குகளை சேகரித்தும் மக்கள் தங்களது உணவைத் தேடிக் கொண்டனர். எனவே, இவர்களை, ‘உணவை சேகரிப்போர்’ என்று அழைக்கின்றனர். விலங்குகளை வேட்டையாடுவதற்கு கற்கருவிகளையே இந்த மக்கள் பயன்படுத்தினர். கையளவு கற்கருவி மற்றும் உடைந்த கூழாங்கற்களே இவர்களது ஆயுதங்களாகும். கற்கருவிகள், கெட்டியான குவார்ட்சைட் எனப்படும் பாறைக்கற்களாலானவை. ஆற்றுப் படுகைகளில் பெரிய கூழாங்கற்கள் கிடைத்தன. உருவத்தில் பெரிய



விலங்குகளை வேட்டையாடுவதற்கு பெரிய கற்கோடரிகளை இவர்கள் பயன்படுத்தியிருக்கவேண்டும். மேலும், குழுக்களாக ஒன்றிணைந்து பெரிய விலங்குகளை இவர்கள் வீழ்த்தியிருக்கவேண்டும். பழைய கற்கால மக்களின் மொழி மற்றும் தகவல் பரிமாற்றமுறை குறித்து எதுவும் தெரியவில்லை. காலப்போக்கில் இவர்களது வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. விலங்குகளை வளர்க்கவும், கரடுமுரடாக மட்பாண்டங்களை உருவாக்கவும் ஒருசில தாவரங்களை வளர்க்கவும் இவர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். பிம்பிட்கா போன்ற ஒருசில பழைய கற்கால இடங்களில் இவர்களது ஓவியங்களும் காணப்படுகின்றன. பழைய கற்காலம் என்பது கி.மு. 10,000 ஆண்டுக்கு முற்பட்டதாகும்.

**இடைக்கற்காலம்**

மனிதகுல வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை இடைக் கற்காலம் என்று அழைக்கிறோம். இது சுமார் கி.மு.10000 முதல் கி.மு. 6000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகும். பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே ஏற்பட்ட மாற்றங்களை இக்கால வரலாறு எடுத்துரைக்கிறது. இடைக்கற்கால சின்னங்கள், குஜராத்தில் லாங்கன்ச், மத்திய பிரதேசத்தில் ஆதம்கார், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாறைக் குகைகளில் காணப்படும் ஓவியங்களிலிருந்து இடைக்கற்கால மக்களின் சமூக வாழ்க்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி ஓரளவு யூகிக்க முடிகிறது. இடைக் கற்காலத்தில் வேறுவகையிலான கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிகச் சிறிய கற்களாலான இவை பெரும்பாலும் அதிகபட்சம் ஐந்து சென்டிமீட்டர் அளவையுடையதாகும். எனவே, இவற்றை நுண்கற்கருவி அல்லது மைக்ரோலித் என்று அழைக்கிறோம். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகியன இக்காலத்திலும் தொடர்ந்தன. பெரிய விலங்குகளுக்குப்பதில் சிறிய விலங்குகளை வேட்டையாடுவதிலும், மீன் பிடிப்பதிலும் இக்கால மக்கள் அதிக கவனம் செலுத்தினர். வில் அம்பை வேட்டைக்குப் பயன்படுத்தினர். மேலும், ஒரே இடத்தில் நீண்ட காலம் தங்கி வாழும் போக்கும் வளரத் தொடங்கியது. ஆகையால், பிராணிகளை வளர்த்தல், தோட்டப் பயிரிடுதல், தொடக்கக்கால வேளாண்மை போன்ற நடவடிக்கைகள் இக்காலத்தில் தொடங்கின. நாய், மான், பன்றி, தீக்கோழி போன்ற விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளமை இதற்கு சான்றாகும்.

ஒரு சில இடங்களில் நுண்கற்கருவிகள் மற்றும் மேலோடுகளுடன் சேர்த்து சவ அடக்கம் செய்யப்பட்டதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

**புதிய கற்காலம்**

மனித நாகரிகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை புதிய கற்காலத்தில்தான் காணமுடிகிறது. புதிய கற்காலம் சுமார் கி.மு. 6000 முதல் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகும். இந்தியாவின் பல பகுதிகளில் புதிய கற்காலப் பொருட்கள் கிடைத்துள்ளன. காஷ்மீர் பள்ளத்தாக்கு, பீகாரில் சிராண்ட், உத்திரப் பிரதேசத்தில் பீலான் சமவெளி, தக்காணத்தில் பல இடங்கள் ஆகியனவும் இதிலடங்கும். தென்னிந்தியாவில் பல புதிய கற்கால வசிப்பிடங்களில் அகழ் வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. கர்நாடகத்தில் மாஸ்கி, பிரம்மகிரி, ஹல்லூர், கோடேகல், தமிழ்நாட்டில் பையம்பள்ளி ஆந்திரப்பிரதேசத்தில் உட்னூர் ஆகிய இடங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை.



புதிய கற்காலக் கருவிகள்

வேளாண்மை, விலங்குகளை வளர்த்தல், கற்கருவிகளை பளபளப்பாக்குதல், மட்பாண்டம் செய்தல் போன்றவை புதிய கற்கால பண்பாட்டின் சிறப்புக் கூறுகளாகும். தாவரங்களைப் பயிரிடத் தொடங்கியதாலும், பிராணிகளை வளர்த்தமையாலும், ஓரிடத்தில் தங்கிவாழ முற்பட்ட புதிய கற்கால மக்கள், கிராம சமுதாயங்கள் உருவாகவும் வழி வகுத்தனர். கருவிகளை உருவாக்குவதிலும், மனிதனுக்குத் தேவையான சாதனங்களைப் படைப்பதிலும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாறுதல்களை இக்காலத்தில் தெளிவாகக் காணமுடிகிறது. கற்கருவிகள் நன்கு பளபளப்பாக தீட்டப்பட்டன. வேட்டையாடுவதற்கும், மரங்களை வெட்டுவதற்கும் பளபளப்பான கூரிய கற்கோடரிகள் பெரிதும் பயனுடையதாக இருந்தன. புல்லால் ஆன குடிசைகளுக்குப்பதிலாக, களிமண் கற்களாலான குடிசைகள் அமைக்கப்பட்டன. மட்பாண்டங்கள் செய்வதற்கு சக்கரம் பயன்படுத்தப்பட்டது. சமைப்பதற்கும், உணவு தானியங்களை சேமித்து வைக்கவும் மட்பாண்டங்கள் பயன்பட்டன. இறந்தோரை அடக்கம்



செய்வதற்கு பெரிய மண்பாண்ட தாழிகள் பயன்படுத்தப்பட்டன. சாகுபடி முறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு இடங்களில், கோதுமை, பார்லி, நெல், தினை போன்றவை பயிரிடப்பட்டன. கிழக்கிந்தியாவில் நெல் அதிகம் பயிரிடப்பட்டது. செம்மறியாடுகள், ஆடுகள், மாடுகள் வளர்ப்பு பரவலாகக் காணப்பட்டது. பயிரிடுவதற்கும் போக்குவரத்துக்கும் கால்நடைகள் பயன்பட்டன. பருத்தி மற்றும் கம்பளி ஆடைகளை புதிய கற்கால மக்கள் அணிந்தனர்.


**உலோக காலம்**

புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் செம்பு கற்காலம் எனப்பட்டது. இக்காலத்தில் செம்பு மற்றும் வெண்கலம் ஆகிய உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. மனித குல வரலாற்றில், உலோகத்தை உருக்கிவார்க்கும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்ததும் உலோகத்திலான பொருட்களை உருவாக்கி பயன்படுத்தியதும் முக்கிய நிகழ்வுகளாகும்.

ஆனால், கற்கருவிகளும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்தன. ஒரு சில நுண்கற்கருவிகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. இக்காலத்தில் உலோக தாதுக்களைத் தேடி மக்கள் நெடுந்தூரம் பயணம் செய்யவும் தொடங்கினர். இதனால், செம்பு – கற்கால பண்பாடுகளுக்கிடையே தொடர்புகள் ஏற்பட்டன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் செம்பு கற்காலப் பண்பாடுகள் காணப்படுகின்றன.

பொதுவாக, ஆற்றங்கரைகளிலேயே செம்பு – கற்காலப் பண்பாடுகள் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக, ஹரப்பா பண்பாடு செம்பு – கற்காலப் பண்பாட்டின் ஒரு பகுதியேயாகும். தென்னிந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பெண்ணாறு, காவிரி ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குகளில் இக்காலத்தில் குடியானவ சமுதாயங்கள் தோன்றி வளர்ந்தன. உலோக காலத்தின் தொடக்கத்தில் இவர்கள் உலோகத்தைப் பயன்படுத்தவில்லை என்றாலும், சுமார் கி.மு. 2000 ஆண்டுவாக்கில் செம்பும் வெண்கலமும் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள பையம்பள்ளியில் வெண்கலம் மற்றும் செம்பு ஆகியவற்றாலான பொருட்கள், சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

செம்பு – கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் இரும்புக் காலமாகும். வேத இலக்கியங்களில் இரும்பு பற்றி அடிக்கடி குறிக்கப்படுகிறது.






தென்னிந்தியாவில், இரும்புக் காலமும் பெருங்கல் காலமும் (மெகாலிதிக்) சமகாலம் எனக் கருதப்படுகிறது. மெகாலித் என்றால் பெரிய கல் என்று பொருள். கல்லறையின்மேல் சுற்றி அடுக்கப்பட்ட கற்களை இது குறிக்கிறது. அத்தகைய கல்லறைகள் தென்னிந்தியாவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

கர்நாடகத்திலுள்ள ஹல்லூர், மாஸ்கி, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நாகார்ஜீன கொண்டா, தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூர் ஆகிய இடங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கல்லறைக் குழிகளில் கருப்பு – சிகப்பு வண்ணத்தாலானப் பானையோடுகள், இரும்பாலான மண்வெட்டி மற்றும் அரிவாள், சிறு ஆயுதங்கள் போன்றவை காணப்படுகின்றன.

## ஹரப்பா நாகரிகம்

சிந்துப் பள்ளத்தாக்கில் மேற்கு பஞ்சாபிலுள்ள ஹரப்பா சிந்து மாகாணத்திலுள்ள மொகஞ்சாதாரோ ஆகிய இரு இடங்களிலும்தான் முதன்முதலில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விரண்டு இடங்களும் தற்போது பாகிஸ்தானில் உள்ளன. இந்த அகழ்வாய்வுகளின் பயனாக ஒரு சிறந்த நாகரிகம் சிந்து வெளியில் இருந்தது கண்டறியப்பட்டது. தொடக்கத்தில் இந்த நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் என வழங்கப்பட்டது. சிந்துவெளிக்கு அப்பாலும் இந்த நாகரிகத்தின் தடங்கள் பரவியிருந்தமையால் பின்னர் இது 'சிந்து நாகரிகம்' என்று அழைக்கப்பட்டது. முதலில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தை நினைவுகூறும் வகையில் 'ஹரப்பா நாகரிகம்' என்றும் இது வழங்கப்படுகிறது.

### முக்கிய இடங்கள்

பல்வேறு இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அவற்றில் குறிப்பிடத்தக்கவை வருமாறு : சிந்துவிலுள்ள கோட் டிஜி, ராஜஸ்தானிலுள்ள காலிபங்கன், பஞ்சாபில் ரூபார், ஹரியானாவில் பினவாலி, குஜராத்திலுள்ள லோத்தல், சுர்கோடாடா, மற்றும் தோலவிரா. பெரிய நகரங்கள் பெரும்பாலும் நூறு ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டவையாகும். சிந்துவெளி நகரங்களிலேயே மிகப் பெரியது மொகஞ்சாதாரோ. இது சுமார் இருநூறு ஹெக்டேர் பரப்பைக் கொண்டது என மதிப்பிடப்படுகிறது.

### தோற்றமும் வளர்ச்சியும்

கடந்த எண்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வுகளின் பயனாக ஏராளமான தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை ஹரப்பா பண்பாட்டின் வளர்ச்சியை அறிந்துகொள்ள பயன்படுகின்றன. இதனை நான்கு முக்கிய நிலைகளாகப் பகுத்து அறியலாம்.

1. ஹரப்பாவிற்கு முந்தைய நிலை (Pre-Harappan)
2. ஹரப்பா பண்பாட்டின் தொடக்க நிலை (Early Harappan)
3. ஹரப்பா பண்பாட்டின் முதிர்ந்த நிலை (Mature-Harappan)
4. ஹரப்பா பண்பாட்டின் இறுதி நிலை (Late-Harappan)

ஹரப்பா பண்பாட்டிற்கு முந்தைய நிலையை கிழக்கு பலுச்சிஸ்தானத்தில் காணலாம். மொகஞ்சாதாரோவிற்கு வடமேற்கில் 150 மைல் தூரத்திலுள்ள மெகர்கார் என்ற இடத்தில் ஹரப்பா பண்பாட்டிற்கு முந்தைய கால மக்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள் காணப்படுகின்றன. இக்காலத்தில், மக்கள் தங்களது நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நிலையான வேளாண் வாழ்வைத் தொடங்கினர்.

ஹரப்பா பண்பாட்டின் தொடக்க நிலையில் மக்கள் சமவெளிகளில் பெரும் கிராமங்களை உருவாக்கி அங்கு வாழ்ந்தனர். இக்காலத்தில்தான் சிந்து சமவெளியில் நகரங்கள் தோன்றி வளரத் தொடங்கின. கிராமப்புற வாழ்க்கையிலிருந்து மக்கள் நகரவாழ்க்கையையும் மேற்கொள்ள ஆரம்பித்தனர். ஆம்ரி, கோட் டிஜி ஆகிய இடங்களை இந்த நிலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஹரப்பா பண்பாட்டின் உச்சகட்டத்தில் பெரிய நகரங்கள் எழுச்சிபெற்றன. காலிபங்கன் அகழ்வாய்வுகள் அங்கிருந்த நகர அமைப்புகளையும், நகர்ப்புறக் கூறுகளையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

ஹரப்பா பண்பாட்டின் இறுதிநிலையில், அதன் சிதைவு தொடங்கியது. லோத்தல் அகழ்வாய்வுகள் இந்த நிலைக்கு தக்க எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. லோத்தல் நகரமும் அதன் துறைமுகமும் மிகவும் பிற்காலத்தில்தான் நிறுவப்பட்டன. வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாக்கும் வகையில் மிகப்பெரிய தடுப்புச்சுவரை இந்நகரில் காணமுடிகிறது. மெசபடோமியா, இந்தியாவின் பிறபகுதிகள் ஆகியவற்றுக்கிடையிலான மிகப்பெரிய வாணிப மையமாக லோத்தல் திகழ்ந்தது.



### ஹரப்பா பண்பாட்டின் காலம்

1931 ஆம் ஆண்ட சர்ஜான் மார்ஷல் மொகஞ்சாதாரோவின் காலத்தை கி.மு.3250 – கி.மு.2750 என மதிப்பிட்டார். பின்னர், பல்வேறு புதிய இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, புதிய தகவல்களின் அடிப்படையில் ஹரப்பா பண்பாட்டின் காலமும் அவ்வப்போது அறிஞர்களால் புதியதாக மதிப்பிடப்பட்டது. ரேடியோ கார்பன் முறையில் காலத்தை கணக்கெடுக்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் ஓரளவுக்கு துல்லியமான காலக்கணிப்பும் செய்யப்பட்டது. 1956 ஆம் ஆண்டு ஃபேர்சர்வ்ஸ் என்பவர் ஹரப்பா பண்பாட்டின் காலத்தை கி.மு.2000 – கி.மு.1500 என்று மதிப்பிட்டார். 1964 ஆம் ஆண்டு டி.பி. அகர்வால் இந்த பண்பாட்டின் காலத்தை கி.மு.2300 கி.மு. 1750 என முடிவு செய்தார். இருப்பினும், வருங்காலத்தில் இந்த காலவரையரையும் மாறுவதற்கு வாய்ப்புண்டு.

### ஹரப்பா பண்பாட்டின் சிறப்புக் கூறுகள்

#### நகர அமைப்பு

ஹரப்பா பண்பாடு அதன் தனிச்சிறப்பு வாய்ந்த நகர அமைப்புக்கு பெயர் பெற்றதாகும். தெருக்கள் ஒவ்வொன்றும் குறுக்கு நெடுக்காகவும் நேர்கோட்டிலும் அமைந்திருந்தன. ஹரப்பா, மொகஞ்சாதாரோ, காலிபங்கன் போன்ற பெரிய நகரங்களில் மேடான பகுதிகளில் கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. கோட்டைகள் ஒவ்வொன்றும் களிமண்கற்களாலான மேடுகள்மீது அமைக்கப்பட்டிருந்தன. கோட்டையின் கீழ்ப்பகுதியிலிருந்த நகரத்தில் செங்கற்களாலான வீடுகள் இருந்தன. இவற்றில் சாதாரணமக்கள் குடியிருந்தனர். பெரும்பாலான கட்டிடங்கள் அனைத்தும் செங்கற்களாலானவை. கற்பாறைகளாலான கட்டிடங்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பூமிக்கடியில் அமைக்கப்பட்டிருந்த கழிவுநீர்க் குழாய்கள் ஹரப்பா பண்பாட்டின் மற்றொரு சிறப்புக் கூறாகும். வீடுகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர்க் குழாய்கள் அனைத்தும் தெருக்களின் கழிவுநீர்ப்பாதையுடன் இணைக்கப்பட்டிருந்தன. இக்குழாய்கள் பெரும்பாறைக் கற்களாலோ அல்லது செங்கற்களாலோ மூடப்பட்டிருந்தன.

மொகஞ்சாதாரோவின் சிறப்புக்குரிய பொது இடம் பெரும் குளியல் குளமாகும். இது 39 அடி நீளமும், 23 அடி அகலமும் 8 அடி ஆழமும் கொண்டதாகும். தரையிலிருந்து குளத்திற்குள் இறங்க அனைத்து பக்கத்திலும் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. உடைகள் மாற்றுவதற்கு ஏதுவாக குளத்தின் ஓரங்களில் தனி அறைகள் காணப் படுகின்றன. குளியல் குளத் தின் தரைப்பகுதி செங்கற் களாலானது. அருகிலிருந்த பெரிய கிணற்றிலிருந்து குளத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டது. குளத்தின் ஒரு மூலையில் தண்ணீரை வெளியேற்றும் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் சடங்குகளின்போது குளிப்பதற்கு வசதியாக அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும். மொகஞ்சாதாரோவின் மிகப்பெரிய கட்டிடம் அதன் தானியக் களஞ்சியமாகும். இது 150 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்டது. ஹரப்பா நகரின் கோட்டையில் ஆறு தானியக் களஞ்சியங்களைக் காணமுடிகிறது.


மொகஞ்சாதாரோ – பெருங்குளியல் குளம்

**பொருளாதார வாழ்க்கை**

வேளாண்மை, தொழில், கைத்தொழில், வாணிகம் என அனைத்துவகை பொருளாதார நடவடிக்கைகளையும் ஹரப்பா பண்பாட்டில் காணமுடிகிறது. கோதுமையும் பார்லியும் முக்கிய விளைபொருட்களாகும். எள், கடுகு, பருத்தி போன்றவையும் பயிரிடப்பட்டன. மிகையான தானியங்கள் களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டன. வெள்ளாடுகள், செம்மறியாடுகள், எருதுகள் போன்றவை முக்கிய வளர்ப்பு விலங்குகளாகும். குதிரையின் பயன்பாடு பற்றி இன்னும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. மான் உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் உணவுக்காக வேட்டையாடப்பட்டன.


ஹரப்பா முத்திரை




பல்வேறு கைத்தொழில்களில் தேர்ச்சிபெற்ற கைவினைஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர். பொற்கொல்லர்கள், செங்கல் செய்வோர், கல் அறுப்போர், நெசவுத் தொழிலாளர், படகு கட்டுவோர், சுடுமண் கலைஞர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். வெண்கலம் மற்றும் செம்பாலான பாத்திரங்கள் ஹரப்பா பண்பாட்டு உலோகத் தொழிலுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தங்கம் மற்றும் வெள்ளியாலான ஆபரணங்கள் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மட்பாண்டங்கள் பெரும்பாலும் சாதாரணமாக இருந்தன. ஒருசில இடங்களில் சிகப்பு மற்றும் கருப்பு வண்ணம்பூசிய மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. அரிய வகை கற்களாலான மணிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தியாவின் பிறபகுதிகளோடு பரவலான வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. மெசபடோமியா, ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற பகுதிகளோடு அயல்நாட்டு வர்த்தகமும் நடைபெற்றது. தங்கம், செம்பு, ஈயம் மற்றும் அரிய வகை கற்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கோதுமை, பார்லி, பயிறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற வேளாண் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பருத்தியாடைகள், மட்பாண்டங்கள், மணிகள், சுடுமண் கலைப்பொருட்கள், தந்த வேலைப்பாடுகள் போன்றவையும் ஏற்றுமதிகளில் அடங்கும். சிந்துப்பகுதிக்கும் சுமேரியாவுக்கும் இடையே வாணிகத்தொடர்பு நிலவியதற்கு போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. மெசபடோமியாவில் சிந்துவெளியைச் சார்ந்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டமாற்று வாணிகமே பரவலாக நடைபெற்றது. போக்குவரத்துக்கு காளை மற்றும் எருது பூட்டிய வண்டிகள் பயன்படுத்தப்பட்டன என்பதை சிந்துவெளியில் கிடைத்துள்ள முத்திரைகளும் சுடுமண் பொம்மைகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆறுகள் மற்றும் கடல் போக்குவரத்துக்கு படகுகளும் கப்பல்களும் உதவின.

**சமூக வாழ்க்கை**

ஹரப்பா மக்களின் சமூக வாழ்க்கையை அறிந்து கொள்ள போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. ஆண், பெண் இருபாலரும் கீழாடை, மேலாடை என்ற இரண்டுவித ஆடைகளையும் அணிந்தனர்.இருபாலரும் மணிகளாலான ஆபரணங்களை அணிந்துகொண்டனர்.


ஹரப்பா மக்கள் பயன்படுத்திய ஆபரணங்கள்

வளையல்கள், காப்புகள், ஒட்டியாணம், சிலம்பு, காதணி, மோதிரம் போன்றவை பெண்களுக்கான ஆபரணங்கள். இவை, தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற உலோகங் களானவை. அரியவகை கற்களாலான ஆபரணங்களும் இருந்தன. மட் பாண்டங்கள், கற்கள், ஓடுகள், தந்தம் மற்றும் உலோகங்களாலான பல்வேறு வகையிலான வீட்டுக்குதவும் பாத்திரங்கள் மொகஞ்சாதோராவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நூற்கும் தக்களி, ஊசிகள், சீப்புகள், தூண்டில்முட்கள், கத்திகள் போன்றவை செம்பாலனவை. களிமண்ணாலான வண்டிகள் சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்களில் அடங்கும். கோலிகள், பந்துகள், தாயம் போன்றவை விளையாட்டுக்கு பயன்பட்டன. மீன் பிடித்தல் என்பது முறையான தொழில். வேட்டையாடுதலும், எருதுச் சண்டையும் பொழுதுபோக்குகளாகும். பல்வேறு போர்க்கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. செம்பு மற்றும் வெண்கலத்திலான கோடரிகள், ஈட்டிகள், குறுவாட்கள், வில் அம்புகள் போன்றவையும் இதிலடங்கும்.

**கலைகள்**

ஹரப்பாவின் சிற்பங்கள் மிகச்சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்டதாகும். சுடுமண்ணாலான ஆண், பெண் உருவங்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் முத்திரைகளில் வரையப்பட்டுள்ள செதுக்கோவியங்கள் சிற்பியின் திறமைக்கு சான்று பகிர்கின்றன. மொகஞ்சாதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள 'நாட்டிய மங்கை' என்ற வெண்கல உருவ பொம்மை சிறப்பான கலைநயத்திற்கு எடுத்துக் காட்டாகும். அதன் வலது கை இடுப்பின்மீதும், வளையல்கள் அணிந்த இடது கை தொங்கவிடப்பட்ட நிலையிலும் அமைக்கப் பட்டுள்ளது. ஹரப்பாவில் இரண்டு கற்சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒன்று மனிதனின் பின்பக்க வாட்டிலும், மற்றது நாட்டிய வடிவிலும் அமைந்துள்ளன. ஹரப்பா நகர மட்பாண்டங்கள் சிறந்த கலைநயமிக்கவையாகும். மட்பாண்டங்களும், குவளைகளும் பல்வேறு வடிவங்களிலும், வண்ணங்களிலும் உருவாக்கப் பட்டுள்ளன. வண்ணப்பூச் சுடன்கூடிய மட்பாண்டங்கள் தரமிக்கவையாகும்.



சுடுமண் உருவப் பொம்மை



கோணவடிவிலான கோடுகள், வட்டங்கள், இலைகள், செடிகள், மரங்கள் போன்ற ஓவியங்கள் மட்பாண்டங்கள்மீது வரையப்பட்டுள்ளன. சில மட்பாண்டங்களில் மீன் மற்றும் மயில் உருவங்களும் காணப்படுகின்றன.

**எழுத்து**

ஹரப்பா எழுத்து வடிவம் இன்னும் முழுமையாக கண்டறியப்பட வில்லை. 400 முதல் 600 வரையிலான வடிவங்கள் இருப்பினும், அவற்றில் 40 அல்லது 60 மட்டுமே அடிப்படையாக விளங்குகின்றன. எஞ்சியவை அவற்றின் மாற்றுவடிவங்களே. ஹரப்பா எழுத்துக்கள் பொதுவாக வலமிருந்து இடமாகவே எழுதப் பட்டுள்ளன. ஒருசில முத்திரைகளில் முதல்வரி வலமிருந்து இடமாகவும், அடுத்தவரி இடமிருந்து வலமாகவும் மாறிமாறி எழுதப் பட்டுள்ளன. ஸ்கான்டிநேவியாவைச் சேர்ந்த பார்போலா மற்றும் அவரது உடன்பணியாற்றும் அறிஞர்களும் ஹரப்பா மக்களின் மொழி திராவிடமொழியே என்று முடிவு செய்துள்ளனர். சோவியத் அறிஞர் சிலரும் இக்கருத்தை ஏற்கின்றனர். வேறுசில அறிஞர்கள் ஹரப்பா எழுத்துக்களை பிராமி எழுத்துவகையுடன் தொடர்புப்படுத்துகின்றனர். ஹரப்பா எழுத்து பற்றிய புதிர் இன்னும் அவிழ்க்கப்படவில்லை.



ஹரப்பாவின் எழுத்து வடிவம்

ஹரப்பா எழுத்து முழுவதும் படித்தறியப்படும்போது அப்பண்பாட்டின் சிறப்புகள் முழுமையாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை.

**சமயம்**

முத்திரைகள், சுடுமண் உருவங்கள் மற்றும் செப்புவில்லைகள் போன்ற சான்றுகளிலிருந்து ஹரப்பா மக்களின் சமய வாழ்க்கை குறித்து அறியமுடிகிறது. அவர்களது முக்கிய ஆண் கடவுள் பசுபதி (முற்காலத்திய சிவன்). தியானவடிவில் அமர்ந்திருக்கும் அவருக்கு மூன்று முகங்களும் இரண்டு கொம்புகளும் காணப்படுகின்றன. நான்கு விலங்குகள் (யானை, புலி, நீர்யானை, எருது) வெவ்வேறு திசைகளைப்பார்த்த வண்ணம் அவரை சூழ்ந்துள்ளன. அவரது பாதத்தில் இரண்டு மான்கள் உள்ளன. இந்த உருவம் முத்திரைகளில் காணப்படுகிறது. அவர்களது முக்கிய பெண் கடவுள் தாய்க் கடவுளாகும். இதன் சுடுமண் வடிவங்கள் கிடைக்கின்றன. பிற்காலத்தில்

லிங்க வழிபாடும் காணப்பட்டது. ஹரப்பா மக்கள் மரங்களையும் விலங்குகளையும் கூட வழிபட்டனர். பேய்கள், கெட்ட ஆவிகள் போன்றவற்றின்மீது நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தாயத்துக்களையும் அணிந்தனர்.

**இறந்தோரைப் புதைத்தல்**

மொகஞ்சாதாரோ, ஹரப்பா, காலிபங்கன், லோத்தல், ரூபார் போன்ற நகரங்களைச் சுற்றி கண்டெடுக்கப்பட்டுள்ள கல்லறைகள் ஹரப்பா மக்களின் இறந்தோரைப் புதைக்கும் வழக்கம் குறித்து அறிய உதவுகின்றன. மொகஞ்சாதாரோவில், இறந்தோரை புதைக்கும் வழக்கமும், எரித்தபின்னர் எலும்புகளை புதைக்கும் வழக்கமும் வழக்கிலிருந்தன. லோத்தல் நகரில் புதைகுழியைச் சுற்றி செங்கற்கள் அடுக்கப்பட்டுள்ளன. ஹரப்பா நகரில் மரத்தாலான சவப்பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஜோடியாகவும் மட்பாண்டத்திற்குள் வைத்தும் இறந்தோரை புதைத்ததற்கான சான்றுகளும் லோத்தலில் கிடைத்துள்ளன. 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் நிலவியதற்கான தெளிவான சான்றுகள் இல்லை.

**ஹரப்பா பண்பாட்டின் அழிவு**

ஹரப்பா பண்பாட்டின் அழிவு குறித்தும் அதற்கான சான்றுகள் குறித்தும் அறிஞர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. பொதுவாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. வெள்ளப் பெருக்கு, நதிகள் வறண்டுபோடுதல், விளைநிலம் தனது வளத்தை இழத்தல், அவ்வப்போது ஏற்படும் நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஹரப்பா நகரங்களின் அழிவுக்கு காரணங்களாக இருந்திருக்கக்கூடும். ஆரியர்களின் படையெடுப்பு ஹரப்பா நாகரிகத்திற்கு கடைசி மணியை ஒலித்தது என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தாகும். கோட்டைகள் பல அழிக்கப்பட்டது குறித்து ரிக்வேதம் குறிப்பிடுகிறது. மேலும், மொகஞ்சாதோராவில் கண்டெடுக்கப் பட்டுள்ள மனித எலும்புக்குவியல் அந்நகரம் அயலவரின் படையெடுப்புக்கு ஆளானதை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆரியர்களிடம் வலிமைமிக்க ஆயுதங்களும், வேகமாக செல்லக்கூடிய குதிரைகளும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால், அவர்கள் சிந்து வெளிப்பகுதியில் தங்களது ஆதிக்கத்தை எளிதாக ஏற்படுத்தியிருக்கக் கூடும்.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது*

1. *பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோக காலம் அக்காலத்தில் தொல்பொருட்கள் – அக்கால மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கை.*
2. *ஹரப்பா பண்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட முக்கிய இடங்கள்.*
3. *ஹரப்பா நாகரிகத்தின் சிறப்புக்கூறுகள் – நகர அமைப்பு, சமூக வாழ்க்கை, பொருளாதார நிலைமை.*
4. *ஹரப்பா பண்பாட்டின் காலம், சமய நம்பிக்கைகள் மற்றும்* கலைகள்.
5. *ஹரப்பா நாகரிகத்தின் அழிவு குறித்த வேறுபட்ட கருத்துக்கள்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. செம்பு கற்காலத்தை தொடர்ந்து வந்த காலம்

அ. பழைய கற்காலம் ஆ. புதிய கற்காலம்

இ. இரும்புக்காலம் ஈ. இடைக் கற்காலம்

2. ஹரப்பா பண்பாட்டின் துறைமுக நகரம்

அ. காலிபங்கன் ஆ. லோத்தல்

இ. பனவாலி ஈ. ரூபார்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தமிழ்நாட்டிலுள்ள மிகவும் சிறப்பு வாய்நத பெருங்கற்கால மையம் .........

2. ஹரப்பா பண்பாட்டின் முக்கிய பெண் தெய்வம் ........

**III.** பொருத்துக.

1. கோட்டிஜி அ. ஹரியானா

2. தோலவிரா ஆ. ராஜஸ்தான்

3. காலிபங்கன் இ. சிந்து

4. பனவாலி ஈ. குஜராத்

**IV.** சரியான சொற்றொடரை தெரிவு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. ஹரப்பா பண்பாட்டு வளர்ச்சியில் மூன்று நிலைகள் உண்டு.

ஆ. ஹரப்பா மக்களின் மொழி வடமொழி என பார்போலா கூறுகிறார்.

இ. சர்ஜான் மார்ஷல் ரேடியோ – கார்பன் முறையைப் பின்பற்றினார்.

ஈ. ஹரப்பா மக்கள் பேய்கள்மீது நம்பிக்கை கொண்டிருந்தனர், அதனால், பாதுகாப்புக்காக தாயத்துக்களை பயன்படுத்தினர்.



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. பழைய கற்கால மக்கள் வேளாண்மை செய்து வாழ்ந்தனர்.

2. மைக்ரோலித் என்ற நுண்கற்கருவிகளை இடைக்கற்கால மக்கள் பயன்படுத்தினர்.

3. சிந்து வெளிக்கும் சுமேரியாவுக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்தது.

4. ஹரப்பா மக்களுக்கு எழுதும் கலை தெரியாது.

**VI.** சிறுகுறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. செம்பு கற்காலம்

2. பெருங்கற்கள் (மெகாலித்)

3. பெரும் குளியல் குளம்

4. ஹரப்பா பண்பாட்டின் காலம்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. பழைய கற்காலம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

2. ஹரப்பா பண்பாட்டின் தோற்றம், வளர்ச்சி பற்றி விவரி.

3. ஹரப்பா பண்பாட்டின் முக்கிய இடங்களைக் கூறுக.

4. ஹரப்பா பண்பாட்டின் அழிவுக்கான காரணங்களை குறிப்பிடுக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. ஹரப்பா நாகரிகத்தின் சமூக – பொருளாதார நிலைமைகளை விவரி.

# பாடம் – 3

## வேத காலப் பண்பாடு

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது*

1. *ஆரியர்களின் பூர்வீகம்*
2. *வேத இலக்கியங்களும் அவற்றின் சிறப்பும்*
3. *ரிக்வேத காலமும் பண்பாடும்*
4. *பிந்தைய வேதகாலமும் பண்பாடும்*

ஹரப்பா பண்பாட்டின் நகரங்கள் கி.மு. 1500 ஆம் ஆண்டுவாக்கில் அழிந்தன. அவர்களது பொருளாதார, ஆட்சியமைப்பு முறைகளும் மெள்ள அழியத் தொடங்கின. இக்காலத்தில்தான் இந்தோ–ஆரிய மொழியான வடமொழி பேசுபவர்கள் இந்தோ–ஈரானியப் பகுதியிலிருந்து வடமேற்கு இந்தியாவிற்குள் நுழைந்தனர். தொடக்கத்தில் வடமேற்கு மலைகளிலிருந்த கணவாய்கள் வழியாக குறைந்த எண்ணிக்கையிலான மக்களே வந்திருக்கக்கூடும். வடமேற்கு சமவெளிகளிலும், பஞ்சாப் சமவெளிகளிலும் அவர்கள் தங்கள் ஆரம்பகால குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். பின்னர், அவர்கள் இந்தோ–கங்கைச் சமவெளிக்கு இடம் பெயர்ந்தனர். கால்நடைகளை வளர்க்கும் கூட்டத்தவர்களாக அவர்கள் இருந்தமையால் பசுமையான புல்வெளிகளை அவர்கள் தேடிச் சென்ற வண்ணம் இருந்தனர். கி.மு. ஆறாம் நூற்றாண்டுவாக்கில் அவர்கள் வட இந்தியா முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டனர். எனவே, வடஇந்தியா ஆரியவர்த்தம் என அழைக்கப்பட்டது. வேதகாலத்தை ரிக்வேத காலம் அல்லது முந்தைய வேதகாலம் (கி.மு.1500 – கி.மு.1000) என்றும் பிந்தைய வேதகாலம் (கி.மு.1000 – கி.மு.600) என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



**ஆரியர்களின் பூர்வீகம்**

ஆரியர்களின் பூர்வீகம் என்பது விவாதத்துக்குரிய பொருளாகும். இதுபற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பல்வேறு அறிஞர்கள் வெவ்வேறு பகுதிகளை ஆரியர்களின் பூர்வீகமாக குறிப்பிடுகின்றனர். ஆர்க்டிக் பகுதி, ஜெர்மனி, மத்திய ஆசியா, தெற்கு ரஷ்யா போன்ற பகுதிகள் அவர்களது பூர்வீகமாக கருதப்படுகின்றன. பாலகங்காதார திலகர் வானவியல் கணக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆரியர்கள் ஆர்க்டிக் பகுதியிலிருந்து வந்தவர்கள் என வாதிடுகிறார். இருப்பினும், தெற்கு ரஷியப்பகுதியே ஆரியர்களின் இருப்பிடம் என்ற கருத்தே ஏற்கத்தக்கதாக உள்ளது. வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர். அங்கிருந்து ஆரியர்கள் ஆசியா, ஐரோப்பா ஆகிய பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருக்கக்கூடும். கி.மு.1500 ஆம் ஆண்டுவாக்கில் அவர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். இந்தோ–ஆரியர்கள் என அவர்களை அழைக்கிறோம். இந்தோ–ஆரிய மொழியான வடமொழியை அவர்கள் பேசிவந்தனர்.

**வேத இலக்கியங்கள்**

'வித்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து 'வேதம்' என்ற சொல் பிறந்தது. அதற்கு 'அறிதல்' என்று பொருள். வேதம் என்றால் "உயர்வான அறிவு'' என்றும் பொருள் கூறலாம். வேதங்கள் நான்கு - ரிக், யஜுர், சாம, அதர்வ. இந்த நான்கிலும் ரிக்வேதம் பழமையானது. அதில் 1028 பாடல்கள் உள்ளன.

பல்வேறு கடவுளைப் புகழ்ந்து இந்த பாடல்கள் புனையப்பட்டிருக்கின்றன. சடங்குகளின்போது பின்பற்றப்படுவதற்காக பல்வேறு விவரங்கள் யஜுர் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. சடங்கின்போது இசைப்பதற்காகவே இயற்றப்பட்டது சாம வேதம். இதிலிருந்தே இந்திய இசை தோன்றியதாகக் கருதப்படுகிறது. பல்வேறு சடங்குகள்பற்றி அதர்வ வேதம் குறிப்பிடுகிறது.

நான்கு வேதங்கள் தவிர, பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யகங்கள், மற்றும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்ற சமய இலக்கியங்களும் உள்ளன. வழிபாடு மற்றும் வேள்விகள் குறித்த விளக்கங்கள் பிராமணங்களில் கூறப்பட்டுள்ளன. ஆன்மா, பிரம்மம், உலகின் தோற்றம், இயற்கையின் புரியாத புதிர்கள் போன்ற தத்துவ விளக்கங்களைக் கூறுவது உபநிடதங்கள். காட்டு இலக்கியம் எனக் கூறப்படும் ஆரண்யகங்கள் மந்திரம், வேள்வி, பலியிடுதல் போன்றவற்றை

கூறுகிறது. இராமாயணத்தை வால்மீகியும் மகாபாரதத்தை வேத வியாசரும் இயற்றினர்.

**ரிக்வேத காலம் (அல்லது) முந்தைய வேதகாலம் (கி.மு. 1500 கி.மு.1000)**

ரிக் வேத காலத்தில், ஆரியர்கள் பெரும்பாலும் சிந்துப் பகுதியிலேயே வாழ்ந்தனர். ரிக் வேதத்தில் 'சப்த சிந்து' அல்லது ஏழு நதிகள்பாயும் பகுதி என்ற குறிப்பு வருகிறது. பஞ்சாபில் பாயும் ஜீலம், சீனாப், ராவி, பியாய், சட்லஜ் என்று ஐந்து நதிகளோடு சிந்து மற்றும் சரஸ்வதி ஆகிய ஏழு நதிகளையே இது குறிக்கிறது. ரிக் வேதப் பாடல்களிலிருந்து ரிக்வேதகால மக்களின் அரசியல், சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.

**ரிக்வேத கால அரசியல்**

குலம் அல்லது குடும்பம் என்பதே ரிக் வேதகால அரசியலுக்கு அடிப்படையாக இருந்தது. பல குடும்பங்கள் இணைந்து கிராமம் உருவாயிற்று. கிராமத்தின் தலைவர் கிராமணி எனப்பட்டார். பல கிராமங்கள் இணைந்து விசு என்ற அமைப்பு தோன்றியது. இதன் தலைவர் 'விஷயபதி'. மிகப்பெரிய அரசியல் ஒருங்கிணைப்பு 'ஜன' எனப்பட்டது. ரிக்வேத காலத்தில் பரதர்கள், மத்ச்யர்கள், யதுக்கள், புருக்கள் போன்ற பல்வேறு அரச குலங்கள் இருந்தன. அரசின் தலைவன் ராஜன். ரிக்வேத காலத்தில் பெரும்பாலும் முடியாட்சி முறையே வழக்கிலிருந்தது. பரம்பரை வாரிசு முறையே பின்பற்றப்பட்டது. நிர்வாகத்தில் அரசனுக்கு உதவியாக புரோகிதரும், சேனானி என்ற படைத்தளபதியும் இருந்தனர். சபா, சமிதி என்ற இரண்டு புகழ்வாய்ந்த அவைகளும் இருந்தன. சபா என்பது ஊர்ப்பெரியோர் அடங்கிய அவையாகவும், சமிதி என்பது பொது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அவையாகவும் விளங்கின.

**சமூக வாழ்க்கை**

தந்தை வழியை அடிப்படையாகக் கொண்டதே ரிக்வேத கால சமூகம். சமூகத்தின் அடிப்படையாக விளங்கியது கிரஹம் அல்லது குடும்பம். குடும்பத்தின் தலைவர் கிரஹபதி. பொதுவாக ஒருதார மணம் வழக்கிலிருந்தது. அரச மற்றும் உயர் குடியினரிடையே பலதார மணமும் நடைமுறையில் இருந்தது. இல்லப் பொறுப்புகளை கவனித்து வந்த மனைவி முக்கிய சடங்குகளிலும் பங்கெடுத்துக் கொள்வது வழக்கம். ஆண்களுக்கு



இணையாக பெண்களுக்கும் ஆன்மீகம் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அபலா, விஸ்வவாரா, கோசா, லோபமுத்ரா போன்ற பெண் கவிஞர்களும் ரிக்வேத காலத்தில் வாழ்ந்தனர். பொது அவைகளிலும் பெண்கள் பங்கெடுத்துக் கொண்டனர். சிறார் மணமோ உடன்கட்டையேறும் 'சதி' வழக்கமோ ரிக்வேத காலத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தி மற்றும் கம்பளியாலான ஆடைகளை ஆண் பெண் இருபாலரும் அணிந்தனர். இருபாலரும் பல்வேறு வகையிலான ஆபரணங்களை அணிந்தனர். கோதுமை, பார்லி, பால், தயிர், நெய், காய்கறிகள், கனிகள் போன்றவை முக்கிய உணவுப் பொருட்களாகும். பசு புனித விலங்காக கருதப்பட்டதால் பசு இறைச்சி உண்பதற்கு தடையிருந்தது. தேரோட்டப் போட்டி, குதிரையோட்டம், சதுரங்கம், இசை, நடனம் போன்றவை அவர்களது இனிய பொழுதுபோக்குகள். பிந்திய வேத காலத்தில் இருந்ததைப்போல ரிக்வேதகால சமூகத்தில் பிரிவுகள் மிகவும் கடுமையானதாக இருக்கவில்லை.

**பொருளாதார நிலைமை**

மேய்ச்சல் நில மக்களாக விளங்கிய ரிக்வேத காலமக்களின் முக்கியத் தொழில் கால்நடை வளர்ப்பாகும். கால்நடைகளை அடிப்படையாகக் கொண்டே அவர்களது செல்வம் மதிப்பிடப்பட்டது. வடஇந்தியாவில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழத் தொடங்கிய பின்னர் வேளாண் தொழிலை மேற்கொண்டனர். இரும்பின் பயனை நன்குணர்ந்திருந்த அவர்களால் வெகு எளிதாக காடுகளை திருத்தி பரவலான விளை நிலங்களை உருவாக்க முடிந்தது. மற்றொரு முக்கியத் தொழில் தச்சுவேலை. காடுகளை அழிக்கும்போது கிடைத்த ஏராளமான மரங்களால் இத்தொழில் பெரிதும் பயன்பெற்றது. தேர்கள், கலப்பைகள் போன்றவற்றை தச்சர்கள் உற்பத்தி செய்தனர். உலோகக் கலைஞர்கள் செம்பு, வெண்கலம் மற்றும் இரும்பாலான பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தனர். நூல் நூற்றல் மற்றொரு முக்கிய தொழிலாகும். பருத்தி மற்றும் கம்பளி ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. பொற்கொல்லர்கள் ஆபரணங்களையும், குயவர்கள் வீட்டு உபயோகத்திற்கான மட்பாண்டங்களையும் உற்பத்தி செய்தனர்.

வணிகம் மிகமுக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். நதிகள் போக்குவரத்துக்கு பெரிதும் உதவின. பண்டமாற்று முறையிலேயே வணிகம்

நடைபெற்றது. காலப்போக்கில் 'நிஷ்கம்' என்ற தங்க நாணயங்கள் பெரும் வர்த்தகங்களில் செலாவணியாக பயன்படுத்தப்பட்டன.

**சமயம்**

நிலம், நெருப்பு, காற்று, மழை, இடி மின்னல் போன்ற இயற்கை சக்திகளை ரிக்வேத கால மக்கள் வழிபட்டனர். இவற்றை கடவுளராக உருவகப்படுத்தி வழிபட்டனர். பிருதிவி (பூமி), அக்னி (நெருப்பு), வாயு (காற்று), வருணன் (மழை), இந்திரன் (இடிமின்னல்) ஆகிய கடவுளர்கள் ரிக்வேத காலத்தில் புகழ் பெற்றிருந்தனர். முந்தைய வேத காலத்தில் இந்திரன் மிகவும் புகழ்பெற்று விளங்கினான். இந்திரனுக்கு அடுத்த நிலையில் இருந்த அக்னி கடவுளருக்கும் மனிதருக்கும் இடையே உறவுப்பாலமாக இருந்தார். இயற்கைச் சமநிலையை பாதுகாக்கும் கடவுளாக வருணன் விளங்கினார். ஆதித்தி, உஷஸ் போன்ற பெண் கடவுளரும் இக்காலத்தில் வழிபடப்பட்டனர். ஆலயங்களோ, சிலை வழிபாடோ முந்தைய வேதகாலத்தில் இல்லை. நற்பயன்களை எதிர்பார்த்து கடவுளருக்கு வழிபாடுகள் செய்யப்பட்டன. நெய், பால், தானியம் போன்றவை படைக்கப்பட்டன. வழிபாட்டின்போது பல்வேறு சடங்குகள் பின்பற்றப்பட்டன.

**பிந்தைய வேதகாலம் (கி.மு.1000 – கி.மு. 600)**

பிந்தைய வேதகாலத்தில் ஆரியர்கள் மேலும் கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்தனர். கங்கை சமவெளியில் ஆரியர்கள் தங்களது இருப்பிடத்தை விரிவு படுத்திய விவரங்களை சதபத பிராமணம் குறிப்பிடுகிறது. பிந்தைய வேத இலக்கியங்களில் பல்வேறு ஆரிய குலங்கள் மற்றும் அரசுகள் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. பரந்த அரசுகள் எழுச்சி பெற்றது இக்காலத்திய சிறப்புக் கூறாகும். தொடக்கத்தில் குரு மற்றும் பாஞ்சாலம் ஆகிய அரசுகள் புகழ்பெற்று விளங்கின. குரு அரசின் புகழ்மிக்க அரசர்களாக பரிக்ஷித், ஜனமேஜயன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர். பாஞ்சாலர்களின் சிறந்த அரசர் பிரவாஹன ஜெய்வலி என்பவராவார். புலவர்களை இவர் போற்றினார். குரு, பாஞ்சால அரசுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு, கோசலம், காசி, விதேகம் போன்ற அரசுகள் முக்கியத்துவம் பெற்றன. அஜாதசத்ரு காசியின் புகழ்மிக்க அரசர். மிதிலை நகரை தலைநகராகக் கொண்ட விதேக நாட்டின் அரசர் ஜனகர். யக்ஞவாக்யர் என்ற புலவர் இவரது அவையை அலங்கரித்தார். கிழக்குக் கோடியில் மகதம், அங்கம், வங்கம் போன்ற அரசுகள் இருந்தன. பிந்தைய வேத இலக்கியங்களில் இந்தியா மூன்று பெரும்பிரிவுகளாக



குறிக்கப்பட்டுள்ளன. ஆரியவர்த்தம் (வட இந்தியா), மத்யதேசம் (மத்திய இந்தியா), தட்சிணபாதம் (தென்னிந்தியா).

**அரசியல் நிலை**

பிந்தைய வேத காலத்தில் பெரிய அரசுகள் தோன்றியதை ஏற்கனவே குறிப்பிட்டோம். இக்காலத்தில் பல குலங்கள் அல்லது 'ஜன'ங்கள் ஒன்றிணைந்து 'ஜனபதங்கள்' உருவாயின. அரசின் பரப்பளவு பெருகியதால் அரசரின் அதிகாரமும் அதிகரித்தது. தனது வலிமையைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசர் பல்வேறு சடங்குகளையும், வேள்விகளையும் செய்தார். ராஜசூயம் (முடிசுட்டு விழா), அஸ்வமேதம் (குதிரை வேள்வி) மற்றும் வாஜபேயம் (தேர்ப் போட்டி) ஆகியனவும் இவற்றுள் அடங்கும். ராஜ விஸ்வஜனன், அகில புவனபதி, ஏகரதன், சாம்ராட் போன்ற பட்டங்களையும் அரசன் சூட்டிக் கொண்டான்.

புரோகிதர், சேனானி, கிராமணி தவிர, பிந்தைய வேத காலத்தில் மேலும் பல புதிய அதிகாரிகள் ஆட்சித் துறையில் பங்கு வகித்தனர். கருவூல அதிகாரி, வரிதண்டுவோர், அரச தூதர் ஆகியோரும் இதிலடங்கும். கிராம சபைகள் உள்ளாட்சி அமைப்புகளில் அங்கம் வகித்தன. பிந்தைய வேத காலத்தில் 'சபா', 'சமிதி' என்ற அவைகள் செல்வாக்கிழந்தன.

**பொருளாதார நிலை**

இக்காலத்தில் இரும்பின் உபயோகம் அதிகமாகக் காணப்பட்டது. இதனால், மக்கள் மேலும் பல வனங்களை அழித்து விளைநிலங்களைப் பெருக்கினர். வேளாண்மை முக்கியத் தொழிலாக விளங்கியது. புதிய வகை கருவிகள் வேளாண்மைக்கு பயன்படுத்தப்பட்டன. பார்லி தவிர, நெல் மற்றும் கோதுமை பயிரிடப்பட்டன. நிலத்துக்கு உரமிடுதல் ஒரு முக்கிய முன்னேற்றமாகும். பல்வேறு தொழில்களும் வளர்ச்சியடைந்தன. உலோக வேலைப்பாடுகள், தோல்பொருட்கள், தச்சுத்தொழில், மட்பாண்டங்கள் போன்றவை பெரும் வளர்ச்சியடைந்தன. உள்நாட்டு வாணிபத்தோடு அயல்நாட்டு வாணிபமும் பெருகின. கடல் வாணிபம் பிந்தைய வேதகாலத்தில் வழக்கிலிருந்தது. பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. வாணியர் என்ற சமூக அமைப்பும் இக்காலத்தில் தோன்றியது. வைசியரும் வாணிகத்தில் ஈடுபட்டனர். 'கணங்கள்' எனப்பட்ட வாணிகக் குழுக்களை அவர்கள் அமைத்துக்

கொண்டனர். ரிக்வேத காலத்திலிருந்த 'நிஷ்கம்' என்ற நாணயம் தவிர, சதமானம், கிருஷ்ணலம் என்றழைக்கப்பட்ட தங்க, வெள்ளி நாணயங்களும் செலாவணியாக புழக்கத்திலிருந்தன.

**சமூக வாழ்க்கை**

பிந்தைய வேத காலத்தில் சமூகத்தின் நான்கு முக்கிய பிரிவுகளான பிராமணர்கள், ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகியன நன்கு வேரூன்றியது. வைசியருக்கும் சூத்திரருக்கும் மறுக்கப்பட்ட பல்வேறு சலுகைகளை பிராமணர்களும் ஷத்திரியர்களும் அனுபவித்து வந்தனர். ஷத்திரியரைவிட பிராமணரே உயர்ந்த நிலையில் இருந்தபோதிலும், சில வேளைகளில் ஷத்திரியர்கள் பிராமணர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டனர். தாங்கள் மேற்கொண்ட தொழிலின் அடிப்படையில் பல்வேறு கிளை ஜாதிகளும் இக்காலத்தில் தோன்றின. குடும்பத்தைப் பொறுத்தவரை, பிந்தைய வேதகாலத்தில் தாயைவிட தகப்பனின் செல்வாக்கு உயரத் தொடங்கியது. மகளிர் நிலையில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆண்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாகவே பெண்கள் கருதப்பட்டனர். அவைகளில் பங்கெடுத்துக் கொள்ளுதல் போன்ற அரசியல் உரிமைகளையும்கூட பெண்கள் இழந்தனர். சிறார் மணம் பரவலாக வழக்கத்திலிருந்தது. அய்த்ரேய பிராமணம் என்ற நூல், பெண் குழந்தை குடும்பத்திற்கு ஏற்பட்ட சோகம் என்று குறிப்பிடுகிறது. அரச குடும்பத்தில் மட்டும் பெண்கள் ஒருசில சலுகைகளைப் பெற்று வாழ்ந்தனர்.

**சமயம்**

முந்தைய வேதகாலக் கடவுளரான இந்திரனும், அக்னியும் பிந்தைய வேத காலத்தில் செல்வாக்கிழந்தனர். பிந்தைய வேதகாலத்தில் பிரஜாபதி (படைப்புக் கடவுள்), விஷ்ணு (காக்கும் கடவுள்), ருத்ரன் (அழிக்கும் கடவுள்) ஆகிய கடவுளர் முக்கியத்துவம் பெற்றனர். வேள்விகள் மேலும் தீவிரமாக பின்பற்றப்பட்டதோடு, பல்வேறு சடங்குகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. வழிபாட்டின் முக்கியத்துவம் குறைந்து வேள்விகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பூசாரித் தொழில் நன்கு முறைப்படுத்தப்பட்டதோடு பரம்பரைத் தொழிலாகவும் மாறியது. வேள்விகளுக்கான ஒழுங்குமுறைகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டன. எனவே, பிந்தைய வேத காலத்தின் இறுதிப் பகுதியில் பூசாரிகளின் ஆதிக்கத்துக்கும், வேள்விகள், மற்றும் சடங்குகளுக்கும் பலத்த எதிர்ப்புகள்



தோன்றின. இத்தகைய வேள்விகளுக்கு எதிராக தோன்றியதே புத்த, சமண சமயங்களாகும். இந்து தத்துவத்தின் சாரமாக விளங்கும் உபநிடதங்கள் பயனில்லாத இத்தகைய வேள்விகளை ஆதரிக்கவில்லை. ஞானம் என்ற உண்மையான அறிவைப் பெறுவதன் மூலமே மோட்சத்தை அடையமுடியும் என அவை வலியுறுத்தின.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொண்டது.*

1. *நான்கு வேதங்கள் மற்றும் பிந்தைய வேத இலக்கியங்கள்.*
2. *ரிக்வேத கால அரசியல், சமூக, பொருளாதாரம்.*
3. *ரிகவேத கால மக்களின் சமயம்.*
4. *அரசியலிலும், சமூகத்திலும் பிந்தைய வேத காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.*
5. *பிந்தைய வேத காலத்தில் அதிகரித்த சடங்குகளும் வேள்விகளும்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1 வேதங்களில் பழமையானது

அ. ரிக் ஆ. யஜுர்

இ. சாம ஈ. அதர்வ

2. பிரவாஹன ஜெய்வலி ஆட்சிபுரிந்த அரசு

அ. விதேகம் ஆ. காசி

இ. குரு ஈ. பாஞ்சாலம்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இராமாயணத்தின் ஆசிரியர் ........

2. ஆரியரின் பூர்வீகம் ஆர்க்டிக் பகுதி என்று கூறியவர் ..........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. நிஷ்கம் | அ. பிந்தைய வேதகால நாணயம் |
| 2. உஷஸ் | ஆ. ரிக்வேத கால நாணயம் |
| 3. அபலா | இ. பெண் கடவுள் |
| 4. கிருஷ்ணலா | ஈ. பெண் புலவர் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.

அ. இந்திரனும், வருணனும் பிந்தைய வேத காலத்தில் முக்கிய கடவுளர்.

ஆ. பிந்தைய வேதகாலத்தில் மகளிர் நிலை முன்னேற்றம் கண்டது.

இ. பிந்தைய வேதகாலத்தில் ஜாதிமுறை கடுமையாக இல்லை.

ஈ. பிந்தைய வேத காலத்தில் சமிதி, சபா ஆகியவற்றின் முக்கியத்துவம் குறைந்தது.



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. ஆரண்யகங்கள் இந்து தத்துவத்தின் சாரம் எனப்படுகிறது.

2. பிந்தைய வேதகாலத்தில் அரசர்களின் அதிகாரம் பெருகியது.

3. ரிக் வேத காலமக்கள் இரும்பை அறிந்திருக்கவில்லை.

4. ரிக்வேத காலத்தில் வருண அமைப்பு முறை நன்கு வேரூன்றியது.

**VI.** சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. வேத கால இலக்கியம்

2. ஆரியர்களின் பூர்வீகம்

3. ரிக்வேதகால மகளிர் நிலை.

4. ரிக்வேதகால சமயம்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. ரிக்வேத கால அரசியல் நிலை பற்றி குறிப்பெழுதுக.

2. பிந்தை வேதகால மக்களின் சமய வாழ்க்கையை குறிப்பிடுக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. ரிக்வேத கால ஆரியர்களின் சமூக – பொருளாதார வாழ்க்கையை விவரி.

2. பிந்தைய வேத காலத்தில் அரசியல் சமூக நிலைமைகளை மதிப்பிடுக.

# பாடம் – 4

## சமண, புத்த சமயங்கள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது*

1. *புத்த, சமண சமயங்களின் எழுச்சிக்கான காரணங்கள்.*
2. *மகாவீரரின் வாழ்க்கை மற்றும் போதனைகள்.*
3. *புத்தரின் வாழ்க்கை மற்றும் போதனைகள்.*
4. *புத்த சமயம் பரவுதல்.*
5. *இந்தியாவில் புத்தசமயம் மறைவதற்கான காரணங்கள்.*

வரலாற்றில் கி.மு. ஆறாம் நூற்றாண்டு மிகச்சிறந்த நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. புத்தர், மகாவீரர், ஹெராக்ளிடஸ், சொராஸ்டர், கன்பூசியஸ், லா சே போன்ற சிறந்த சிந்தனையாளர்கள் வாழ்ந்து தங்களது கருத்துக்களை பரப்பியது இந்த நூற்றாண்டில்தான். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் குடியரசு நிறுவனங்கள் வலிமையாகத் திகழ்ந்தன. இதனால், சடங்குகள் ஆதிக்கம் செலுத்திய வைதீக சமயத்திற்கு எதிரான சமயங்கள் எழுச்சிபெற வாய்ப்புக்கள் தோன்றின. அவற்றில் சமணமும், பௌத்தமும் வெற்றி பெற்றதோடு, இந்திய சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களையும் ஏற்படுத்தின.

**சமண, புத்த சமயங்கள் எழுச்சிபெறக் காரணங்கள்**

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமயம் சார்ந்த அமைதியின்மையே சமண, புத்த சமயங்களின் எழுச்சிக்கு முதன்மையான காரணமாகும். பிந்தைய வேத காலத்தில் புகுத்தப்பட்ட சிக்கலான சடங்குமுறைகளும் வேள்விகளும் சாதாரண மக்களுக்கு ஏற்புடையதாக இல்லை. மேலும், வேள்விக்கான செலவுகளும் ஏராளமாக இருந்தன.



மூடநம்பிக்கைகளும், மந்திரங்களும் மக்களிடையே பெரும் குழப்பத்தை உருவாக்கின. வேள்வி முறைகளுக்கு மாற்றாக எழுந்த உபநிடதங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் உயர்ந்த தத்துவங்களை எடுத்துக் கூறின. ஆனால் அவற்றை சாதாரண மக்களால் எளிதாக புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு எளிய, புரிந்து கொள்ளக்கூடிய மோட்சத்திற்கான சிறந்த வழி தேவைப்பட்டது. அத்தகைய வழியும் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய மொழியில் இருக்க வேண்டும் என்பதும் முக்கியம். இந்த தேவைகளை புத்தர், மகாவீரர் ஆகியோருடைய போதனைகள் நிறைவு செய்வதாக அமைந்தன.

மேற்கண்ட சமய காரணங்கள்தவிர, சமூக, பொருளாதார சூழ்நிலைகளும் இவ்விரண்டு சமயங்களின் எழுச்சிக்கு வித்திட்டன. இந்தியாவிலிருந்த கடுமையான ஜாதிமுறை சமுதாயத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. கீழ்சாதியினருக்கு மறுக்கப்பட்ட பல சலுகைகளை உயர் சாதியினர் அனுபவித்து வந்தனர். புரோகித வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஷத்திரியர்கள் வெறுத்தனர். புத்தர், மகாவீரர் இருவருமே ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாணிக வளர்ச்சியின் பயனாக வைசியர்களின் பொருளாதார நிலை உயர்ந்திருந்தது. ஆனால், வர்ணாஸ்ரம முறையின்கீழ் வைசியருக்கு உயரிய இடம் அளிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரிக்கத்தொடங்கினர். வாணிக வகுப்பினரான இவர்கள் இவ்விரண்டு புதிய சமயங்களுக்கும் மகத்தான ஆதரவு அளித்து போற்றினர்.

**சமண சமயம்**

**வர்த்தமான மகாவீரரின் வாழ்க்கை (கி.மு.539 – கி.மு.467)**


வர்த்தமான மகாவீரர் சமண பரம்பரையில் 24வது தீர்த்தங்கரர். வைசாலிக்கருகிலுள்ள குண்டக் கிராமத்தில், ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த சித்தார்த்தருக்கும், திரிசலைக்கும் வர்த்தமானர் மகனாகப் பிறந்தார். யசோதை என்ற பெண்மணியை மணந்த அவர் ஒரு பெண் மகவுக்கும் தந்தையானார். தனது முப்பதாவது வயதில் துறவு பூண்ட வர்த்தமானர் பன்னிரண்டு ஆண்டுகள் சுற்றியலைந்தார். 13 ஆம் ஆண்டில் தவத்தின் பலனாக ‘கேவல ஞானம்’ என்ற உயரிய ஆன்மீக அறிவைப் பெற்றார். அதன்பின் அவர் மகாவீரர் என்றும், ஜீனர் என்றும் அழைக்கப்பட்டார். அவரது சீடர்கள் சமணர்கள் எனப்பட்டனர். அவரது கருத்துக்கள் சமணம்

என்று வழங்கப்பட்டது. முப்பது ஆண்டுகள் தொடர்ந்து தமது கருத்துக்களை மகாவீரர் பரப்பிவந்தார். தமது 72 ஆவது வயதில் ராஜகிருகத்திற்கு அருகிலுள்ள பாவா என்ற இடத்தில் அவர் மறைந்தார்.

**மகாவீரரின் போதனைகள்**

சமண சமயத்தின் மூன்று முக்கிய கோட்பாடுகள் மூன்று இரத்தினங்கள் எனப்படுகின்றன. அவை :

- நல்ல நம்பிக்கை
- நல்ல அறிவு
- நல்ல நடத்தை


மகாவீரர்

நல்ல நம்பிக்கை என்பது, மகாவீரரின் கருத்துக்களிலும் பேரறிவிலும் நம்பிக்கை வைத்தலாகும். நல்ல அறிவு என்பது கடவுள் இல்லை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, உலகத்தை படைத்தவர் எவருமில்லை என்பதையும் அனைத்து பொருட்களுக்கும் ஆன்மா உண்டு என்பதையும் உணர்ந்து கொள்வதாகும். நல்ல நடத்தை என்பது ஐந்து முக்கிய விரதங்களை கடைப்பிடிப்பதைக் குறிக்கும். அவை :

- உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமை.
- பொய் உரைக்காமை
- களவு செய்யாமை
- சொத்துக்களை கொள்வதை விடுத்தல்
- ஒழுக்கமற்ற வாழ்வை நடத்தாமலிருத்தல்

சமண சமய சீடர்களும், மக்களும் அகிம்சைக் கோட்பாட்டை தவறாமல் கடைப்பிடித்தல் வேண்டும். உயிருள்ள, உயிரில்லா அனைத்து பொருட்களும் ஆன்மாவை பெற்றுள்ளன என்று மகாவீரர் கூறினார். அவற்றுக்கு வாழ்க்கை உண்டு எனவும், காயப்படுத்தும்போது வலியை உணர்கின்றன என்றும் கருதினர். வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்த அவர், வேத சமயத்தின் சடங்குகளை எதிர்த்தார். புனிதமான, ஒழுக்கமான



வாழ்க்கையை மேற்கொள்வதின் சிறப்பை அவர் வலியுறுத்தினார். நிலம், மண் புழுக்கள், விலங்குகள் போன்றவற்றுக்கு தீங்கு விளைவதால் வேளாண்மை செய்வதுகூட பாவம் என அவர் கருதினார். அதேபோல், பட்டினி கிடப்பது, ஆடையைத் துறப்பது, தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்வது போன்ற நடைமுறைகளினால் துறவற வாழ்க்கையை அதன் உச்சகட்டத்திற்கே மகாவீரர் இட்டுச் சென்றார்.

**சமண சமயம் பரவுதல்**

தமது கருத்துக்களை பரப்புவதற்கு மகாவீரர் சங்கத்தை அமைத்தார். அதில் ஆண், பெண் இருபாலரையும் சேருவதற்கு அனுமதித்தார். சங்கத்தில் துறவிகள் மற்றும் சாதாரண சீடர்களும் இருந்தனர். சங்க உறுப்பினர்களின் அயராத உழைப்பினால் சமண சமயம் வேகமாகப் பரவியது. குறிப்பாக மேற்கு இந்தியாவிலும், கர்நாடகத்திலும் அது பரவியது. சந்திரகுப்த மௌரியர், கலிங்க நாட்டு காரவேலர், தென்னிந்திய அரச குலங்களான கங்கர்கள், கடம்பர்கள், சாளுக்கியர்கள் மற்றும் ராஷ்டிரகூடர்கள் ஆகியோர் சமண சமயத்தை போற்றி ஆதரித்தனர்.


கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் கங்கைச் சமவெளியில் கடும்பஞ்சம் ஏற்பட்டது. பத்ரபாகு மற்றும் சந்திரகுப்த மௌரியர் தலைமையில் பல சமணத் துறவிகள் கர்னாடகாவிலுள்ள சிரவணபெல்கோலாவை வந்தடைந்தனர். வட இந்தியாவிலேயே தங்கிவிட்ட சமணத் துறவிகளுக்கு ஸ்தூலபாகு என்ற துறவி தலைமையேற்றார். துறவிகளுக்கான விதிமுறைகளை அவர் மாற்றியமைத்தார். இதனால், சமண சமயம் இரண்டாக பிரிந்தது. ஒரு பிரிவினர் ஸ்வேதாம்பரர்கள் (வெள்ளையுடை அணிந்தவர்கள்) என்றும் மற்றொரு பிரிவினர் திகம்பரர்கள் (திசையையே ஆடையாகக் கொண்டவர்கள்) என்றும் அழைக்கப்பட்டனர்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், திகம்பரர்களின் தலைவரான ஸ்தூலபாகு பாடலிபுத்திரத்தில் முதலாவது சமண மாநாட்டைக் கூட்டினார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாலாபியில் இரண்டாவது சமண மாநாடு நடைபெற்றது. பன்னிரண்டு அங்கங்கள் எனப்படும் சமண இலக்கியத்தின் இறுதி வடிவம் இம்மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**புத்த சமயம்**

**கௌதம புத்தரின் வாழ்க்கை (கி.மு. 567 – கி.மு. 427)**

புத்த சமயத்தை நிறுவிய கௌதமர் அல்லது சித்தார்த்தர் கபிலவஸ்துவுக்கு அருகிலுள்ள லும்பினி தோட்டத்தில் கி.மு. 567 ஆம் ஆண்டு பிறந்தார். சாக்கிய குலத்தைச் சேர்ந்த சுத்தோதனர் அவரது தந்தை. மாயாதேவி அவரது தாய். சேயாக இருக்கும்போதே தாயை இழந்த சித்தார்த்தர் சிற்றன்னை பிரஜாபதி கௌதமி என்பவரால் வளர்க்கப்பட்டார். தனது பதினாறாவது வயதில் யசோதரையை மணந்து கொண்ட அவர் ராகுலன் என்ற மகனுக்கு தந்தையானார். வயோதிகர், நோயாளி, பிணம், துறவி ஆகியவற்றை கண்ணுற்ற அவர் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். தமது இருபத்தி ஒன்பதாம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறிய அவர் 'உண்மை'யைத் தேடி ஏழாண்டுகள் அலைந்தார். பல அறிஞர்களை சந்தித்து விளக்கம் கேட்டும் அவருக்கு பேரறிவு கிட்டவில்லை. இறுதியாக புத்தகயாவிலுள்ள போதிமரத்துக்கடியில் தவம் செய்தபோது சித்தார்த்தருக்கு பேரறிவு (நிர்வாணம்) கிட்டியது. அப்போது அவருக்கு வயது முப்பத்தி ஐந்து. அதன்பிறகு, அவர் புத்தர் அல்லது 'ஒளிபெற்றவர்' என்று அழைக்கப்பட்டார். பெனாரசுக்கு அருகிலுள்ள சாரநாத் என்ற இடத்தில் புத்தர் தனது முதலாவது உரையை நிகழ்த்தினார். அடுத்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் இடைவிடாத பிரச்சாரத்தை அவர் மேற்கொண்டார். குசிநகரம் என்றவிடத்தில் தனது எண்பதாவது வயதில் அவர் உயிர் நீத்தார்.



கௌதமபுத்தர்

சரிபுட்டர், மொக்கலண்ணர், ஆனந்தர், கசபர், உபாலி ஆகியோர் புத்தரின் முக்கிய சீடாகளாவர். கோசல நாட்டு பிரசேனஜித், மகத நாட்டு பிம்பிசாரர் மற்றும் அஜாதசத்ரு ஆகிய அரசர்கள் அவரது கோட்பாடுகளை ஏற்று சீடர்களாயினர். புத்தர் தமது வாழ்நாளிலேயே வடஇந்தியா முழுவதிலும் பயணம் செய்து தமது கருத்துக்களை பரப்பினார். பெனாரஸ், ராஜகிருஹம், ஸ்ராவஸ்தி, வைசாலி, நாளந்தா, பாடலிகிராமம் ஆகியன அவர் வருகைபுரிந்த முக்கிய இடங்களாகும். கடவுள், ஆன்மா, கர்மா, மறுபிறவி போன்ற புலன்களுக்கு எட்டாத வெற்று தத்துவ வாதங்களில் ஈடுபடுவதை புத்தர் தவிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தே அவர் அதிக கவனம் செலுத்தினார்.



**புத்தரின் போதனைகள்**

**புத்தர் போதித்த நான்கு சீரிய உண்மைகளாவன :**

- உலகம் துன்பங்கள் நிறைந்தது.
- துன்பங்களுக்கு காரணம் ஆசை.
- ஆசைகளைத் துறந்தால் துன்பங்களைத் துடைக்கலாம்.
- இதற்கு எண்வகை வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

எண்வகை வழிகளாவன : நன்னம்பிக்கை, நன்முயற்சி, நற்பேச்சு, நன்னடத்தை, நல்வாழ்வு, நன்முயற்சி, நற்சிந்தனை, நல்தியானம்.

புத்தர் கடவுளை ஏற்கவுமில்லை; கடவுள் இருப்பதை மறுக்கவும் இல்லை. கர்மவினைக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு மனிதனின் வாழ்க்கையை அவனது செய்கைகளே நிர்ணயிக்கின்றன.

ஆன்மா என்ற எதுவும் இல்லை. இருப்பினும் அவர் அஹிம்சையை வலியுறுத்தினார். மனித குலத்திடமும் பிற உயிரினங்களிடமும் அன்பு பாராட்டியதோடு மிகவும் நேசிக்கவும் செய்தார். எத்தகைய சினத்திற்கு அவர் தூண்டப்பட்டாலும் அமைதியாகவே பதிலளிப்பார். மாறாக, தனது அன்பாலும், கருணையாலும் அவர்களை தமது பக்கம் ஈர்த்துக் கொள்ளும் திறன் படைத்தவராக புத்தர் விளங்கினார். ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது அவரது சமயம். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் அவர் தூய்மையை வலியுறுத்தினார். பகுத்தறிவாளரான புத்தர், கண்மூடித்தனமாக வாதிடாமல், எதனையும் அறிவின் அடிப்படையிலேயே அணுகினார். ஜாதிமுறையை அவர் நேரடியாக சாடாவிட்டாலும், சமூக வேற்றுமைகளுக்கு எதிராக வாதிட்டார். அனைத்து சமூகத்தவரையும் தமது சமயத்தில் சேர அனுமதித்தார். எனவே, புத்த சமய எழுச்சியை ஒரு சமயப்புரட்சி என்பதைவிட சமூகப்புரட்சி என்று கூறலாம். நடைமுறைக்கு சாத்தியமான ஒழுக்க நெறிகளை அது போதித்தது. சமூக சமத்துவ கோட்பாட்டிற்கும் அது வித்திட்டது.

**புத்த சமயம் பரவுதல்**

புத்தருக்கு இரண்டு வகை சீடர்கள் உண்டு – பிக்குகள் என்ற புத்த சமயத் துறவிகள், உபாசிகர்கள் என்ற சாதாரண புத்த சமயத்தைத் தழுவிய மக்கள். புத்தரது போதனைகளை பரப்புவதற்கு, புத்த சமயத் துறவிகளைக் கொண்ட சங்கம் அமைக்கப்பட்டது. ஆண், பெண், சாதி வேறுபாடுகளின்றி அனைவரும் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டனர். பெண்துறவி களுக்கு அவர்களது இருப்பிடம் மற்றும் பிரயாணம் குறித்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. சரிபுட்டர், மொக்கலண்ணர், ஆனந்தர் ஆகியோர் புகழ்மிக்க புத்த சமயத் துறவிகளாவர். ஜனநாயக முறைப்படி சங்கம் நிர்வகிக்கப்பட்டது. உறுப்பினர்களிடையே ஒழுக்கத்தை செயல்படுத்தும் அதிகாரம் சங்கத்திடம் இருந்தது. சங்கம் மேற்கொண்ட அயராத முயற்சிகளின் பலனாக புத்தரது வாழ்நாளிலேயே புத்தசமய கருத்துக்கள் வட இந்தியாவில் வேகமாகப் பரவியது. மகதம், கோசலம், கோசாம்பி மற்றும் பல வடஇந்திய குடியரசுகள் புத்தசமயத்தை ஏற்றுக்கொண்டன. புத்தர் மறைந்து ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு மௌரியப் பேரரசர் அசோகர் புத்தசமயத்தை தழுவினார். அசோகர் அனுப்பிய தூதுக் குழுக்கள் மூலமாக, மேற்கு ஆசியா, இலங்கை ஆகிய பகுதிகளுக்கும் புத்த சமயம் பரவியது. சிறிய சமயப் பிரிவாகத் தோன்றிய புத்த சமயம் இவ்வாறு உலக சமயமாக மாறியது.

**புத்தசமய மாநாடுகள்**

புத்தர் மறைந்தவுடனேயே, மகாகசபர் தலைமையில் ராஜகிருஹத்தில் முதல் புத்த சமய மாநாடு கூட்டப்பட்டது. புத்தரது போதனைகளின் தூய்மையை பாதுகாப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். சுமார் கி.மு. 383 ஆம் ஆண்டு இரண்டாவது புத்தசமய மாநாடு வைசாலியில் நடைபெற்றது. அசோகரது ஆதரவில் பாடலிபுத்திரத்தில் மூன்றாவது புத்தசமய மாநாடு கூடியது. மொக்காலிபுத்ததிஸ்ஸா இதற்கு தலைமை வகித்தார். இம்மாநாட்டில் திரிபீடகங்கள் இறுதிவடிவம் பெற்றது. வசுமித்திரர் தலைமையில் காஷ்மீரில் நான்காவது புத்தசமய மாநாட்டை கனிஷ்கர் கூட்டினார். அசுவகோஷர் இம்மாநாட்டில் பங்கேற்றார். இம்மாநாட்டில்தான் மகாயான புத்த சமயம் என்ற புதிய சமயப் பிரிவு உருவாயிற்று. புத்தரால் போதிக்கப்பட்டதும் அசோகரால் பரப்பப்பட்டதுமான புத்த சமயம் ஹுனயானம் என்று அழைக்கப்பட்டது.



புத்தர் மறைந்து ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் புத்தசமய நூல்கள் திரட்டப்பட்டு தொகுக்கப்பட்டன. அவை திரிபீடகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவையாவன: சுத்தபீடகம், வினயபீடகம், அபிதம்மபீடகம். அவை பாலி மொழியில் எழுதப்பட்டன.

**இந்தியாவில் புத்தசமயம் மறைய காரணங்கள்**

பிராமண சமயம் புத்துயிர் பெற்றதாலும், பாகவத சமயத்தின் எழுச்சியாலும் புத்தசமயத்தின் புகழ் மங்கத் தொடங்கியது. மக்களின் மொழியான பாலிமொழி புத்தசமயத்தின் மொழியாக இருந்த நிலை கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு மாறியது. கற்றோர் மொழியான வடமொழியை புத்தசமயம் பின்பற்றத் தொடங்கியது. மகாயான புத்தசமயம் தோன்றிய பிறகு, சிலை வழிபாடும் பூசைகளும் மலிந்தன. இதனால் ஒழுக்கநெறிகள் குறையத் தொடங்கின. மேலும், கி.பி. 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற ஹுணர்களின் படையெடுப்பாலும், 12 ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட துருக்கிய படையெடுப்புகளின் போதும் புத்தசமய மடாலயங்கள் அழிக்கப்பட்டன. இத்தகைய காரணங்களால் இந்தியாவில் புத்தசமயம் மறைந்தது.

**இந்தியப் பண்பாட்டிற்கு புத்த சமயத்தின் பங்களிப்பு**

இந்திய பண்பாட்டு வளர்ச்சிக்கு புத்தசமயம் அரும் பணியாற்றியுள்ளது.

- அகிம்சை கோட்பாடு அதன் முக்கிய பங்களிப்பாகும். பிற்காலத்தில் நமது நாட்டின் முக்கிய விழுமியமாக அஹிம்சைக் கொள்கை விளங்கியது.

- இந்தியக் கலை, கட்டிடக் கலைக்கு புத்த சமயத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. சாஞ்சி, பார்ஹுத், கயா ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபிகள் இந்தியக் கட்டிடக் கலையின் சிறப்புக்கு சான்றுகளாகும். இந்தியாவின் பல பகுதிகளில் சைத்தியங்களும், புத்த விஹாரங்களும் அமைக்கப்பட்டன.

- தட்சசீலம், நாளந்தா, விக்ரமசீலா ஆகிய இடங்களிலிருந்த புத்தசமய பல்கலைக் கழகங்களும், பிற கல்வி நிறுவனங்களும் சிறந்த கல்வித் தொண்டாற்றியுள்ளன.

- பாலி மொழி, மற்றும் பிற உள்நாட்டு மொழிகள் வளர்வதற்கு புத்தசமய பிரச்சாரம் காரணமாயிற்று.

- ஆசியாவின் பிறபகுதிகளுக்கு இந்தியப் பண்பாட்டை புத்தசமயம் எடுத்துச் சென்றது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *புத்த சமண சமய எழுச்சிக்கான சமய மற்றும் பிற காரணங்கள்.*
2. *மகாவீரரின் இளமைக் கால வாழ்க்கையும் அவரது மூன்று இரத்தினக் கோட்பாடுகளும்.*
3. *கௌதம புத்தரின் இளமைக்காலமும், நான்கு உண்மைகள், எண் வகை வழிகள் என்ற அவரது போதனைகளும்.*
4. *புத்த சமயத்தை ஆதரித்தவர்கள் – சங்கம் நிறுவப்பட்டமை புத்தசமயம் பரவியது.*
5. *இந்தியாவில் புத்தசமயம் மறைந்தது – மற்றும் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு புத்தசமயம் ஆற்றிய பணிகள்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. வர்த்தமான மகாவீரர் பிறந்த இடம்

அ. கபிலவஸ்து ஆ. பாடலிபுத்திரம்

இ. குண்டக்கிராமம் ஈ. குசுமபுரம்

2. திரிபீடகங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டது?

அ. வடமொழி ஆ. பிராகிருதம்

இ. பாலி ஈ. இந்தி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதல் சமணசமய மாநாடு .......... என்றவிடத்தில் ....... என்பவரால் கட்டப்பட்டது.
2. சமணசமய இலக்கியத்தின் இறுதி வடிவம் ........ எனப்பட்டது.
3. அசோகர் போதித்த புத்தசமயம் ......... என அழைக்கப்பட்டது.

**III.** பொருத்துக.

1. முதல் புத்த மாநாடு அ. வைசாலி
2. இரண்டாம் புத்த மாநாடு ஆ. காஷ்மீர்
3. மூன்றாம் புத்த மாநாடு இ. ராஜகிருஹம்
4. நான்காம் புத்த மாநாடு ஈ. பாடலிபுத்திரம்

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. நான்கு சீரிய உண்மைகளை மகாவீரர் போதித்தார்.

ஆ. பாலிமொழியை பின்பற்றியதால் புத்தசமயம் அழிந்தது.

இ. மகாயான புத்த சமயப்பிரிவினர் சிலை வழிபாட்டை பின்பற்றினர்.

ஈ. தத்துவார்த்தமான விவாதங்களில் புத்தர் ஈடுபட்டார்.

V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. புத்தர் கடவுள் இருப்பதை ஏற்கவுமில்லை, மறுக்கவுமில்லை.

2. மகாவீரர் தமது சீடர்களை ஐந்து முக்கிய விரதங்களை கடைப்பிடிக்க வலியுறுத்தினார்.

3. முதல் புத்தசமய மாநாடு காஷ்மீரில் கனிஷ்கரால் கூட்டப்பட்டது.

4. உலகின் பிறபகுதிகளுக்கு இந்தியப் பண்பாடு பரவுவதற்கு புத்தசமயம் காரணமாயிற்று.

VI. சிறுகுறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. திரிரத்தினங்கள்

2. சமண சமயம் பிளவுபடுதல்

3. திரிபீடங்கள்

4. மூன்றாவது புத்தசமய மாநாடு

VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. இந்தியாவில் சமணசமயம் பரவியதை விவாதி.

2. இந்தியாவில் புத்தசமயம் மறைய காரணங்கள் யாவை?

VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. மகாவீரரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை விவரி.

2. புத்தரின் வாழ்க்கை மற்றும் போதனைகளை சுருக்கி எழுதுக.

3. புத்தசமயம் எவ்வாறு உலக சமயமாயிற்று?



# பாடம் – 5

## மகதத்தின் எழுச்சியும், அலெக்சாந்தரின் படையெடுப்பும்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்தைப் படிப்பதால் மாணவர் அறிந்துகொள்வது*

1. *ஹர்யங்கா, சிசுநாக, நந்த வம்சங்களின்கீழ் மகதத்தின் எழுச்சி.*
2. *பிம்பிசாரர், அஜாதசத்ரு ஆகியோரின் சாதனைகள்.*
3. *பாரசீகப் படையெடுப்புகளும் அவற்றின் தாக்கமும்.*
4. *அலெக்சாந்தர் படையெடுப்புக்கான காரணங்கள், போக்கு.*
5. *அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள்.*

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடஇந்தியாவில் எண்ணற்ற தனி அரசுகள் இருந்தன. சிலவற்றில் முடியாட்சிமுறை வழக்கிலிருந்தது. சில குடியரசுகளாகவும் திகழ்ந்தன. கங்கைச் சமவெளியில் முடியாட்சிகள் இருந்தன. வடமேற்கு இந்தியாவிலும், இமயமலைகளின் அடிவாரத்திலும் குடியாட்சிகள் இருந்தன. சாக்கியர்கள், லிச்சாவிகள், மல்லர்கள் போன்ற ஒருசில ஒரே குலத்தைச் சேர்ந்த குடியாட்சிகள் சிலவும் காணப்பட்டன. குடியாட்சிகளில் அரசின் முக்கிய முடிவுகளை பொது அவை எடுத்தது. அதில் குடும்பத் தலைவர்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர். பெரும்பான்மை வாக்கு அடிப்படையிலேயே அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டன.

பதினாறு மகாஜனபதங்கள் என்றழைக்கப்படும் பதினாறு பெரும் அரசுகள் பற்றி புத்த இலக்கியமான "அங்குத்தார நிகயம்" விவரங்களை குறிப்பிடுகிறது. அவை யாவன : அங்கம், மகதம், காசி, கோசலம், வஜ்ஜி, மல்லம், சேதி, வத்சம், குரு, பாஞ்சாலம், மத்ச்யம், சூரசேனம், அஸ்மகம், அவந்தி, காந்தாரம் மற்றும் காம்போஜம். பதினாறு அரசுகள் பற்றி சமண நூல்களும் குறிப்பிடுகின்றன. காலப் போக்கில், சிறிய அரசுகள் வலிமையான ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்தன; அல்லது அழிக்கப்பட்டன. இறுதியாக,

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் நான்கு அரசுகள் மட்டுமே எஞ்சியிருந்தன – அவை வத்சம், அவந்தி, கோசலம், மகதம் என்பனவாகும்.

**வத்சம்**

வத்சம் என்ற அரசு யமுனை நதிக்கரையில் அமைந்திருந்தது. தற்கால அலகாபாத்துக்கு அருகிலுள்ள கோசாம்பி அதன் தலைநகரம். அதன் புகழ்மிக்க அரசர் உதயணன். அவந்தி, அங்கம், மகதம் ஆகிய அரசுகளுடன் மண உறவுகளை வைத்துக் கொண்டதன்மூலம் அவர் தமது வலிமையைப் பெருக்கிக் கொண்டார். அவரது மறைவுக்குப் பிறகு, வத்சம் அவந்தி அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**அவந்தி**

அவந்தி அரசின் தலைநகரம் உஜ்ஜயினி. இதன் மிகச்சிறப்பு வாய்ந்த அரசர் பிரயோதித்யன். உதயணன் மகளான வாசவத்தத்தையை மணந்தபின் வலிமைமிக்க ஆட்சியாளரானார். இவர் புத்தசமயத்தை ஆதரித்தார். பிரயோதித்தயனுக்குப்பின் வந்தோர் திறமையற்றவர்கள். பின்னர் அவந்தியை மகதத்தின் ஆட்சியாளர்கள் இணைத்துக் கொண்டனர்.

**கோசலம்**

கோசல நாட்டின் தலைநகரம் அயோத்தி – இதன் புகழ்வாய்ந்த அரசர் பிரசேனஜித். கல்வியில் சிறந்தவர். மகதத்தோடு மணவுறவு கொண்டபின் அவரது செல்வாக்கு மேலும் அதிகரித்தது. தனது தந்தையை பிம்பிசாரனுக்கு மணமுடித்து, காசியை மணப் பரிசாகவும் கொடுத்தார். பின்னர், அஜாதசத்ருவுடன் மோதல் ஏற்பட்டது. இறுதியில், பிரசேனஜித், பிம்பிசாரனின் மகளை மணம்புரிந்து கொண்டார். அவரது மறைவுக்குப்பின் கோசலம் மகதத்தின் ஒருபகுதியாயிற்று.

**மகதம்**

வடஇந்திய அரசுகளிலேயே, மகதம் வலிமையாகவும் வளமையாகவும் எழுச்சி பெற்றது. வடஇந்திய அரசியல் நடவடிக்கைகளின் மையமாக அது திகழ்ந்தது. மகதத்தின் புவியியல் அமைப்பு மற்றும் ராணுவ முக்கியத்துவம் பெற்ற அமைவிடம் இயற்கை மகதத்திற்கு அளித்த கொடை எனலாம். கங்கைச் சமவெளியின் இடைப்பட்ட பகுதியில் மகதம் அமைந்திருந்தது



சாதகமாகவே காணப்பட்டது. வளமான விளைநிலங்கள், ராஜ்கீருக்கருகில் இருந்த இரும்புக் கனிவளம், கயாவுக்கு அருகிலிருந்த இரும்புப் படிமங்கள் ஆகியன இயற்கை அளித்த வரமாகும். அக்காலத்தில் வாணிக வழித்தடத்தின் மையத்திலும் மகதம் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும். மகதத்தின் தலைநகரம் ராஜகிருஹம், பிம்பிசாரன், அஜாதசத்ரு ஆகயோரின் ஆட்சிக் காலத்தில் மகதத்தின் செல்வம் அதன் உச்சஅளவை எட்டியது.

**பிம்பிசாரன் (கி.மு. 546 – கி.மு. 494)**

பிம்பிசாரன் ஹர்யாங்க வம்சத்தை சேர்ந்தவர். மணவுறவுகள் மூலம் தனது வலிமையை அவர் பெருக்கிக் கொண்டார். கோசல நாட்டு அரச குடும்பத்தில் அவர் முதலாவது மணஉறவை ஏற்படுத்திக் கொண்டார். அதனால், அதிக வருவாய் தரக் கூடிய காசி அவருக்கு மணப்பரிசாக கிடைத்தது. பின்னர், பிம்பிசாரன் வைசாலியை ஆண்ட லிச்சாவி குடும்பத்தைச் சேர்ந்த செல்லண்ணா என்ற இளவரசியை மணந்து கொண்டார். இந்த மண உறவினால் மகதத்தின் வடக்கு எல்லையின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டது. மேலும், நேபாள எல்லை வரை மகதம் விரிவடையவும் இது வழிவகுத்தது. மத்திய பஞ்சாபிலிருந்த மத்ரா அரச குடும்பத்தைச் சேர்ந்த கேமா என்ற இளவரசியையும் அவர் மணந்து கொண்டார். பல்வேறு படையெடுப்புகளை மேற்கொண்ட பிம்பிசாரர் தனது பேரரசை மேலும் விரிவுபடுத்தினார். அவந்தி நாட்டோடு நட்புறவை மேற்கொண்டார். தனது அரசில் ஆட்சி முறையையும் செம்மையாக சீரமைத்தார்.

வர்த்தமான மகாவீரர், கௌதம புத்தர் ஆகிய இருவருக்கும் பிம்பிசாரர் சமகாலத்தவர். இருப்பினும், இவ்விரு சமயங்களும் பிம்பிசாரரை தத்தம் ஆதரவாளர் என்று கோருகின்றன. புத்த சங்கத்திற்கு எண்ணற்ற பரிசுகளை அவர் வழங்கியதாகத் தெரிகிறது.

**அஜாதசத்ரு (கி.மு. 494 – கி.மு. 462)**

அஜாத சத்ருவின் ஆட்சி படையெடுப்புகளுக்கு பெயர் பெற்றதாகும். கோசலம், வைசாலி ஆகிய அரசுகளுக்கெதிராக அவர் போரிட்டார். வைசாலியைச் சேர்ந்த லிச்சாவிகள் தலைமையிலான மாபெரும் கூட்டிணைவை எதிர்த்து பெரும் வெற்றி கண்டார். இதனால், அவரது புகழும் பெருமையும் அதிகரித்தன. இப்போர் பதினாறு ஆண்டுகள் நீடித்தது.

இப்போரின்போதுதான், அஜாதசத்ரு பாடலிகிராமம் (பிற்காலத்தில் பாடலிபுத்திரம்) என்ற சிறு கிராமத்தின் ராணுவ முக்கியத்துவத்தை பெரிதும் உணர்ந்தார். வைசாலிக்கெதிரான படையெடுப்புகளுக்காக, அங்கு கோட்டைகள் அமைத்து வலிமையை பெருக்கிக் கொண்டார்.

புத்த, சமண சமயங்கள் அஜாதசத்ருவை தத்தம் சமயத்தவர் என்று கூறிக்கொள்கின்றன. அவர் தொடக்கத்தில் சமணராகவும், பின்னர் புத்த சமயத்தையும் தழுவினார் என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. கௌதம புத்தரை அவர் சந்தித்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த காட்சி பார்ஹுத் ஸ்தூபியில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் கூற்றுப்படி அவர் பல சைத்தியங்களையும் விகாரங்களையும் அமைத்தார் என அறிகிறோம். புத்தரின் மறைவுக்குப் பிறகு, ராஜகிருஹத்தில் முதல் புத்தசமய மாநாடு கூட்டப்படுவதற்கு அவர் முக்கிய காரணமாக இருந்தார்.

அஜாதசத்ருவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் உதயின். கங்கை நதியுடன் சோன் ஆறு கலக்குமிடத்தில் பாடலிபுத்திரம் என்ற புதிய தலைநகரை அவர் நிர்மாணித்தார். பின்னர், மௌரியப் பேரரசின் தலைநகராக பாடலிபுத்திரம் புகழ்பெற்றது. உதயினுக்குப் பின் வந்தோர் வலிமை குறைந்தவர்கள். எனவே, மகதம் சிசுநாகர்களால் கைப்பற்றப்பட்டது. ஹர்யாங்கவம்சம் முடிவுக்கு வந்து சிசுநாகவம்சம் ஆட்சிக்கு வந்தது.

**சிசுநாக வம்சம்**

சிசுநாகர்களின் வம்சாவளியும், காலக்கணிப்பும் தெளிவாக இல்லை. அவந்தி நாட்டு அரசனை முறியடித்த சிசுநாகன் அதனை மகதத்துடன் இணைத்துக் கொண்டார். சிசுநாகனுக்குப் பிறகு மகதப் பேரரசு சீர்குலையத் தொடங்கியது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் காகவர்மன் அல்லது காலசோகன் என்பவர். இவரது ஆட்சிக்காலத்தில் வைசாலியில் இரண்டாவது புத்த சமய மாநாடு கூடியது. நந்தவம்சத்தை நிறுவியவரால் காலசோகன் கொல்லப்பட்டார்.

**நந்தர்கள்**

நந்தவம்ச ஆட்சியில் மகதத்தின் புகழ் அதன் உச்சிக்கு சென்றது. அவர்கள் பெற்ற வெற்றிகள் கங்கைச் சமவெளிக்கு அப்பாலும் சென்றது. வடஇந்தியா முழுவதையும் உள்ளடக்கிய ஒரு பெரும் பேரரசை நந்தர்கள் உருவாக்கினர்.



நந்தவம்சத்தின் வலிமைமிக்க ஆட்சியாளர் மகாபத்மநந்தர். வடஇந்தியாவிலிருந்த ஷத்திரிய வம்சத்தவர்களை முறியடித்த அவர் ஏகரதன் என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார். மகாபத்ம நந்தரின் விரிவான படையெடுப்புகள்பற்றி புராணங்கள் குறிப்பிடுகின்றன. நந்தர்கள் கலிங்க நாட்டை கைப்பற்றியதாக காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு குறிப்பிடுகிறது. தக்காணத்தின் பெரும்பகுதி நந்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது என பல வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, மகாபத்ம நந்தர் ஒரு பரந்த பேரரசை உருவாக்கினார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

புத்த சமய சான்றுகள்படி மகாபத்ம நந்தர் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவரைத் தொடர்ந்து அவரது எட்டு புதல்வர்களும் ஒருவர்பின் ஒருவராக மகதத்தை ஆட்சி செய்தனர். நந்தவம்சத்தின் கடைசி அரசர் தனநந்தர். மகதப் பேரரசை கட்டுக்குலையாமல் அவர் காப்பாற்றினார். ஏராளமான செல்வத்தையும், வலிமைமிக்க படையையும் அவர் வைத்திருந்தார். நந்தர்களின் செல்வச் செழிப்பு பற்றி சங்க இலக்கியமான அகநானூற்றில் மாமூலனார் பாடியுள்ளார். நந்தர்களின் ஆட்சிப் குதியில் நிலவிய வளமான வேளாண்மையும், பொதுவான செல்வச் செழிப்பும் அரசுக் கருவூலத்தை நிரப்பியிருந்திருக்க வேண்டும். தனநந்தன் பின்பற்றிய கடுமையான வரிவசூல் முறையை மக்கள் எதிர்த்தனர். இதனைச் சாதகமாக பயன்படுத்திக் கொண்ட சந்திரகுப்த மௌரியனும், கௌடில்யரும் நந்தர்களின் ஆட்சிக்கு எதிராக ஒரு மக்கள் எழுச்சியை தோற்றுவித்தனர். இக்காலத்தில்தான் அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்தார்.

## பாரசீக மற்றும் கிரேக்க படையெடுப்புகள்

**பாரசீக படையெடுப்புகள்**

**சைரஸ் (கி.மு. 558 – கி.மு. 530)**

அக்கமேனியப் பேரரசின் மிகச்சிறந்த வெற்றியாளராகத் திகழ்ந்தவர் மகா சைரஸ். இந்தியாவிற்கு எதிராக படையெடுத்த முதல் படையெடுப்பாளர் இவரேயாகும். இந்தியாவுக்குள் நுழைந்து காந்தாரப் பகுதியை கைப்பற்றினார். சிந்து நதிக்கு மேற்கிலிருந்த இந்தியப் பழங்குடிகள் அனைத்தும் அவரிடம் சரணடைந்தன. கப்பம் கட்டவும் ஒப்புக்கொண்டன. அவரது மகன் காம்பிசிசுக்கு இந்தியாவின்மீது கவனம் செலுத்த நேரமில்லை.

**முதலாம் டேரியஸ் (கி.மு. 522 – கி.மு. 486)**

சைரஸின் பேரனான முதலாம் டேரியஸ் கி.மு. 518ல் சிந்து வெளியைக் கைப்பற்றினார். பஞ்சாப், சிந்து இரண்டும் இவரால் இணைத்துக் கொள்ளப்பட்டன. இப்பகுதி பேரரசின் இருபதாவது சாட்ரபி (மாகாணம்)யாக திகழ்ந்தது. அக்கமேனியப் பேரரசின் மக்கள்தொகை மிகுந்த செழிப்புமிக்க மாகாணமாக அது திகழ்ந்தது. சிந்து நதியில் ஆய்வு மேற்கொள்வதற்காக, ஸ்கைலாஸ் தலைமையில் கப்பற்படையை டேரியஸ் அனுப்பிவைத்தார்.

**செர்க்ஸஸ் (கி.மு. 465 – கி.மு. 456)**

தனது வலிமையைப் பெருக்கிக் கொள்ள இந்திய மாகாணத்தை செர்க்ஸஸ் பயன்படுத்திக் கொண்டார். தனது எதிரிகளுடன் போரிடுவதற்காக, இந்திய காலாட்படை, குதிரைப்படை ஆகியவற்றை கிரேக்கத்துக்கு அனுப்பி வைத்தார். ஆனால், செர்க்ஸஸ் கிரேக்கத்தில் தோல்வியைத் தழுவியதால் இந்தியப் படைகள் திரும்பப் பெறப்பட்டன. இத்தோல்விக்குப் பிறகு அக்கமேனியர்கள் இந்தியாமீது ஆக்ரமிப்பு கொள்கையைப் பின்பற்ற முடியவில்லை. இருப்பினும், இந்திய மாகாணம் அவர்கள் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருந்து வந்தது. கி.மு. 330ல் அலெக்சாந்தரை எதிர்த்துப் போரிடுவதற்காக மூன்றாம் டேரியஸ் இந்திய வீரர்களை பயன்படுத்திக் கொண்டார். இந்தியாமீது அலெக்சாந்தர் படையெடுத்தபோது பாரசீகர்களின் கட்டுப்பாடுகள் தளர்ந்துவிட்டிருந்தன என்றே கூறவேண்டும்.

**பாரசீக படையெடுப்பின் விளைவுகள்**

இந்தோ–ஈரானிய வர்த்தகம் வளர்வதற்கு பாரசீகப் படையெடுப்புகள் ஊக்கமளித்தன. மேலும், அலெக்சாந்தரின் படையெடுப்புக்கு இது கட்டியம் கூறியது. வடமேற்கு இந்தியாவில் ஈரானிய எழுத்து வடிவமான கரோஷ்தி வரிவடிவம் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. அசோகரது கல்வெட்டுகள் சிலவற்றில் இந்த வரி வடிவம் காணப்படுகிறது. மௌரியர் கால கலையிலும் பாரசீகக் கலையின் தாக்கத்தைக் காணமுடிகிறது. குறிப்பாக, அசோகரது ஒற்றை கல்தூண்களும் சிற்பங்களும் இதற்கு சான்றாகும். அசோகரது கல்வெட்டு ஆணைகள் ஈரானிய செல்வாக்கினால் விளைந்தவை எனலாம். இந்தோ–மாசிடோனியத் தொடர்புகள் ஏற்படுத்திய தாக்கத்தைவிட இந்தோ–ஈரானியத் தொடர்பின் தாக்கம் பெரிதும் பயனளிப்பதாக அமைந்தது.




**இந்தியாவில் அலெக்சாந்தரின் படையெடுப்பு (கி.மு. 327 – கி.மு. 325)**

**அலெக்சாந்தர் படையெடுப்பின்போது அரசியல் நிலை**

பாரசீகர்கள் படையெடுத்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு மாசிடோனியாவைச் சேர்ந்த அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்தார். அவரது படையெடுப்பின்போது வடமேற்கு இந்தியாவில் பல சிறு அரசுகள் இருந்தன. தட்ச சீலத்து அம்பி, அபிசார நாட்டு அரசன், ஜீலம், சீனாப் நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியை ஆட்சி செய்த போரஸ் போன்ற முதன்மையான அரசர்கள் இப்பகுதியில் ஆட்சி புரிந்தனர். நிசா போன்ற பல குடியரசு நாடுகளும் இருந்தன. இந்தியாவின் அரசியல் ஒற்றுமை குறைந்த பகுதியாக வடமேற்கு இந்தியா விளங்கியதோடு, ஆட்சியாளர்களும் தங்களுக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்தனர். பொது எதிரியை வீழ்த்துவதற்குக்கூட அவர்கள் ஒன்று சேரவில்லை. இருப்பினும், பல்முனை எதிர்ப்புகளை வெற்றிகொள்வது என்பது அலெக்சாந்தருக்கு எளிதாக இருந்தது என்று கூறமுடியாது.

**படையெடுப்புக்கான காரணங்கள்**

கி.மு. 334 ஆம் ஆண்டு தனது தந்தை பிலிப் மறைந்தபிறகு, அலெக்சாந்தர் மாசிடோனியாவின் அரசராகப் பதவியேற்றார். கி.மு. 330 ஆம் ஆண்டு அர்பேலா போரில் மூன்றாம் டேரியசை முறியடித்து பாரசீகம் முழுவதையும் கைப்பற்றினார். மேலும் கிழக்கு நோக்கி படையெடுத்து இந்தியாவிற்குள் நுழைந்து இந்திய மாகாணத்தைக் கைப்பற்றுவது அவரது நோக்கம். ஹெரோடோடஸ் போன்ற எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருந்த இந்தியாவின் செல்வச் செழிப்பு அலெக்சாந்தரின் கவனத்தை ஈர்த்தது. புவியியல் ஆய்வு மேற்கொள்ளும் ஆர்வம் மற்றும் இயற்கையை ஆய்வு செய்தல் போன்ற காரணங்களாலும் அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்தார். இந்தியாவிற்கு கிழக்கே தொடர்ந்து கடல் இருப்பதாகவும் அவர் நம்பினார். அது அக்காலத்திய புவியியல் கருத்தாக இருந்தது. எனவே, இந்தியாவை கைப்பற்றுவதன்மூலம் உலகத்தின் கிழக்கு எல்லையை கைப்பற்றிவிடலாம் என்றும் அவர் கனவு கண்டார்.



அலெக்சாந்தரின் படையெடுப்புகள்



**ஹைடாஸ்பஸ் போர்**

கி.மு. 327 ஆம் ஆண்டு அலெக்சாந்தர் இந்துகுஷ் மலைகளைக் கடந்து, கிட்டத்தட்ட எட்டுமாத காலம் அங்கிருந்த பழங்குடிகளிடம் போரிட்டார். கி.மு. 326ல் அவர் படகுப்பாலம் அமைத்து சிந்து நதியைக் கடந்தார். தட்சசீலத்து அம்பி அவரை அன்புடன் வரவேற்றார். அங்கிருந்துகொண்டே, போரஸ் மன்னரை சரணடையுமாறு கோரினார். ஆனால், போரஸ் அதற்கு உடன்படாமல், போரிடுவதற்கு தயாரானார். பின்னர், அலெக்சாந்தர் தட்சசீலத்திலிருந்து புறப்பட்டு ஹைடாஸ்பஸ் (ஜீலம்) நதிக்கரையை அடைந்தார். நதிக்கு அப்பால் போரசின் பெரும்படை அணிவகுத்திருப்பதைக் கண்டார். ஜீலம் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அதனைக் கடப்பது எளிதாக இருக்கவில்லை. சிறிது நாட்கள் காத்திருந்த பின்னர், அவர் ஜீலம் நதியைக் கடந்து காரிச்சமவெளியில் போரசின் படைகளோடு போரிட்டார். இதுவே புகழ்மிக்க ஹைடாஸ்பஸ் போர் எனப்படுகிறது. மிகவும் கடுமையான போராகவே அது காணப்பட்டது. வலிமையான படைகள் இருந்தபோதிலும், இறுதியில் போரஸ் தோற்றுப் போனார். இந்திய அரசனின் வீரத்தையும் தலைமைப் பண்பையும் கண்டு வியப்பெய்திய அலெக்சாந்தர் போரசை பெருந்தன்மையுடன் நடத்தியதோடு மீண்டும் அரியணையில் அமர்த்தினார்.

அலெக்சாந்தர் வழியிலிருந்த பழங்குடியினரை முறியடித்தவண்ணம் தனது படைகளுடன் பியாஸ் நதிவரை தொடர்ந்து முன்னேறினார். மேலும் முன்னேறி கங்கைச் சமவெளி நோக்கி செல்ல விரும்பினார். ஆனால் அவரது வீரர்கள் ஒத்துழைக்க மறுத்தனர். நீண்டகாலமாகப் போரிட்டு அவர்கள் களைப்புற்றிருந்தனர். எனவே தாயகம் திரும்புவதிலேயே குறியாக இருந்தனர். அலெக்சாந்தரால் அவர்களை சமாதானப்படுத்த முடியாமற்போனதால் தாயகம் திரும்ப முடிவு செய்தார். இந்தியாவில் தாம் கைப்பற்றிய பகுதிகளை ஆட்சிபுரிவதற்கான ஏற்பாடுகளை செய்தார். சிந்து முதல் பியாஸ் வரையிலான பகுதிகளை மூன்று மாகாணங்களாகப் பிரித்து அவற்றுக்கு ஆளுநர்களை நியமித்தார். கி.மு. 326 அக்டோபரில் அவரது படைகள் இந்தியாவிலிருந்து பின்வாங்கத் தொடங்கின. தாயகம் திரும்பும் பயணம் மிகவும் கடுமையானதாகவே இருந்தது. குடியரசுப் படைகள் பல அவரது படைகளை தாக்கின. ஒருவாறு சமாளித்து அவர் சிந்து நதியைக் கடந்தார். தாயகம் செல்லும் வழியில் பாபிலோனியாவில் அலெக்சாந்தர் நோய்வாய்ப்பட்டு கி.மு. 323 ஆம் ஆண்டு மறைந்தார்.

**அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள்**

மௌரியர்களின்கீழ் வடஇந்தியாவில் அரசியல் ஒருமைப்பாடு ஏற்பட்டதே அலெக்சாந்தர் படையெடுப்பின் உடனடி விளைவாகும். சிறு அரசுகள் என்ற முறை முடிவுக்கு வந்தது. இந்தியா, கிரேக்கம் ஆகியவற்றுக்கிடையே நேரடித் தொடர்பு ஏற்படுவதற்கு அலெக்சாந்தர் படையெடுப்பு வழிவகுத்தது. அவர் ஏற்படுத்திய புதிய வழிகள், கடல் ஆய்வுகள் போன்றவற்றால் இந்தியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் இடையே நிலவி வந்த வர்த்தகத் தொடர்புகள் மேலும் பெருகின. அவரது அகால மரணத்தினால், வடமேற்கு இந்தியாவை தனது பேரரசுடன் இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற அவரது விருப்பம் நிறைவேறாமல் போயிற்று. சந்திரகுப்தரின் கீழ் மௌரியப் பேரரசு விரிவடைந்தமையால், சிந்துவெளியில் அவர் ஏற்படுத்திய ஆதிக்கம் சொற்பகாலமே நீடித்தது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்த மாணவர் அறிந்து கொண்டது.*

1. *மகதத்தின் எழுச்சியும், அதனை ஆட்சிபுரிந்த பல்வேறு அரச குலங்களும்.*
2. *பிம்பிசாரன், அஜாதசத்ரு போன்ற அரசர்களின் சாதனைகள்.*
3. *பாரசீகப் படையெடுப்புகளும், வடமேற்கு இந்தியாவில் அவர்களது ஆக்ரமிப்பும்.*
4. *பாரசீகப் படையெடுப்பின் விளைவுகள்.*
5. *இந்தியாமீது அலெக்சாந்தர் படையெடுப்பதற்கான காரணங்கள்.*
6. *அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மகதத்தின் தலைநகரம்

அ. ராஜகிருஹம் ஆ. உஜ்ஜயினி

இ. கோசலம் ஈ. கோசாம்பி

2 நந்தவம்சத்திற்கு முன்பு ஆட்சி புரிந்தவர்கள்

அ. மௌரியர்கள் ஆ. கிசுநாகர்கள்

இ. ஹர்யாங்கர்கள் ஈ. குப்தர்கள்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அஜாத சத்ரு ........... வம்சத்தைச் சேர்ந்தவர்.
2. நந்த வம்சத்தின் கடைசி அரசர் .........
3. இரண்டாம் புத்த மாநாடு நடைபெற்ற இடம் ........
4. அலெக்சாந்தர் .......... ஆண்டில் ........... என்ற இடத்தில் மறைந்தார்.

**III.** பொருத்துக.

1. உதயணன் — அ. கோசலம்
2. பிரத்யோதன் — ஆ. அவந்தி
3. பிரசேனஜித் — இ. மகதம்
4. பிம்பிசாரன் — ஈ. வத்சம்

**IV.** சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.

அ. அலெக்சாந்தர் போரசை முறியடித்து அவரது நாட்டை இணைத்துக் கொண்டார்.

ஆ. அலெக்சாந்தர் போரசை முறியடித்து அவரை பெருந்தன்மையுடன் நடத்தினார்.

இ. அலெக்சாந்தரால் போரசை எதிர்த்து வெற்றிபெற முடியவில்லை.

ஈ. அலெக்சாந்தர் போரசின் உதவிகொண்டு தட்சசீலத்து அம்பியை முறியடித்தார்.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. இந்தியாவிற்குள் நுழைந்த முதல் படையெடுப்பாளர் செர்க்ஸெஸ்.
2. ஹைடாஸ்பஸ் போர் காரிச்சமவெளியில் நடைபெற்றது.
3. அலெக்சாந்தர் தாயகம் திரும்புமுன் கங்கைச் சமவெளியின் சில பகுதிகளை இணைத்துக் கொண்டார்.

**VI.** சிறு குறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. பதினாறு மகாஜன பதங்கள்
2. ஹைடாஸ்பஸ் போர்
3. சைரஸ்
4. அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. பிம்பிசாரனின் சாதனைகளை சுருக்கி எழுதுக.
2. இந்தியாவில் பாரசீக படையெடுப்பின் தாக்கத்தை மதிப்பிடுக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. மகதத்தின் எழுச்சியையும், அதன் ஆட்சியாளர்களின் சாதனை களையும் விவரி.
2. இந்தியாவில் அலெக்சாந்தர் படையெடுப்பபை விவரி.



# பாடம் – 6

# மௌரியப் பேரரசு

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *மௌரியர் வரலாற்றுக்கான சான்றுகள்.*
2. *சந்திரகுப்த மௌரியரின் சாதனைகள்.*
3. *அசோகரது சாதனைகளும், அசோகரது தர்மம் பரவுதலும்.*
4. *மௌரியர் ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுகள்.*
5. *மௌரியர்கால கலை, கட்டிடக் கலை.*
6. *மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்.*

மௌரியப் பேரரசு நிறுவப்பட்டதிலிருந்து இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. முதன்முறையாக, இந்தியாவில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது. வரலாற்றுக்கான சான்றுகளும் காலக்கணிப்பும் துல்லியமாக இருப்பதால் வரலாறு எழுதுவதிலும் தெளிவு பிறந்தது. ஏராளமான உள்நாட்டு, அயல்நாட்டு இலக்கிய ஆதாரங்களோடு, கல்வெட்டு தகவல்களும் இக்காலத்திய வரலாற்றை எழுதுவதற்கு பயன்படுகின்றன.

### இலக்கிய சான்றுகள்

#### கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்

வடமொழி நூலான அர்த்த சாஸ்திரத்தை எழுதியவர் கௌடில்யர். இவர் சந்திரகுப்தமௌரியரின் சம காலத்தவர். கௌடில்யர் ‘இந்திய மாக்கியவல்லி’ என்றும் அழைக்கப்படுகிறார். 1904 ஆம் ஆண்டுதான் ஆர். சாமாசாஸ்திரி என்பவரால் அர்த்த சாஸ்திரத்தின் சுவடிகள்

கண்டெக்கப்பட்டன. அர்த்த சாஸ்திரம் 15 புத்தகங்களையும் 180 அத்தியாயங்களையும் கொண்டது. இதனை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி அரசன், அரசவை, அரசாங்கத்தின் பல்வேறு துறைகள் பற்றிக் கூறுகிறது. இரண்டாம் பகுதி உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டங்களையும், மூன்றாம் பகுதி அரசியல் வெல்திறன், போர் ஆகியவற்றையும் எடுத்துரைக்கிறது. மௌரியர் வரலாற்றுக்கு முக்கிய இலக்கிய சான்றாக இந்த நூல் திகழ்கிறது.

**விசாகதத்தரின் முத்ராராட்சசம்**

விசாகதத்தரால் இயற்றப்பட்ட முத்ராராட்சசம் ஒரு வடமொழி நாடக நூலாகும். குப்தர் காலத்தில் இந்த நூல் எழுதப்பட்டாலும், கௌடில்யரின் துணையோடு சந்திரகுப்தன் நந்தர்களை முறியடித்து மௌரிய ஆட்சியை எப்படி நிறுவினான் என்பதை இது விவரிக்கிறது. மௌரியர்கால சமூக, பொருளாதார நிலைமைகளையும் எடுத்துக் கூறுகிறது.

**மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா**

சந்திரகுப்த மௌரியரின் அவையில் கிரேக்கத் தூதராக இருந்தவர் மெகஸ்தனிஸ். அவர் எழுதிய நூலான இண்டிகா முழுமையாக கிடைக்கவில்லை. இருப்பினும், மௌரியர் ஆட்சிமுறை, குறிப்பாக பாடலிபுத்திர நகராட்சி, படைத்துறை நிர்வாகம் குறித்த தகவல்களை இந்த நூல் தருகிறது. மௌரியர்கால சமூகம் குறித்த அவரது வர்ணனை குறிப்பிடத்தக்கது. அவர் கூறும் ஒரு சில நம்ப இயலாத தகவல்களை மிகுந்த எச்சரிக்கையுடனேயே கணக்கில் கொள்ள வேண்டும்.

**பிற இலக்கியங்கள்**

மேற்கூறிய மூன்று நூல்கள் தவிர, புராணங்களும், ஜாதகக் கதைகள் போன்ற புத்த சமய இலக்கியங்களும் மௌரியர் வரலாறு குறித்த தகவல்களைத் தருகின்றன. இலங்கை நூல்களான மகாவம்சம், தீபவம்சம் இரண்டும் இலங்கையில் அசோகரது முயற்சியால் புத்தசமயம் பரவிய வரலாற்றைக் கூறுகினறன.



**தொல்லியல் சான்றுகள்**

**அசோகரது ஆணைகள்**

1837 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்செப் என்பவரால் முதன்முதலில் அசோகரது கல்வெட்டுகள் படித்தறியப்பட்டன. பாலிமொழியிலும், ஒருசில இடங்களில் பிராகிருத மொழியிலும அவை எழுதப்பட்டுள்ளன. பிரம்மி வரி வடிவத்தில் அவை அமைந்துள்ளன. வடமேற்கு இந்தியாவிலுள்ள அசோகரது கல்வெட்டுக்கள் கரோஷ்தி வரிவடிவத்தில் பொறிக்கப் பட்டுள்ளன. மொத்தம் பதினான்கு பெரிய பாறைக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவரால் புதியதாக கைப்பற்றப்பட்ட பகுதியில் இரண்டு கலிங்கக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. முக்கிய நகரங்களில் பெரிய தூண் கல்வெட்டுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர, சிறிய பாறை மற்றும் தூண் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. அசோகரது ஆணைகளான இவையனைத்தும் அசோகரின் தர்மம் பற்றியும், தனது அதிகாரிகளுக்கு அசோகர் பிறப்பித்த ஆணைகள் பற்றியும் கூறுகின்றன. பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டு அசோகரது கலிங்கப் போரைப்பற்றி குறிப்பிடுகிறது. தனது பேரரசில் தர்மத்தை பரப்புவதற்காக அசோகர் மேற்கொண்ட முயற்சிகளை ஏழாவது தூண் கல்வெட்டு விவரிக்கிறது. எனவே, அசோகரது கல்வெட்டுக்கள் அசோகரைப் பற்றியும், மௌரியப் பேரரசு குறித்தும் அறிந்து கொள்ள முக்கிய சான்றுகளாகப் பயன்படுகின்றன.

**மௌரியர்களின் அரசியல் வரலாறு**

**சந்திரகுப்த மௌரியர் (கி.மு. 322 – கி.மு. 298)**

மௌரியப் பேரரசை நிறுவியவர் சந்திரகுப்த மௌரியர். அவர் தனது இருபத்தி ஐந்தாவது வயதில் நந்தவம்சத்தின் கடைசி அரசன் தனநந்தனிடமிருந்து பாடலிபுத்திரத்தைக் கைப்பற்றினார். இதற்கு கௌடில்யர் அவருக்கு உறுதுணையாக இருந்தார். கௌடில்யரை சாணக்யர் என்றும் விஷ்ணுகுப்தர் என்றும் அழைப்பர். கங்கைச் சமவெளியில் தனது நிலையை வலுப்படுத்தக் கொண்டபின், சந்திரகுப்த மௌரியர் வடமேற்கில் படையெடுத்துச் சென்று சிந்து நதி வரையிலான பகுதிகளைக் கைப்பற்றினார். பின்னர் மத்திய இந்தியாவில் நர்மதை நதிக்கு வடக்கிலிருந்த பகுதிகள் அனைத்தையும் இணைத்துக் கொண்டார்.

கி.மு. 305 ஆம் ஆண்டு வடமேற்கு இந்தியாவை ஆட்சிபுரிந்த அலெக்சாந்தரின் படைத் தளபதியான செலூகஸ் நிகேடருக்கு எதிராக படையெடுத்தார். அவரை முறியடித்த சந்திரகுப்த மௌரியர், அவரோடு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அதன்படி, செலூகஸ் நிகேடர் சிந்துநதிக்கு அப்பாலிருந்த பகுதிகளான அரியா, அரகோஷியா, கெட்ரோஷியா போன்றவற்றை மௌரியப் பேரரசுடன் இணைத்துக்கொள்ள சம்மதித்தார். தனது மகளையும் மௌரிய இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தார். சந்திரகுப்த மௌரியரும் செலூகஸ் நிகேடருக்கு பரிசாக 500 யானைகளை அளித்தார். கிரேக்க நாட்டின் தூதராக மெகஸ்தனிஸ் மௌரிய அரசவைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சந்திரகுப்த மௌரியர் தனது ஆட்சிக் காலத்தின் முடிவில் சமண சமயத்தை தழுவினார். தனது மகன் பிந்துசாரனுக்காக அரியணையைத் துறந்த அவர், பத்ரபாகு தலைமையிலான சமணத்துறவிகள் புடைசூழ மைசூருக்கு அருகிலுள்ள சிரவணபெல்கோலாவை வந்தடைந்தார். அங்கு உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தார்.

**பிந்துசாரன் (கி.மு. 298 – கி.மு. 273)**

கிரேக்க நாட்டு ஆசிரியர்களால் 'அமித்ரகாதன்' என்று குறிக்கப்படுபவர் பிந்துசாரன். இதற்கு எதிரிகளை அழிப்பவன் என்று பொருள். அவர் மைசூர்வரை படையெடுத்து சென்று தக்காணத்தை கைப்பற்றினார். இரண்டு கடல்களுக்கும் இடையிலிருந்த பதினாறு நாடுகளை பிந்துசாரன் கைப்பற்றியதாக திபெத் அறிஞர் தாரநாதர் குறிப்பிட்டுள்ளார். சங்க காலத்து தமிழ் இலக்கியங்களும் மௌரியர்களின் தெற்கத்திய படையெடுப்பு பற்றி குறிப்பிடுகின்றன. எனவே, பிந்துசாரன் ஆட்சிக் காலத்தில் மௌரியப் பேரரசு மைசூர் வரை பரவியிருந்தது என்று கூறலாம்.

சிரியா நாட்டு அரசன் முதலாம் ஆன்டியோகஸ் தனது தூதுவராக டைமக்கஸ் என்பவரை பிந்துசாரன் அவைக்கு அனுப்பிவைத்தார். பிந்துசாரன், முதலாம் ஆன்டியோகசிடம், இனிப்பான மது, உலர்ந்த அத்திப்பழம், போன்றவற்றையும் ஒரு தத்துவ ஞானியையும் அனுப்பி வைக்குமாறு கோரினார். பொருட்களை அனுப்பிவைத்த சிரியா அரசன், கிரேக்க நாட்டு சட்டப்படி தத்துவஞானியை அனுப்ப இயலாது என்றும் தெரிவித்தான். அஜிவிகர்கள் என்ற சமயப் பிரிவினரை பிந்துசாரன்



ஆதரித்தார். தனது மகன் அசோகரை உஜ்ஜயினியின் ஆளுநராக பிந்துசாரன் நியமித்தார்.


**மகா அசோகர் (கி.மு. 273 – கி.மு. 232)**

அசோகரின் இளமைக்காலம் பற்றி சொற்ப செய்திகளே உள்ளன. தனது தந்தை பிந்துசாரன் ஆட்சிக்காலத்தில் உஜ்ஜயினியின் ஆளுநராக அசோகர் பணியாற்றினார். தட்சசீலத்தில் நடைபெற்ற கலகத்தை ஒடுக்கினார். அசோகர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிற்கும் (கி.மு. 273) முடிசூட்டிக் கொண்டதற்கும் (கி.மு. 269) இடையே நான்கு ஆண்டுகள் இடை வெளியிருந்தது. எனவே, பிந்துசாரனின் மறைவுக்குப்பின் அரியணைக்குப் போட்டி இருந்திருக்கும் என்பதற்கு சான்றுகள் உள்ளன. இலங்கை நூல்களான மகாவம்சமும், தீபவம்சமும் அசோகர் தனது மூத்த சகோதரர் சுசிமா உள்ளிட்ட தொண்ணூற்று ஒன்பது சகோதரர்களை கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன. இளைய சகோதரன் திசா மட்டும் உயிரோடு விடப்பட்டான். ஆனால், திபெத் அறிஞர் தாரநாதர் அசோகர் தனது ஆறு சகோதரர்களை மட்டுமே கொன்றதாகக் கூறுகிறார். அசோகரது சகோதரர்கள் பலர் ஆட்சித் துறையில் பணியாற்றியதாக அவரது கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. எப்படியிருப்பினும், அசோகர் ஆட்சிக்கு வந்தபோது அரியணைக்குப் போட்டி இருந்தது தெளிவாகிறது.

அசோகரது ஆட்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வு கி.மு. 261 ஆம் ஆண்டு அவர் கலிங்கப்போரில் பெற்ற வெற்றியாகும். அப்போரின் காரணம் மற்றும் போக்கு பற்றி விவரங்கள் இல்லையென்றாலும், விளைவுகள் பற்றி அசோகர் தாம் வெளியிட்ட பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். "ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனர், அதைப்போல் பன்மடங்கு மக்கள் துன்புற்றனர்" போருக்குப்பின் அசோகர் கலிங்கத்தை மௌரியப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். கலிங்கப் போரின் மற்றொரு முக்கிய விளைவு அசோகர் புத்த சமயத்தை தழுவியதாகும். புத்தபிக்கு உபகுப்தர் அவரை மனமாற்றம் செய்து புத்தசமயத்தை தழுவச் செய்தார்.

**அசோகரும் புத்த சமயமும்**

சில அறிஞர்களின் கருத்துப்படி அசோகர் உடனடியாக புத்த சமயத்துக்கு மாறிவிடவில்லை என்றும் படிப்படியாகவே புத்த சமயத்தை






தழுவினார் என்றும் கருதுகின்றனர். போருக்குப்பின் அவர் ஒரு சாக்கிய உபாசகரானார் (சாதாரண சீடர்). இரண்டரை ஆண்டுகள் கழித்து ஒரு புத்த பிக்கு (துறவி)வாக மாறினார். பின்னர் வேட்டையாடுதலை கைவிட்டார். புத்தகயாவிற்கு புனிதப்பயணம் மேற்கொண்டார். புத்த சமயத்தைப் பரப்புவதற்காக தூதுக்குழுக்களை அனுப்பினார். தர்மத்தை விரைவாக பரப்பும் பொருட்டு தர்ம மகாமாத்திரர்கள் என்ற சிறப்பு அலுவலர்களை நியமித்தார். கி.மு. 241 ஆம் ஆண்டு புத்தர் பிறந்த இடமான கபிலவஸ்துவுக்கு அருகிலுள்ள லும்பினி வனத்திற்கு பயணம் மேற்கொண்டார். மேலும், புத்தசமய புனித இடங்களான சாரநாத், ஸ்ராவஸ்தி, குசிநகரம் போன்ற இடங்களுக்கும் சென்றார். தனது மகன் மகேந்திரன், மகள் சங்கமித்திரை ஆகியோரின் தலைமையில் சமயப் பரப்புக்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அங்கு போதிமரத்தின் கிளையை நட்டனர். புத்த சங்கத்தை வலிமைப்படுத்துவதற்காக அசோகர் கி.மு. 240 ஆம் ஆண்டு பாடலிபுத்திரத்தில் மூன்றாவது புத்தசமய மாநாட்டைக் கூட்டினார். மொக்கலிபுத்த திசா அம்மாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

**அசோகரது பேரரசுப்பரப்பு**

சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள், கேரள புத்திரர்கள் ஆகியோர் எல்லைப்புறத்திலிருந்த தென்னிந்திய அரசுகள் என அசோகரது கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. எனவே, இவை மௌரியப் பேரரசுக்கு வெளியே அமைந்திருந்தன என்பது தெளிவாகிறது. காஷ்மீர் மௌரியப் பேரரசுக்கு உட்பட்டது என ராஜதரங்கிணி குறிப்பிடுகிறது. நேபாளமும் மௌரியப் பேரரசின் ஒரு பகுதியாகும். வடமேற்கு எல்லையை ஏற்கனவே சந்திரகுப்த மௌரியர் நிர்ணயம் செய்திருந்தார்.

**அசோகரது தர்மம்**

அசோகர் புத்த சமயத்தை தழுவி, அதனைப் பரப்புவதற்கு முயற்சிகளை எடுத்தபோதிலும், அவரது தர்மக் கொள்கை மேலும் உயரிய கருத்தாகும். அது ஒரு வாழ்க்கை நெறி; ஒழுக்க விதி; அனைத்து மக்களும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கோட்பாடுகள் என்று கூறலாம். அசோகரது தர்மக் கோட்பாடுகள் அவரது கல்வெட்டுக்களில் தெளிவாக குறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொதுவான சிறப்புக்கூறுகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. தாய், தந்தைக்குப் பணிவிடை செய்தல், அஹிம்சையைக் கடைப்பிடித்தல், உண்மையை நேசித்தல், ஆசிரியர்களைப் போற்றுதல் மற்றும் உறவினரை நன்றாக நடத்துதல்.
2. திருவிழாக் கூட்டங்களையும் விலங்குகளை பலியிடுதலையும் தடை செய்தல்; பொருட் செலவுமிக்க மற்றும் பொருளற்ற சடங்குகளையும் வழக்கங்களையும் தவிர்த்தல்.
3. சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டு ஆட்சிமுறையை செம்மையாக திறம்பட சீரமைத்தல்; மக்களுடன் நேரடித் தொடர்பை எப்போதும் வைத்திருக்கும் பொருட்டு தர்ம யாத்திரைகளை மேற்கொள்ளுதல்.
4. பணியாளர்களை எஜமானர்களும், கைதிகளை அரசாங்க அதிகாரிகளும் மனித நேயத்துடன் நடத்துதல்.
5. விலங்குகள்மீது கருணைகாட்டி அஹிம்சையைக் கடைப்பிடித்தல்; உறவினரை மதித்தல்; பிராமணர்களுக்கு கொடையளித்தல்.
6. அனைத்து சமயப் பிரிவுகளுக்கிடையே சகிப்புத் தன்மையை வலியுறுத்தல்.
7. போர் செய்வதை தவிர்த்து தர்மத்தின்வழி வெற்றி கொள்ளுதல்.

அஹிம்சை கோட்பாடும், அசோகரது தர்ம கருத்துக்களும் புத்தரின் போதனைகளை ஒட்டியே அமைந்துள்ளன. ஆனால், அசோகர் தனது தர்மக்கோட்பாடுகளை புத்தரின் போதனை களுடன் தொடர்புப்படுத்த வில்லை. புத்த சமயம் அவரது தனிப்பட்ட நம்பிக்கையாகும். அவர் கூறிய தர்மம் ஒரு பொதுவான ஒழுக்கநெறியாகும். சமூகத்தின் அனைத்து தரப்பிற்கும் தனது தர்மக்கோட்பாடுகள் சென்றடைய வேண்டும் என அசோகர் விரும்பினார்.

**அசோகர் பற்றிய ஒரு மதிப்பீடு**

அசோகர் ''அரசர்களிலேயே தலைசிறந்தவராக'' விளங்கினார். மகா அலெக்சாந்தர், ஜீலியஸ் சீசர் போன்ற உலகின் தலைசிறந்த பேரரசர்களையும் அசோகர் விஞ்சி நின்றார். எச்.ஜி. வெல்ஸ் என்பவரது கூற்றுப்படி : ''வரலாற்றின் பட்டியலில் குவிந்திருக்கும் ஆயிரக்கணக்கான அரசர்களில் அசோகரின் பெயர் மட்டும் தன்னந்தனி நட்சத்திரமாக



ஒளிவீசுகிறது.'' அசோகர் தமது கோட்பாடுகளுக்கு உண்மையானவராகத் திகழ்ந்து அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகினார். அவர் கனவு காண்பவரல்ல; மாறாக ஒரு நடைமுறை மேதை. அவரது தர்மக் கொள்கை உலகம் அனைத்திற்கும் பொதுவானது. மனித குலமனைத்திற்கும் இன்றைக்கும் பொருந்தவல்லது. கருணைமிக்க ஆட்சிக்கும், போரில் வெற்றி பெற்ற பிறகும் போரைத் துறந்து அமைதிக்கொள்கையைக் கடைப்பிடித்தமைக்கும் அசோகர் வரலாற்றில் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்று கூறலாம். அவரது கோட்பாட்டின் மையக்கருத்து மனித குலத்தின் நலனையே வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

**பிற்கால மௌரியர்கள்**

கி.மு. 232ம் ஆண்டு அசோகர் மறைந்தபின் மௌரியப் பேரரசு இரண்டுபகுதிகளாகப் பிரிக்கப் பட்டது மேற்குப் பகுதியில் அசோகரின் புதல்வர் குணாளன் ஆட்சிபுரிந்தார். கிழக்குப் பகுதியில் அசோகரது பேரன்களில் ஒருவரான தசரதன் அரசராக இருந்தார். பாக்டிரிய படையெடுப்புகளின் விளைவாக பேரரசின் மேற்குப் பகுதி சீர்குலைந்தது. தசரதனின் புதல்வர் சாம்பிரதி என்பவரது ஆட்சியில் கிழக்குப் பகுதி மட்டும் கட்டுக்கோப்பாக இருந்தது. மௌரிய வம்சத்தின் கடைசி அரசரான பிருகத்ரதன் என்பவரை அவரது படைத்தளபதி புஷ்யமித்திர சுங்கன் படுகொலை செய்தார்.

**மௌரியர் ஆட்சிமுறை**

**மத்திய அரசாங்கம்**

மௌரியர் ஆட்சி தொடங்கி இந்தியாவில் முடியாட்சி முறை பெரும் வெற்றிபெற்றது. மௌரியருக்கு முந்தைய கால இந்தியாவிலிருந்த குடியரசு மற்றும் சிறுகுழு ஆட்சிமுறைகள் சீர்குலைந்தன. பண்டைய இந்தியாவின் முதன்மை அரசியல் கோட்பாட்டாளராக விளங்கிய கௌடில்யர் முடியாட்சி முறையை ஆதரித்தபோதிலும், வரம்பற்ற முடியாட்சியை அவர் விரும்பவில்லை. அரசன் தனது நிர்வாகத்தை செம்மையாக நடத்துவதற்கு அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். எனவே, அரசனது ஆட்சிக்கு உதவியாக மந்திரி பரிஷத் என்ற அமைச்சரவை செயல்பட்டது. அதில் புரோகிதர், மகாமந்திரி, சேனாபதி, யுவராஜன் ஆகியோர் இருந்தனர். அன்றாட அலுவல்களை நிறைவேற்ற அமாத்தியர்கள் என்றழைக்கப்பட்ட சிவில் பணியாளர்கள் இருந்தனர். இவர்களை தற்கால

இந்தியாவில் பணியாற்றும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளோடு ஒப்பிடலாம். அமாத்தியர்களை தேர்வு செய்யும் முறை குறித்து கௌடில்யர் விவரமாகக் கூறியுள்ளார். தர்மக் கோட்பாடுகளைப் பரப்புவதற்காக அசோகர் தர்மமகாமாத்திரர்களை நியமித்தார். மௌரியர் ஆட்சியில் நன்கு சீரமைக்கப்பட்ட ஆட்சித்துறை செயல்பட்டது.

**வருவாய் நிர்வாகம்**

பேரரசின் அனைத்துவகை வருவாய்களையும் வசூலிக்கும் துறையான வருவாய்த்துறையின் தலைவர் சம்ஹார்த்தர் என்று அழைக்கப்பட்டார். நிலவரி, நீர்ப்பாசனவரி, சுங்கவரி, வணிகவரி, படகுவரி, வனவரி, சுரங்கவரி, புல்வெளிக்கான வரி, தொழில் வரி, நீதிமன்றங்களில் விதிக்கப்படும் தண்டனைக்கீடான கட்டணம் என பல்வகை வருவாய் அரசுக்குக் கிடைத்தது. பொதுவாக விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. அரசரது அவை மற்றும் அவரது குடும்பச்செலவுகள், ராணுவம், அரசுப் பணியாளர்கள், பொதுப் பணிகள், ஏழைகளுக்கு நிவாரணம், சமயம் சார்ந்த செலவுகள் என்பன அரசாங்க செலவினங்களில் குறிப்பிடத்தக்கவை.

**ராணுவம்**

நன்கு சீரமைக்கப்பட்டிருந்த மௌரிய ராணுவத்துக்கு தலைவராக சேனாபதி இருந்தார். வீரர்களுக்கு ஊதியம் பணமாக வழங்கப்பட்டது. ராணுவத்தின் பல்வேறு நிலையில் பணியாற்றிய அதிகாரிகளுக்கான ஊதிய விகிதம் குறித்து கௌடில்யர் கூறுகிறார். கிரேக்க நாட்டு அறிஞர் பிளினி என்பவரது கூற்றுப்படி மௌரியரது படையில் ஆறு லட்சம் காலாட்படை வீரர்களும், முப்பதாயிரம் குதிரைப்படை வீரர்களும், ஒன்பதாயிரம் யானைகளும், எட்டாயிரம் தேர்களும் இருந்தன என்பது தெரிகிறது. இந்த நான்கு பிரிவுகளைத் தவிர, கடற்படை மற்றும் போக்குவரத்து பிரிவுகளும் ராணுவத்தில் இருந்தன. ஒவ்வொரு பிரிவும் அத்யட்சகர்கள் என்ற மேற்பார்வையாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்கள் அடங்கிய படைவாரியம் படைநிர்வாகத்தை மேற்கொண்டதாக மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ளார்.

**வாணிகம் மற்றும் தொழில்துறை**

இத்துறையின் அலுவலர்கள் அத்யட்சகர்கள் எனப்பட்டனர். பொருட்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளைக் கட்டுப்படுத்துவதும்,



தொடர்ந்து பொருட்களை மக்களுக்கு கிடைக்கச் செய்வதும் இந்த துறையின் பொறுப்பாகும். எடைகள், அளவுகள் ஆகியன முறைப்படுத்தப்பட்டன. சுங்க வரிகளை விதிப்பதும் அயல்நாட்டு வாணிகத்தை முறைப்படுத்துவதும் இதன் ஏனைய பணிகளாகும்.

**நீதி மற்றும் காவல் துறை நிர்வாகம்**

உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டதை கௌடில்யர் விவரித்துள்ளார். தலைநகரிலிருந்த உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதி தர்மாதிகாரி என்று அழைக்கப்பட்டார். மாகாணத் தலைநகரங்களிலும், மாவட்டங்களிலும் அமாத்தியர்கள் தலைமையிலான துணைநீதி மன்றங்கள் இருந்தன. அபராதம் விதித்தல், சிறைவாசம், உறுப்புகளை சிதைத்தல், மரண தண்டனை போன்ற பல்வேறு தண்டனை முறைகள் வழக்கிலிருந்தன. உண்மையை வரவழைக்க சித்ரவதை செய்யும் வழக்கமும் இருந்தது. முக்கிய மையங்களில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிறைகள், சிறை அதிகாரிகள் பற்றி கௌடில்யரது நூலும் அசோகரது கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. முறைகேடாக சிறைப்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அசோகர் தர்மமகாமாத்திரர்களுக்கு ஆணையிட்டார். தண்டனைகள் குறைக்கப்பட்டது பற்றியும் அசோகரது கல்வெட்டுகள் கூறுகின்றன.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு**

மௌரியர் ஆட்சிக் காலத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தவறாமல் பின்பற்றப்பட்டது. மக்களின் எண்ணிக்கை, அவர்களது ஜாதி, தொழில் போன்ற விவரங்களை கிராம அதிகாரிகள் சேகரித்தனர். ஒவ்வொரு வீட்டிலும் இருந்த பிராணிகளும் கணக்கில் கொண்டு வரப்பட்டன. நகரங்களில் உள்நாட்டு, அயல்நாட்டு மக்களின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்காக நகராட்சி அதிகாரிகள் மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தினர். மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் ஒற்றர்கள் தரும் விவரங்களோடு சரிபார்க்கப்பட்டன. மௌரியர் ஆட்சி முறையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒரு நிரந்தர நிறுவனமாக இருந்ததாகத் தெரிகிறது.

**மாகாண, உள்ளாட்சி நிர்வாகம்**

தட்சசீலம், உஜ்ஜயினி, சுவர்ணகிரி, கலிங்கம் என்ற தலைநகரங்களைக் கொண்ட நான்கு மாகாணங்களாக மௌரியப் பேரரசு பிரிக்கப்பட்டிருந்தது. மாகாண ஆளுநர்கள் பெரும்பாலும் அரச குடும்பத்திலிருந்தே தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர். சட்டம், ஒழுங்கை பராமரித்தல், வருவாய் வசூலிப்பது போன்றவை அவர்களது முக்கிய கடமைகளாகும். ராஜீகர்கள் என்று அழைக்கப்பட்ட அதிகாரிகளின் கீழ் மாவட்ட நிர்வாகம் இருந்தது. அவர்களது நிலை மற்றும் அதிகாரம் தற்கால மாவட்ட ஆட்சித் தலைவர்களையே ஒத்திருந்தது எனலாம். அவர்களுக்கு உதவியாக யுக்தர்கள் என்ற துணை அதிகாரிகள் இருந்தனர். கிராமணி என்ற அதிகாரியின்கீழ் கிராம நிர்வாகம் இருந்தது. பத்து அல்லது பதினைந்து கிராமங்களுக்கு உயர் அதிகாரியாக கோபன் என்ற அதிகாரி செயல்பட்டார்.

நகர நிர்வாகம் குறித்து கௌடில்யரும், மெகஸ்தனிசும் விவரமாகக் குறிப்பிட்டுள்ளனர். நகரிகா என்ற நகர மேற்பார்வையாளரின் பணி பற்றி அர்த்தத் சாஸ்திரத்தில் ஒரு முழு அத்தியாயமே உள்ளது. சட்டம் ஒழுங்கை பராமரிப்பதே அவரது தலையாய பணியாகும். தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்கள் பாடலிபுத்திர நகர நிர்வாகத்தை நடத்தியதாக மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ளார். இக் குழுக்களின் பணிகள் வருமாறு : 1. தொழிற்சாலைகள் 2. அயல்நாட்டவர்கள் 3. பிறப்பு, இறப்பு பதிவு 4. வாணிகம் 5. பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை 6. விற்பனை வரி வசூல்

**மௌரியர் கால கலை, கட்டிடக்கலை**

அசோகர் காலத்திற்கு முற்பட்ட நினைவுச் சின்னங்கள் அனைத்தும் மரங்களால் ஆனதால் பெரும்பாலும் அவை அழிந்துவிட்டன. அசோகர் காலத்தில்தான் பாறைக்கற்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றிலும்கூட ஒரு சில மட்டும் எஞ்சியுள்ளன. அவரது அரண்மனை, மடாலயங்கள் மற்றும் ஸ்தூபிகள் பல மறைந்துவிட்டன. சாஞ்சி ஸ்தூபி மட்டுமே எஞ்சியுள்ளது. மௌரியர் காலத்திய எஞ்சியுள்ள கலைச்சின்னங்களை பின்வரும் தலைப்புகளில் காணலாம்.






சாரநாத் கல்தூண்

**தூண்கள்**

அசோகரால் நிறுவப்பட்ட கற்றூண்கள் மௌரியர் காலக் கலைக்கு மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகும். டெல்லி, அகமதாபாத், ரும்மிந்தை, சாஞ்சி, சாரநாத் போன்ற இடங்களில் பொறிப்பு களுடன்கூடிய அசோகர் தூண்கள்கண்டெடுக்கப்பட்டன. தூண்களின் உச்சியில் சிங்கம், யானை, எருது போன்ற விலங்குகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சாரநாத் கற்றூணில் காணப்படும் நான்கு சிங்க உருவங்கள் மிகவும் கலை நயமிக்கவை. இந்திய அரசாங்கம் இந்த சின்னத்தை ஒரு சில மாறுதல்கள் செய்து அரச முத்திரையாக ஏற்றுக் கொண்டுள்ளது.



நான்கு சிங்கங்கள்

**ஸ்தூபிகள்**

அசோகர் தனது பேரரசு முழுவதிலும் பல ஸ்தூபிகளை எழுப்பியிருந்தார். ஆனால், அவற்றில் பெரும்பாலானவை அயலவர் படையெடுப்பின்போது அழிக்கப்பட்டுவிட்டன. ஒருசில ஸ்தூபிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. மிகவும் பிரம்மாண்டமான தோற்றப் பொலிவுடன் அமைக் கப்பட்டுள்ள சாஞ்சி ஸ்தூபி அசோகரது ஸ்தூபிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். முதலில் அது செங்கற்களால் உருவாக்கப்பட்டு, அசோகரது காலத்திற்குப்பின் விரிவுபடுத்தப்பட்டது.



சாஞ்சி ஸ்தூபி

**குகைகள்**

அசோகர் மற்றும் அவரது புதல்வர் தசரதன் ஆகியோரால் அஜீவிகர்களுக்கு கொடையாக அளிக்கப்பட்ட குகைகள் மௌரியர்களின் முக்கிய பாரம்பரிய சின்னங்களாகத் திகழ்கின்றன. அவற்றின் உட்புறச்சுவர்கள் கண்ணாடிபோல மெருகூட்டப்பட்டுள்ளன. துறவிகள் தங்கி வாழும் வகையில் அவை அமைக்கப்பட்டிருந்தன. புத்த கயாவுக்கு அருகிலுள்ள பாராபார்

குன்றுகளிலுள்ள குகைகள் மௌரியர் கட்டிடக் கலைக்கு உன்னத சான்றுகளாகும்.

**மௌரியர் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

மௌரியர் வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றி அறிஞர்களிடையே விரிவான விவாதம் நடைபெற்ற வண்ணம் உள்ளது. அசோகரது கொள்கைகளும் அவருக்கும்பின் வந்த வலிமையற்ற பின்தோன்றல்களும் மௌரியர் வீழ்ச்சிக்குக் காரணங்கள் என்ற கருத்து பழமையான கருத்தாகும். மற்றொரு கருத்து, பரந்த பேரரசுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அரசியல், பொருளாதார நிறுவனங்கள் வளர்ச்சியடையவில்லை என்பதாகும்.

அசோகரது புத்தசமய ஆதரவுக் கொள்கைகளினால் வெறுப்புற்ற பிராமணர்கள் புஷ்யமித்திரசுங்கன் தலைமையில் ஒரு புரட்சியை நடத்தினார்கள் என்று கூறப்பட்டது. ஆனால், அசோகர் ஒருபோதும் பிராமணர்களுக்கு எதிராக செயல்பட்டதில்லை. அசோகரது அகிம்சைக் கொள்கை படைவீரர்களின் போரிடும் உணர்வை பாதித்தது என்பது அசோகர்மீது சுமத்தப்படும் மற்றொரு குற்றச்சாட்டாகும். ஆனால், அசோகர் அமைதிக் கொள்கையைப் பின்பற்றினாரே தவிர பேரரசின் மீதுள்ள தமது கட்டுப்பாட்டை எப்போதும் தளர்த்தியதில்லை. எனவே, மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கு அசோகரை குற்றம் சுமத்துவது பொருத்தமற்றதாகும். அசோகரை ஒரு கொள்கைவாதி என்பதைவிட நடைமுறைவாதி என்றே கூறலாம்.

திறமையற்ற பின்தோன்றல்கள், பேரரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டது, அசோகரது காலத்துக்குப் பின்னர் நேர்ந்த ஆட்சித்துறை முறைகேடுகள் போன்ற பல்வேறு காரணங்களாலேயே மௌரியப் பேரரசு சிதைந்தது. இவையனைத்தும் ஒன்று சேர்ந்துதான் மௌரியப் பேரரசின் சீர்குலைவை விரைவுபடுத்தின. இறுதியில் மௌரியரை விரட்டிவிட்டு புஷ்யமித்ர சுங்கன் சுங்கவம்ச ஆட்சியை நிறுவினான்.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டவை.*

1. *மௌரியர் வரலாற்றுக்கான இலக்கிய, கல்வெட்டு சான்றுகள்*
2. *சந்திரகுப்த மௌரியர் ஆட்சிக்கு வருதலும், அவரது சாதனைகளும்.*
3. *பிந்துசாரனின் போர் வெற்றிகள்.*
4. *ஆணைகளை வெளியிட்டும், தர்ம மகாமாத்திரர்கள் என்ற சிறப்பு அலுவலர்களை நியமித்தும் அசோகர் தமது தர்மக் கோட்பாடுகளை பரப்பியது.*
5. *தூண்கள், குகைகள், ஸ்தூபிகள் என்ற மௌரியர் கால கலை, கட்டிடக்கலை.*
6. *மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. அசோகரது கலிங்கப்போர் குறித்த விவரங்களை அளிப்பது

அ. கலிங்கக் கல்வெட்டு ஆ. 13 ஆம் பாறைக் கல்வெட்டு

இ. சாரநாத் தூண் ஈ. அர்த்த சாஸ்திரம்

2. அசோகர் தமது ஆணைகளை வெளியிட பெரிதும் பயன்படுத்திய மொழி

அ. பாலி ஆ. வடமொழி

இ. கரோஷ்தி ஈ. பிரம்மி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அசோகரது கல்வெட்டுகளை முதலில் படித்தறிந்தவர் .........
2. கடைசி மௌரிய அரசன் ..........
3. அசோகரை புத்த சமயத்திற்கு மாற்றியவர் .........
4. இந்திய அரசு சின்னம் .......... தூணிலிருந்து எடுக்கப்பட்டது.

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. தர்ம மகாமாத்திரர்கள் | அ. கிராம நிர்வாகம் |
| 2. கோபன் | ஆ. வருவாய் நிர்வாகம் |
| 3. நகரிகன் | இ. தர்மத்தைப் பரப்புதல் |
| 4. சம்ஹர்தன் | ஈ. நகர நிர்வாகம் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.

அ. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தின் முதற்பகுதியில் போர் மற்றும் அரசியல் வெல்திறன் பற்றி கூறப்பட்டுள்ளது.

ஆ. விசாகதத்தரின் முத்ராராட்சகம் நாடக வடிவில் எழுதப்பட்டுள்ளது.



இ. மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா கலிங்கப்போர் குறித்த தகவல்களைத் தருகிறது.

ஈ. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை அசோகரது கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. சந்திரகுப்த மௌரியர் தனது ஆட்சியின் இறுதிப் பகுதியில் புத்த சமயத்தைப் பின்பற்றினார்.
2. தமிழ்நாடு மௌரியப் பேரரசில் இணைக்கப்பட்டிருந்தது.
3. அசோகர் அஜீவிகர்களுக்கு குகைகளை கொடையாக வழங்கினார்.
4. மௌரியர் ஆட்சிக்கு புஷ்யமித்ர சுங்கன் முடிவு கட்டினார்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்.
2. கலிங்கப் போர்
3. மெகஸ்தனிஸ்
4. பிந்துசாரன்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. சந்திரகுப்த மௌரியரின் சாதனைகள் பற்றி குறிப்பு எழுதுக.
2. அசோகர் புத்தசமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை குறிப்பிடுக.
3. மௌரியர் கலையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
4. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆய்க.

**VII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. அசோகரின் சாதனைகளையும் அவரது தர்மக் கோட்பாடுகளையும் விளக்குக.
2. மௌரியர் ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுகளை விவரி.

# பாடம் – 7

## மௌரியருக்குப் பிந்தைய கால இந்தியா

***கற்றல் நோக்கங்கள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *சுங்கர் ஆட்சியின் முக்கியத்துவம்.*
2. *சாதவாகனர்களின் ஆட்சி – பண்பாட்டிற்கு அவர்களது பங்களிப்பு.*
3. *சாகர்களும் பாக்டிரியர்களும்*
4. *கனிஷ்கரின் சாதனைகள்*
5. *காந்தாரக்கலையும் அதன் சிறப்புக் கூறுகளும்*

அசோகரது மறைவுக்குப் பின்னர், அவரது வாரிசுகளால் மௌரியப் பேரரசைக் கட்டிக் காப்பாற்ற முடியவில்லை. மாகாணங்கள் தங்களது சுதந்திரத்தை அறிவிக்கத் தொடங்கின. வடமேற்கு இந்தியா மௌரியரின் பிடியிலிருந்த நழுவியது. தொடர்ந்த அயலவரின் தாக்குதலுக்கும் இப்பகுதி ஆளாகியது. கலிங்கம் தனது விடுதலையை பறைசாற்றிக் கொண்டது. அதற்கும் தெற்கே சாதவாகனர்கள் தங்களது சுதந்திர அரசை ஏற்படுத்திக் கொண்டனர். இவற்றின் விளைவாக மௌரியர் ஆட்சி கங்கைச் சமவெளியில் மட்டுமே நடைபெற்றது. விரைவில் அங்கு சுங்க வம்சத்தின் ஆட்சியும் நிறுவப்பட்டது.

**சுங்கர்கள்**

மௌரியர்களின் படைத்தளபதியாக இருந்த புஷ்யமித்ரசுங்கன் என்பவரால் சுங்க வம்சம் நிறுவப்பட்டது. மௌரிய வம்சத்தின் கடைசி அரசரைக் கொன்றுவிட்டு அவர் அரியணையைக் கைப்பற்றினார். வடமேற்கு இந்தியாவில் படையெடுத்த வந்த பாக்டிரிய கிரேக்கர்களிடமிருந்து வட இந்தியாவை பாதுகாப்பதே சுங்க ஆட்சிக்கு அப்போது பெரும் சவாலாக



இருந்தது. கிரேக்கர்கள் பாடலிபுத்திரம் வரை வந்து அந்த நகரையும் சிலகாலம் ஆக்ரமித்துக் கொண்டனர். இருப்பினும், புஷ்யமித்ர சுங்கர் விரைந்து செயல்பட்டு இழந்த பகுதிகளை உடனே மீட்டார். வட இந்தியாவின்மீது படையெடுத்த கலிங்க நாட்டுக் காரவேலனையும் எதிர்த்து அவர் போரிட்டார்.

புஷ்யமித்த சுங்கர் வைதீக பிராமண சமயத்தை ஆதரித்தார். அவர் இரண்டு அஸ்வமேத (குதிரை வேள்வி) யாகங்களைச் செய்தார். புத்த சமயத்தவரை அவர் துன்புறுத்தியதாக புத்த சமயச் சான்றுகள் கூறுகின்றன. ஆனால், புத்தசமய கலையை புஷ்யமித்திரர் ஆதரித்தார் என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன. அவரது ஆட்சிக் காலத்தில் பார்ஹுத், சாஞ்சி ஆகிய இடங்களிலிருந்த புத்தசமய சின்னங்கள் புதுப்பிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டன.

புஷ்யமித்ர சுங்கனுக்குப் பின்னர் அவரது புதல்வன் அக்னிமித்ரன் ஆட்சிக்கு வந்தான். சுங்க வம்சத்தின் கடைசி அரசன் தேவபூதி. அவனது அமைச்சரான வாசுதேவ கன்வன் என்பவரால் தேவபூதி கொல்லப்பட்டார். கன்வ வம்சம் நிறுவப்பட்டது. அது 45 ஆண்டுகள் நீடித்தது. கன்வர்களின் வீழ்ச்சியிலிருந்து குப்தப்பேரரசு நிறுவப்படும் காலம் வரை மகதத்தின் வரலாறு வெற்றிடமாகவே இருந்தது எனலாம்.

கங்கைச் சமவெளியை அயலவர் படையெடுப்பிலிருந்து காப்பாற்றிய விதத்தில் சுங்கர்களின் ஆட்சி முக்கியத்துவம் பெறுகிறது. பண்பாட்டு ரீதியாக நோக்கினால், பிராமண சமயத்தையும், குதிரை வேள்வியையும் சுங்கர்கள் புதுப்பித்தனர். வைணவ சமயத்தையும் வடமொழியையும் சுங்கர்கள் போற்றி வளர்த்தனர். சுருக்கமாகக் கூறினால், சுங்கர்களின் ஆட்சி வரப்போகும் குப்தர்களின் பொற்கால ஆட்சிக்கு கட்டியம் கூறுவதுபோல அமைந்தது.

**சாதவாகனர்கள்**

மௌரியர்களின் வீழ்ச்சிக்குப்பிறகு, தக்காணத்தில் சாதவாகனர்கள் சுதந்திர அரசை நிறுவினார்கள். சுமார் 450 ஆண்டுகள் அவர்களது ஆட்சி நீடித்தது. ஆந்திரர்கள் என்றும் அவர்கள் அழைக்கப் பட்டனர். புராணங்களும் கல்வெட்டுக்களும்



சாதவாகனர்களின் நாணயங்கள்

சாதவாகனர் வரலாற்றுக்கு முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. கௌதமி புத்ர சதகர்ணி என்பவரின் ஆட்சி பற்றி நாசிக் மற்றும் நானாகாத் கல்வெட்டுக்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. சாதவாகனர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் அக்காலத்திய பொருளாதார நிலைமையை எடுத்துக் கூறுகின்றன.

சாதவாகன வம்சத்தை நிறுவியவர் சிமுகர். அவரைத் தொடர்ந்து கிருஷ்ணர் ஆட்சிக்கு வந்தார். மேற்கில் நாசிக் வரை அவர் பேரரசை விரிவுபடுத்தினார். மூன்றாவது அரசன் ஸ்ரீசதகர்ணி. மேற்கு மாளவத்தையும் பீரார் பகுதியையும் அவர் கைப்பற்றினார். பின்னர் குதிரை வேள்விகளையும் செய்தார். சாதவாகன வம்சத்தின் பதினேழாவது அரசன் பெயர் ஹாலா. அவர் ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆட்சியிலிருந்தார். சத்தசாய் என்றழைக்கப்படும் கத சப்த சாய் என்ற நூலை ஹாலா இயற்றினார். இதில் பிராகிருத மொழியிலான 700 பாடல்கள் உள்ளன.

சாதவாகன மரபின் மிகச்சிறந்த அரசராக விளங்கியவர் கௌதமிபுத்ர சதகர்ணி. கி.பி.106 முதல் 130 ஆம் ஆண்டு வரை இருபத்தி நான்கு ஆண்டுகள் அவர் ஆட்சி புரிந்தார். அவரது அன்னை கௌதமி பாலஸ்ரீ வெளியிட்ட நாசிக் கல்வெட்டில் அவரது சாதனைகள் குறிக்கப்பட்டுள்ளன. கௌதமிபுத்ர சதகர்ணி தக்காணம் முழுவதையும் கைப்பற்றி பேரரசை விரிவுபடுத்தினார். மாளவத்தின் அரசர் நாக பாணரை எதிர்த்துப் போரிட்டு அவர் பெற்ற வெற்றி மகத்தானதாகும். அவர் பிராமண சமயத்தை ஆதரித்தார். இருப்பினும் புத்த சமயத்தவருக்கும் கொடைகளை வழங்கினார்.

கௌதமிபுத்ர சதகர்ணிக்குப்பிறகு அவரது மகன் வசிஷ்டபுத்ர புலமாயி ஆட்சிக்கு வந்தார். அவர் சாதவாகன ஆட்சியை கிருஷ்ணா நதி முகத்துவாரம் வரை விரிவு படுத்தினார். அவர் வெளியிட்ட நாணயங்களில் கப்பல் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் அவரது கடற்படை வலிமையும் கடல்வாணிக வளமையும் வெளிப்படுகிறது. சாதவாகனர்களின் கடைசி முக்கிய அரசர் யக்ஞஸ்ரீ சதகர்ணி.

**பொருளாதார நிலைமை**

சாதவாகனர் ஆட்சிக் காலத்தில் வாணிகமும் தொழிலும் நன்கு வளர்ச்சியடைந்தன. வணிகர்கள் தங்களது வாணிபத்தைப் பெருக்குவதற்காக வணிகக் குழுக்களை அமைத்துக் கொண்டனர்.



குயவர்கள், நெசவுத் தொழில் செய்வோர், எண்ணெய் உற்பத்தியாளர்கள் போன்ற கைவினைஞர்களும் கழகங்களை ஏற்படுத்திக் கொண்டனர். கர்ஷபணம் என்று அழைக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்பட்டன. சாதவாகனர்கள் காலத்தில் அயல்நாட்டு வர்த்தகமும் நன்கு செழித்தது. தக்காணத்திலிருந்த பல்வேறு துறைமுகங்களை டாலமி குறிப்பிட்டுள்ளார். மேற்கு தக்காணத்திலிருந்த கல்யாண் சாதவாகனர் களின் மிகப்பெரிய துறைமுகமாகும். கிழக்குக் கடற்கரையிலிருந்த கண்டகசேலா, கஞ்சம் என்ற துறைமுகங்களும் சிறப்பு வாய்ந்தவை.

**பண்பாட்டுக் கொடை**

சாதவாகனர்கள் பிராமண சமயத்தையும் புத்த சமயத்தையும் ஆதரித்தனர். சைத்தியங்களையும் விகாரங்களையும் கட்டினர். புத்தசமய துறவிகளுக்கு நிலங்கள் மற்றும் கிராமங்களை மானியமாக வழங்கினர். வசிஷ்டபுத்ரபுலமாயி என்ற அரசர் அமராவதி ஸ்தூபியை செப்பனிட்டார். நாகார்ஜீனகொண்டாவிலுள்ள அவர்களது கட்டிடக்கலை குறிப்பிடத் தக்கது. பிராமண சமயத்தை மீண்டும் உயிர்ப்பித்த சாதவாகனர்கள் அசுவமேதம் மற்றும் ராஜசூய வேள்விகளையும் நடத்தினர். பிராகிருத மொழி மற்றும் இலக்கியத்தையும் அவர்கள் ஆதரித்தனர். ஹாலா எழுதிய சத்தசாய் பிராகிருத இலக்கியத்தின் போற்றத்தக்க நூலாக விளங்குகிறது.

## வடமேற்கு இந்தியாவில் அயலவர் படையெடுப்புகள்

**பாக்டிரியர்கள்**

கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பாக்டிரியா, பார்த்தியா இரண்டும் சிரியாப் பேரரசிலிருந்து விடுதலை பெற்றன. பாக்டிரியாவின் கிரேக்க ஆட்சியாளரான டெமெட்ரியஸ் ஆப்கானிஸ் தான், பஞ்சாப் பகுதிகளைத் தாக்கி கைப் பற்றினார். தட்சசீலத்திலிருந்து அப்போலோடோடஸ், மீனாந்தர் என்ற தமது இரண்டு படைத்தலைவர்களை மற்ற பகுதிகளைப் கைப்பற்றும்படி அனுப்பி வைத்தார். அப்போலோடோடஸ் சிந்துப் பகுதியைக் கைப்பற்றி உஜ்ஜயினிவரை முன்னேறினார். மீனாந்தர் மதுரா வரை தமது ஆட்சியை விரிவுபடுத்தியதுடன் பாடலிபுத்திரத்தைக் கைப்பற்றவும் முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால், புஷ்யமித்ர சுங்கனின் பேரனான வசுமித்ரன் அவனை எதிர்த்துப் போரிட்டு தடுத்து நிறுத்தினார்.

மீனாந்தர், மிலிந்தா என்றும் அழைக்கப்படுகிறார். அவரது தலைநகரம் சாகாலா (சியால்கோட்). அவர் புத்த சமயத்தில் அதிக ஆர்வம் கொண்டார். புத்த சமயத் துறவி நாகபாணருடன் அவர் உரையாடியது ‘‘மிலிந்தபான்ஹோ’’ (மிலிந்தரின் வினாக்கள்) என்ற பாலிமொழி நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மீனாந்தர் புத்த சமயத்தை தழுவினார். கிரேக்கத் தூதரான ஹெலியோடோரஸ் வைணவ சமயத்தை தழுவியதோடு பெஸ் நகரில் கருடத்தூணையும் நிறுவினார். மீனாந்தரின் மறைவுக்குப் பின்னரும் நூறாண்டுகளுக்கும் மேலாக கிரேக்கத்தின் தாக்கம் இந்தியாவில் நீடித்தது.


**சாகர்கள்**

சாகர்கள் அல்லது சைத்தியர்கள் பாக்டிரியா, பார்த்தியா பகுதிகளைத் தாக்கி கிரேக்க ஆட்சியாளர்களிடமிருந்து அவற்றைக் கைப்பற்றினர். கிரேக்கர்களின் வழிமுறையைப் பின்பற்றி சாகர்களும் தங்களது ஆட்சியை வடமேற்கு இந்தியாவில் மெல்ல விரிவுபடுத்தினர். சாகர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர். தட்சசீலத்திலிருந்து ஆட்சி செய்த வடக்கு சத்திரப்புக்கள். மற்றொரு பிரிவினர் மகாராஷ்டிரப் பகுதியில் ஆட்சிபுரிந்த மேலைச் சத்திரப்புக்கள்.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் சாகர்களின் ஆட்சியை நிறுவியவர் மாவஸ். அவருக்குப்பின் அவரது மகன் முதலாம் ஏசஸ் ஆட்சிக்கு வந்தார். அவர் விக்ரம சகாப்தத்தை நிறுவினார் என்ற கருத்தும் உண்டு. தட்சசீலத்து சத்திரப்புக்களை பார்த்தியர்கள் முறியடித்தனர்.

**குஷானர்கள்**

மத்திய ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட யூச்சி பழங்குடியின் ஒரு பிரிவினரே குஷானர்கள். அவர்கள் முதலில் சாகர்களை விரட்டிவிட்டு பாக்டிரியாவைக் கைப்பற்றினர். பின்னர், படிப்படியாக காபூல் பள்ளத்தாக்கு வழியாக முன்னேறி காந்தாரப் பகுதியைக் கைப்பற்றினர். குஷாண மரபைத் தோற்றுவித்தவர் குஜுலா காட்பிசஸ் அல்லது முதலாம் காட்பிசஸ். காபூல் பள்ளத்தாக்கை கைப்பற்றிய அவர் தமது பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டார். அவரது புதல்வர் வீமா காட்பிசஸ் அல்லது இரண்டாம் காட்பிசஸ் வடமேற்கு இந்தியா முழுவதையும் கைப்பற்றி மதுராவரை



குஷானர்களின்
தங்க நாணயங்கள்



முன்னேறினார். ‘முழு உலகையும் வென்ற தலைவன்’ என்ற விருதுகள் பொறித்த தங்க நாணயங்களையும் அவர் வெளியிட்டார். அவர் சிறந்த சிவபக்தனாகவும் திகழ்ந்தார்.

**கனிஷ்கர் (கி.பி. 78 – 120)**

குஷாண மரபில் சிறப்புமிக்க ஆட்சியாளர் கனிஷ்கர். கி.பி. 78 ஆம் ஆண்டு தொடங்கும் சாக சகாப்தத்தை அவர் நிறுவினார். அவர் ஒரு பெரும் படையெடுப்பாளர் மட்டுமல்ல, சமயம் மற்றும் கலையைப் போற்றுபவராகவும் திகழ்ந்தார்.

**கனிஷ்கரின் படையெடுப்புகள்**

கனிஷ்கர் ஆட்சிக்கு வந்தபோது அவரது பேரரசில் ஆப்கானிஸ்தான், காந்தாரம், சிந்து, பஞ்சாப் ஆகிய பகுதிகள் இருந்தன. பின்னர், அவர் மகதத்தைக் கைப்பற்றி பாடலிபுத்திரம், புத்தகயா வரை முன்னேறிச் சென்றார். கல்ஹணரின் கூற்றுப்படி, கனிஷ்கர் காஷ்மீர் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார் என்பது தெளிவு. மதுரா, ஸ்ராவஸ்தி, கோசாம்பி, பெனாரஸ் போன்ற விடங்களில் அவரது நாணயங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. எனவே, கங்கைச் சமவெளியின் பெரும்பகுதி அவரது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டும்.



தலையற்ற கனிஷ்கரின்
சிலை

சீனாவின்மீது படையெடுத்த கனிஷ்கர் அவர்களிடமிருந்து சில பகுதிகளையும் கைப் பற்றினார். தனது முதல் படையெடுப்பின்போது சீனப் படைத்தலைவர் பாஞ்சோ என்பவரிடம் கனிஷ்கர் தோல்வியடைந்தார். இரண்டாவது படையெடுப்பின்போது பாஞ்சோவின் புதல்வரான பான்யாங் என்பவரை முறியடித்தார். அதன் விளைவாக, காஷ்கர், யார்க்கண்ட், கோடான் ஆகிய பகுதிகளை கனிஷ்கர் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

கனிஷ்கரின் பேரரசு மிகவும் பரந்த ஒன்றாகும். மேற்கில் காந்தாரம் தொடங்கி கிழக்கே பனாரஸ் வரையிலும், வடக்கில் காஷ்மீர் தொடங்கி தெற்கே மாளவம் வரையும் அவரது பேரரசு பரவியிருந்தது. தற்காலத்தில்

பெஷாவர் என்றழைக்கப்படும் புருஷபுரம் என்பது அவரது தலைநகர். அவரது பேரரசில் மற்றொரு சிறப்புமிக்க நகரமாக மதுரா திகழ்ந்தது.


**கனிஷ்கரும் புத்த சமயமும்**

கனிஷ்கர் தமது ஆட்சியின் தொடக்கத்திலேயே புத்த சமயத்தை தழுவினார். இருப்பினும், அவரது நாணயங்களில் புத்தரின் உருவங்கள் மட்டுமல்லாது, இந்து மற்றும் கிரேக்க கடவுளரின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இது கனிஷ்கர் பிற சமயங்கள்மீது கொண்டிருந்த சமய சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. கனிஷ்கரது காலத்தில்தான் மகாயான புத்தசமயம் தோற்றுவிக்கப்பட்டது. புத்தர் நிறுவிய அசோகர் பரப்பிய சமயத்திலிருந்து அது பல்வேறு தன்மைகளில் வேறுபட்டிருந்தது. மலர்கள், ஆபரணங்கள், வாசனைத் திரவியங்கள், தீபங்கள் கொண்டு புத்தருக்கு வழிபாடுகள் நடத்தப்பட்டன. இவ்வாறு, மகாயான புத்த சமயத்தில் உருவ வழிபாடும் சடங்குமுறைகளும் வளர்ச்சிபெற்றன.

புதிய சமயத்தை பரப்பும் நோக்கத்தோடு கனிஷ்கர் மத்திய ஆசியா, சீனா போன்ற நாடுகளுக்கு சமயப்பரப்பு குழுக்களை அனுப்பி வைத்தார். பல்வேறு இடங்களில் புத்த சைத்தியங்களும் விஹாரங்களும் கட்டப்பட்டன. வசுமித்திரர், அசுவகோஷர், நாகர்ஜீனர் போன்ற புத்தசமய அறிஞர்களையும் கனிஷ்கர் ஆதரித்தார். புத்த சமயத்திலும் கோட்பாட்டிலும் எழுந்த பிணக்குகளை தீர்க்கும் பொருட்டு கனிஷ்கர் நான்காவது புத்த சமய மாநாட்டைக் கூட்டினார். வசுமித்திரர் தலைமையில், காஷ்மீர் மாகாணம் ஸ்ரீ நகருக்கு அருகிலிருந்த குண்டலவன மடாலயத்தில் இம்மாநாடு நடைபெற்றது. சுமார் 500 துறவிகள் இதில் பங்குகொண்டனர். திரிபீடங்களுக்கு அதிகாரபூர்வமான விளக்கவுரை இந்த மாநாட்டில் இறுதி வடிவம் பெற்றது. மகாயான கோட்பாடுகள் முழுவடிவம் பெற்றன. இம்மாநாட்டில் பங்கு பெற்ற அசுவகோஷர் ஒரு தத்துவஞானி, கவிஞர் மற்றும் நாடகாசிரியர். புத்தசரிதத்தின் ஆசிரியர். தென்னிந்தியாவைச் சேர்ந்த நாகார்ஜீனர் கனிஷ்கரின் அவையில் இடம் பெற்றிருந்தார். பண்டைய இந்தியாவின் புகழ்மிக்க மருத்துவரான சரகர் என்பவரையும் கனிஷ்கர் ஆதரித்தார்.



**காந்தாரக் கலை**



காந்தாரக் கலை வடிவத்தில் புத்தர்

வடமேற்கு இந்தியாவிலிருந்த பெஷாவர் மற்றும் அதைச் சுற்றியிருந்த பகுதியே காந்தாரம் எனப்பட்டது. அப்பகுதியே காந்தாரக் கலையின் தாயகமாகும். காந்தாரக் கலையின் மிகச்சிறந்த சிற்பங்கள் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டன. இந்தோ–கிரேக்கர்களின் ஆட்சிக் காலத்தில் காந்தாரக் கலை தோன்றியது என்றாலும், சாகர்களும் குஷானர்களும் காந்தாரக் கலையைப் போற்றி வளர்த்தனர். இதில் கனிஷ்கரின் பங்கு போற்றத்தக்கதாகும். இந்தியக் கலையும், கிரேக்க–ரோமானியக் கூறுகளும் இணைந்த கலவையே காந்தாரக் கலையாகும். தட்சசீலம், பெஷாவர் போன்ற வடமேற்கு இந்தியாவின் பல பகுதிகளில் காந்தாரக்கலை சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டன. புத்தரின் உருவத்தை பல்வேறு வடிவங்களிலும், கோணங்களிலும், அளவுகளிலும் வடித்தமையே காந்தாரக் கலையின் சிறப்பாகும். புத்தரின் பிறப்பு, அவரது துறவுக் கோலம், போதனைகள் போன்றவை சிற்பங்களாக வடிக்கப்பட்டன. காந்தாரக் கலையின் சிறப்புக் கூறுகள் வருமாறு :

- மனித வடிவத்தை அதன் தசைகள், மீசையுள்ளிட்ட சிகைமடிப்புகள் தெரியும்படி உருவத்தைப் படைத்தல்

- தடித்த ஆடைகள் அவற்றின் மடிப்புகள் தெரியும்படி வடிவமைத்தல்

- அழகான சிற்பங்கள், விவரமான ஆபரணங்கள் மற்றும் அடையாளம் மூலமாக கருத்தை உணர்த்துதல்.

- காந்தாரக் கலையின் முக்கிய கருப்பொருள் – புதிய புத்த சமயப்பிரிவான மகாயான புத்தசமயக் கோட்பாடுகள் –

- புத்தர் உருவம் பரிணாம வளர்ச்சிபெற்றது.

கி.பி. முதல் நான்கு நூற்றாண்டுகளில் பல்லாயிரக்கணக்கான மடாலயங்கள் கட்டப்பட்டன. பெஷாவர், ராவல்பிண்டி ஆகிய பகுதிகளைச் சுற்றி மட்டும் பதினைந்து மடலாயங்களின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் எழுப்பப்பட்ட புத்தசமய ஸ்தூபிகளில் கிரேக்க – ரோமானிய கட்டிடக் கலையின் தாக்கத்தை காணமுடிகிறது. ஸ்தூபியின் உயரம் கூடுதலாகவும், அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்தும் இவை அமைக்கப்பட்டன. இதனால், ஸ்தூபிகளின் அழகு மேலும் அதிகரித்தது.

**மதுரா கலைப்பாணி**

தற்கால உத்திரப் பிரதேசத்திலுள்ள மதுரா என்ற இடத்தில் தோன்றி வளர்ந்த கலையே மதுரா கலைப்பாணி என்று அழைக்கப்படுகிறது. கி.பி. முதல் நூற்றாண்டில் அது புகழ்பெற்று விளங்கியது. தொடக்கத்தில் மதுரா கலைப்பாணி தன்னிச்சையாக உள்நாட்டு கலைநயத்துடன் வளர்ச்சி பெற்றது. புத்தரது உருவங்களில், குறிப்பாக அவரது முகம் ஆன்மீகப் பொலிவு நிறைந்து காணப்பட்டது. இத்தகைய பொலிவு காந்தார சிற்பங்களில் காணப்படவில்லை. சிவன் – பார்வதி, விஷ்ணு லட்சுமி உருவங்களும் மதுராவில் செதுக்கப்பட்டன. யக்ஷினிகள், அப்சரஸ்கள் ஆகிய உருவங்கள் மதுரா கலைப்பாணியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

**கனிஷ்கரின் பின்தோன்றல்களும் குஷானர் ஆட்சியும் முடிவும்**

கனிஷ்கருக்குப்பின் ஆட்சிக்கு வந்தோர் சுமார் நூற்றியம்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். கனிஷ்கரது புதல்வரான ஹிவிஷ்கர் பேரரசை அப்படியே கட்டிக்காத்தார். அவரது ஆட்சிக் காலத்தில் மதுரா சிறப்பு வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது. கனிஷ்கரைப் போலவே, அவரும் புத்தசமயத்தை ஆதரித்தார். குஷானர்களின் கடைசி முக்கிய ஆட்சியாளர் வாசுதேவர். அவரது காலத்தில் குஷான அரசின்பரப்பு குறுகிப் போயிருந்தது. அவரது கல்வெட்டுக்கள் மதுராவைச் சுற்றியே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவர் சிவனை வழிபட்டதாகத் தெரிகிறது. வாசுதேவருக்குப் பிறகு, சிறுசிறு குஷான இளவரசர்கள் வடமேற்கு இந்தியாவின் சில பகுதிகளில் ஆட்சி புரிந்தனர்.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *புஷ்ய மித்ர சுங்கரின் ஆட்சியும், சுங்கர் ஆட்சியின் சிறப்பும்.*
2. *சாதவாகனர்கள் ஆட்சி – கௌதமிபுத்ர சதகர்ணியின் சாதனைகள்.*
3. *சாதவாகனர்கள் ஆட்சிக் காலத்தில் சமூக – பொருளாதார நிலைமைகள் – பண்பாட்டு வளர்ச்சி.*
4. *கனிஷ்கரின் படையெடுப்புகள்.*
5. *மகாயான புத்த சமயம் பரவுவதற்கு கனிஷ்கர் மேற்கொண்ட முயற்சிகள்.*
6. *காந்தாரக் கலையின் சிறப்புக் கூறுகள் – மதுரா கலைப்பாணி.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. சுங்கர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள்

அ. மௌரியர்கள் ஆ. குஷானர்கள்

இ. கன்வர்கள் ஈ. சாதவாகனர்கள்

2. நாசிக் கல்வெட்டு இவருடைய சாதனைகளைக் குறிப்பிடுகிறது.

அ. புஷ்யமித்ரசுங்கர் ஆ. கௌதமி புத்ர சதகர்ணி

இ. கனிஷ்கர் ஈ. மீனாந்தர்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. சாதவாகன மரபை தோற்றுவித்தவர் ...........
2. சத்தசாய் என்ற புகழ்மிக்க பிராகிருத மொழி நூலை எழுதியவர் .........
3. விக்ரம சகாப்தத்தை நிறுவியதாகக் கருதப்படுபவர் ........
4. சாக சகாப்தம் ......... ஆண்டில் ........... என்பவரால் நிறுவப்பட்டது.
5. பெஸ்நகரில் கருடத்தூணை நிறுவியவர் ..........
6. கனிஷ்கர் முறியடித்த சீனப் படைத்தலைவர் ...........

**III.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | சாகாலா | அ. முதலாம் ஆசஸ் |
| 2. | புருஷபுரம் | ஆ. புஷ்யமித்ர சுங்கர் |
| 3. | பாடலிபுத்திரம் | இ. மீனாந்தர் |
| 4. | தட்சசீலம் | ஈ. கனிஷ்கர் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.

அ. சுங்கர்கள் வடமொழியை ஆதரித்தனர்.

ஆ. சாதவாகனர்கள் தெலுங்கு மொழியை ஆதரித்தனர்.

இ. மகாயான புத்தசமயம் பாலிமொழியை ஏற்றுக் கொண்டது.

ஈ. மதுரா கலைப்பாணி இந்தோ–கிரேக்கப் பாணியை பின்பற்றி வளர்ந்தது.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. சுங்கர்கள் பிராமண சமயத்தையும் குதிரை வேள்வியையும் உயிர்ப்பித்தனர்.
2. மீனாந்தர் ஒரு பாக்டிரிய ஆட்சியாளர்.
3. சாதவாகனர்கள் ஆட்சிக்காலத்தில் கிழக்குக் கடற்கரையில் நாசிக் முக்கிய துறைமுகமாகத் திகழ்ந்தது.
4. காந்தாரக் கலை இந்தியக் கலையும் – கிரேக்க – ரோமானிய கூறுகளும் இணைந்த கலவையாகும்.

**VI.** சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. கௌதமிபுத்ர சதகர்ணி
2. மீனாந்தர்
3. அசுவகோஷர்
4. மதுரா கலைப்பாணி

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. சுங்கர்கள் ஆட்சியின் சிறப்பை மதிப்பிடுக.
2. சாதவாகனர்களின் பண்பாட்டுப் பங்களிப்பை குறிப்பிடுக.
3. காந்தாரக் கலையின் சிறப்புக் கூறுகளை ஆய்க.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. சாத வாகனர்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறுக.
2. கனிஷ்கரின் சாதனைகளை மதிப்பிடுக.



# பாடம் – 8

## சங்க காலம்

***கற்றல் நோக்கங்கள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *சங்க இலக்கியங்கள் மற்றும் சங்க காலத்திற்கான பிற சான்றுகள்.*
2. *சங்க கால அரசியல் வரலாறு*
3. *சங்க கால அரசியல், சமூகம்*
4. *சங்க கால சமய நிலை*
5. *சங்க கால பொருளாதார வாழ்க்கை.*

தென்னிந்திய வரலாற்றில் சங்க காலம் ஒரு சிறப்பான அத்தியாயம் ஆகும். தமிழ்ப் பழங்கதைகளின்படி பண்டைய தமிழ்நாட்டில் முச்சங்கம் என்றழைக்கப்பட்ட மூன்று தமிழ் சங்கங்கள் இருந்தன. பாண்டிய மன்னர்களின் ஆதரவில் இந்த சங்கங்கள் தழைத்தோங்கின. தென்மதுரையில் இருந்த முதற்சங்கத்தில் கடவுளரும், முனிவர்களும் பங்கேற்றனர் என்று கூறப்பட்டிருந்தாலும், இச்சங்கத்தைச் சேர்ந்த நூல்கள் ஏதும் கிடைக்கவில்லை. இரண்டாவது சங்கம் கபாடபுரத்தில் நடைபெற்றது. தொல்காப்பியம் தவிர ஏனைய இலக்கியங்கள் யாவும் அழிந்து போயின. மூன்றாவது சங்கத்தை மதுரையில் முடத்திருமாறன் என்ற பாண்டிய மன்னன் நிறுவினான். அதிக எண்ணிக்கையிலான புலவர்கள் இதில் பங்கேற்றனர். ஏராளமான இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்றாலும் ஒருசிலவே எஞ்சியுள்ளன. இந்த தமிழ் இலக்கியங்கள் சங்க கால வரலாற்றை அறிந்து கொள்ள பெரிதும் உதவுகின்றன.

### சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியத்தொகுப்பில் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை

ஆகியன இடம் பெற்றுள்ளன. காலத்தால் தொன்மை பெற்றதான தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். இது ஒரு இலக்கண நூல் என்றாலும், சங்க கால அரசியல், சமூக பொருளாதார நிலைமைகளைப் பற்றிய தகவல்களைத் தருகிறது. எட்டுத் தொகை என்பது ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து என்ற எட்டு நூல்களின் தொகுப்பாகும். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற பத்து நூல்கள் உள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் அகம், புறம் என்ற இரண்டு திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பதினெண்கீழ்கணக்கில் அறத்தையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் பதினெட்டு நூல்கள் உள்ளன. அவற்றில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் குறிப்பிடத்தக்கதாகும். இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் சங்க கால சமூகம் மற்றும் அரசியல் குறித்த தகவல்களைத் தருகின்றன.

**பிற சான்றுகள்**

சங்க இலக்கியங்களைத் தவிர, கிரேக்க எழுத்தாளர்களான பிளினி, டாலமி, மெகஸ்தனிஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் தென்னிந்தியாவிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நிலவிய வர்த்தகத் தொடர்புகளை குறிப்பிட்டுள்ளனர். மௌரியப் பேரரசுக்கு தெற்கேயிருந்த சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்கள் பற்றி அசோகரது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கலிங்கத்துக் காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டும் தமிழ்நாட்டு அரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறது. அரிக்கமேடு, பூம்புகார், கொடுமணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் தமிழர்களின் வாணிப நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.

**சங்க இலக்கியத்தின் காலம்**

சங்க இலக்கியத்தின் காலவரையறை பற்றி அறிஞர்களுக்கிடையே இன்னும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு, சேர அரசன் செங்குட்டுவன் இருவரும் சமகாலத்தவர் என்ற செய்தி சங்க காலத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. இச்செய்தியை சிலப்பதிகாரம், தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்கள்



உறுதிப்படுத்துகின்றன. மேலும், கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட ரோமானிய நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே, இலக்கியம், தொல்லியல், நாணயவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை என்ற முடிவுக்கு வரலாம்.

**அரசியல் வரலாறு**

சங்க கால தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மரபுகள் ஆட்சி புரிந்தனர். இலக்கிய குறிப்புகளிலிருந்து இந்த மரபுகளின் வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

**சேரர்கள்**

தற்காலத்திய கேரளப் பகுதியில் சேரர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களது தலைநகரம் வஞ்சி. முக்கிய துறை முகங்கள் தொண்டி மற்றும் முசிறி. பனம்பூ மாலையை அவர்கள் அணிந்தனர். கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த புகலூர்க் கல்வெட்டு சேர ஆட்சியாளர்களின் மூன்று தலைமுறைகள் பற்றி குறிப்பிடுகிறது. சேர அரசர்களைப் பற்றி பதிற்றுப்பத்தும் கூறுகிறது. பெரும்சோற்று உதியன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆகியோர் சேர மரபின் சிறந்த அரசர்களாவர்.

சேரன் செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். அவனது இளவலான இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். செங்குட்டுவனின் படையெடுப்புகளில் அவன் மேற்கொண்ட இமாலயப் படையெடுப்பு குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு வடஇந்திய ஆட்சியாளர்களை அவன் முறியடித்தான். தமிழ்நாட்டில் கற்புக்கரசி கண்ணகி அல்லது பத்தினி வழிபாட்டை செங்குட்டுவன் அறிமுகப்படுத்தினான். இமாலயப் படையெடுப்பின்போது பத்தினிசிலை வடிப்பதற்கான கல்லைக்கொண்டு வந்தான். கோயில் குடமுழுக்கு விழாவில் இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு உள்ளிட்ட பல அரசர்கள் கலந்து கொண்டனர்.

**சோழர்கள்**

தற்காலத்திய திருச்சி மாவட்டத்திலிருந்து தெற்கு ஆந்திரப் பிரதேசம் வரையிலான பகுதியே சங்க காலத்தில் சோழ நாடு எனப்பட்டது.

சோழர்களின் தலைநகரம் முதலில் உறையூரிலும் பின்னர் புகாரிலும் இருந்தது. சங்க காலச் சோழர்களில் சிறப்பு வாய்ந்தவன் கரிகால் சோழன். அவனது இளமைக்காலம், போர் வெற்றிகள் குறித்து பட்டினப்பாலை விவரிக்கிறது. சேரர்கள், பாண்டியர்கள், பதினொரு குறுநில மன்னர்கள் அடங்கிய பெரிய கூட்டிணைவுப் படைகளை கரிகாலன் வெண்ணிப் போரில் முறியடித்தான். இந்த நிகழ்ச்சி சங்கப் பாடல்கள் பலவற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. அவன் மேற்கொண்ட மற்றொரு போர் வாகைப் பறந்தலைப் போராகும். அதில் ஒன்பது குறுநில மன்னர்களை மண்டியிடச் செய்தான். கரிகாலனின் போர் வெற்றிகள் தமிழ்நாடு முழுவதையும் சோழர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. அவனது ஆட்சிக் காலத்தில் வாணிகமும் செழித்தோங்கியது. காடுகளைத் திருத்தி விளை நிலமாக்கியவன் கரிகாலன். இதனால் நாட்டின் செல்வச் செழிப்பு பெருகியது. காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையை கரிகாலன் அமைத்தான். வேறு பல நீர்ப்பாசன ஏரிகளையும் அவன் வெட்டுவித்தான்.

**பாண்டியர்கள்**

தற்காலத்திய தெற்குத் தமிழ்நாட்டில் சங்ககாலப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் தலைநகரம் மதுரை. நெடியோன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, முடத்திருமாறன் போன்றோர் முற்காலத்திய பாண்டிய மன்னர்களாவர். ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன், கோவலன் கொல்லப்படவும், கண்ணகி சினமுற்று மதுரையை எரிக்கவும் காரணமாக இருந்தவர். மற்றொருவர் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். நக்கீரன் மற்றும் மாங்குடி மருதனார் ஆகிய புலவர்களால் போற்றப்பட்டவர். தற்கால தஞ்சை மாவட்டத்திலிருந்த தலையாலங்கானம் என்ற விடத்தில் நடைபெற்ற போரில் எதிரிகளை வீழ்த்தியதால் அவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இவ்வெற்றியின் பயனாக, நெடுஞ்செழியன் தமிழகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். செழிப்பான துறைமுகமான கொற்கை பற்றியும், பாண்டிய நாட்டின் சமூக – பொருளாதார நிலைமைகள் குறித்தும் மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் விவரித்துள்ளார். உக்கிரப் பெருவழுதி மற்றொரு சிறப்பு மிக்க பாண்டிய அரசன். களப்பிரர்கள் படையெடுப்பின் விளைவாக சங்க காலப்பாண்டியர்கள் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.



**குறுநில மன்னர்கள்**

சங்க காலத்தில் குறுநில மன்னர்கள் முக்கிய பங்காற்றினர். பாரி, காரி, ஓரி, நல்லி, பேகன், ஆய், அதியமான் என்ற கடையெழு வள்ளல்கள் கொடைக்குப் பெயர் பெற்றவர்கள். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றினர். சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்களுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தவர்கள் என்ற போதிலும் தத்தம் ஆட்சிப் பகுதிகளில் வலிமையும் புகழும் பெற்றுத் திகழ்ந்தனர்.

**சங்க கால அரசியல்**

சங்க காலத்தில் மரபுவழி முடியாட்சி முறையே வழக்கிலிருந்தது. அமைச்சர், அவைப்புலவர், அரசவையோர் போன்றவர்களின் ஆலோசனையை அரசன் கேட்டு நடந்தான். வானவரம்பன், வானவன், குட்டுவன், இரும்பொறை, வில்லவர் போன்ற விருதுப்பெயர்களை சேர மன்னர்கள் சூட்டிக் கொண்டனர். சென்னி, வளவன், கிள்ளி என்பன சோழர்களின் பட்டப் பெயர்களாகும். தென்னவர், மீனவர் என்பவை பாண்டிய மன்னர்களின் விருதுப் பெயர்களாகும். ஒவ்வொரு சங்ககால அரச குலமும் தங்களுக்கேயுரிய அரச சின்னங்களைப் பெற்றிருந்தனர். பாண்டியர்களின் சின்னம் மீன். சோழர்களுக்கு புலி, சேரர்களுக்கு வில், அம்பு. அரசவையில் குறுநிலத் தலைவர்களும் அதிகாரிகளும் வீற்றிருந்தனர். ஆட்சியில் அரசருக்கு உதவியாக பெரும்திரளான அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர் – அமைச்சர்கள், அந்தணர்கள், படைத்தலைவர்கள், தூதுவர்கள், ஒற்றர்கள். சங்க காலத்தில் படை நிர்வாகம் திறம்பட சீரமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆட்சியாளரும் நிரந்தரப் படையையும், தத்தமக்குரிய கொடிமரத்தையும் கொண்டிருந்தனர்.

அரசின் முக்கிய வருவாய் நிலவரி. அயல்நாட்டு வாணிகத்தின்மீது சுங்கமும் வசூலிக்கப்பட்டது. புகார் துறைமுகத்தில் நியமிக்கப்பட்டிருந்த சுங்க அதிகாரிகள் பற்றி பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. போரின்போது கைப்பற்றப்படும் கொள்ளைப் பொருட்கள் அரசுக் கருவூலத்திற்கு முக்கிய வருவாயாகத் திகழ்ந்தது. சாலைகளும் பெருவழிகளும் நன்கு பராமரிக்கப்பட்டுவந்தன. கொள்ளை மற்றும் கடத்தல் ஆகியவற்றை தடுப்பதற்காக இரவும் பகலும் அவை கண்காணிக்கப்பட்டன.

ஐந்து வகை நிலப்பிரிவுகள் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. -

- குறிஞ்சி, மலையும் மலைசார்ந்த பகுதி
- முல்லை, மேய்ச்சல் காடுகள்
- மருதம், வேளாண் நிலங்கள்
- நெய்தல், கடற்கரைப் பகுதி
- பாலை – வறண்ட பூமி

இந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் கடவுளர்களையும் தொழில்களையும் பெற்றிருந்தனர்.

1. குறிஞ்சி – முதன்மைக் கடவுள் முருகன்

 - தொழில் – வேட்டையாடுதல், தேன் எடுத்தல்

2. முல்லை – முதன்மைக் கடவுள் மாயோன் (விஷ்ணு)

 - தொழில் – ஆடு, மாடு வளர்ப்பு, பால் பொருட்கள் உற்பத்தி

3. மருதம் – முதன்மைக்கடவுள் – இந்திரன்

 தொழில் – வேளாண்மை

4. நெய்தல் – முதன்மைக்கடவுள் – வருணன்

 தொழில் – மீன் பிடித்தல், உப்பு உற்பத்தி

5. பாலை – முதன்மைக் கடவுள் – கொற்றவை

 தொழில் – கொள்ளையடித்தல்

நான்கு வகை சாதிகள் – அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் - குறித்து தொல்காப்பியம் கூறுகிறது. ஆளும் வர்க்கத்தினர் அரசர் என்றழைக்கப்பட்டனர். சங்க கால அரசியல் மற்றும் சமய வாழ்க்கையில் அந்தணர் முக்கிய பங்கு வசித்தனர். வணிகர்கள் வணிகத் தொழிலில் ஈடுபட்டனர். வேளாளர்கள் பயிர்த் தொழில் செய்தனர். பழங்குடி இனத்தவர்களான பரதவர், பாணர், எயினர், கடம்பர், மறவர், புலையர் போன்றோரும் சங்க கால சமுதாயத்தில் அங்கம் வகித்தனர். பண்டைக்கால தொல்பழங்குடிகளான தோடர்கள், இருளர்கள், நாகர்கள், வேடர்கள் போன்றோரும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.



**சமயம்**

சங்க காலத்தின் முதன்மைக்கடவுள் முருகன் அல்லது சேயோன். தமிழ்க்கடவுள் என அவர் போற்றப்பட்டார். முருக வழிபாடு தொன்மை வாய்ந்தது. முருகன் தொடர்பான விழாக்கள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அறுபடை வீடுகள் அவனுக்கே உரித்தானவை. மாயோன் (விஷ்ணு), வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை போன்ற கடவுள்களையும் சங்க காலத்தில் வழிபட்டனர். வீரக்கல் அல்லது நடுகல் வழிபாடு சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. போர்க்களத்தில் வீரனது ஆற்றலையும் தியாகத்தையும் போற்றும் வகையில் அவனது நினைவாக வீரக்கல் நடப்பட்டது. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மறைந்த வீரர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய வீரக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நீத்தோர் வழிபாடு மிகவும் தொன்மையானதாகும்.

**மகளிர் நிலை**

சங்க காலத்தில் மகளிர் நிலை குறித்து அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளன. அவ்வையார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் போன்ற பெண் புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர். மகளிரின் வீரம் குறித்து பல்வேறு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்பு பெண்களின் தலையாய விழுமியமாகப் போற்றப்பட்டது. காதல் திருமணம் சாதாரணமாக வழக்கத்திலிருந்தது. பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். இருப்பினும், கைம்பெண்களின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. சமுதாயத்தின் மேல்மட்டத்தில் 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் பின்பற்றப்பட்டது. அரசர்களும், உயர்குடியினரும் நாட்டிய மகளிரை ஆதரித்துப் போற்றினர்.

**நுண்கலைகள்**

கவிதை, இசை, நாட்டியம் போன்ற நுண்கலைகள் சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கின. அரசர்கள், குறுநில மன்னர்கள், உயர்குடியினர் போன்றோர் புலவர்களுக்கு தாராளமாக பரிசுப் பொருட்களை வழங்கி ஆதரித்தனர். பாணர், விறலியர் போன்ற நாடோடிப் பாடகர்கள்

அரசவைகளை மொய்த்த வண்ணம் இருந்தனர். நாட்டுப்புற பாடல்களிலும் நாட்டுப்புற நடனங்களிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் சங்க காலத்தில் வாழ்ந்தனர். இசையும் நடனமும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. சங்க இலக்கியங்களில் பல்வேறு வகையிலான யாழ்களும் முரசுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. கணிகையர் நடனத்தில் சிறந்து விளங்கினர். 'கூத்து' மக்களின் சிறந்த பொழுதுபோக்காக திகழ்ந்தது.

**சங்க காலப் பொருளாதாரம்**

வேளாண்மை முக்கியத் தொழில் ஆகும். நெல் முக்கியப் பயிர். கேழ்வரகு, கரும்பு, பருத்தி, மிளகு, இஞ்சி, மஞ்சள், இலவங்கம், பல்வேறு பழவகைகள் போன்றவையும் பயிரிடப்பட்டன. பலா, மிளகு இரண்டுக்கும் சேர நாடு புகழ் பெற்றதாகும். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நெல் முக்கிய பயிராகும்.

சங்க காலத்தில் கைத்தொழில்கள் ஏற்றம் பெற்றிருந்தன. நெசவு, உலோகத் தொழில், தச்சுவேலை, கப்பல் கட்டுதல், மணிகள், விலையுயர்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றை பயன்படுத்தி ஆபரணங்கள் செய்தல் போன்றவை ஒருசில கைத்தொழில்களாகும். இத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவைகள் இருந்தன. ஏனென்றால் சங்ககாலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பருத்தி மற்றும் பட்டு இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன. நீராவியைவிடவும், பாம்பின் தோலைவிடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டதாக சங்க இலக்கியப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டது.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வர்த்தகம் சங்க காலத்தில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்கள், கிரேக்க–ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன. வண்டிகளிலும் விலங்குகள் மேல் ஏற்றப்பட்ட பொதிகளின் மூலமாகவும், வணிகர்கள் பொருட்களை கொண்டுசென்று விற்பனை செய்தனர். உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது.

தென்னிந்தியாவிற்கும், கிரேக்க அரசுகளுக்கும் இடையே அயல்நாட்டு வர்த்தகம் நடைபெற்றது. ரோமானியப் பேரரசு தோன்றிய பிறகு



ரோமாபுரியுடனான வாணிபம் சிறப்படைந்தது. துறைமுகப்பட்டினமான புகார் அயல்நாட்டு வணிகர்களின் வர்த்தகமையமாகத் திகழ்ந்தது. விலை மதிப்பு மிக்க பொருட்களை ஏற்றிவந்த பெரிய கப்பல்கள் இந்த துறைமுகத்திற்கு வந்து சென்றன. தொண்டி, முசிறி, கொற்கை, அரிக்கமேடு, மரக்காணம் போன்றவை பிற சுறுசுறுப்பான துறைமுகங்களாகும். அயல்நாட்டு வாணிபம் குறித்து 'பெரிப்புளுஸ்' நூலின் ஆசிரியர் பல அரிய தகவல்களைக் கூறியுள்ளார். அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ போன்ற ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட தங்கம் மற்றும் வெள்ளியாலான நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தின் அளவு மற்றும் தமிழ்நாட்டில் ரோமானிய வணிகர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை இவை வெளிப்படுத்துவதாக உள்ளன. பருத்தியாடைகள், மிளகு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், மஞ்சள் போன்ற நறுமணப் பொருட்கள், தந்தவேலைப்பாடு நிறைந்த பொருட்கள், முத்துக்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் போன்றவை சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களாகும். தங்கம், குதிரைகள், இனிப்பான மதுவகைகள் ஆகியன முக்கிய இறக்குமதிகளாகும்.

**சங்க காலத்தின் முடிவு**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சங்ககாலம் மெல்ல முடிவு க்கு வரத் தொடங்கியது. சுமார் இரண்டரை நூற்றாண்டுகள் தமிழகத்தை களப்பிரர்கள் ஆக்ரமித்துக் கொண்டனர். களப்பிரர்கள் ஆட்சிகுறித்து நமக்கு சொற்ப தகவல்களே கிடைக்கின்றன. இக்காலத்தில் புத்த சமயமும், சமண சமயமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பின்னர் களப்பிரர்களை விரட்டிவிட்டு வடக்கு தமிழ்நாட்டில் பல்லவர்களும், தெற்குத் தமிழ்நாட்டில் பாண்டியர்களும் தத்தம் ஆட்சியை நிறுவினர்.

***கற்றல் அடைவுகள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொண்டது.*

1. *சங்க இலக்கியம் உள்ளிட்ட சங்க காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்.*
2. *சங்ககால ஆட்சியாளர்களான சேர, சோழ, பாண்டியர் மற்றும் அவர்களது சாதனைகள்.*
3. *சங்க கால அரசியல் நிலை, ஆட்சிமுறை.*
4. *சங்க கால சமுதாயம், ஐவகை நிலங்கள், சமய வாழ்க்கை, மகளிர் நிலை.*
5. *சங்ககால பொருளாதாரநிலை, சங்க காலத்தில் நடைபெற்ற அயல்நாட்டு வர்த்தகம்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தெரிவு செய்க.

1. தமிழ்நாட்டில் பத்தினி வழிபாட்டை அறிமுகப்படுத்தியவர்

அ. பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ. சேரன் செங்குட்டுவன்

இ. இளங்கோ அடிகள் ஈ. முடத்திருமாறன்

2. சங்க காலத்தில் இவர்களுடைய படையெடுப்பால் பாண்டியர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

அ. சாதவாகனர்கள் ஆ. சோழர்கள்

இ. களப்பிரர்கள் ஈ. பல்லவர்கள்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வெண்ணிப் போரில் வெற்றி பெற்றவர் ...........
2. சங்க காலத்திய தொன்மையான இலக்கண நூல் ...........
3. சங்க காலத்தைச் சேர்ந்த இரண்டு காப்பியங்கள் ..........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. தென்னவர் | அ. சேரர்கள் |
| 2. வானவர் | ஆ. சோழர்கள் |
| 3. சென்னி | இ. பழங்குடிகள் |
| 4. எயினர் | ஈ. பாண்டியர்கள் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.

அ. பண்டைய சீன அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் கிடைத்துள்ளன.

ஆ. ரோமானிய பேரரசுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கியப் பொருள் பருத்தி ஆடைகள்.

இ. குதிரைகளும் மதுவகைகளும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஈ. சங்க காலப் பாண்டியர்களின் துறைமுக நகரம் மதுரை.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. சங்க காலத்தில் அரிக்கமேடு துறைமுகப் பட்டினமாக விளங்கியது.
2. சங்க காலத்தில் முருகக் கடவுள் முதன்மைக் கடவுளாக விளங்கியது.
3. உறையூர் முத்துக்களுக்கு பெயர் பெற்றது.
4. சங்க காலத்திய நாடோடிப் பாடகர்கள் இருளர் என்று அழைக்கப்பட்டனர்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. பத்துப்பாட்டு
2. எட்டுத்தொகை
3. கடையெழு வள்ளல்கள்
4. சங்க காலத்திய பெண் புலவர்கள்
5. முச்சங்கம்

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. சேரன் செங்குட்டுவனின் சாதனைகளை மதிப்பிடுக.
2. கரிகாலனைப்பற்றி ஒரு மதிப்பீடு தருக.
3. சங்ககால பாண்டிய ஆட்சியாளர்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**VIII.** விரிவாக விடை தருக (200 வார்த்தைகள்)

1. சங்க காலத்தில் நிலவிய அரசியல் ஆட்சிமுறையை தொகுத்து எழுதுக.
2. பண்டைத் தமிழகத்தின் சமூக பொருளாதார நிலைமைகளை விவாதி.
3. சங்காலத்தில் நிலவிய கடல்கடந்த வாணிபத்தின் சிறப்பை மதிப்பிடுக.



# பாடம் – 9

# குப்தப் பேரரசு

***கற்றல் நோக்கங்கள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது.*

1. *குப்தர்கள் பற்றிய சான்றுகள்*
2. *சமுத்திரகுப்தரின் சாதனைகள்*
3. *இரண்டாம் சந்திரகுப்தரின் சாதனைகள்*
4. *இந்தியாவிற்கு பாஹியான் வருகையின் சிறப்பு.*
5. *குப்தர்களின் ஆட்சி, சமூகம், பொருளாதாரம்.*
6. *இலக்கியம், கலை, கட்டிடக்கலை, அறிவியல் முன்னேற்றம்.*

குப்தர் கால வரலாற்றை எழுதுவதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. இலக்கியம், பொறிப்புகள், நாணயங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. குப்த அரசர்களின் பரம்பரை குறித்து புராணங்கள் குறிப்பிடுகின்றன. குப்தர்களின் எழுச்சி பற்றி விசாகதத்தர் எழுதிய சமகால நூல்களான 'தேவிசந்திரகுப்தம்', 'முத்ராராட்சசம்' இரண்டும் கூறுகின்றன. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணி பாஹியான் விட்டுச் சென்றுள்ள குறிப்புகள் குப்தப் பேரரசின் சமூக, பொருளாதார, சமய நிலைமைகளை எடுத்துக் கூறுகிறது.

இத்தகைய இலக்கிய சான்றுகள் தவிர, மெஹ்ருளி இரும்புத்தூண் கல்வெட்டு, அலகாபாத் கற்றூண் கல்வெட்டு போன்ற கல்வெட்டுகளும் குப்த வரலாற்றுக்கு சான்றுகளாக உள்ளன. மெஹ்ருளி கல்வெட்டு முதலாம் சந்திரகுப்தனின் சாதனைகளைக் குறிப்பிடுகிறது. சமுத்திர குப்தனின் ஆட்சியைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கிய சான்றாக விளங்குவது அலகாபாத் கற்றூண் கல்வெட்டு. அவரது ஆளுமையும் சாதனைகளும் அக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. அசோகர் நிறுவிய கல்தூணில்



அலகாபாத் கல்தூண் கல்வெட்டு

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. நாகரி வரிவடிவத்தில் வடமொழியில் இது எழுதப்பட்டுள்ளது. ஹரிசேனர் தொகுத்த இக்கல்வெட்டில் **33** வரிகள் காணப்படுகின்றன. சமுத்திரகுப்தன் அரியணையேறிய சூழ்நிலை, வட இந்தியா மற்றும் தக்காணத்தில் அவர் மேற்கொண்ட படையெடுப்புகள், சமகால ஆட்சியாளர் களுடன் அவர் கொண்டிருந்த உறவுகள், ஒரு கவிஞராகவும் அறிஞராகவும் அவரது சாதனைகள் போன்றவற்றை இக்கல்வெட்டு விவரிக்கிறது.

குப்த அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள உருவங்களும் சொற்றொடர்களும் குப்த மன்னர்களின் பட்டங்கள், அவர்கள் செய்த வேள்விகள் போன்ற விவரங்களைத் தருகின்றன.

**முதலாம் சந்திரகுப்தர் (கி.பி. 320 – 330)**

குப்த மரபை தோற்றுவித்தவர் ஸ்ரீகுப்தர். அடுத்து பதவிக்கு வந்தவர் கடோத்கஜர். இவர்கள் இருவரும் 'மகாராஜா' என்று அழைக்கப்பட்டனர். இவர்களது ஆட்சிபற்றி அதிக விவரங்கள் கிடைக்கவில்லை. அடுத்த ஆட்சியாளர் முதலாம் சந்திரகுப்தர். மகாராஜாதிராஜா அல்லது அரசர்களுக்கு அரசன் என்று முதலில் அழைக்கப்பட்டவர். அவரது பரந்த போர்வெற்றிகளை இந்த விருது வெளிப்படுத்துவதாக உள்ளது. லிச்சாவிகளுடன் மணஉறவு கொண்டதன்மூலம் அவர் தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டார். அக்குடும்பத்தைச் சேர்ந்த குமாரதேவி என்ற இளவரசியை அவர் மணந்துகொண்டார். இதனால் குப்தர்களின் வலிமையும் புகழும் அதிகரித்தன. மெஹ்ருளி இரும்புத்தூண் கல்வெட்டு அவரது பரவலான போர் வெற்றிகள் பற்றி குறிப்பிடுகிறது. கி.பி. **320** ஆம் ஆண்டு தொடங்கும் குப்த சகாப்தத்தை நிறுவியவர் முதலாம் சந்திரகுப்தர் என்ற கருத்தும் நிலவுகிறது.

**சமுத்திரகுப்தர் (கி.பி. 330 – 380)**

குப்த மரபிலேயே மிகச் சிறந்த அரசராக விளங்கியவர் சமுத்திரகுப்தர். அவரது ஆட்சிபற்றி அலகாபாத் கல்தூண் கல்வெட்டு



விவரமாகக் குறிப்பிடுகிறது. அவரது படையெடுப்பின் மூன்று நிலைகள் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன.

1. வட இந்திய ஆட்சியாளருக்கு எதிராக மேற்கொண்டவை.
2. தென்னிந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான புகழ்மிக்க "தட்சிணபாதா" படையெடுப்பு.
3. வட இந்திய ஆட்சியாளர்களுக்கு எதிரான இரண்டாவது படையெடுப்பு.

சமுத்திரகுப்தர் தமது முதலாவது படையெடுப்பில் அச்சுதன், நாகபாணன் இருவரையும் முறியடித்தார். அச்சுதன் பெரும்பாலும் ஒரு நாக மரபு அரசராக இருத்தல் வேண்டும். மேலை கங்கைச் சமவெளிப்பகுதியை ஆட்சி புரிந்துவந்த கோடா குடும்பத்தை சேர்ந்தவர் நாகபாணர். இவ்விரு அரசர்களும் முறியடிக்கப்பட்டு அவர்களது நாடுகளை சமுத்திரகுப்தர் இணைத்துக் கொண்டார். இந்த குறுகிய கால படையெடுப்பினால் சமுத்திரகுப்தர் மேலை கங்கைச் சமவெளி முழுவதையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார்.

பின்னர், சமுத்திரகுப்தர் தென்னிந்திய அரசர்களுக்கெதிராக படை நடத்திச் சென்றார். அவரது தென்னிந்தியப் படையெடுப்பின் போது பன்னிரண்டு ஆட்சியாளர்களை முறியடித்ததாக அலகாபாத் கல்தூண் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவர்களது பெயர்களும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன – கோசல நாட்டு மகேந்திரன், மகாகாந்தாரத்தின் வியாகராஜன், கேரளாவின் மந்தராஜன், பிஸ்தபுரத்து மகேந்திரகிரி, கோட்டுராவைச் சேர்ந்த சுவாமிதத்தன், ரெண்டபள்ளாவின் தாமனன், காஞ்சியைச் சேர்ந்த விஷ்ணுகோபன், அவமுக்த நாட்டு நீலராஜன், வெங்கிநாட்டு ஹஸ்திவர்மன், பலாக்காவின் உக்ரசேனன், தேவராஷ்டிரத்து குபேரன், மற்றும் குஸ்தலபுரத்து தனஞ்சயன்.



சமுத்திரகுப்தரின் தங்க நாணயங்கள்

தென்னிந்தியாவைப் பொறுத்தவரை சமுத்திரகுப்தரின் கொள்கை வேறுபட்டிருந்தது. அவர் தென்னிந்திய அரசர்களை அழித்து, அப்பகுதிகளை பேரரசுடன் இணைத்துக் கொள்ள வில்லை. மாறாக, அவர்களை முறியடித்த

பின்னர் மீண்டும் ஆட்சிப் பகுதிகளை அவரவரிடமே ஒப்படைத்தார். தனது மேலாண்மையை ஏற்றுக் கொள்ளு மாறு அவர் வலியுறுத்தினார். சமுத்திரகுப்தரின் மூன்றாவது படையெடுப்பு எஞ்சியிருந்த வடஇந்திய அரசர்களை முறியடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஒன்பது அரசர்களுக்கு எதிராக போரிட்ட அவர் அவர்களை அழித்து ஆட்சிப்பகுதிகளை பேரரசோடு இணைத்துக் கொண்டார். அவர்களது பெயர்களும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன ருத்ரதேவன், மதிலன், நாகதத்தன், சந்திரவர்மன், கணபதிநாகன், நாகசேனன், அச்சுதன், நந்தின், பாலவர்மன். இவர்களில் பெரும்பாலானவர்கள் நாகர் குடும்பத்தை சேர்ந்தவர்கள். வடஇந்தியாவில் வெவ்வேறு பகுதிகளில் ஆட்சிபுரிந்து வந்தவர்கள்.


**சமுத்திரகுப்தரின் பேரரசுப்பரப்பு**

இந்த போர் வெற்றிகளுக்குப் பிறகு மேலை கங்கைச் சமவெளி, தற்கால உத்திரப் பிரதேசத்தின் பெரும்பகுதி, மத்திய இந்தியாவின் ஒரு பகுதி, வங்காளத்தின் தென்மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளும் சமுத்திரகுப்தரின் ஆட்சிக்குட்பட்டது. இப்பகுதிகளில் அவரது நேரடி நிர்வாகம் நடைபெற்றது. தெற்கில் கப்பம் செலுத்தும் அரசுகள் இருந்தன. மேற்கிலிருந்த சாக மற்றும் குஷான சிற்றரசுகளும் அவரது ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டே இருந்தன. தக்காணத்தின் கிழக்குக் கடற்கரையிலிருந்த அரசுகளும், பல்லவ அரசு உட்பட, அவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டிருந்தன.

**சமுத்திரகுப்தர் பற்றிய மதிப்பீடு**

வரலாற்றின் ஏடுகளில் சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகள் குறிப்பிடத்தக்கவையாகும். தனிப்பட்ட சாதனைகளிலும் அவர் புகழ்மிக்கவராகவே திகழ்ந்தார். எதிரிகளை அவர் பெருந்தன்மையுடன நடத்தியமை, அவரது கூரிய அறிவு, புலமை, இசையில் மேதமை போன்றவற்றை அலகாபாத் கல்தூண் கல்வெட்டு விவரமாகக் குறிப்பிடு கிறது. பாடல்களை இயற்றும் திறனைப் பெற்றிருந்த அவரை 'கவிராஜன்' என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவரது நாணயங்களில் வீணையுடன் அமர்ந் திருக்கும் காட்சி பொறிக்கப்பட்டுள்ளது. இசையில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் திறமையையும் இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ஹரிசேனர் உள்ளிட்ட பல்வேறு புலவர்களையும், அறிஞர்களையும் அவர்





ஆதரித்தார். தனது மரபுக்கே உரிய பண்பான வடமொழியைப் போற்றி ஆதரிக்கும் பண்பையும் அவர் பெற்றிருந்தார். சிறந்த வைணவராகத் திகழ்ந்த அவர், பிற சமயப் பிரிவுகளையும் சகிப்புத்தன்மையுடன் நடத்தினார். புத்த சமயத்தின்மீது பற்றுக் கொண்டிருந்த அவர், புகழ்மிக்க புத்தசமய அறிஞரான வசுபந்து என்பவரை ஆதரித்தார்.

**இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 380 – 415)**

சமுத்திரகுப்தருக்குப்பின் அவரது புதல்வர் இரண்டாம் சந்திரகுப்த விக்ரமாதித்யர் ஆட்சிக்கு வந்தார். ஆனால், ஒருசில வரலாற்று அறிஞர்கள் சமுத்திரகுப்தருக்கு அடுத்து ராமகுப்தர் ஆட்சிக்கு வந்ததாகக் கூறுகின்றன. இதற்கு வலுவான சான்றுகள் இல்லை. தனது தந்தையைப் போல படைவலிமையும் ஆற்றலும் கொண்டிருந்த இரண்டாம் சந்திரகுப்தர் தனது வெற்றிகள்மூலம் குப்தப் பேரரசை மேலும் விரிவுபடுத்தினார்.

அரசியல் வெல்திறனும் போர் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற அவரால் இந்த சாதனையை நிகழ்த்த முடிந்தது. திருமண உறவுகள் மூலம் தனது அரசியல் வலிமையை அவர் பெருக்கிக்கொண்டார். மத்திய இந்தியாவின் நாக இளவரசி குபேரநாகா என்பவரை அவர் மணந்து கொண்டார். தனது புதல்வி பிரபாவதியை வாகாடக மரபு அரசன் இரண்டாம் ருத்ரசேனருக்கு மணமுடித்துக் கொடுத்தார். தக்காணத்தில் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் வாகடர்கள் ஆட்சிபுரிந்தனர் என்ற அடிப்படையில் இந்த மணஉறவு அரசியல் முக்கியத்துவம் பெற்றுவிளங்கியது. இரண்டாம் சந்திரகுப்தர் மேற்கு இந்தியாவில் சாகர்களுக்கு எதிராக படையெடுத்துச் சென்றபோது இந்த மண உறவும் வாகாடர்களின் நட்பும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**மேற்கு இந்தியாவை வெற்றிகொள்ளல்**

மேற்கு இந்தியாவிலிருந்து சாக சத்திரப்புகளை எதிர்த்துப் போரிட்டு பெற்ற வெற்றியே இரண்டாம் சந்திரகுப்தரின் போர்த்துறை சாதனைகளில் மகத்தானதாகும். சாக சத்திரப்பு மரபின் கடைசி ஆட்சியாளரான மூன்றாம் ருத்ரசிம்மன் இப்போரில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். மேற்கு மாளவம், கத்தியவார் தீபகற்பம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அவரது ஆட்சிப் பகுதிகள் குப்தப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு இரண்டாம் சந்திரகுப்தர் அசுவமேத யாகம் நடத்தியதோடு சாகர்களை அழித்தவர்' என்று பொருள் கொண்ட 'சாகரி'



என்ற விருதுப் பெயரையும் சூட்டிக்கொண்டார். தம்மை 'விக்கிரமாதித்தன்' என்றும் புகழ்படக் கூறிக்கொண்டார்.

மேற்கு இந்தியாவை வெற்றிகொண்டதின் விளைவாக, பேரரசின் மேற்கு எல்லை அராபியக் கடல்வரை நீண்டது. இதனால், புரோச், சோபரா, காம்பே உள்ளிட்ட துறைமுகங்கள் குப்தப் பேரரசின் எல்லைக்குள் வந்தன. மேலை நாடுகளுடனான அயல்நாட்டு வர்த்தகம் குப்தப் பேரரசின் கட்டுப்பாட்டில் வந்தது. உஜ்ஜயினி ஒரு முக்கிய வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகராக வளர்ச்சி பெற்றது, விரைவில் அது குப்தர்களின் மாற்றுத் தலைநகராகவும் விளங்கியது. வங்காளத்தில் உற்பத்தியான அழகிய பருத்தி ஆடைகள், பீகாரின் அவுரிச் சாயம், பனாரஸ் பட்டு, இமாலய மலைகளின் நறுமணப் பொருட்கள், சந்தனம், தென்னிந்திய வாசனைத் திரவியங்கள் போன்றவை இந்த துறைமுகங்களுக்கு எவ்வித தடையுமின்றி கொண்டு வரப்பட்டன. இந்தியப் பொருட்களை வாங்குவதற்காக மேற்கத்திய வணிகர்கள் ரோமனிய தங்கத்தை இந்தியாவிற்கு கொண்டுவந்து குவித்தனர். இரண்டாம் சந்திரகுப்தர் வெளியிட்ட பல்வகை தங்க நாணயங்கள் குப்தப் பேரரசின் செல்வச் செழிப்புக்கு அடையாளமாகும்.

**பிறவெற்றிகள்**

வங்கத்தில் தனது எதிரிகளின் கூட்டிணைவை இரண்டாம் சந்திரகுப்தர் முறியடித்தார். சிந்து நதியைக் கடந்து சென்ற அவர் பாக்டிரியாவைக் கைப்பற்றினார். அங்கு ஆட்சிபுரிந்த குஷானர்களை அடிபணியச் செய்தார். இத்தகைய வெற்றிகளினால், குப்தப் பேரரசு மேற்கு மாளவம், குஜராத் கத்தியவார் வரை மேற்கில் பரவியது. வடமேற்கில் பேரரசின் எல்லை இந்து குஷ் மலைக்கப்பால் பாக்டிரியா வரை பரவியிருந்தது. கிழக்கே வங்காளத்தின் கிழக்குப் பகுதிவரையும் தெற்கே நர்மதை நதியை எல்லையாகக் கொண்டும் குப்தப் பேரரசு விளங்கியது.

**பாஹியானின் வருகை**

இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் புகழ்வாய்ந்த சீனப் பயணியான பாஹியான் இந்தியாவிற்கு வருகைபுரிந்தார். இந்தியாவில் அவர் தங்கியிருந்த ஒன்பது ஆண்டுகளில் குப்தப் பேரரசில் மட்டும் ஆறு ஆண்டுகளைக் கழித்தார். கோட்டான், காஷ்கர், காந்தாரம், பஞ்சாப் என்று அவர் நிலவழியாகவே இந்தியாவிற்கு வந்தார். பெஷாவர், காசி, புத்தகயா

உள்ளிட்ட பல இடங்களுக்கும் அவர் சென்றார். இலங்கை, ஜாவா வழியாக கடற்பயணமாக அவர் சீனா திரும்பினார். புத்தர் பிறந்து வாழ்ந்த இடத்தை தரிசித்து புத்தசமய சுவடிகளை சேகரித்து எடுத்துச் செல்லும் நோக்கத்துடனேயே பாஹியான் இந்தியாவிற்கு வந்தார். பாடலிபுத்திரத்தில் மூன்றாண்டுகள் தங்கி, வடமொழியைக் கற்றதோடு, புத்த இலக்கியங் களையும் படியெடுத்தார். குப்தப் பேரரசில் நிலவிய சமய, சமூக, பொருளாதார நிலைமைகளைப் பற்றி அவர் பல அரிய தகவல்களை குறிப்பிட்டுள்ளார். வடமேற்கு இந்தியாவில் புத்தசமயம் நன்கு புகழ்பெற்று விளங்கியதாகவும், ஆனால் கங்கைச் சமவெளியில் அது புறக்கணிப் பட்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். கங்கைச் சமவெளியை அவர் ''பிராமணர்களின் பூமி'' என்று குறிப்பிட்டுள்ளார். கபிலவஸ்து, குசிநகரம் போன்ற சில புத்தசமய புனித இடங்கள் அழிந்துகொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். பேரரசின் பொருளாதாரச் செழிப்பை அவர் நன்கு விவரித்துள்ளார்.

பல்வேறு கோணங்களில் பாஹியானது குறிப்புகள் பயனுடையவை என்றபோதிலும், இரண்டாம் சந்திரகுப்தன் பெயரை அவர் குறிப்பிடவில்லை. அரசியல் விவகாரங்களில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை. அவரது முதன்மை நோக்கம் சமயத்தைப் பற்றியதேயாகும். அவர் எதனையும் புத்தசமய நோக்கிலேயே மதிப்பிட்டார். சமூக நிலைமை பற்றிய அவரது கூற்றுக்கள் மிகையானவை. இருப்பினும், நாட்டின் பொதுவான நிலைமைகளை அறிந்து கொள்ள அவரது குறிப்புகள் பயனுள்ளவையாகத் திகழ்கின்றன.

### இரண்டாம் சந்திரகுப்தர் பற்றிய மதிப்பீடு

குப்தப் பேரரசின் வலிமையும் புகழும் இரண்டாம் சந்திரகுப்த விக்ரமாதித்தன் ஆட்சிக் காலத்தில்தான் அவற்றின் உச்சிக்கே சென்றன. அக்காலத்திய பொதுவான பண்பாட்டு வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. காளிதாசர் போன்ற சிறந் த இலக்கிய படைப்பாளர்களை அவர் ஆதரித்தார். கலைத்துறை நடவடிக்கைகளையும் அவர் ஊக்கு வித்தார். அக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி காரணமாகத்தான் குப்தர் காலம் பொற்காலம் என்று பொதுவாக குறிப்பிடப்படுகிறது. குப்தர்கால பண்பாட்டு வளர்ச்சி பற்றி பின்வரும் பகுதிகளில் காணலாம்.



### இரண்டாம் சந்திரகுப்தரின் பின்தோன்றல்கள்

இரண்டாம் சந்திரகுப்தருக்குப்பின் அவரது புதல்வர் குமார குப்தர் ஆட்சிக்கு வந்தார். அமைதியும் செழிப்பும் அவர் காலத்தில் நிலவியது. அவர் ஏராளமான நாணயங்களை வெளியிட்டார். அவரது கல்வெட்டுக்களை குப்தப் பேரரசு முழுவதும் காணலாம். அவர் குதிரை வேள்வியும் மேற்கொண்டார். பிற்காலத்தில் உலகப்புகழ் பெறவிருந்த நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவியது அவரது மகத்தான செயலாகும். அவரது ஆட்சிக்கால இறுதியில் வலிமையும் செல்வமும் மிகுந்த புஷ்யமித்திரர்கள் என்று அழைக்கப்பட்ட பழங்குடியினரால் குப்தப்படை முறியடிக்கப்பட்டது. மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட் ஹுணர்கள் இந்துகுஷ் மலையைக் கடந்து இந்தியாமீது தாக்குதல் தொடுக்கவும் முயற்சித்தனர்.

ஆனால், அடுத்த ஆட்சிக்கு வந்த ஸ்கந்த குப்தர்தான் உண்மையில் ஹுணர்களை எதிர்கொண்டவர். ஹுணர்களை முறியடித்து பேரரசை காப்பாற்றியதும் அவரே. இந்த போரினால் குப்தப் பேரரசின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியது. ஸ்கந்த குப்தரின் மறைவுக்குப் பின்னர், புருகுப்தர், புத்தகுப்தர், பாலாதித்யர் போன்ற அவரது வழித் தோன்றல்களினால் குப்தப் பேரரசை ஹுணர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. இறுதியில், ஹுணர்களின் படையெடுப்புகளின் விளைவாக குப்தப் பேரரசு மறைந்தது. பின்னர், மாளவத்தின் யசோதர்மன் எழுச்சி பெற்றான்.

### குப்தர் ஆட்சிமுறை

பரம பட்டாரகா, மகாராஜாதி ராஜா, பரமேஸ்வரா, சாம்ராட், சக்ரவர்த்தி போன்ற விருதுப் பெயர்களை குப்தப் பேரரசர்கள் சூட்டிக் கொண்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. முதலமைச்சர், சேனாதிபதி, பிற அதிகாரிகள் உள்ளிட்ட அமைச்சரவை அரசனுக்கு ஆட்சித் துறையில் ஆலோசனைகளை வழங்கியது. குப்தர்கால கல்வெட்டுகள் சண்டிவிக்ரகன் என்ற உயர் அதிகாரி பற்றிக் குறிப்பிடுகிறது. அயலுறவுத் துறை அதிகாரியாக அவர் இருந்திருக்கக்கூடும். குமாரமத்யர்கள், அயுக்தர்கள் போன்ற அதிகாரவர்க்கம் மூலமாக அரசர் மாகாண ஆட்சித் துறையோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். குப்தப் பேரரசின் மாகாணங்கள் 'புக்திகள்' எனப்பட்டன. மாகாண ஆளுநர்கள் உபரிகர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் இளவரசர்களாகவே இருந்தனர்.

புத்திகள் ஒவ்வொன்றும் விஷயங்கள் என்றழைக்கப்பட்ட மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன. மாவட்ட ஆட்சிப் பொறுப்பு விஷயபதி என்ற அதிகாரியிடமிருந்தது. நகர நிர்வாகத்தை நகர சிரேஷ்டிகள் கவனித்து வந்தனர். மாவட்டத்திலிருந்த கிராமங்களின் நிர்வாகம் கிராமிகர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது.

குப்தர் ஆட்சிமுறை குறித்து பாஹியான் அளிக்கும் தகவல்கள் பயனுள்ளவை. குப்தர் ஆட்சி கருணைமிக்கதாக இருந்தது. மக்களது நடமாட்டத்திற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தனிப்பட்ட சுதந்திரத்தை அனுபவிக்க முடிந்தது. தனிநபர் வாழ்க்கையில் அரசின் தலையீடு காணப்படவில்லை. தண்டனைகளும் கடுமையானதாக இல்லை. அபராதம் விதிப்பதே பொதுவான தண்டனை முறையாகும். ஒற்றர் முறை ஏதும் இல்லை. பயணிகளுக்கு பாதுகாப்புமிக்க சாலைகள், திருடர்கள் பயமின்மை போன்றவை குப்த ஆட்சிமுறையின் திறமைக்கு சான்று பகர்வதாகும். மக்கள் பொதுவாக வளமையான வாழ்க்கையை நடத்தியதாகவும், குற்றங்கள் மிகவும் குறைவாகவே இருந்ததாகவும் பாஹியான் குறிப்பிடுகிறார். கங்கைச் சமவெளி முழுவதும் எவ்வித பயமும் இல்லாமல் பயணம் செய்ய முடிந்தது என அவர் குப்தப் பேரரசின் ஆட்சியின் சிறப்பை புகழ்ந்து கூறுகிறார். மொத்தத்தில், மௌரியர் ஆட்சிமுறையைவிட, குப்தர் ஆட்சி மிகவும் சுதந்திரத்தன்மையுடையதாகவே காணப்பட்டது.

### சமூக வாழ்க்கை

இந்தியாவில் குப்தர்கள் ஆட்சிக்கு முன்பு அயலவர் படையெடுப்புகள் தொடர்ந்து நடைபெற்றன. அத்தகைய அயல்நாட்டவர்க்கு இந்திய சமுதாயம் இடமளித்து அவர்களை இந்தியாவிலேயே தங்கவும் அனுமதித்தது. ஆனால், குப்தர் காலத்தில் ஜாதிமுறை மிகவும் கடுமையாக பின்பற்றப்பட்டது. பிராமணர்கள் சமுதாயத்தில் உயர் அங்கம் வகித்தனர். ஆட்சியாளர்களும், செல்வந்தர்களும் அவர்களுக்கு ஏராளமான கொடைகளை வாரி வழங்கினர். தீண்டாமை வழக்கம் இக்காலத்தில்தான் மெள்ள வளரத்தொடங்கியது. சண்டாளர்கள் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டதாக பாஹியான் கூறியுள்ளார். இத்தகைய கொடுமை பற்றி சீனப் பயணி விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

குப்தர் காலத்தில் மகளிர் நிலைமையும் மோசமடைந்தது. புராணங்கள் போன்ற சமயநூல்களைப் படிப்பதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை.



ஆண்களுக்கு பெண்கள் அடிமை என்ற வழக்கம் நன்கு வேரூன்றியது. ஆனால், பெண்கள் ஆண்களால் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கருணையுடன் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. 'சுயம்வரம்' நடத்தும் பழக்கம் கைவிடப்பட்டது. மனுஸ்மிரிதி பெண்களுக்கு சிறுவயதிலேயே திருமணம் செய்யவேண்டும் என்று பரிந்துரைத்தது.

சமயத்தைப் பொறுத்தவரை, குப்தர் காலத்தில் பிராமண சமயமே செல்வாக்கு பெற்று விளங்கியது. அதில் வைணவம், சைவம் என இரண்டு பிரிவுகள் இருந்தன. பெரும்பாலான குப்த அரசர்கள் வைணவர்களாக இருந்தனர். அவர்கள் அசுவமேத யாகங்களை செய்தனர். உருவ வழிபாடும், விரிவான சடங்குகளுடன் கூடிய சமய திருவிழாக்கள் போன்றவற்றால் இவ்விரு சமயப் பிரிவுகளும் விரைவாக வளர்ச்சி பெற்றன. புராணங்கள் போன்ற சமய இலக்கியங்கள் குப்தர் காலத்தில்தான் முழு வடிவம் பெற்றன. பிராமண சமயத்தின் எழுச்சியால், புத்த சமயமும், சமண சமயமும் புறக்கணிக்கப்பட்டன. கங்கைச் சமவெளியில் புத்தசமயம் வீழ்ச்சியடைந்ததாக பாஹியான் கூறியுள்ளார். ஆனால், வசுபந்து போன்ற புத்தசமய அறிஞர்கள் குப்தப் பேரரசர்களால் ஆதரிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்கு மற்றும் தென்னிந்தியாவில் சமண சமயம் செழித்து வளர்ந்தது. இக்காலத்தில்தான் வாலாபியில் சமண சமய மாநாடு கூட்டப்பட்டது. சுவேதாம்பரர்களின் சமண விதிகள் எழுதப்பட்டன.

### கலையும் பண்பாடும்

கலை, அறிவியல், இலக்கியம் போன்ற துறைகளில் குப்தர் காலத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்பட்டது. இதனாலேயே இது ஒரு பொற்காலம் என அழைக்கப்படுகிறது. சில அறிஞர்கள் இக்காலத்தை மறுமலர்ச்சிக் காலம் என்றும் அழைக்கின்றனர். ஆனால், குப்தர் காலத்திற்கு முன்பு எந்தவொரு இருண்டகாலமும் இல்லை என்பதையும் நாம் உணரவேண்டும். எனவே, குப்தர் காலத்தில் ஏற்பட்ட இந்த பண்பாட்டு வளர்ச்சியை இந்திய அறிவுசால் நடவடிக்கைகளின் உச்சகட்டம் என்று அழைக்கலாம்.

### கலை, கட்டிடக் கலை

இந்தியக் கலை, கட்டிடக் கலை வரலாற்றில் குப்தர் காலம் சிறப்பான இடத்தை வகிக்கிறது. நாகரி, திராவிடக் கலைப்பாணிகள் இரண்டும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. ஆனால், இக்காலத்திய கலைச் சின்னங்களின் பெரும்பகுதி ஹுணர்கள் போன்ற அந்நியப் படையெடுப்பாளர்களால்

அழிக்கப்பட்டுவிட்டன. எனினும், எஞ்சியுள்ள கோயில்கள், சிற்பங்கள், குகை ஓவியங்கள் குப்தர் காலக் கலையின் பொலிவுக்கு சான்றுகளாக விளங்குகின்றன.



தியோகார் ஆலையம்

ஜான்சிக்கு அருகிலுள்ள தியோகார் கோயில், அலகாபாத்துக்கு அருகிலுள்ள கார்வாஸ் ஆலய சிற்பங்கள் குப்தர் கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். காந்தாரக் கலையின் தாக்கத்தை இவற்றில் காணமுடிய வில்லை. ஆனால், மதுராவிலுள்ள நிற்கும் வடிவிலுள்ள அழகிய புத்தர் சிலையில் சிறிது கிரேக்க சாயலைக் காணலாம். சாரநாத் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை குப்தர் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. ஸ்கந்தகுப்தரின் பிடாரி ஒற்றைக் கல்தூண் மகத்தானது.

குப்தர் காலத்தில் உலோகவியல் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. உலோக சிலைகளையும் தூண்களையும் வார்ப்பதில் உலோகக் கலைஞர்கள் திறமைமிக் கவர்களாகத் திகழ்ந்தனர். தற்போது பர்மிங் ஹாம் அருங்காட்சியகத்திலுள்ள, சுல்தான் கன்ஞ் என்ற இடத்தில் முதலில் கண்டெடுக்கப் பட்ட செம்பாலான புத்தர் சிலை ஏழரை அடி உயரமும், சுமார் ஒரு டன் எடையும் கொண்ட தாகும். குப்தர் காலத்தைச் சேர்ந்த டெல்லி இரும்புத்தூண் வெயில், ம ழை போன்ற இயற்கை மாற்றங்களுக்கு பல நூற்றாண்டுகளாக ஈடுகொடுத்து இன்றுவரை துருப்பிடிக்காமல் இருப்பது குப்தர்கால உலோகக் கலைக்கு தக்க சான்றாகும்.



பாக் குகை ஓவியம்

குப்தர்கால ஓவியங்களை குவாலியருக்கு அருகிலுள்ள பாக் குகைகளில் காணலாம். அஜந்தா சுவரோவியங்கள் ஜாதகக் கதைகளில் கூறப்பட்டுள்ளவாறு புத்தரின் வாழ்க்கையை சித்தரிக்கின்றன. இலங்கையிலுள்ள சிகிரியா ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றன.



குப்தர் கால நாணயங்களும் சிறப்புமிக்கவை. சமுத்திரகுப்தர் எட்டு வகை நாணயங்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் அவரது சாதனைகளை பறைசாற்றுகின்றன. நாணயங்கள் மீது பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் குப்தர்கால நாணயவியல் ஆற்றலுக்கும் புகழுக்கும் சான்றுகளாகும். இரண்டாம் சந்திரகுப்தர், தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான பல்வகைப்பட்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

**இலக்கியம்**

வடமொழி குப்தர் காலத்தில் ஏற்றம் பெற்றது. பிரம்மி வரிவடிவத்திலிருந்து நாகரி வரிவடிவம் வளர்ச்சி பெற்றது. காவியம், கவிதை, நாடகம், உரைநடை என பல்வேறு வடிவங்களிலான வடமொழி இலக்கியங்கள் எழுதப்பட்டன. வடமொழி இலக்கியங்களிலேயே மிகச் சிறந்தவை குப்தர் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

ஒரு சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த சமுத்திரகுப்தர் ஹரிசேனர் உள்ளிட்ட பல அறிஞர்களை ஆதரித்தார். புகழ்மிக்க 'நவரத்தினங்கள்' இரண்டாம் சந்திரகுப்தரின் அவையை அலங்கரித்தனர். அவர்களில் முதன்மையானவர் காளிதாசர். 'சாகுந்தலம்' என்ற சிறப்பான வடமொழி காவியத்தை அவர் படைத்தார். அது உலகின் தலைசிறந்த நூறு புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மாளவிகாக்னிமித்ரம், விக்ரமூர்வசியம் என்ற மேலும் இரண்டு நாடகங்களையும் அவர் எழுதியுள்ளார். அவர் படைத்த இரு காப்பியங்கள் ரகுவம்சம் மற்றும் குமார சம்பவம். ரிது சம்ஹாரம், மேகதூதம் என்ற கவிதை நூல்களையும் அவர் இயற்றியுள்ளார்.

இக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு படைப்பாளி விசாகதத்தர். முத்ராராட்சசம், தேவிசந்திரகுப்தம் என்ற இரண்டு நாடகங்களை அவர் எழுதியுள்ளார். அக்காலத்தின் புகழ் வாய்ந்த கவிஞர் சூத்ரகர். அவர் எழுதிய மிருச்சகடிகம் நகைச்சுவைக்கும் சோகத்திற்கும் பெயர்பெற்றது. அர்ச்சுனனுக்கும் சிவபெருமானுக்கும் இடையே நடைபெற்ற மோதலைக் கூறும் கதையான கிருதார்ஜீன்யம் என்ற நூலைப் படைத்தவர் பாரவி. காவியதரிசனம், தசகுமாரசரிதம் ஆகிய நூல்களை தண்டின் எழுதியுள்ளார். சுபந்து எழுதிய வாசவதத்தை மற்றொரு முக்கிய படைப்பாகும். குப்தர் காலத்தில்தான் பஞ்சதந்திரக் கதைகள், விஷ்ணு சர்மா என்பவரால் தொகுக்கப்பட்டன. அமரசிம்ஹர் என்ற புத்தசமய அறிஞர் அமரகோசம் என்ற

அகராதியைப் படைத்தார். தற்போது காணப்படும் புராணங்கள் குப்தர்கள் காலத்தில் தொகுப்பட்டதாகும். அவற்றில் குறிப்பிடத்தக்கவை பாகவத புராணம், விஷ்ணுபுராணம், வாயு புராணம், மத்சய புராணம் என்பவையாகும். தற்காலத்தில் அறியப்படும் இராமாயணம், மகாபாரத நூல்களுக்கு இறுதிவடிவம் குப்தர் காலத்திலேயே அளிக்கப்பட்டது.

**அறிவியல்**

கணிதம், வானஇயல், ஜோதிடம், மருத்துவம் போன்ற துறைகளில் குப்தர்காலத்தில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது. இக்காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர் சிறந்த கணிதமேதை மற்றும் வான இயல் அறிஞர். கி.பி. 499 ஆம் ஆண்டு அவர் ஆரியபைட்டியம் என்ற நூலை எழுதினார். அது கணிதம், வானநூல் தொடர்புடையது. சூரிய மற்றும் சந்திர கிரகணம் ஏற்படுவதை அறிவியல் அடிப்படையில் இந்நூல் விளக்குகிறது. பூமி உருண்டை வடிவிலானது என்றும் அது தன்னைத்தானே சுற்றிவருகிறது என்றும் முதன்முதலில் அறிவித்தவர் ஆரியபட்டரேயாவார். ஆனால், இக்கருத்துக்களை அவருக்குப்பின் வந்த வராஹமிகிரரும், பிரம்மகுப்தரும் நிராகரித்தனர்.

வராஹமிகிரர் ஐந்து வானஇயல் அமைப்புகளைக் கூறும் பஞ்ச சித்தாந்திகா என்ற நூலைப் படைத்தார். ஜோதிடக் கலையில் சிறந்த புலமையுடையவராகவும் அவர் திகழ்ந்தார். அவரது படைப்பான பிருகத்சம்ஹிதை வடமொழி இலக்கியத்தில் சிறந்த நூலாகப் போற்றப்படுகிறது. வான இயல், ஜோதிடம், புவியியல், கட்டிடக் கலை, வானிலை, விலங்குகள், மணமுறைகள், சகுனங்கள் என பல்வேறு தலைப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவர் எழுதிய பிருகத்ஜாதகம் என்ற நூல் ஜோதிடக் கலைக்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது. மருத்துவத்துறையில் சிறந்த மேதையான வாக்பதர் குப்தர் காலத்தில் வாழ்ந்தவர். பண்டைய இந்தியாவின் மருத்துவ மும்மணிகளில் அவரும் ஒருவர். குப்தர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த மற்ற இருவர் சரகரும், சூஸ்ருதரும். 'அஷ்டாங்க சம்கிரஹம்' அல்லது மருத்துவத்தின் எட்டு பிரிவுகள் என்ற நூலை வாக்பதர் எழுதியுள்ளார்.



***கற்றல் அடைவுகள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *அலகாபாத் கல்தூண் கல்வெட்டு போன்ற குப்தர் கால வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகள்.*
2. *சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகளும், தனிப்பட்ட சாதனைகளும்*
3. *இரண்டாம் சந்திரகுப்தரின் வெற்றிகள், மற்றும் கலை, இலக்கியப் புரவலராக அவரது பங்களிப்பு.*
4. *குப்தர்களின் ஆட்சிமுறை, சமூகம், பொருளாதாரம், பாஹியானின் வருகையும் அவரது வருணனையும்.*
5. *வடமொழி இலக்கியத்தின் வளர்ச்சி, காளிதாசர், விசாகதத்தர் போன்றோரின் பங்களிப்பு.*
6. *குப்தர் கால கலை, கட்டிடக் கலை, அறிவியல் வளர்ச்சி, ஆரியபட்டர் போன்றோரின் பங்களிப்பு.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. குப்த சகாப்தம் தொடங்கும் ஆண்டு

அ. கி.பி. 310 ஆ. கி.பி. 320

இ. கி.பி. 330 ஈ. கி.பி. 300

2. நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவியவர்

அ. சமுத்திரகுப்தர் ஆ. இரண்டாம் சந்திரகுப்தர்

இ. குமாரகுப்தர் ஈ. ஸ்கந்த குப்தர்

3. குப்தர் காலத்தில் வாழ்ந்த மருத்துவ அறிஞர்

அ. வராஹமிகிரர் ஆ. வாக்பதர்

இ. சரகர் ஈ. சூஸ்ருதர்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. குப்த மரபை தோற்றுவித்தவர் .........
2. புத்த சமய அறிஞர் வசுபந்துவை ஆதரித்தவர் .........
3. ‘சாகரி’ என்ற விருதுப் பெயரைக் கொண்டவர் .........
4. காளிதாசர் படைத்த காப்பியங்கள் ............
5. பிருகத் சம்ஹிதையின் ஆசிரியர் .........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. மேக தூதம் | அ. தண்டின் |
| 2. தேவி சந்திர குப்தம் | ஆ. சூத்ரகர் |
| 3. தச குமார சரிதம் | இ. காளிதாசர் |
| 4. மிருச்சகடிகம் | ஈ. விசாகதத்தர் |



**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. சமுத்திர குப்தர் தென்னிந்தியாவில் கைப்பற்றிய அனைத்துப் பகுதிகளையும் பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

ஆ. சமுத்திரகுப்தரின் ‘தட்சணபாதா’ படையெடுப்பைப் பற்றி பாஹியான் விவரித்துள்ளார்.

இ. சமுத்திரகுப்தர் தென்னிந்திய அரசர்களை முறியடித்து, பின்னர் அவர்களுக்கு வென்ற பகுதிகளை திருப்பிக் கொடுத்தார்.

ஈ. சமுத்திரகுப்தரின் வடஇந்திய வெற்றிகளினால் குப்தப் பேரரசு விரிவடையவில்லை.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. நவரத்தினங்கள் என்று அழைக்கப்பட்ட அறிஞர்கள் சமுத்திரகுப்தரது அவையை அலங்கரித்தனர்.
2. ஹுணர்கள் படையெடுப்புகளினால் குப்தப் பேரரசு அழிந்தது.
3. குப்தர் கால கலை நாகரம் மற்றும் திராவிட கலைப்பாணிகள் இரண்டையும் பின்பற்றியதாகும்.
4. குப்தர்கள் வடமொழியை ஆதரித்தனர்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. அலகாபாத் கல்தூண் கல்வெட்டு
2. சமுத்திர குப்தரின் தட்சிணபாதா படையெடுப்பு
3. ஆரியபட்டர்
4. குப்தர் காலத்திய உலோகக் கலை

VII. குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. இரண்டாம் சந்திரகுப்தர் மேற்கு இந்தியாவைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பிடுக.

2. இந்தியாவிற்கு பாஹியான் வருகை மற்றும் அவரது குறிப்புகள் பற்றி தொகுத்து எழுதுக.

3. குப்தர்கள் ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுகளை ஆய்க.

VIII. விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. சமுத்திரகுப்தரின் சாதனைகளை தொகுத்து எழுதுக.

2. குப்தர் கால ஆட்சியில் நிலவிய சமூக – பொருளாதார நிலைமைகளை விவரி.

3. குப்தர்களின் பண்பாட்டு பங்களிப்பை ஆய்க.



# பாடம் – 10

# ஹர்ஷ வர்த்தனர் (கி.பி. 600 – 647)

***கற்றல் நோக்கங்கள்***

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *ஹர்ஷர் பற்றி அறிய உதவும் சான்றுகள்.*
2. *ஹர்ஷரின் இளமைக்காலம்*
3. *ஹர்ஷரின் போர் நடவடிக்கைகள்*
4. *புத்த சமயத்திற்கு ஹர்ஷர் ஆற்றியுள்ள தொண்டு*
5. *நாளந்தா பல்கலைக்கழகம்*

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடஇந்தியாவில் அரசியல் குழப்பம் நிலவியது. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் வடஇந்தியாவில் ஹர்ஷ வர்த்தனர் தனது பேரரசை உருவாக்கினார்.

ஹர்ஷரது காலத்தைப் பற்றியும் அவரது வரலாற்றையும் அறிந்துகொள்ள உதவும் முக்கிய சான்றுகள் பாணர் எழுதிய ஹர்ஷசரிதமும், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளுமாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி யுவான் சுவாங். இவ்விரண்டு சான்றுகளைத் தவிர, ஹர்ஷர் எழுதியுள்ள ரத்னாவளி, நாகநந்தம், பிரிய தர்சிகா என்ற நாடகங்களும் பயனுள்ள தகவல்களைத் தருகின்றன. மதுபென் பட்டயமும், சோன்பட் கல்வெட்டும் ஹர்ஷரது காலக்கணிப்புக்கு உதவுகின்றன. பான்ஸ்கரா கல்வெட்டில் ஹர்ஷரது கையொப்பம் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**ஹர்ஷரின் இளமைக்காலம்**

ஹர்ஷரது குலத்தை நிறுவியவர் புஷ்யபூதி. குப்தர்களின் படைத் தலைவர்களாக புஷ்யபூதிகள் பணியாற்றி வந்தனர். அவர்கள் தங்களை

வர்த்தனர்கள் என்றும் அழைத்துக் கொண்டனர். ஹுணர்களின் படையெடுப்புக்குப்பின் தங்கள் சுதந்திரத்தை அவர்கள் அறிவித்துக் கொண்டனர். புஷ்யபூதி வம்சத்தின் முதல் முக்கிய அரசர் பிரபாகர வர்த்தனர். டெல்லிக்கு வடக்கேயிருந்த தானேஷ்வரம் அவரது தலைநகரம். அவர் மகாராஜாதிராஜா, பரமபட்டாரகா போன்ற விருதுப் பெயர்களையும் சூட்டிக் கொண்டார்.

பிரபாகர வர்த்தனரின் மறைவுக்குப் பின் அவரது மூத்த புதல்வர் ராஜ்ய வர்த்தனர் ஆட்சிக்கு வந்தார். தொடக்கத்திலிருந்தே அவர் பல இன்னல்களை சந்திக்க வேண்டியிருந்தது. அவரது தங்கை ராஜ்யஸ்ரீ கிரஹவர்ம மௌகாரியை மணந்திருந்தார். மாளவத்தின் அரசன் தேவகுப்தன், வங்காள ஆட்சியாளர் சசாங்கனின் துணையோடு கிரஹ வர்மனைக் கொன்றுவிட்டான். இச்செய்தியை கேள்விப்பட்ட ராஜ்ய வர்த்தனர் மாளவ அரசனுக்கு எதிராகப் படையெடுத்து அவனது படைகளை அழித்தான். ஆனால், தலைநகர் திரும்புவதற்கு முன்பேயே அவர் சசாங்கனின் சதியால் கொல்லப்பட்டார். இதற்கிடையில் கணவனையிழந்த ராஜ்யஸ்ரீ காடுகளுக்கு தப்பிச் சென்றார். தானேஷ்வரத்தில் ஹர்ஷவர்த்தனர் ஆட்சிப் பொறுப்பேற்றார். தமது தங்கையைக் காப்பாற்றுவது அவரது முதல் கடமையாக இருந்தது. பின்னர் தனது தங்கையின் கணவரைக் கொன்றவர்களையும் பழிவாங்க வேண்டியிருந்தது. தீக்குளிக்கவிருந்த தங்கையை ஹர்ஷர் முதலில் மீட்டார்.

**ஹர்ஷரின் படையெடுப்புகள்**

தனது முதலாவது படையெடுப்பில், ஹர்ஷர் சசாங்கனை கனோஜிலிருந்து விரட்டியடித்தார். கனோஜ் நகரை தனது புதிய தலைநகராக அறிவித்தார். இதன்மூலம் ஹர்ஷர் வட இந்தியாவின் வலிமைமிக்க தலைவரானார். அடுத்து, வாலாபியைச் சேர்ந்த இரண்டாம் துருவசேனருக்கு எதிராகப் போரிட்டு அவரைத் தோற்கடித்தார். இரண்டாம் துருவசேனர் கப்பம்கட்டும் சிற்றரசரானார்.

மேலைச்சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசிக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்பே ஹர்ஷரின் முக்கிய போர் நடவடிக்கையாகும். யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகளும், இரண்டாம் புலிகேசியின் கல்வெட்டுகளும் இப்படையெடுப்பு பற்றி விவரமாகக் கூறுகின்றன. நர்மதை நதிக்குத் தெற்கே தனது அரசை விரிவுபடுத்த வேண்டும் என்ற



ஆர்வத்துடனேயே ஹர்ஷர் சாளுக்கிய ஆட்சியாளருக்கெதிராக போர் தொடுத்தார். ஆனால், இரண்டாம் புலிகேசியின் ஐஹோலே கல்வெட்டுப்படி ஹர்ஷரை புலிகேசி முறியடித்தார் என அறிகிறோம். இந்த வெற்றிக்குப் பிறகு புலிகேசி பரமேஸ்வரன் என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டான். யுவான்சுவாங்கின் பயணக் குறிப்புகளும் புலிகேசியின் வெற்றியை உறுதிப்படுத்துகின்றன.

சுதந்திர அரசாக இருந்த சிந்துப்பகுதி மீது ஹர்ஷர் தமது அடுத்த படையெடுப்பை மேற்கொண்டார். ஆனால், அவரது சிந்துப் படையெடுப்பின் வெற்றி குறித்து சரியான தகவல்கள் இல்லை. நேபாளம் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டது. காஷ்மீரும் அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. காஷ்மீர் ஆட்சியாளர் தவறாது கப்பம் செலுத்தி வந்தார். அஸ்ஸாம் ஆட்சியாளரான பாஸ்கரரவிவர்மனுடன் ஹர்ஷர் இணக்கமான உறவைக் கொண்டிருந்தார். கலிங்கத்தின்மீது படையெடுத்து வெற்றி கொண்டதே ஹர்ஷரது இறுதியான போர் நடவடிக்கையாகும்.

தமது படையெடுப்புகளின் பயனாக, ஹர்ஷர் வடஇந்தியா முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார். தற்காலத்திய ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகள் அவரது நேரடி கட்டுப்பாட்டில் இருந்தன. ஆனால், அவரது ஆதிக்க எல்லை இன்னும் விரிவடைந்திருந்தது. எல்லைப்புற அரசுகளான காஷ்மீர், சிந்து, வாலாபி, காமரூபம் ஆகியன அவரது இறையாண்மையை ஏற்றுக் கொண்டிருந்தன.

**ஹர்ஷரும் புத்த சமயமும்**


யுவான்சுவாங்

தொடக்கத்தில் சிறந்த சிவபக்தராக விளங்கிய ஹர்ஷர், பின்னர் ஹீனயான புத்த சமயத்தை பின்பற்றத் தொடங்கினார். யுவான் சுவாங் அவரை மகாயான புத்த சமயத்திற்கு மாற்றினார். தனது அரசுக்குள் புலால் உணவை ஹர்ஷர் தடைசெய்தார். உயிர்வதை செய்வோரை அவர் தண்டித்தார். தனது அரசு முழுவதும் ஆயிரக்கணக்கான ஸ்தூபிகளையும் பயணிகள் தங்குமிடங்களையும் அவர் அமைத்தார். புத்தசமய புனித இடங்களில் மடாலயங்களை அவர் நிறுவினார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து

சமயங்களின் பிரதிநிதிகளையும் கூட்டி அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசுகளைக் கொடுத்து மரியாதை செய்தார். புத்தசமய துறவிகளை ஒன்றாக அமரச்செய்து, புத்தசமயக் கோட்பாடுகளை விவாதத்திற்கு உட்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ளும்படி செய்தார்.

**கனோஜ் பேரவை**

ஹர்ஷர் தனது ஆட்சிக் காலத்தின் முடிவில் சீனப் பயணி யுவான் சுவாங்கை கௌரவிப்பதற்காக கனோஜ் நகரில் ஒரு சமயப் பேரவையைக் கூட்டினார். அதற்கு, அனைத்து சமயப் பிரிவுகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுத்தார். இருபது அரசர்களும், நாளந்தா பல்கலைக்கழகத்திலிருந்து ஆயிரம் அறிஞர்களும், மூன்றாயிரம் ஹீனயான, மகாயான பிரிவினரும், மூன்றாயிரம் சமண மற்றும் பிராமண சமயத்தவரும் பேரவைக்கு வந்திருந்தனர். தொடர்ந்து இருபத்திமூன்று நாட்கள் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மகாயான கோட்பாட்டின் மதிப்புகளையும், மற்ற கோட்பாடுகளைவிட அது உயர்ந்தது என்பதையும் யுவான்சுவாங் விளக்கிக் கூறினார். இருப்பினும், வன்முறைகளும் பந்தலுக்கு தீவைத்த நிகழ்ச்சிகளும் பேரவை நடவடிக்கைகளை மாசுபடுத்தின. ஹர்ஷரது உயிருக்கே கூட ஆபத்து ஏற்பட்டது. ஆனால், விரைவில் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். பேரவையின் இறுதி நாளன்று யுவான் சுவாங்கிற்கு விலை மதிப்புமிக்க பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**அலகாபாத் மாநாடு**

பிரயாகை என்றழைக்கப்படும் அலகாபாத்தில் நடைபெற்ற மாநாடு பற்றி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் விவரித்துள்ளார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஹர்ஷர் கூட்டும் மாநாடுகளில் ஒன்றாகவே அது இருத்தல் வேண்டும். அனைத்து சமயப் பிரிவினரைச் சேர்ந்தவர்களுக்கும் ஹர்ஷர் தனது ஏராளமான செல்வத்தை ஹர்ஷர் வாரி வழங்கினார். கருவூலம் காலியான நிலையில் தனது உடைகள், அணிகலன்கள் அனைத்தையும்கூட ஹர்ஷர் தானமாக வழங்கினார் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷர்மீது யுவான் சுவாங் கொண்டிருந்த மதிப்பே இத்தகைய புகழுரைக்கு காரணம் என்று கூறலாம்.



**ஹர்ஷரது ஆட்சிமுறை**

குப்தர்களின் ஆட்சிமுறையை ஒட்டியே ஹர்ஷரது ஆட்சிமுறையும் அமைந்திருந்தது. அதுபற்றிய விவரங்களை யுவான் சுவாங் கூறியுள்ளார். அரசர் நியாய உணர்வுடனும், நேரம் தவறாமலும் தமது பணிகளை மேற்கொண்டார். தனது ஆட்சிப் பகுதியில் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்து நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார். அவருக்கு ஓய்வுநேரம் மிகவும் அரிதாகவே கிடைத்தது. கட்டாய ஊழியம் காணப்படவில்லை. வரிப்பளுவும் இல்லை. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கே வரியாக வசூலிக்கப்பட்டது. மௌரியர் காலத்தைப் போல குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. விசாரணைகள் காட்டு மிராண்டித்தனமாகவும், மூட நம்பிக்கையானதாகவும் இருந்தன என்று யுவான் சுவாங் குறை கூறுகிறார். காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்ற நான்கு வகைப்படைகளும் ஹர்ஷரது ராணுவத்தில் இடம் பெற்றிருந்தன. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குதிரைகளும், அறுபதாயிரம் யானைகளும் படையில் அங்கம் வகித்தன. மௌரியப் படையின் எண்ணிக்கையைவிட இது அதிகமே! ஹர்ஷரது ஆட்சிமுறையின் சிறப்புக்கூறு அரசின் ஆவணங்கள் பாதுகாத்து வைக்கப்பட்ட முறையே ஆகும். ஹர்ஷரது ஆவணக் காப்பாகம் 'நிலோபிது' என்று அழைக்கப்பட்டது. சிறப்பு அதிகாரிகளின் கீழ் அது பராமரிக்கப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டன.

**ஹர்ஷரது ஆட்சியில் சமூக, பொருளாதார நிலைமைகள்**

அக்காலத்தில் சமூக நிலைமை பற்றி பாணர், யுவான்சுவாங் இருவருமே விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு சாதிப்பிரிவுகள் வழக்கிலிருந்தன. சமூகத்தில் சலுகைபெற்று விளங்கியவர்கள் பிராமணர்கள். அவர்களுக்கு அரசரால் நிலங்கள் மான்யங்களாக வழங்கப்பட்டன. ஷத்திரியர்கள் ஆளும்வர்க்கத்தினர். வைசியர்கள் பெரும்பாலும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். சூத்திரர்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டதாக யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு கிளை சாதிகளும் இருந்தன. மகளிர் நிலை திருப்திகரமாக இல்லை. தங்களது கணவரைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கும் சுயம்வரமுறை மறைந்து விட்டிருந்தது. வரதட்சணைமுறை பரவலாக பின்பற்றப்பட்டது. 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கமும் காணப்பட்டது. மூன்றுவகை சவ அடக்கம் பற்றி

யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். எரித்தல், புதைத்தல் மற்றும் காட்டில் எறிந்துவிடுதல்.

ஹர்ஷரது ஆட்சிக் காலத்தில் வாணிபம் சீர்குலைந்தது. வணிக மையங்களும், நாணயங்களும், வாணிகக் குழுக்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தமை இதற்கு சான்று. கைத்தொழிலும், வேளாண் நடவடிக்கைகளும்கூட சுறுசுறுப்பிழந்து காணப்பட்டன. பொருட் களுக்கு அதிக தேவை இல்லாமற்போகவே, உற்பத்தியும் குறைவாகவே இருந்தது. இதனால் தன்னிறைவுபெற்ற கிராமியப் பொருளாதாரம் எழுச்சி பெற்றது. குப்தர் காலத்துடன் ஒப்பிடும்போது ஹர்ஷர் காலத்திய பொருளாதார நிலை வளமைகுன்றியே இருந்தது.

**பண்பாட்டு வளர்ச்சி**

ஹர்ஷர் காலத்திய கலை மற்றும் கட்டிடக்கலை பெரிதும் குப்தர் காலத்தை ஒட்டியே காணப்பட்டது. நாளந்தாவில் ஹர்ஷர் கட்டிய அடுக்குமாடி மடாலயம் பற்றி யுவான் சுவாங் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். எட்டு அடி உயரமுள்ள செம்பாலான புத்தர் சிலை பற்றியும் அவர் கூறியுள்ளார். சிறந்த கட்டிட வேலைப்பாடுகள் கொண்ட சிர்பூர் லட்சுமணர் கோயில் ஹர்ஷர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

ஹர்ஷர் கற்றோரை ஆதரித்த பண்பாளர். அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய பாணர் ஹர்ஷரது அவையை அலங்கரித்தார். ஹர்ஷசரிதம் தவிர, காதம்பரி என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார். அவரது அவையிலிருந்த மற்ற அறிஞர்கள் மதங்க திவாகரர் மற்றும் பார்த்திரிஹரி. பார்த்திரஹரி ஒரு கவிஞர், தத்துவஞானி மற்றும் இலக்கணவல்லுனர். ரத்னாவளி, பிரியதர்சிகா, நாகநந்தம் என்ற மூன்று நாடகங்களை ஹர்ஷர் எழுதியுள்ளார். நாளந்தா பல்கலைக்கழகத்திற்கும் தாரளமாக நன் கொடைகளையும் அவர் வாரி வழங்கினார். அவரது ஆட்சிக் காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனமாகக் கருதப்பட்டது. நாளந்தா பல்கலைக்கழகத்தில் யுவான் சுவாங் தங்கி கல்வி பயின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நாளந்தா பல்கலைக் கழகம்**

பண்டைக் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணிகள் பல்வேறு கல்வி நிறுவனங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் வாலாபியில் இருந்த




நாளந்தா பல்கலைக் கழகத்தின் சிதைவுகள்

ஹீனயான பல்கலைக்கழகமும், நாளந்தாவிலிருந்த மகாயான பல்கலைக் கழகமும் குறிப்பிடத்தக்கவை. நாளந்தா பல்கலைக் கழகம் பற்றி யுவான் சுவாங் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். 'நாளந்தா' என்ற சொல்லுக்கு 'அறிவை அளிப்பவர்' என்று பொருள். குப்தர் காலத்தில் முதலாம் குமார குப்தரால் இது நிறுவப்பட்டது. அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்களும், ஹர்ஷரும் அதனை ஆதரித்தனர். பல்கலைக்கழகப் பேரசிரியர்கள் பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்டனர். திங்கநாகர், தர்மபாலர், ஸ்திரமதி, சிலபத்திரர் போன்றவர்கள் ஒரு சில புகழ்மிக்க பண்டிதர்கள். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தர்மபாலர் நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

மாணவர்கள் தங்கிப் படிக்கும் உள்ளிருப்பு பல்கலைக்கழகமாக நாளந்தா விளங்கியது. உணவும், இருப்பிடமும் இலவசமாக வழங்கப்பட்டன. நூறு முதல் இருநூறு கிராமங்களிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு அது பராமரிக்கப்பட்டது. அது ஒரு மகாயான பல்கலைக்கழகம் என்ற போதிலும், வேதங்கள், ஹீனயானக் கோட்பாடு, சாங்கிய மற்றும் யோக தத்துவங்கள் போன்றவையும் போதிக்கப்பட்டன. இதை தவிர, பொதுவான பாடங்களான, தர்க்கம், இலக்கணம், வானஇயல், மருத்துவம், கலை போன்றவையும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. நுழைவுத் தேர்வின் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கப்பட்டனர். நுழைவுத் தேர்வு மிகவும் கடினமானதாக இருந்தது. மொத்த மாணாக்கரில் முப்பது சதவிகிதம்பேரே அதில் வெற்றி பெற முடிந்தது. விரிவுரைகளைத் தவிர, விவாதங்களும் நடைபெற்றன. வடமொழியே பயிற்றுமொழியாக விளங்கியது.

நாளந்தா பல்கலைக்கழகத்தின் இடிபாடுகள் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள்மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சீனப் பயணிகள் விவரித்துள்ள அந்த நிறுவனத்தின் பொலிவினை அவை உறுதிப்படுத்துவதாக உள்ளன. ஏராளமான வகுப்பறைகளும், மாணவர் விடுதியும் இருந்துள்ளன. சீனப் பயணியான இட்சிங் என்பவரது கூற்றுப்படி அங்கு மூன்றாயிரம் மாணவர் தங்கிப்படித்தனர். கோளரங்கம் மற்றும் மிகப்பெரிய நூலகம் மூன்று கட்டிடங்களில் செயல்பட்டன. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அங்கு கல்வி பயில்வதற்குத் திரண்டனர் என்பதிலிருந்தே அதன் பெருமை விளங்குகிறது. உயர்கல்வி நிறுவனமாகவும் ஆய்வு நிறுவனமாகவும் அது விளங்கியது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *ஹர்ஷசரிதம், யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள் போன்ற ஹர்ஷரது வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகள்.*
2. *ஹர்ஷரது இளமைக்காலம் மற்றும் படையெடுப்புகள்.*
3. *புத்த சமயத்திற்கு ஹர்ஷர் ஆற்றிய பணிகள் – கனோஜ் மற்றும் அலகாபாத் பேரவைகள்.*
4. *ஹர்ஷரது ஆட்சிக் காலத்தில் சமூக – பொருளாதார நிலைமைகள் பண்பாட்டு வளர்ச்சி.*
5. *நாளந்தா பல்கலைக்கழகமும் அதன் புகழும்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ஹர்ஷவர்த்தனரின் முதல் தலைநகரம்

அ. பாடலிபுத்திரம் ஆ. பெஷாவர்

இ. தானேஷ்வரம் ஈ. டெல்லி

2. பான்ஸ்கரா கல்வெட்டில் இடம் பெற்றுள்ள கையொப்பம்

அ. யுவான் சுவாங் ஆ. பாணர்

இ. ஹர்ஷா ஈ. இரண்டாம் புலி கேசி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஹர்ஷர் நிறுவிய புதிய தலைநகர் ..........
2. ஹர்ஷர் காலத்திய ஆவணக் காப்பகம் .......... என அழைக்கப்பட்டது.
3. .......... நாட்டின் ஆட்சியாளர் இரண்டாம் துருவசேனர்.

**III.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பாணர் | அ. மூன்று நாடகங்களின் ஆசிரியர் |
| 2. | தர்மபாலர் | ஆ. கவிஞர் மற்றும் தத்துவ ஞானி |
| 3. | பார்த்திரஹரி | இ. ஹர்ஷரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் |
| 4. | ஹர்ஷர் | ஈ. நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவர் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. யுவான் சுவாங்கிற்கு மரியாதை செய்வதற்காக ஹர்ஷர் கனோஜ் பேரவையைக் கூட்டினார்.

ஆ. மகாயான புத்த சமயப்பிரிவினர் மட்டுமே கனோஜ் பேரவைக்கு அழைக்கப்பட்டனர்.

இ. கனோஜ் பேரவை ஹர்ஷர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கூட்டும் மாநாடாகும்.

ஈ. எவ்வித சமய மோதலுமின்றி கனோஜ் பேரவை நடந்தேறியது.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. பாஸ்கரவர்மன் காஷ்மீரின் ஆட்சியாளர்.
2. ஹூனயான புத்த சமயப்பிரிவை ஹர்ஷர் ஆதரித்தார்.
3. ஹர்ஷரது காலத்தில் அனைத்து நிலைகளிலும் பொருளாதாரம் செழித்திருந்தது.

**VI.** சிறு குறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. ஹர்ஷர் பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்றுகள்.
2. யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்
3. கனோஜ் பேரவை
4. அலகாபாத் மாநாடு

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் பண்பாட்டு வளர்ச்சியை விவரி.
2. நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி சுருக்கி எழுதுக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. ஹர்ஷ வர்த்தனரின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை தொகுத்து எழுதுக.
2. புத்த சமயத்திற்கு ஹர்ஷர் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.
3. ஹர்ஷர் காலத்திய சமூகம் மற்றும் ஆட்சி பற்றி யுவான் சுவாங்கின் கூற்றை விவரி.

# பாடம் – 11

## தென்னிந்திய அரசுகள் – I
## பல்லவர்கள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *பல்லவர்களின் தோற்றம்*
2. *முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், ராஜசிம்மன் ஆகியோரின் சாதனைகள்.*
3. *பல்லவர் ஆட்சிமுறை*
4. *பல்லவர் காலத்தில் கல்வி, இலக்கியம்*
5. *பல்லவர் கால கலை, கட்டிடக் கலை.*

தமிழ்நாட்டில் சங்க காலம் முடிந்த பிறகு, களப்பிரர்களின் ஆட்சி சுமார் 250 ஆண்டுகள் நீடித்தது. பின்னர் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் தங்களது அரசை நிறுவினர். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பேரரசுச் சோழர்கள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றும் வரை அவர்களது ஆட்சி தொடர்ந்தது.

**பல்லவர்களின் தோற்றம்**

பல்லவர்களின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மேற்கிந்தியாவை ஆட்சிசெய்த அயலவர்களான பார்த்தியர்களோடு அவர்களை ஒரு சிலர் ஒப்பிடுகின்றனர். தக்காணத்தில் ஆட்சிபுரிந்த வாகாடகர்கள் என்ற பிராமண அரச குலத்தின் ஒரு பிரிவினரே பல்லவர்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. மணிபல்லவத் தீவின் இளவரசியான நாக கன்னிகைக்கும் சோழ இளவரசன் ஒருவனுக்கும் பிறந்தவர்களின் வழித் தோன்றல்களே பல்லவர்கள் என்பது மூன்றாவது கருத்து. ஆனால், மேற்கூறிய கருத்துக்களை ஆதரிக்கும் சான்றுகள் மிகவும் குறைவு.

எனவே, பல்லவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தே அறிஞர்களால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அசோகரது கல்வெட்டில் காணப்படும் புலிந்தர்களோடும் அவர்களைத் தொடர்புப் படுத்துகின்றனர். தொண்டை மண்டலத்தை சாதவாகனர்கள் கைப்பற்றிய போது பல்லவர்கள் அவர்களிடம் படைத்தலைவர்களாகப் பணியாற்றினர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சாதவாகனர்களின் வீழ்ச்சிக்குப் பின் பல்லவர்கள் சுதந்திரம் பெற்றனர். சாதவாகனர்களிடம் பல்லவர்கள் கொண்டிருந்த தொடர்பு காரணமாகவே முதலில் பிராகிருத மொழியிலும், வடமொழியிலும் கல்வெட்டு களை வெளியிட்டனர். பிராமண சமயத்தையும் ஆதரித்தனர் என்று கூறலாம்.

**அரசியல் வரலாறு**

கி.பி. 250 முதல் 350 வரையிலான முற்காலப் பல்லவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர். சிவஸ்கந்தவர்மன், விஜயஸ்கந்தவர்மன் ஆகியோர் இம்மரபில் குறிப்பிடத்தக்கவர்கள். அடுத்ததாக ஆட்சிக்கு வந்த பல்லவர்கள் கி.பி. 350 முதல் 550 வரை ஆட்சி புரிந்தனர். அவர்கள் வடமொழியில் பட்டயங்களை வெளியிட்டனர். அப்பிரிவில் முக்கிய ஆட்சியாளர் விஷ்ணுகோபன். சமுத்திரகுப்தரின் தென்னிந்தியப் படையெடுப் பின்போது அவர் முறியடிக்கப்பட்டார். மூன்றாவதாக ஆட்சிக்கு வந்த பல்லவ மரபினர் கி.பி. 575 முதல் ஒன்பதாம் நூற்றாண்டின் அவர்கள் வீழ்ச்சியடையும் வரை ஆட்சி புரிந்தனர். அவர்கள் வடமொழி, தமிழ் இரண்டு மொழிகளிலும் பட்டயங்களை வெளியிட்டனர். இப்பிரிவின் முதல் ஆட்சியாளர் சிம்ம விஷ்ணு. அவர் களப்பிரர்களை முறியடித்து தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை நிலையாக ஏற்படுத்தினார். சோழர்களை முறியடித்த அவர் காவிரி நதிக்கரை வரை பல்லவர் ஆட்சியை விரிவு படுத்தினார். அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600 – 630)**

நீண்டகாலம் தொடர்ந்த பல்லவ – சாளுக்கியப் போர்கள் அவரது காலத்தில் தொடங்கின. இரண்டாம் புலிகேசி பல்லவர்களுக்கு எதிராகப் படையெடுத்து அவர்களது அரசின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றினான். முதலாம் மகேந்திரவர்மன் புள்ளலூர் என்ற இடத்தில் வெற்றிபெற்றதாக பல்லவர் கல்வெட்டு குறிப்பிட்ட போதிலும், இழந்த பகுதியை அவனால் மீட்க முடியவில்லை.



முதலாம் மகேந்திரவர்மன் தொடக்கத்தில் சமண சமயத்தை சேர்ந்தவனாக இருந்தான். அப்பர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் என்ற சைவப் பெரியாரால் அவன் சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டான். திருவதி என்ற இடத்தில் ஒரு சிவாலயத்தையும் கட்டினான். குணபரன், சத்யசந்தன், சேத்தகாரி (கோயில்களை கட்டுபவன்), சித்திரக்காரப் புலி, விசித்திரசித்தன், மத்தவிலாசன் போன்ற விருதுப் பெயர்களை அவன் சூட்டிக் கொண்டான்.

குடைவரைக் கோயில்கள் அமைப்பதிலும் அவன் சிறந்து விளங்கினான். மண்டகப்பட்டு என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு அவனை விசித்திரசித்தன் என்று புகழ்வதோடு, செங்கல், மரம், சுண்ணாம்பு, உலோகம் போன்றவற்றைப் பயன்படுத்தாமல் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோருக்கு கோயில் அமைத்தவன் என்றும் அவனது சாதனையைக் குறிப்பிடுகிறது. வல்லம், மகேந்திரவாடி, தளவானூர், பல்லாவரம், மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அவனது குடைவரைக் கோயில்களைக் காணலாம். 'மத்தவிலாச பிரகாசனம்' என்ற வடமொழி நூலையும் அவன் இயற்றினான். 'சித்திரக்காரப்புலி' என்ற விருதுப் பெயர் ஓவியக்கலையில் அவனது ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இசையிலும் அவன் தேர்ச்சி பெற்றிருந்தான். குடுமியான்மலை இசைக்கல் வெட்டு அவனது காலத்தியது என்று கருதப்படுகிறது.

**முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630 – 668)**

முதலாம் நரசிம்மவர்மன் 'மாமல்லன்' என்றும் அழைக்கப்பட்டான். அதற்கு மற்போரில் வல்லவன் என்று பொருள். சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியிடம் தனது தந்தை அடைந்த தோல்விக்குப் பழிவாங்க அவன் உறுதிபூண்டான். காஞ்சிக்கு அருகிலுள்ள மணிமங்கலம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இரண்டாம் புலிகேசிக்கு எதிராக அவன் பெற்ற வெற்றியை கூரம் செப்பேடுகள் கூறுகின்றன. பரஞ்சோதியை படைத்தலைவனாகக் கொண்ட பல்லவப்படை சாளுக்கியப் படையை விரட்டிச் சென்றது. இரண்டாம் புலிகேசி தோற்கடிக்கப்பட்டு கொல்லப் பட்டான். வாதாபிநகரம் அழிக்கப்பட்டது. முதலாம் நரசிம்மவர்மன் 'வாதாபி கொண்டான்' என்ற விருதைச் சூட்டிக் கொண்டான். தந்தை இழந்த பகுதியையும் மீட்டான். முதலாம் நரசிம்மவர்மனின் மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனை அவன் இலங்கைமீது கடற்படை நடத்திச்

சென்றதாகும். தனது நண்பனும், இலங்கை இளவரசனுமான மானவர்மனுக்கு இலங்கை அரியணையை மீட்டுக் கொடுத்தான்.

அவனது ஆட்சிக் காலத்தில் சீனப்பயணி யுவான் சுவாங் தலைநகர் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார். காஞ்சி பற்றிய அவரது வருணனை குறிப்பிடத்தக்கது. மிகப்பெரிய, அழகிய நகரான அது ஆறு மைல்கள் சுற்றளவு கொண்டது எனக் கூறியுள்ளார். அங்கு நூறு புத்தசமய மடாலயங்கள் இருந்தன. பத்தாயிரம் புத்த சமயத்துறவிகள் அவற்றில் வாழ்ந்தனர். கல்விக்குப் பெயர் பெற்றது காஞ்சி மாநகர். அங்கிருந்த கடிகை மிகவும் புகழ்பெற்ற கல்விக் கூடமாகும். மாமல்லபுரத்தை நிறுவியவர் முதலாம் நரசிம்மவர்மன். அவரது ஆட்சிக்காலத்தில்தான் அங்கு ஒற்றைக்கல் ரதங்கள் அமைக்கப்பட்டன.

### இரண்டாம் நரசிம்மவர்மன் (அல்லது) ராஜசிம்மன் (கி.பி. 695 722)

முதலாம் நரசிம்மவர்மனைத் தொடர்ந்து இரண்டாம் மகேந்திரவர்மனும், முதலாம் பரமேஸ்வரவர்மனும் ஆட்சிக்கு வந்தனர். அவர்களது ஆட்சிக் காலத்திலும் பல்லவ – சாளுக்கிய மோதல்கள் தொடர்ந்தன. பின்னர், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆட்சிப் பொறுப் பேற்றான். அவன் ராஜசிம்மன் என்றும் அழைக்கப்பட்டான். அவனது ஆட்சிக்காலம் போர்களற்ற அமைதிக் காலமாக விளங்கியது. கலை, கட்டிடக் கலையில் அவனது கவனம் திரும்பியது. மாமல்லபுரத்திலுள்ள கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் ஆலயம் ஆகியன அவனது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை. கலை, இலக்கியத்தையும் அவன் ஆதரித்துப் போற்றினான். புகழ்மிக்க வடமொழி அறிஞரான தண்டின் அவனது அவையை அலங்கரித்ததாகக் கூறப்படுகிறது. சீனாவுக்கு அவன் தூதுக் குழுக்களை அனுப்பி வைத்தான். கடல் வாணிபம் அவனது ஆட்சிக் காலத்தில் செழித்தது. சங்கரபக்தன், வாத்யவித்யாதரன், ஆகமப்பிரியன் போன்ற விருதுகளையும் ராஜசிம்மன் சூட்டிக் கொண்டான்.

அடுத்து, இரண்டாம் பரமேஸ்வரவர்மன், இரண்டாம் நந்திவர்மன் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். பல்லவர்களது ஆட்சி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. சோழ அரசன் முதலாம் ஆதித்தன் கடைசி பல்லவ அரசன் அபராஜிதனை முறியடித்து காஞ்சிப் பகுதியைக் கைப்பற்றினான். அத்துடன் பல்லவ மரபு முடிவுக்கு வந்தது.



### பல்லவர் ஆட்சி முறை

பல்லவர்கள் நன்கு சீரமைக்கப்பட்ட ஆட்சி முறையைக் கொண்டிருந்தனர். பல்லவ அரசு பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அரசரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கோட்ட நிர்வாகத்தை நடத்தினர். ஆட்சியின் மையப் பொறுப்பில் அரசர் இருந்தார். அவருக்கு உதவியாக திறமைமிக்க அமைச்சர்கள் இருந்தனர். நீதியின் ஊற்றுக்கண்ணாக அரசர் செயல்பட்டார். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படையை அவர் பெற்றிருந்தார். ஆலயங்களுக்கு அவர் அளித்த நிலக்கொடை தேவதானம் எனப்பட்டது. பிராமணர்களுக்கு வழங்கிய நிலக்கொடை பிரமதேயமாகும். நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க வேண்டியது அரசனது கடமையாகும். பல்லவ அரசர்கள் பல நீர்ப்பாசன ஏரிகளை வெட்டுவித்தனர். முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் மகேந்திரவாடி, மாமண்டூர் ஆகிய இடங்களில் ஏரிகள் வெட்டப்பட்டன. பல்லவர்களின் கல்வெட்டுகளிலிருந்து அரசு வசூலித்த வரிகள் குறித்த விவரங்களை தெரிந்து கொள்கிறோம்.

அரசின் முக்கிய வருவாய் நிாவரிமூலமாகவே கிடைத்தது. பிரமதேய மற்றும் தேவதான நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வணிகர்களும் கைவினைஞர்களும் அரசுக்கு வரிசெலுத்தினர். தச்சர், பொற்கொல்லர், சலவைத் தொழிலாளர், எண்ணெய் வணிகர், நெசவாளர் போன்றோர் செலுத்திய வரிகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபை மற்றும் சபைக் குழுக்கள் போன்ற கிராம நிர்வாக அமைப்புகள் குறித்தும் பல்லவர்கால கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கிராம நிலங்கள், கோயில் நிர்வாகம், உள்ளாட்சி போன்ற அலுவல்களை கிராம சபைகள் கவனித்து வந்தன.

### பல்லவர் கால சமுதாயம்

பல்லவர் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் பெரும் மாற்றங்களை சந்தித்தது. ஜாதிமுறை கடுமையாகப் பின்பட்டது. பிராமணர்கள் சமுதாயத்தின் மிக உயர்ந்த இடத்தில் இருந்தனர். அவர்களுக்கு அரசர்களும், உயர்குடியினரும் நிலக் கொடைகளை வழங்கினர். கோயில்களை பராமரிக்கும் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. பல்லவர் காலத்தில் வைணவமும் சைவமும் தழைத்தன. மாறாக, புத்தசமயமும், சமண சமயமும் வீழ்ச்சியடைந்தன. சைவ நாயன்மார்களும், வைணவ

ஆழ்வார்களும், சைவ, வைணவ சமயங்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டனர். இதற்கு பக்தி இயக்கம் என்று பெயர். தமிழ்மொழியில் அவர்கள் பக்திப் பாடல்களை இயற்றிப் பாடினர். பக்தியின் சிறப்பை இப்பாடல்கள் வெளிப்படுத்தின. பல்லவ அரசர்களால் கட்டப்பட்ட ஆலயங்களும் இவ்விரு சமயங்களின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்தன.

**கல்வி, இலக்கியம்**

பல்லவர்கள் கற்றோரைப் போற்றி ஆதரித்தனர். அவர்களது தலைநகரான காஞ்சி ஒரு கல்வி நகரமாகும். காஞ்சிக் கடிகை மிகவும் சிறப்பு வாய்ந்த கல்விக் கூடமாகும். இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் மாணவர்கள் காஞ்சி கடிகைக்கு வந்து கல்வி பயின்றனர். கடம்ப குலத்தின் நிறுவனரான மயூரசர்மன் காஞ்சிக்கு வந்து வேதங்களைக் கற்றான். திங்கநாகர் என்ற புத்த அறிஞர் கல்வி பயிலுவதற்காக காஞ்சி வந்தார். நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்த தர்மபாலர் காஞ்சி நகரத்தைச் சேர்ந்தவர். சிறந்த வடமொழிப் புலவரான பாரவி சிம்மவிஷ்ணு ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். மற்றொரு வடமொழி ஆசிரியரான தண்டின் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகாசனம் என்ற வடமொழி நாடகத்தை இயற்றினார். தமிழ் இலக்கியமும் இக்காலத்தில் வளர்ச்சியடைந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திப் பாடல்களை இனிய தமிழிலேயே இயற்றி இசைத்தனர். நாயன்மார்கள் இயற்றிய தேவாரமும், ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்ய பிரபந்தமும் பல்லவர்கால பக்தி இயக்கியங்களாகும். இரண்டாம் நந்திவர்மனால் ஆதரிக்கப்பட்ட பெருஞ்தேவனார் மகாபாரத்தை பாரத வெண்பா என்ற பெயரில் தமிழில் மொழியாக்கம் செய்தார். நந்திக் கலம்பகம் மற்றொரு முக்கிய தமிழ் இலக்கியம். ஆனால், இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இசையும் நடனமும் கூட இக்காலத்தில் செழித்து வளர்ந்தது.

**பல்லவர் கால கலை, கட்டிடக் கலை**

பல்லவர் காலந்தொட்டு கோயில் கட்டும்பணி மிகுந்த ஆரவாரத்துடன் தொடங்கியது. பாறைகளைக் குடைந்து கோயில் அமைக்கும் கலையை பல்லவர்கள் தொடங்கிவைத்தனர். திராவிட கலைப்பாணி பல்லவர்காலம் முதற் கொண்டே வளரத் தொடங்கியது. குடைவரைக் கோயில்களில் தொடங்கி, ஒற்றைக் கல் ரதங்கள், கட்டுமானக் கோயில்கள் என ஒருவித பரிணாம வளர்ச்சியை பல்லவர்கால கலையில் காண்கிறோம். பல்லவர்கால கோயில் கட்டிடக் கலையில் நான்கு நிலைகளைக் காணலாம்.



முதலாம் மகேந்திரவர்மன் குடைவரைக் கோயில்களை அறிமுகப்படுத்தினார். இத்தகைய குடைவரைக் கோயில்களை தமிழ்நாட்டில் மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர், தளவானூர், திருச்சிராப்பள்ளி, வல்லம், சீயமங்கலம், திருக்கழுக்குன்றம் போன்ற இடங்களில் காணலாம்.

பல்லவக் கட்டிடக் கலையின் இரண்டாவது நிலையில், மாமல்ல புரத்தில் வடிக்கப்பட்டுள்ள ஒற்றைக் கல் ரதங்களையும், மண்டபங்களையும் கூறலாம். இந்த அற்புதமான கலைச் சின்னங்களை உருவாக்கிய பெருமை முதலாம் நரசிம்மவர் மனையே சாரும். பஞ்சபாண்டவ ரதங்கள் என்று அழைக்கப்படும் ஐந்து வெவ்வேறு கோயில் அமைப்புகளைக் கொண்ட ரதங்கள் அனைவரையும் கவரக் கூடியவை. மண்டபங்களின் சுவர்களில் அழகான சிற்பங்கள் செதுக் கோவியங்களாக அமைக்கப் பட்டுள்ளன. மண்டபங்களில் சிறப்பானவை மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம், வராஹ மண்டபம்.



மாமல்லபுரத்தில்
உள்ள ரதங்கள்

அடுத்தபடியாக கட்டுமானக் கோயில்கள் எழுப்பப்பட்டன. தொடக்கத்தில் இவை மணற் பாறைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டன. காஞ்சி கைலாசநாதர் ஆலயம், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் தொடக்கால கட்டுமானக் கோயில்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். பல்லவர் கலையின் சிறப்புக்கு சிகரமாகக் கருதப்படுவது காஞ்சி கைலாசநாதர் ஆலயமாகும்.



கைலாசநாதர் கோயில்
காஞ்சிபுரம்


பல்லவர்காலக் கட்டிடக் கலையின் இறுதி நிலைக்கு எடுத்துக் காட்டாக பிற்காலப்



கடற்கரை கோயில்

பல்லவர்கள் அமைத்த கட்டுமானக் கோயில்களைக் கூறலாம். காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்த பெருமாள் ஆலயம், முக்தீஸ்வரர் ஆலயம், மதங்கீஸ்வரர் ஆலயம் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

சிற்பக் கலை வளர்ச்சிக்கும் பல்லவர்கள் அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். கோயில்களில் காணப்படும் அழகான சிற்பங்கள் தவிர, மாமல்லபுரத்தில் வடிக்கப்பட்டுள்ள 'திறந்த வெளிக் கலைக் கூடம்' அற்புதமான சிற்பங்களைக் கொண்டுள்ளது. கங்கை வீழ்தல் அல்லது அர்ச்சுனன் தவம் என்ற அற்புத சிற்பக் காட்சி கல்லில் வடிக்கப்பட்ட ஓவியங்கள் என்று புகழப்படுகின்றன. இச்சிற்பங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய கருத்துக்கள் வியப்புக்குரியவை. பேன் பார்க்கும் குரங்கு, யானைச்சிற்பங்கள், தவமியற்றும் பூனை போன்றவை சிற்பியின் திறமைக்கு சான்று பகர்கின்றன.



கங்கை வீழ்தல்

**நுண்கலைகள்**

இசை, நடனம், ஓவியம் போன்ற நுண்கலைகளையும் பல்லவர்கள் ஆதரித்தனர். மாமண்டூர் கல்வெட்டு இசைப் பண் குறித்து விளக்குகிறது. குடுமியான் மலை இசைக்கல்வெட்டு இசைப் பண்களையும், இசைக் கருவிகளையும் பற்றி குறிப்பிடுகிறது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் இயற்றிய பாடல்கள் பண்ணோடு இசைக்கப்படுவதற்காகவே உருவாக்கப்பட்டன. நடனமும், நாடகமும் இக்காலத்தில் வளர்ச்சியடைந்தன. இக்கால சிற்பங்கள் நடனக் கலையின் பல்வேறு வடிவங்களை வெளிப்படுத்துகின்றன. சித்தன்னவாசல் ஓவியங்கள் பல்லவர்காலத்தைச் சேர்ந்தவை. முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது. அவனுக்கு சித்திரக்காரப்புலி என்ற விருதுப் பெயரும் இருந்தது குறிப்பிடத்தக்கது.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *பல்லவர் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்கள்*
2. *பல்லவர்களின் அரசியல் வரலாறும், போர் வெற்றிகளும்*
3. *பல்லவர் ஆட்சிமுறை*
4. *பண்பாட்டுக்கு பங்களிப்பு*
5. *பல்லவர்கால கட்டிடக் கலை*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. களப்பிரர்களை அழித்த பல்லவ அரசன்

அ. விஷ்ணுகோபன் ஆ. சிம்மவிஷ்ணு

இ. முதலாம் மகேந்திரவர்மன் ஈ. ராஜசிம்மன்

2. யுவான் சுவாங் காஞ்சிக்கு வருகைப் புரிந்த போது ஆட்சியிலிருந்த அரசன்

அ. முதலாம் மகேந்திரவர்மன் ஆ. முதலாம் நரசிம்மவர்மன்

இ. ராஜசிம்மன் ஈ. இரண்டாம் நந்திவர்மன்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதலாம் மகேந்திரவர்மனை சைவ சமயத்திற்கு மாற்றிய சைவப் பெரியார் ..........

2. வாதாபியை அழித்தபோது பல்லவ படைத் தளபதி .........

3. மாமல்லன் என்ற விருதை சூட்டிக் கொண்ட அரசன் .........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. பெருந்தேவனார் | அ. நாலாயிரதிவ்ய பிரபந்தம் |
| 2. ஆழ்வார்கள் | ஆ. தேவாரம் |
| 3. நாயன்மார்கள் | இ. மத்தவிலாச பிரகாசனம் |
| 4. முதலாம் மகேந்திரவர்மன் | ஈ. பாரதவெண்பா |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. பல்லவர் காலத்தில் வடமொழி வீழ்ச்சியடைந்தது.

ஆ. ராஜசிம்மன் வாதாபியை அழித்து வாதாபி கொண்டான் என்ற விருதைச் சூட்டிக் கொண்டான்.



இ. மகேந்திரவர்மன் கட்டுமானக் கோயில்கள் கட்டும் முறையை அறிமுகப்படுத்தினான்.

ஈ. வைணவமும், சைவமும் பல்லவர் காலத்தில் தழைத்தோங்கின.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. சங்க காலத்தை தொடர்ந்து பல்லவர் காலம் தொடங்கியது.

2. முதலாம் மகேந்திரவர்மன் தொடக்கத்தில் சமண சமயத்தை பின்பற்றினார்.

3. காஞ்சிபுரத்தில் ஒற்றைக்கல் ரதங்களை முதலாம் நரசிம்மவர்மன் வடித்தான்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. பல்லவர்களின் தோற்றம்
2. காஞ்சி கடிகை
3. பல்லவ – சாளுக்கிய மோதல்கள்
4. பக்தி இயக்கம்
5. பல்லவர்களின்கீழ் நுண்கலைகள்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சி குறித்து எழுதுக.
2. முதலாம் நரசிம்ம வர்மனின் போர்வெற்றிகளை சுருக்கி எழுதுக.
3. பல்லவர்களின் ஆட்சிமுறையை ஆய்க.
4. பல்லவர்கால சமூக வாழ்க்கை பற்றி குறிப்பு எழுதுக.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. பல்லவர்களின் அரசியல் வரலாற்றை தொகுத்து எழுதுக.
2. பல்லவர்களின் பண்பாட்டு பங்களிப்பை மதிப்பிடுக.
3. பல்லவர் கலையின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

# பாடம் – 12

## தென்னிந்திய அரசுகள் - II
## சாளுக்கியர்கள், இராஷ்டிரகூடர்கள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் சாதனைகள்.*
2. *சாளுக்கியரின் கீழ் ஆட்சி, சமூகம், கலை, கட்டிடக்கலை*
3. *இராஷ்டிரகூடர்களின் அரசியல் வரலாறு*
4. *இராஷ்டிரகூடர்களின்கீழ் ஆட்சியும் சமூகமும்*
5. *இராஷ்டிரகூடர்களின் கலை, கட்டிடக் கலை*

பல்லவர்கள் தவிர, தக்காணத்தில் ஆட்சிபுரிந்த மேலைச் சாளுக்கியரும், இராஷ்டிரகூடர்களும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இவ்விருவர்களுக்கும் தெற்கே இரண்டு அரசியல் போட்டியாளர்கள் இருந்தனர் – பல்லவர்களும் சோழர்களும். மேலும் அவர்களது பண்பாட்டுப் பங்களிப்பும் இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தக்கதாகும்.

**சாளுக்கியர்கள் (கி.பி. 543 – 755)**

சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தக்காணத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்தவர்கள் சாளுக்கியர்கள். பின்னர், இராஷ்டிரகூடர்களின் வலிமை பெருகியது. மேலைச் சாளுக்கியரின் வழிவந்தவர்கள் வெங்கியின் கீழைச் சாளுக்கியர்களும், கல்யாணிச் சாளுக்கியர்களும். மேலைச்சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி. வாதாபி அல்லது தற்காலத்திய பாதாமியை தலைநகராகக் கொண்டு அவர் ஒரு சிறிய அரசை தோற்றுவித்தார்.



**இரண்டாம் புலிகேசி (கி.பி. 608 – 642)**

சாளுக்கிய மரபின் முக்கிய ஆட்சியாளர் இரண்டாம் புலிகேசி. ஐஹோலே கல்வெட்டு அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுகிறது. பனவாசி கடம்பர்களையும் மைசூர் கங்கர்களையும் எதிர்த்துப் போரிட்டு தனது ஆதிக்கத்தை அவர் நிலைநிறுத்தினார். கங்க அரசர் துர்விநீதன் அவரது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு தனது மகளையும் இரண்டாம் புலிகேசிக்கு மணமுடித்துக் கொடுத்தார். நர்மதையாற்றங்கரையில் ஹர்ஷவர்த்தனரை முறியடித்தது இரண்டாம் புலிகேசியின் மற்றொரு மகத்தான சாதனையாகும். தென்னிந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஹர்ஷரின் எண்ணத்தை சிதைத்தவன் இரண்டாம் புலிகேசி. பல்லவர்களுக்கெதிரான தனது முதல் படையெடுப்பில் அவர் வெற்றிபெற்றார். ஆனால், காஞ்சிக்கருகில் முதலாம் நரசிம்மவர்மனிடம் படுதோல்வியைத் தழுவினார். பின்னர், சாளுக்கிய தலைநகரம் வாதாபி பல்லவர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசியின் ஆட்சிக் காலத்தில் சீனப்பயணி யுவான்சுவாங் அவனது நாட்டிற்கும் வருகை புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் புலிகேசிக்குப்பின் ஆட்சிக்கு வந்தவர் விக்ரமாதித்தன். அவன் சாளுக்கிய நாட்டை மீண்டும் நிலைப்படுத்தி பல்லவர்களை முறியடித்ததோடு, காஞ்சியையும் கைப்பற்றினார். பல்லவர்களிடம் தனது தந்தை அடைந்த தோல்விக்கு விக்ரமாதித்தன் பழிதீர்த்துக் கொண்டான். சாளுக்கிய மரபின் கடைசி அரசர் இரண்டாம் கீர்த்திவர்மன். அவனை முறியடித்து இராஷ்டிரகூட அரசை நிறுவியவன் தந்தி துர்க்கன்.

**சாளுக்கியரின்கீழ் ஆட்சிமுறை, சமூக வாழ்க்கை**

பல்லவர்கள், சோழர்கள் ஆட்சி முறைக்கு மாறாக, சாளுக்கிய ஆட்சிமுறையில் அதிகாரம் மையப்படுத்தப்பட்டே இருந்தது. சாளுக்கியரின்கீழ் கிராம சுயாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. சாளுக்கியர்கள் சிறந்த கடற்படையைக் கொண்டிருந்தனர். இரண்டாம் புலிகேசியின் கடற்படையில் நூறு கப்பல்கள் இருந்தன. மேலும், நிரந்தரமான சிறு படையையும் அவர்கள் வைத்திருந்தனர்.

பாதாமி சாளுக்கியர்கள் பிராமணீய இந்துக்கள், இருப்பினும் அவர்கள் பிற சமயத்தவரையும் மதித்து நடந்தனர். வேத சமய சடங்குகளுக்கு

முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சாளுக்கிய மரபைத் தோற்றுவித்த முதலாம் புலிகேசி குதிரைவேள்வியை செய்தார். விஷ்ணு, சிவன் போன்ற கடவுளருக்கு ஏராளமான கோயில்கள் அவர்களது காலத்தில் கட்டப்பட்டன. மேற்குத் தக்காணத்தில் புத்த சமயம் வீழ்ச்சியடைந்து வந்தது என்று யுவான் சுவாங் தமது பயணக்குறிப்பில் கூறியுள்ளார். ஆனால், இப்பகுதியில் சமண சமயம் நிலையான வளர்ச்சியைப் பெற்று வந்தது. இரண்டாம் புலிகேசியின் அவைப் புலவரும், ஐஹோலே கல்வெட்டைத் தொகுத்தவருமான ரவிகீர்த்தி ஒரு சமணர்.

**கலை, கட்டிடக் கலை**

சாளுக்கியர்கள் கலை வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளனர். கட்டுமானக் கோயில்களை கட்டுவதற்கு அவர்கள் வேசர கலைப்பாணியை பின்பற்றினர். இருப்பினும், இராஷ்டிர கூடர் மற்றும் ஹோய்சளர் ஆட்சிக் காலத்தில்தான் வேசர கலைப்பாணி அதன் உச்ச கட்டத்தை எட்டியது. ஐ ஹோலே, பாதாமி, பட்டாடக்கல் ஆகிய இடங்களில் சாளுக்கியரின் கட்டுமானக் கோயில்களைக் காணலாம். சாளுக்கியர் காலத்தில் குடைவரைக் கோயில்களும் சிறப்பு பெற்றிருந்தன. அஜந்தா, எல்லோரா, நாசிக் ஆகிய இடங்களில் சாளுக்கியரின் குடைவரைக் கோயில்களைக் காணலாம். பாதாமி குகைக் கோயில் மற்றும் அஜந்தா குகைகளில் சாளுக்கியர் கால ஓவியங்களைக் காணமுடிகிறது. இரண்டாம் புலிகேசி ஒரு பாரசீகத்தூதுக் குழுவிற்கு வரவேற்பு அளிப்பது போன்று அஜந்தா ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.



அஜந்தா குகைக்கோயில்

சாளுக்கியர் கால கோயில்களை இரண்டு நிலைகளாகப் பிரிக்கலாம். ஐஹோலே, பாதாமி ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் முதல்நிலை. ஐஹோலேவில் உள்ள எழுபது கோயில்களில் நான்கு மட்டும் சிறப்பாக குறிக்கப்பட வேண்டியவை –

1. லட்கான் கோயில் – சமதளக் கூரையுடன் கூடிய இக்கோயிலில் தூண்களையுடைய மண்டபம் உள்ளது.
2. ஒரு புத்த சைத்தியத்தைப் போல தோற்றமளிக்கும் துர்க்கை கோயில்



3. ஹுச்சிமல்லி குடி கோயில்
4. மெகுதி என்ற இடத்திலுள்ள சமணக் கோயில்

பாதாமியில் உள்ள கோயில்களில், முக்தீஸ்வரர் கோயிலும், மேலகுட்டி சிவன் கோயிலும் அவற்றின் கட்டிடக் கலைக்கும் அழகிற்குப் பெயர் பெற்றவை. ஒரேயிடத்திலுள்ள நான்கு குடைவரைக் கோயில்கள் அவற்றின் கலைநயமுள்ள வேலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டு. அவற்றின் சுவர்களும், தூண்கள் தாங்கும் மண்டபங்களும் கடவுளர் மற்றும் மனிதர்களின் அழகான சிற்பங்களைக் கொண்டு அழகூட்டப் பட்டுள்ளன.



பாதாமி குகைக்கோயில்

இரண்டாவது நிலை, பட்டாடக்கல் என்ற இடத்தில் காணப்படும் கோயில்கள். இங்கு பத்து கோயில்கள் உள்ளன – நான்கு வடஇந்திய கலைப்பாணியில் அமைந்துள்ளன. எஞ்சிய ஆறு திராவிட கலைப்பாணியிலானவை. வட இந்திய கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ள பாபநாதர் கோயில் குறிப்பிடத்தக்கது. திராவிடக் கலைப் பாணியில் அமைந்த சங்கமேஸ்வரர் கோயில் மற்றும் விருப்பாட்சர் ஆலயம் இரண்டும் புகழ் பெற்றவை. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தைப் போன்றே விருப்பாட்சர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இரண்டாம் விக்ரமாதித்தனின் அரசிகளில் ஒருவரால் இது கட்டுவிக்கப்பட்டது. காஞ்சியிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு இக்கோயில் கட்டப்பட்டது என்று கருதப்படுகிறது.



பட்டாடக்கல் விருப்பாட்சர் கோயில்

**இராஷ்டிரகூடர்கள் (கி.பி. 755 – 975)**

கன்னட இனத்தைச் சேர்ந்த இராஷ்டிரகூடர்களின் தாய்மொழி கன்னடமொழியாகும். இராஷ்டிரகூட மரபைத் தோற்றுவித்தவர் தந்தி துர்க்கர். கூர்ஜரர்களை முறியடித்து அவர்களிடமிருந்து மாளவத்தை தந்தி துர்க்கர் கைப்பற்றினார். பின்னர், இரண்டாம் கீர்த்தி வர்மனை முறியடித்து

சாளுக்கிய நாட்டை அவர் கைப்பற்றினார். இவ்வாறு, இராஷ்டிர கூடர்கள் தக்காணத்தில் முதன்மை அரசை உருவாக்கினர்.

அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் கிருஷ்ணர் ஒரு பெரும் வெற்றி வீரர். கங்கர்களையும் வெங்கிச் சாளுக்கியரையும் அவர் முறியடித்தார். எல்லோராவில் பெரிய பாறையைக் குடைந்து ஒரே கல்லாலான கைலாசர் ஆலயத்தை அவர் அமைத்தார். இராஷ்டிராகூடர்களின் அடுத்த சிறந்த அரசர் மூன்றாம் கோவிந்தர். வடஇந்திய அரசுகளுக்கெதிராக அவர் பல வெற்றிகளைப் பெற்றார்.

பின்னர் பதவிக்கு வந்த முதலாம் அமோகவர்ஷர் (கி.பி. 815 – 880) அறுபத்தி நான்கு ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தார். அவரது காலத்தில் மாளவமும், கங்கவாடியும் சுதந்திர அரசுகளாயின. இருப்பினும், பண்பாட்டு வளர்ச்சிக்கு அவரது ஆட்சிக்காலம் சிறப்பு பெற்றது. அவர் சமண சமயத்தை பின்பற்றினார். ஜீனசேனர் அவரது சமயகுரு. கற்றோரை ஆதரிக்கும் பண்புடையவராகவும் அவர் திகழ்ந்தார். கவிராஜ மார்க்கம் என்ற புகழ்வாய்ந்த கன்னட நூலை முதலாம் அமோகவர்ஷர் படைத்தார். இராஷ்டிரகூடர்களின் தலைநகரான மால்கெட் அல்லது மான்யகேதம் என்ற நகரையும் அவர் நிர்மாணித்தார்.

அமோகவர்ஷரின் வழித் தோன்றல்களில் குறிப்பிடத்தக்கவர் மூன்றாம் கிருஷ்ணர் (கி.பி. 936 – 968). அவரது போர்வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. சோழர்களுக்கெதிராக அவர் படையெடுத்து தக்கோலம் என்ற இடத்தில் சோழப்படைகளை முறியடித்தார். மேலும் தெற்கு நோக்கி முன்னேறிய அவர் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். ராமேஸ்வரம் வரை சென்ற அவர் அதனை சிறிது காலம் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தாம் கைப்பற்றிய பகுதிகளில் பல கோயில்களையும் அவர் கட்டுவித்தார். இராமேஸ்வரத்தில் கிருஷ்ணேஸ்வரர் ஆலயம் அவரால் கட்டப்பட்டது. காஞ்சி உள்ளிட்ட தொண்டை மண்டலம் அவர் ஆட்சிக் காலம் முழுவதும் இராஷ்டிரகூடர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவரது மறைவுக்குப் பிறகு இராஷ்டிரகூடர்கள் வீழ்ச்சியடைந்தனர்.

**ஆட்சிமுறை**

இராஷ்டிரகூட பேரரசு, ராஷ்டிரம் என்ற மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றை ராஷ்டிரபதிகள் நிர்வகித்தனர். ராஷ்டிரம் ஒவ்வொன்றும் பல விஷயங்களாக (மாவட்டங்களாக) பிரிக்கப்பட்டன.



மாவட்ட நிர்வாகத்திற்கு விஷயபதி பொறுப்பாவார். அடுத்த ஆட்சிப் பிரிவு புக்தி எனப்பட்டது. இதில் 50 முதல் 70 கிராமங்கள் இருந்தன. புக்தியின் ஆட்சியாளர் போகபதி எனப்பட்டார். இந்த அதிகாரிகள் நேரடியாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டனர். கிராம நிர்வாகம் கிராமத் தலைவரால் நடத்தப்பட்டது. கிராம நிர்வாகத்தில் கிராம சபைகள் பெரும்பங்கு வகித்தன.

**சமூக பொருளாதார நிலைமைகள்**

இந்து சமயப் பிரிவுகளான சைவமும் வைணவமும் இராஷ்டிர கூடர்களின் ஆட்சியில் செழித்து வளர்ந்தன. இருப்பினும், சமண சமயமும் அரசர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆதரவைப் பெற்று வளர்ச்சி கண்டது. தக்காணத்தின் மக்கள் – தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் சமணர்கள். கன்ஹேரி, ஷோலாபூர், தார்வார் போன்ற ஒரு சில இடங்களில் புத்தசமய குடியிருப்புகளும் தழைத்திருந்தன. பல்வேறு சமயங்களுக்கிடையே நல்லிணக்கம் நிலவியதும் குறிப்பிடத்தக்கது. தற்கால பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள சாலடோகி என்ற இடத்தில் ஒரு கல்லூரியும் இக்காலத்தில் செயல்பட்டது. இந்த கல்விக் கூடத்தைப் பற்றி ஒரு கல்வெட்டு விரிவான தகவல்களைத் தருகிறது. செல்வந்தர்கள் அளித்த கொடை மற்றும் விழாக்களின் போதும் திருவிழாக்களின்போதும் கிராம மக்கள் வழங்கிய கொடை ஆகியவற்றின் உதவியோடு இக்கல்வி நிறுவனம் நடத்தப்பட்டது.

இராஷ்டிராகூடர் ஆட்சிக் காலத்தில் பொருளாதாரமும் தழைத்திருந்தது. தக்காணத்திற்கும் அராபியர்களுக்கும் இடையே வாணிபம் செழித்திருந்தது. அவர்களோடு நட்புறவு கொண்ட இராஷ்டிரகூட அரசர்கள் வாணிப வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தனர்.

**பண்பாட்டுப் பங்களிப்பு**

இராஷ்டிரகூடர்கள் வடமொழியை பெரிதும் ஆதரித்தனர். இராஷ்டிரகூட அரசவையில் பல அறிஞர்கள் இருந்தனர். நலிசம்பு என்ற நூலை திருவிக்ரமன் எழுதினார். மூன்றாம் கிருஷ்ணரது ஆட்சிக் காலத்தில் ஹளயுதா என்பவர் கவிரஹஸ்யம் என்ற நூலைப் படைத்தார். இராஷ்டிரகூடர்களின் அரவணைப்பினால் சமணசமய இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றன. சமணரான முதலாம் அமோகவர்ஷர் பல சமண அறிஞர்களை ஆதரித்தார். அவரது ஆசிரியரான ஜீனசேனர் பார்சுவநாதரின் வாழ்க்கை வரலாற்றை செய்யுள் நடையில் 'பார்சவபூதயா' என்ற தலைப்பில் எழுதினார். பல்வேறு சமண முனிவர்களின் வாழ்க்கை

வரலாறுகளைத் தொகுத்து ஆதிபுராணம் என்ற தலைப்பில் குணபத்ரர் என்பவர் எழுதினார். அமோக விருத்தி என்ற இலக்கண நூலை சாகதாயனா என்பவர் படைத்தார். வீராச்சாரியார் என்ற அக்கால கணிதமேதை 'கணிதசாரம்' என்ற நூலை எழுதினார். இராஷ்டிரகூடர்களின் ஆட்சிக்காலத்தில் கன்னட இலக்கியமும் வளர்ச்சி கண்டது. அமோகவர்ஷர் இயற்றிய கவிராஜமார்க்கம் கன்னடமொழியில் எழுதப்பட்ட முதல் கவிதை நூலாகும். பம்பா என்பவர் கன்னடமொழிக் கவிஞர்களில் தலைசிறந்தவர். அவரது புகழ்பெற்ற நூல் 'விக்ரமசேனவிஜயம்'. பொன்னா என்ற மற்றொரு கன்னடக் கவிஞர் 'சாந்திபூரணா' என்ற நூலை எழுதினார்.

**கலை, கட்டிடக் கலை**

இராஷ்டிரசுடர்களின் கலை, கட்டிடக் கலையை எல்லோரா மற்றும் எலிபான்டாவில் காணலாம். எல்லோராவில் உள்ள புகழ்பெற்ற கோயில் கைலாசர் கோயிலாகும். முதலாம் கிருஷ்ணர் காலத்தில் இக்கோயில் வடிக்கப்பட்டது. இருநூறு அடி நீளமும், நூறு அடி அகலம், உயரம் கொண்ட பிரமாண்டமான கல்லில் இது வடிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் நான்கு பகுதிகள் உள்ளன – மூலக்கோயில், நுழைவாயில், நந்திமண்டபம், முகமண்டபம். 25 அடி உயரமுடைய மேடையின்மீது இக்கோயில் கம்பீரமாக நிற்கிறது. மேடையின் முகப்பில் யானைகளும், சிங்கங்களும் மேடையை தாங்குவது போல செதுக்கப்பட்டுள்ளன. மூன்றுடுக்கு சிகரம் மாமல்லபுரம் ரதங்களை நினைவுபடுத்துகிறது. கோயிலுக்குள் பதினாறு சதுரத் தூண்கள் கொண்ட மண்டபம் உள்ளது. அழகிய சிற்பங்களைக் கொண்ட கைலாசர் கோயில் உண்மையில் கட்டிடக்கலையின் பிரமாண்டம் எனலாம். துர்கை எருதுமுக அரக்கனை கொல்வது போன்ற சிற்பம் மகத்தானது. ராவணன் கைலாச மலையை தூக்க முயற்சிப்பது போன்ற சிற்பம் குறிப்பிடத்தக்கது. சுவர்களில் இராமயணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. கைலாசர் கோயிலின் பொதுப் பண்பு திராவிடகலைப் பாணியைச் சார்ந்தது.



எல்லோரா கைலாசர் கோயில்

பம்பாய்க்கு அருகிலுள்ள தீவு எலிபான்டா. முதலில் அது ஸ்ரீபுரி என்று அழைக்கப்பட்டது. பெரிய யானையின் சிற்பத்தை கண்ட போர்ச்சுகீசியர்கள் அதற்கு எலிபான்டா என்ற பெயரிட்டு அழைத்தனர். அங்கு இராஷ்டிர கூடர்களின் கலை அதன் உச்ச கட்டத்தை எட்டியது எனலாம். எல்லோரா, எலிபான்டா சிற்பங்களுக்கிடையே ஒற்றுமையைக் காணமுடிகிறது. அவற்றை ஒரே குழுவைச் சேர்ந்த சிற்பிகள் உருவாக்கியிருக்க வேண்டும். கருவறைக்குள் நுழையுமுன் உள்ள துவாரபாலகர் சிலை பிரமாண்ட வடிவிலானது. சுற்றுச் சுவர்களில் நடராஜர், கங்காதரர், அர்த்த நாரீஸ்வரர், சோமஸ்கந்தர் என்று சிவனின் பல வடிவங்கள் தீட்டப்பட்டுள்ளன. திருமூர்த்தி உருவம் மிகப்பெரியது. ஆறு மீட்டர் உயரமுடையது. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்யும் சிவனை அது பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது*

1. *பாதாமி சாளுக்கியர்களின் அரசியல் வரலாறு.*
2. *சாளுக்கியரின் கலை, கட்டிடக் கலை*
3. *இராஷ்டிரகூட ஆட்சியாளர்களின் சாதனைகள்*
4. *இராஷ்டிரகூடர்களின் பண்பாட்டுப் பங்களிப்பு*
5. *இராஷ்டிரகூடர் ஆட்சியில் இலக்கிய வளர்ச்சி*

## மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ஐஹோலே கல்வெட்டை வெளியிட்டது

அ. முதலாம் அமோகவர்ஷர் ஆ. இரண்டாம் புலிகேசி

இ. மூன்றாம் கோவிந்தர் ஈ. தந்திதுர்க்கன்

2. தக்கோலத்தில் சோழர்களை முறியடித்தவர் யார்?

அ. இரண்டாம் புலிகேசி ஆ. முதலாம் அமோகவர்ஷர்

இ. முதலாம் விக்ரமாதித்யர் ஈ. மூன்றாம் கிருஷ்ணர்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இராஷ்டிர கூடர்களின் தலைநகரம் ..........

2. இராஷ்டிர கூட மரபை தோற்றுவித்தவர் ..........

3. ஸ்ரீபுரிக்கு எலிபான்டா என்று பெயரிட்டவர்கள் .........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. ரவி கீர்த்தி | அ. விக்ரம சேனவிஜயம் |
| 2. முதலாம் அமோகவர்ஷர் | ஆ. கணிதசாரம் |
| 3. பம்பா | இ. ஐஹோலே கல்வெட்டு |
| 4. வீராச்சாரியார் | ஈ. கவிராஜமார்க்கம் |

**IV.** சரியான சொற்றொடரை தெரிவு செய்க – ஒன்று மட்டுமே சரியானது.

அ. எல்லோரா பம்பாய்க்கு அருகிலுள்ள தீவு.

ஆ. கைலாசர் கோயில் எல்லோராவில் உள்ளது.

இ. எல்லோரா கோயில் சாளுக்கிய ஆட்சியில் கட்டப்பட்டது.

ஈ. எல்லோரா கைலாசர் கோயில் இரண்டாம் புலிகேசியால் கட்டப்பட்டது.



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. முதலாம் அமோகவர்ஷர் ஆட்சிக் காலத்தில் தக்காணத்திற்கு யுவான் சுவாங் வருகை புரிந்தார்.

2. இராஷ்டிரகூடர்கள் ஆட்சிக்காலத்தில் கன்னட இலக்கியம் தொடங்கியது.

3. சாளுக்கியமரபின் கடைசி அரசர் தந்திதுர்க்கர்.

**VI.** சிறுகுறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. ஐஹோலே கல்வெட்டு

2. பட்டாடக்கல்

3. எல்லோரா

4. எலிபான்டா

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. இரண்டாம் புலிகேசியின் சாதனைகளை சுருக்கி எழுதுக.

2. முதலாம் அமோக வர்ஷர் பற்றி மதிப்பீடு தருக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. பாதாமிச் சாளுக்கியரின் கீழ் கலை, கட்டிடக் கலை வளர்ச்சியை தொகுத்துக் கூறுக.

2. இராஷ்டிரகூடர்களின் பண்பாட்டுப் பங்களிப்பை மதிப்பிடுக.

# பாடம் – 13

## பேரரசுச் சோழர்கள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *முற்காலச் சோழர்களின் வரலாறு.*
2. *முதலாம் ராஜராஜனின் படையெடுப்புகளும் பிற சாதனைகளும்.*
3. *முதலாம் ராஜேந்திரனின் படையெடுப்புகள், பிற சாதனைகள்.*
4. *சோழர் ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுகள்.*
5. *சோழர் கால இலக்கியம், கலை, கட்டிடக் கலை.*

சங்க காலத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சோழர்கள் உறையூரில் சிற்றரசர்களாக வாழ்ந்து வந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் அவர்கள் சிறப்படையத் தொடங்கினர். தென்னிந்தியாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு பேரரசையும் நிறுவினர். அவர்களது தலைநகரம் தஞ்சாவூர். இலங்கையிலும் மலேய தீபகற்பத்திலும்கூட அவர்கள் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். எனவே, அவர்களை பேரரசுச் சோழர்கள் என்று அழைக்கிறோம். சோழர் காலத்திய ஆட்சிமுறை, சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு குறித்த தகவல்களை கோயில்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

பேரரசுச் சோழ மரபைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன். கி.பி. 815 ஆம் ஆண்டு அவர் முத்தரையரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினார். அங்கு துர்கை கோயிலையும் கட்டுவித்தார். அவரது புதல்வரான ஆதித்ய சோழன் அபராஜித பல்லவனை முறியடித்து பல்லவர் ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்டு தொண்டைமண்டலத்தையும் சோழப் பேரரசோடு இணைத்துக் கொண்டார். முதலாம் பராந்தக சோழன் முற்காலச் சோழ அரசர்களில் குறிப்பிடத்தக்கவர். பாண்டியர்களையும் இலங்கை ஆட்சியாளரையும் அவர் முறியடித்தார். ஆனால், புகழ்மிக்க தக்கோலப்



போரில் இராஷ்டிரகூடர்களிடம் அவர் தோல்வியைத் தழுவினார். முதலாம் பராந்தகன் பல கோயில்களையும் கட்டுவித்தான். சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் கூரைக்கு பொற்கூரை வேய்ந்தவன் முதலாம் பராந்தகன். அவரது காலத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் கல்வெட்டுக்கள் இரண்டு சோழர் காலத்தில் நிலவிய கிராம ஆட்சிமுறை பற்றி விளக்கங்களைக் கூறுகிறது. முப்பதாண்டு கால இடைவெளிக்குப் பிறகு முதலாம் ராஜராஜன் காலத்தில் மீண்டும் சோழர்கள் புகழடைந்தனர்.

### முதலாம் ராஜராஜன் (கி.பி. 985 – 1014)

முதலாம் ராஜராஜன், அவரது புதல்வன் முதலாம் ராஜேந்திரன் ஆகிய இருவரின் ஆட்சிக் காலங்களிலும் சோழப் பேரரசு புகழின் உச்சியை எட்டியது. முதலாம் ராஜராஜனின் போர் வெற்றிகள் வருமாறு.



முதலாம் ராஜராஜனின் சிலை

1. காந்தளூர் சாலை என்ற இடத்தில் சேர மன்னன் பாஸ்கரரவிவர்மனுடைய கடற்படைகளை முறியடித்தான்.
2. பாண்டிய அரசன் அமரபுஜங்கன் தோற்கடிக்கப் பட்டான். பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.
3. மைசூர்ப் பகுதியிலிருந்த கங்கவாடி, நுளம்பபாடி, தடிகைபாடி போன்ற பகுதிகள் கைப்பற்றப்பட்டன.
4. இலங்கைப் படையெடுப்பை அவரது புதல்வன் முதலாம் ராஜேந்திரன் மேற்கொண்டான். இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் நாட்டைவிட்டு ஓடினான். வடக்கு இலங்கையை சோழர்கள் இணைத்துக் கொண்டனர். தலைநகர் அனுராதபுரத்திலிருந்து பொலநருவா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு சிவாலயம் ஒன்றும் எழுப்பப்பட்டது.
5. எழுச்சி பெற்றுவந்த கல்யாணிச் சாளுக்கியரை முதலாம் ராஜ ராஜன் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றார். சாளுக்கிய அரசன் சத்யஸ்ரீயன் முறியடிக்கப்பட்டான். முதலாம் ராஜராஜன் ரெய்ச்சூர் தோஆப், பனவாசி போன்ற இடங்களைக் கைப்பற்றினார். சோழப் பேரரசு துங்கபத்திரா நதிக்கரை வரை பரவியது.

6. தெலுங்குச் சோடர்களை முறியடித்து, வெங்கி அரியணையை அதன் ஆட்சியாளர்களான சக்தி வர்மனுக்கும் விமலாதித்தனுக்கும் முதலாம் ராஜராஜன் மீட்டுக் கொடுத்தார். தனது மகள் இளவரசி குந்தவையை விமலாதித்தனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

7. மாலத்தீவுகளுக்கு எதிராக மேற்கொண்ட கடற்படையெடுப்பே முதலாம் ராஜராஜனின் இறுதிபடையெடுப்பாகும். மாலத்தீவுகள் கைப்பற்றப்பட்டன.

முதலாம் ராஜராஜனின் இத்தகைய போர்வெற்றிகளினால், சோழப்பேரரசு, தமிழ்நாட்டில் சேர, பாண்டிய, தொண்டை மண்டலப் பகுதிகளையும், தக்காணத்தில் கங்கபாடி, நுளம்பபாடி, தெலுங்குச் சோடர்களின் ஆட்சிப்பகுதி, வடக்கு இலங்கை, மாலத்தீவுகள் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. மும்முடிசோழன், ஜெயங்கொண்டான், சிவபாத சேகரன் போன்ற விருதுப் பெயர்களையும் முதலாம் ராஜராஜன் சூட்டிக் கொண்டான். சிறந்த சிவபக்தனாகவும் அவர் விளங்கினார். கி.பி. 1010ல் தஞ்சையில் பிரகதீஸ்வரம் என்றழைக்கப்படும் தஞ்சைப் பெரிய கோயிலை கட்டிமுடித்தார். நாகப்பட்டினத்தில் புத்த மடாலயம் கட்டுவதற்கும் அவர் உதவிகளை வழங்கினார்.

**முதலாம் ராஜேந்திரன் (கி.பி. 1012 – 1044)**

தனது தந்தை மேற்கொண்ட படையெடுப்புகளில் கலந்துகொண்டு படைவல்லமையை ராஜேந்திரசோழன் வெளிப்படுத்தினார். ஆட்சிக்கு வந்தபிறகு தந்தையின் கொள்கைகளையே பின்பற்றி பேரரசை விரிவுபடுத்தும் பணிகளில் ஈடுபட்டார். அவரது சிறப்புக்குரிய போர்களாவன:

1. சோழர்களிடமிருந்து வடக்கு இலங்கையை கைப்பற்ற இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் முயற்சி செய்தான். ராஜேந்திரன் மீண்டும் அவனை முறியடித்து தெற்கு இலங்கையையும் கைப்பற்றிக் கொண்டார். இதனால் இலங்கை முழுவதுமே சோழப் பேரரசில் இணைக்கப்பட்டது.

2. சேர, பாண்டிய ஆட்சிப் பகுதிகளில் மீண்டும் சோழ ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினார்.

3. மேலைச் சாளுக்கிய அரசன் ஜெயசிம்மனை மீண்டும் முறியடித்தான். சோழ–சாளுக்கிய எல்லையாக துங்கபத்திரை நதி அங்கீகரிக்கப் பட்டது.




4. முதலாம் ராஜேந்திரனின் புகழ் வாய்ந்த படையெடுப்பு அவர் வடஇந்தியாவின்மீது மேற்கொண்டதாகும். வழியில் பல ஆட்சியாளர்களை முறியடித்த சோழப் படை கங்கை நதியைக் கடந்து சென்றது. வங்காள அரசன் முதலாம் மகிபாலனை முதலாம் ராஜேந்திரன் முறியடித்தான். தமது வடஇந்தியப் படையெடுப்பின் வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை நிர்மாணித்து அங்கு புகழ்வாய்ந்த ராஜேஸ்வர ஆலயத்தையும் அவர் எழுப்பினார். அந்நகரின் மேற்குப்புறத்தில் சோழகங்கம் என்ற நீர்ப்பாசன ஏரியையும் வெட்டுவித்தான்.

5. ஸ்ரீவிஜயம் எனப்படும் கடராத்தின்மீது முதலாம் ராஜேந்திரன் மேற்கொண்ட படையெடுப்பு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அப்படையெடுப்பின் உண்மையான நோக்கம் பற்றி கூறுவது கடினம். நோக்கம் எதுவாக இருப்பினும், அந்த கடற்படையெடுப்பு மாபெரும் வெற்றியாக முடிந்தது. சோழப்படைகள் பல்வேறு இடங்களை ஆக்ரமித்தன. ஆனால், அவை தற்காலிகமான ஆக்ரமிப்புகளே. கைப்பற்றப்பட்ட இடங்களை பேரரசுடன் இணைத்துக் கொள்ளும் எண்ணம் அவருக்கில்லை. இந்த படையெடுப்புக்குப்பின் முதலாம் ராஜேந்திரன் கடாரம் கொண்டான் என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார்.

6. பல்வேறு கலகங்களை ஒடுக்கி, சோழப் பேரரசு சீர்குலையாதவாறு அவர் பார்த்துக் கொண்டார்.

முதலாம் ராஜேந்திரன் மறைந்தபோது சோழப் பேரரசு அதன் உச்ச கட்டத்தை எட்டியிருந்தது. துங்கபத்திரை வடக்கு எல்லையாக இருந்தது. பாண்டிய, கேரள, மைசூர்ப் பகுதிகள், இலங்கை ஆகியவற்றை உள்ளடக்கியதாக சோழப் பேரரசு இருந்தது. தனது புதல்வி அம்மங்காதேவியை வெங்கிச் சாளுக்கிய இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்த முதலாம் ராஜேந்திரன் தனது தந்தை ஏற்படுத்திச் சென்ற மணஉறவுகளை தொடர்ந்து கடைப்பிடித்தார். முடிகொண்டான், கங்கை கொண்டான், கடாரம்கொண்டான், பண்டிதசோழன் என பல்வேறு விருதுப் பெயர்களையும் முதலாம் ராஜேந்திரன் சூட்டிக் கொண்டார். தந்தையைப் போலவே சிறந்த சிவபக்தனாகவும் அவர் திகழ்ந்தார். புதிய தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தில் சிவாலயம் ஒன்றையும் எழுப்பினார். அந்த ஆலயத்துக்கு தாராளமாக மானியங்களை அளித்தார். சிதம்பரம் நடராஜர்






ஆலயத்திற்கும் கொடைகளை வழங்கினார். வைணவ, புத்த சமயப் பிரிவுகளிடமும் அவர் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார்.

முதலாம் ராஜேந்திரனுக்குப் பிறகு, முதலாம் குலோத்தங்கன், மூன்றாம் குலோத்துங்கன் போன்ற ஆட்சியாளர்கள் காலத்திலும் சோழப் பேரரசு புகழ் பெற்று விளங்கியது. முதலாம் ராஜேந்திரனின் மகள் அம்மங்காதேவியின் வாரிசாக உதித்தவனே முதலாம் குலோத்துங்கன். அவர் சோழப் பேரரசனாக பதவியேற்றதால் வெங்கி நாடும் சோழப் பேரரசுடன் இணைந்தது. ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில் இலங்கை விடுதலை பெற்றது. பின்னர், வெங்கியும் மைசூரும் மேலைச் சாளுக்கியரால் கைப்பற்றப்பட்டன. முதலாம் குலோத்துங்கன் 72 வணிகர்கள் அடங்கிய தூதுக் குழுவை சீனாவிற்கு அனுப்பி வைத்தார்.

ஸ்ரீவிஜய அரசுடன் நல்லுறவை அவர் மேற்கொண்டிருந்தார். மூன்றாம் குலோத்துங்கள் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு நலிவடையத் தொடங்கியது. காடவராயர்கள் போன்ற குறுநிலத் தலைவர்கள் எழுச்சி பெற்றனர். சோழரின் மேலாண்மைக்கு பாண்டியரின் எழுச்சி பெரிய சவலாயிற்று. இறுதியில் சோழப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. கடைசி சோழ அரசன் மூன்றாம் ராஜேந்திரனை இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் முறியடித்தான். சோழ நாடு பாண்டியப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

## சோழர் ஆட்சி முறை

### மத்திய அரசாங்கம்

சோழர்கள் சிறந்த ஆட்சிமுறையைப் பெற்றிருந்தனர். ஆட்சிக்கு பேரரசர் தலைமை வகித்தார். சோழப் பேரரசின் பரப்பும், செல்வமும் அவரது அதிகாரத்தையும், மதிப்பையும் உயர்த்தின. தஞ்சை, கங்கை கொண்டசோழபுரம் போன்ற பெரிய தலைநகரங்களும், பிரமாண்டமான அரசவைகளும், ஆலயங்களுக்கு அள்ளி வழங்கிய நிலக் கொடைகளும் சோழ அரசனின் அதிகாரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன. ஆட்சியின் வல்லமையை உணர்த்துவதற்காக சோழ அரசர்கள் அவ்வப்போது அரசப் பயணங்களை மேற்கொண்டனர். பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகார வர்க்கம் ஆட்சிக்குப் பொறுப்பு வகித்தன.

**வருவாய் நிர்வாகம்**

சோழர்கால நில வருவாய்த்துறை நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. அது புரவுவரித்திணைக்களம் என்று அழைக்கப்பட்டது. அனைத்து நிலங்களும் முறையாக அளக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, வரி மதிப்பீடுகள் செய்யப்பட்டன. கிராம குடியிருப்பு பகுதிகள் ஊர் நத்தம் எனப்பட்டது. இப்பகுதியும், ஆலயங்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலப்பகுதியும் வரிவிலக்கு பெற்றிருந்தன. நில வரியைத்தவிர, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதற்கான சுங்கமும் வசூலிக்கப்பட்டது. பல்வேறு தொழில்களுக்கும் வரிவிதிக்கப்பட்டன. திருமணம், சடங்குகள் போன்ற நிகழ்வுகளின் போதும் வரி வசூலிக்கப்பட்டது. நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட அபராதங்களும் மற்றொரு வருவாயாகும். இடர்மிக்க காலங்களில் வரிவிலக்கும் அளிக்கப்பட்டது. முதலாம் குலோத்துங்கள் வரிவிலக்கு அளித்தான் என்பதற்காக சுங்கம் தவிர்த்த சோழன் என்ற விருதுப் பெயரைச் சூட்டிக்கொண்டான். அரசன், அரசவை, ராணுவம், கப்பற்படை, சாலை பராமரிப்பு, நீர்ப்பாசன ஏரிகள், கால்வாய்கள் அமைத்தல் போன்றவை அரசின் செலவினங்களாக இருந்தன.

**ராணுவ நிர்வாகம்**

யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, கப்பற்படை என்ற பிரிவுகளைக் கொண்ட நிலையான படையை சோழர்கள் பெற்றிருந்தனர். கல்வெட்டுகளில் சுமார் எண்பது படைப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசரின் தனிப்படை கைக்கோளப் பெரும்படை என்று அழைக்கப்பட்டது. அதற்குள்ளேயே அரசரைப்பாதுகாக்கும் சிறப்புக்காவல் வீரர்கள் வேளைக்காரர் எனப்பட்டனர். ராணுவத்திற்கு முறையான பயிற்சி அளக்கப்பட்டது. ராணுவ முகாம்கள் கடகங்கள் என்று அழைக்கப்பட்டன. சோழர்கள் கடற்படைப் பராமரிப்பில் தனிக்கவனம் செலுத்தினர். தமிழர்களின் கடற்படை ஆற்றல் சோழர்கள் காலத்தில் புகழ்மிக்கு விளங்கியது. மலபார், சோழ மண்டலக் கடற்கரை ஆகியன அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தன. வங்காள விரிகுடா ‘சோழ ஏரி’யாகவே சிலகாலம் இருந்தது.



**மாகாண ஆட்சி**

சோழப் பேரரசு மண்டலங்களாகவும், மண்டலம் பல வளநாடுகளாகவும், வளநாடு, பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நாடு என்ற பகுதியில் பல தன்னாட்சி பெற்ற கிராமங்கள் இருந்தன. மண்டலங்களின் நிர்வாகத்தை அரச குலத்தைச் சேர்ந்த ஆளுநர்கள் கவனித்து வந்தனர். வளநாட்டை பெரிய நாட்டாரும், நாடு பகுதியை நாட்டாரும் நிர்வகித்தனர். நகர நிர்வாகத்தை நகரத்தார் என்ற அவை மேற்கொண்டது.

**கிராம சபைகள்**

சபைகளும், சபைக்குழுக்களும் கொண்ட கிராம தன்னாட்சிமுறை காலங்காலமாக தமிழ்நாட்டில் பரிணாம வளர்ச்சி பெற்று வந்தது. சோழர் ஆட்சிக் காலத்தில் அது ஏற்றம் பெற்று விளங்கியது. முதலாம் பராந்தக சோழன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகள் கிராம சபைகளின் நடவடிக்கைகள் பற்றி விவரிக்கின்றன. அந்த கிராமம் முப்பது குடும்பு அல்லது வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வார்டிலிருந்தும் கிராம சபைக்கான பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார். கிராம சபை உறுப்பினராவதற்கன தகுதிகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அவை யாவன :

அ. குறைந்தபட்சம் கால்வேலி நிலமாவது சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஆ. சொந்த இல்லத்தில் குடியிருக்க வேண்டும்.

இ. முப்பது வயதுக்கு மேலும் எழுபது வயதுக்குள்ளும் இருக்கவேண்டும்.

ஈ. வேதங்கள் குறித்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

இருப்பினும், யார் யார் தகுதியற்றவர்கள் என்பது அக்கல் வெட்டுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை –

அ. கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கிராம சபையில் உறுப்பினராக பணியாற்றியவர்கள்.

ஆ. கிராம சபைக்குழுவில் உறுப்பினராகப் பணியாற்றி சரிவர கணக்குகளை அளிக்காதவர்கள்.

இ. பஞ்சமா பாதகங்களைச் செய்தவர்கள்

ஈ. பிறர் பொருட்களை களவாடியவர்கள்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை பனை ஓலைகளில் எழுதி ஒரு குடத்திற்குள் இட்டு சிறுவன் அல்லது சிறுமி ஒருவரை விட்டு எடுக்கச் செய்வர். இதற்கு குடவோலை முறை என்று பெயர். இவ்வாறு முப்பது வார்டுகளின் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர். பின்னர், முப்பது பேர் கொண்ட கிராமசபை ஆறு வாரியக் குழுக்களாகப் பிரிந்து செயல்படும். சம்வத்சர வாரியம், ஏரிவாரியம், தோட்ட வாரியம், பஞ்சவார வாரியம், பொன் வாரியம், புரவுவரி வாரியம் என்பதே அந்த ஆறு வாரியங்கள். ஆறுவித பொறுப்புகளை அவை நிறைவேற்றும். இதன் உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் எனப்பட்டனர். கோயில் அல்லது மரநிழலில் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குழுக்களின் எண்ணிக்கையும் கிராமத்திற்கு கிராமம் வேறுபட்டிருந்தது.

**சமூக, பொருளாதார வாழ்க்கை**

சோழர் காலத்தில் ஜாதிமுறை பரவலாகப் பின்பற்றப்பட்டது. பிராமணர்களும், ஷத்திரியரும் பல்வேறு சலுகைகளைப் பெற்றிருந்தனர். சோழர் காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் வலங்கை, இடங்கை சாதிப் பிரிவுகள் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும், பல்வேறு ஜாதியினருக்கிடையே ஒற்றுமை காணப்பட்டது. பல்வேறு கிளை ஜாதிகளும் இருந்தன. மகளிர் நிலையில் முன்னேற்றம் ஏதுமில்லை. அரச குடும்பத்தாரிடையே 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் இருந்தது. கோயில்களுடன் பிணைக்கப்பட்டிருந்த நாட்டிய மகளிர் அடங்கிய தேவதாசி முறை சோழர் காலத்தில்தான் தோன்றி வளர்ந்தது.


ராஜராஜனின் தங்க நாணயம்

சோழர் காலத்தில் வைணவமும், சைவமும் தழைத்தன. சோழ அரசர்கள், அரசிகளின் ஆதரவினால் ஏராளமான கோயில்கள் எழுப்பப்பட்டன. சோழர் காலத்தில் கோயில்கள் பொருளாதார நடவடிக்கைகளின் மையங்களாகத் திகழ்ந்தன. மடங்களும் செல்வாக்கு பெற்றிருந்தன. வேளாண்மையும் தொழிலும் சிறந்து விளங்கின. காடுகள் திருத்தப்பட்டு விளைநிலங்களாக



மாற்றப்பட்டதாலும், நீர்ப்பாசன ஏரிகள் வெட்டப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டதாலும் வேளாண் தொழில் வளர்ச்சி பெற்றது. நெசவுத் தொழில், குறிப்பாக காஞ்சியில் பட்டு நெசவு புகழ்பெற்று விளங்கியது. கோயில்களிலும், வீட்டு உபயோகத்திற்கும் பெரும் தேவை இருந்ததால் உலோகத் தொழில் நன்கு வளர்ச்சியடைந்தது. வாணிபம் சுறுசுறுப்புடன் நடைபெற்றது. வாணிகக் குழுக்கள் செயல்பட்டன. வாணிகப் பெருவழிகள் நன்கு பராமரிக்கப்பட்டன. தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான வெவ்வேறு மதிப்பிலான நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. சோழப் பேரரசு காலத்தில் சீனா, சுமத்ரா, ஜாவா, அரேபியா போன்ற நாடுகளோடு வாணிப உறவுகள் செழித்தன. குதிரைப் படைக்குத் தேவையான அரபு நாட்டுக் குதிரைகள் பெருமளவு இறக்குமதி செய்யப்பட்டன.

**கல்வி, இலக்கியம்**

சோழர் காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கோயில்கள், மடங்கள் தவிர பல்வேறு கல்விக் கூடங்களும் கல்வியைப் பரப்பி வந்தன. எண்ணாயிரம், திருமுக்கூடல், திருபுவனை ஆகிய இடங்களில் உள்ள சோழர்கால கல்வெட்டுகள் அங்கு செயல்பட்டுவந்த கல்லூரிகள் பற்றிய விவரங்களை எடுத்துரைக்கின்றன. வேதங்கள், இதிகாசங்கள் தவிர, கணிதம், மருத்துவம் போன்றவையும் இந்த கல்விக் கூடங்களில் பயிற்றுவிக்கப்பட்டன. இந்த நிறுவனங்களை நடத்துவதற்கு ஏராளமான நிலக் கொடைகள் வழங்கப்பட்டிருந்தன.

தமிழ் இலக்கிய வளர்ச்சி சோழர் காலத்தில் அதன் உச்சத்திற்கே சென்றது எனலாம். திருத்தக்கதேவர் எழுதிய சீவகசிந்தாமணி மற்றும் குண்டலகேசி என்ற நூல்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கம்பர் எழுதிய பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர்புராணம் சோழர் காலத்தில் படைக்கப்பட்ட சிறந்த நூலாகும். முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப் படையெடுப்பை விவரிப்பது ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி. ஒட்டக்கூத்தரின் மூவருலா மூன்று சோழ மன்னர்களைப் பற்றியதாகும். புகழேந்திப் புலவர் நளவெண்பாவைப் படைத்தார். தமிழ் இலக்கண நூல்களான கல்லாடனாரின் கல்லாடம் என்ற நூலும், சமண முனிவரான அமிர்தசாகரர் படைத்த யாப்பெருங்கலமும், பவநந்தி முனிவரின் நன்னூலும், புத்தமித்திரர் படைத்த வீரசோழியம் என்ற நூலும் சோழர் காலத்தைச் சேர்ந்தவையே!

**கலை, கட்டிடக் கலை**




தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில்

திராவிடப்பாணி கலை, கட்டிடக் கலை சோழர் காலத்தில் ஏற்றம் பெற்றது. சோழர்கள் ஏராளமான கோயில்களை எழுப்பியுள்ளனர். சோழர்காலக் கோயிலின் தனிச்சிறப்பு அதன் விமானமாகும். முற்காலச் சோழர்களின் ஆலயங்களை புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தா மலை, கொடும்பாளூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சீனிவாசநல்லூர் ஆகிய இடங்களில் காணலாம். முதலாம் ராஜராஜனால் தஞ்சையில் எழுப்பப்பட்ட தஞ்சைப் பெரிய கோயில் தென்னிந்தியக் கட்டிடக்கலைக்கு மணிமுடி போன்றதாகும். அக்கோயிலில் விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்பம் என்ற முக்கிய பகுதிகள் உள்ளன. கங்கை கொண்ட சோழபுரத் தில், முதலாம் ராஜேந்திர சோழனால் எழுப்பப் பட்ட சிவாலயம் சோழர்கால கோயில் கட்டிடக்கலையின் சிறப்புக்கு மற்றொரு முக்கிய சான்றாகும். தஞ்சை மாவட்டத்திலுள்ள தாராசுரம் ஐராவதேஸ் வரர் ஆலயம், திருபுவனம் காம்பஹரீஸ்வரர் ஆலயம் ஆகிய ஆலயங்கள் பிற்காலச் சோழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.



சோழர்கால நடராஜர் வெண்கலச் சிலை



தாராசுரம் சிற்பங்கள்

சிற்பக் கலையின் வளர்ச்சிக்கும் சோழர்கள் மகத்தான பங்களிப்பை செய்துள்ளனர். தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் ஆலயச் சுவர்களில் காணப்படும் ஏராளமான சிற்பங்களும், பெரிய உருவங்களும் சிறந்த வேலைப்பாடுகள் நிறைந்தவை. சோழர் காலத்திய செப்புத் திருமேனிகள் உலகப் புகழ் பெற்றவை. நடராசர் சிலை அவற்றில் குறிப் பிடத்தக்கது. தஞ்சை, நார்த்தாமலை கோயில் சுவர்களில் சோழர் கால ஓவியங்களைக் காணலாம்.



கங்கைகொண்ட சோழபுரம் கோயில்



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *பேரரசுச் சோழர்களின் எழுச்சி.*
2. *முதலாம் ராஜராஜனின் ஆளுமை மற்றும் போர் வெற்றிகள்.*
3. *முதலாம் ராஜேந்திர சோழனின் சாதனைகள்.*
4. *சோழர் காலத்திய கிராம ஆட்சிமுறையும் அதன் சிறப்பும்.*
5. *பேரரசுச் சோழர்களின் பண்பாட்டுச் சிறப்பு.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தக்கோலப் போரில் தோல்வியடைந்த சோழ அரசர்

அ. முதலாம் ஆதித்தன் ஆ. இரண்டாம் ராஜராஜன்
இ. விஜயாலயன் ஈ. முதலாம் பராந்தகன்

2. வீர சோழியம் என்ற நூலின் ஆசிரியர்

அ. பவநந்தி ஆ. புத்தமித்திரர்

இ. புகழேந்தி ஈ. ஒட்டக் கூத்தர்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. காந்தளூர் சாலையில் கடற்போர் .......... ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது.

2. சோழ கங்கம் என்ற நீர்ப்பாசன ஏரியை ............ என்ற இடத்தில் ........... ஆல் வெட்டுவிக்கப்பட்டது.

3. குடவோலை முறைபற்றிய விவரங்கள் கொண்ட கல்வெட்டு ......... என்ற இடத்தில் உள்ளது.

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. உத்திரமேரூர் கல்வெட்டுகள் | அ. முதலாம் ராஜராஜன் |
| 2. சுங்கம் தவிர்த்த சோழன் | ஆ. முதலாம் ராஜேந்திரன் |
| 3. முடிகொண்டான் | இ. முதலாம் குலோத்துங்கன் |
| 4. ஜெயங்கொண்டான் | ஈ. முதலாம் பராந்தகன் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. முதலாம் ராஜராஜன் ஸ்ரீவிஜயத்தின்மீது படையெடுத்தான்.

ஆ. முதலாம் ராஜராஜன் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு தமது தலைநகரை மாற்றினார்.



இ. தெற்கு இலங்கையை முதலாம் ராஜராஜன் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

ஈ. முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்துக்குப் பின் இலங்கை சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டது.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. தஞ்சையில் புத்தமடாலயம் கட்டுவதற்கு முதலாம் ராஜராஜன் உதவிகள் செய்தார்.

2. முதலாம் ராஜேந்திரசோழன் ஸ்ரீவிஜயத்தைக் கைப்பற்றினார்.

3. முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப் படையெடுப்பு குறித்து ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி விவரிக்கிறது.

**VI.** சிறு குறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. பிருகதீஸ்வரம்
2. கங்கை கொண்ட சோழபுரம்
3. குடவோலை முறை
4. சோழர் காலத்தில் கல்விக் கூடங்களின் வளர்ச்சி

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. பேரரசுச் சோழர்கள் காலத்தில் சமூக – பொருளாதார நிலைமைகளை விவரி.
2. சோழர்கள் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றி எழுதுக.

**VIII.** விரிவான விடையளி (200 வார்த்தைகள்)

1. முதலாம் ராஜராஜனின் சாதனைகளை ஆய்க.
2. முதலாம் ராஜேந்திரனின் போர் வெற்றிகளை மதிப்பிடுக.
3. சோழர் ஆட்சி முறையின் சிறப்புக் கூறுகளை விவரி.

# பாடம் – 14

## ஆசிய நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவுதல்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *மத்திய ஆசியாவில் இந்தியப் பண்பாடு பரவுதல்.*
2. *சீனா, திபெத், இலங்கை ஆகிய நாடுகளில் இந்தியப் பண்பாட்டின் தாக்கம்.*
3. *தென் கிழக்கு ஆசியாவில் இந்தியப் பண்பாடு.*
4. *இந்தியா – மியான்மர் இடையே பண்பாட்டுத் தொடர்பு.*
5. *தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கலை, கட்டிடக் கலை.*

இந்திய நாகரிகமும், பண்பாடும் ஆசியாவின் பிற பகுதிகளுக்குப் பரவிய வரலாறு சிறப்புமிக்கதாகும். பழங்காலத்தில் இந்தியா பிற நாடுகளோடு வாணிகத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தது. இதனால், இந்திய மொழிகள், சமயங்கள், கலை, கட்டிடக் கலை, தத்துவங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் அந்நாடுகளில் பரவின. இது தவிர்க்கமுடியாத நிகழ்வாகும். தென்கிழக்கு ஆசியாவின் ஒருசில பகுதிகளில் பண்டைய இந்திய அரசியல் ஆர்வலர்கள் இந்து அரசுகளையும் கூட அமைத்தனர். இருப்பினும், தற்காலத்தைப் போல காலனி ஆதிக்கமோ, ஏகாதிபத்தியப் போக்கோ இதில் காணப்படவில்லை. மாறாக, புதிய பகுதிகள் தாய்நாட்டின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரமாகவே செயல்பட்டன. ஆனால், அவற்றில் பண்பாட்டுக் கூறுகளின் தாக்கம் மட்டும் காணப்பட்டது.

**மத்திய ஆசியா**

கிறித்துவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் மத்திய ஆசியப் பகுதி இந்தியப் பண்பாட்டின் மையமாகத் திகழ்ந்தது. ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப் பகுதியில் ஏராளமான பண்பாட்டு சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கோடான், காஷ்கர் போன்ற இடங்கள் இந்திய பண்பாட்டின் மையங்களாகும். அங்கு, பல வடமொழி நூல்களும், புத்தசமய மடாலயங்களும் கண்டெடுக்கப்பட்டன. அப்பகுதியில் எட்டாம் நூற்றாண்டுவரை இந்தியப் பண்பாட்டின் தாக்கம் தொடர்ந்து காணப்பட்டது. மத்திய ஆசியா வழியாக சீனா, திபெத் போன்ற நாடுகளுக்கும் இந்தியப் பண்பாடு பரவியது.

**இந்தியாவும் சீனாவும்**

மத்திய ஆசியா வழியாக நிலவழித்தடமும், பர்மா வழியாக கடல் வழித்தடமும் இந்தியப் பண்பாடு சீனாவுக்குச் செல்ல பேருதவியாக இருந்தன. கி.பி. முதலாம் நூற்றாண்டில் புத்த சமயம் சீனாவில் பரவியது. பாஹியான், யுவான் சுவாங் உள்ளிட்ட பல்வேறு சீனப் பயணிகள் இந்தியாவிற்கு வந்தனர். மறுபுறம், குணபத்ரர், வஜ்ரபோதி, தர்மதேவர், தர்மகுப்தர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான புத்த சமயத் துறவிகள் இந்தியாவிலிருந்து சீனாவுக்கு சென்றனர். சீனப் பேரரசர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்திய அறிஞர்கள் வடமொழி நூல்களை மொழி பெயர்த்தனர். மங்கோலியர்கள் சீனாவில் தங்களது பேரரசை ஏற்படுத்திய பதின்மூன்றாம் நூற்றாண்டில்கூட சீனாவுடனான இந்த தொடர்பு நீடித்தது. சீனக் கலையிலும் இந்தியக் கலையின் தாக்கத்தைக் காணலாம்.

**இந்தியாவும் திபெத்தும்**

ஏழாம் நூற்றாண்டிலிருந்து திபெத்துடன் இந்தியா பண்பாட்டு உறவு கொண்டது. காம்போ என்ற புத்தசமய அரசர் லாசா நகரை நிறுவி அங்கு புத்த சமயத்தை அறிமுகப்படுத்தினார். இந்திய அறிஞர்களின் துணையோடு திபெத்திய எழுத்துக்கள் வடிவமைக்கப்பட்டன. பின்னர், திபெத்தில் லாமாக் கோட்பாடு நிறுவப்படுவதற்கும் இந்திய அறிஞர்கள் உதவினர். பதினோராம் நூற்றாண்டில் வங்காள ஆட்சியாளர்களான பாலர்கள் திபெத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். வங்காளம் முஸ்லீம் படையெடுப்புக்கு ஆளானபோது, பல புத்த சமயத் துறவிகள் திபெத்தில் தஞ்சம் புகுந்தனர்.

**இந்தியாவும் இலங்கையும்**

வேறுபட்ட அரசியல் வரலாற்றை இலங்கை கொண்டிருந்தாலும் இந்தியப் பண்பாட்டின் தாக்கம் அங்கு வெளிப்படுவதைக் காணலாம். புத்த

சமய தூதுக் குழுவினர் தங்களது சமயக் கருத்துக்களை மட்டும் அங்கு பரப்பவில்லை; மாறாக பண்பாட்டுக் கூறுகளை எடுத்துச் சென்றனர். கல்லிலே சிற்பங்களை வடிக்கும் முறை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சென்றது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகோஷர் இலங்கைக்கு சென்று ஹுனயான புத்த சமயப் பிரிவை அங்கு நிலை நிறுத்தினார். அங்குள்ள சிகிரியா ஓவியங்களில் அஜந்தா ஓவியங்களின் தாக்கத்தைக் காணமுடிகிறது.


சிகிரியா ஓவியம்

**தென்கிழக்காசியாவில் இந்தியப் பண்பாடு**

இந்தோ–சீனா, மலேயா உள்ளடக்கிய தென்கிழக்காசிய பகுதியில் இந்தியப் பண்பாடு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வங்காள விரிகுடாவிற்கு அப்பால் இவை அமைந்துள்ளன. நிலவளமும் கனிவளமும், நிறைந்த இப்பகுதி இந்தியர்களை மிகவும் கவர்ந்தது. மேலும், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் எண்ணற்ற துறைமுகங்கள் அமைந்திருந்தன. எனவே, இந்தியர்கள் இந்நிலப்பகுதிகளுக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டனர். தங்கபூமி என்ற பொருள்படும் சுவர்ணபூமிக்கு வணிகர்கள் பயணம் மேற்கொண்டதாக இந்திய பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. சுவர்ணபூமி என்ற சொல் பொதுவாக கீழைநாடுகளைக் குறிக்கும் சொல்லாகும். குப்தர்கள் ஆட்சிக் காலத்தில் கிழக்காசியாவில் இந்தியர்கள் குடியேறத் தொடங்கினர். பல்லவர்கள் காலத்தில் அது மேலும் ஊக்கம் பெற்றது. இந்தியக் குடியேறிகள் அங்கு பெரும் அரசுகளையும் உருவாக்கினர். அவற்றில் ஒருசில அரசுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செலுத்தின. பல பகுதிகளில், இந்தியப் பெயர்களையுடைய அரச குலங்கள் ஆட்சி புரிந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் இஸ்லாம் வருகை தந்த காலம் வரை இந்தியப் பண்பாடு இப்பகுதியில் கோலோச்சியது.


**கம்போடியா (காம்போஜம்)**

கி.பி. முதலாம் நூற்றாண்டில் கம்போடியாவில் இந்தியர்கள் குடியேறினர். கெமர்கள் என்றழைக்கப்பட்ட அம்மண்ணின் மைந்தர்கள்மீது பண்பாட்டு தாக்கத்தை ஏற்படுத்தினர். அவர்களது அரசகுலம் காம்போஜர்கள் என்றும், நாடு காம்போஜம் அல்லது தற்கால கம்போடியா என்றும் அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் அங்கு வைணவமும் சைவமும் தழைத் தோங்கின. லாவோஸ், சியாம், பர்மாவின் ஒரு பகுதி, மலேயா



தீபகற்பம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காம்போஜப் பேரரசு ஒரு காலகட்டத்தில் திகழ்ந்தது. அங்கு ஆட்சிபுரிந்த அரசர்கள்பற்றி எண்ணற்ற வடமொழிக் கல்வெட்டுகள் விவரங்களைத் தருகின்றன. வேதங்கள், ராமாயணம், மகாபாரதம், பாணினியின் இலக்கணம், இந்து தத்துவ விளக்கவுரைகள் போன்ற இந்து இலக்கியப் படைப்புகளை கம்போடிய மக்கள் அறிந்திருந்தனர்.

பல்லவ அரசர்களைப்போல, கம்போடிய அரசர்களும் தங்களை ‘வர்மன்’ என்று அழைத்துக் கொண்டனர். யசோவர்மன், இரண்டாம் சூரிய வர்மன் ஆகிய இருவரும் புகழ்மிக்க அரசர்கள். தென்னிந்திய பாணியில் கோயில்கள் கட்டப்பட்டன. எண்ணற்ற வடமொழி கல்வெட்டுகள் அவற்றில் காணப்படுகின்றன. அக் கோயில்களில் மிகவும் புகழ் பெற்றது தலைநகரான அங்கார் என்ற இடத்தில் இரண்டாம் சூரியவர்மன் எழுப்பிய விஷ்ணு ஆலய மாகும். இது ‘அங்கார் வாட்’ (வாட் என்றால் கோயில் என்று பொருள்) என்று பரவலாக அழைக்கப்படுகிறது. தளத்தின் மேற்கூரையில் அக்கோயில் எழுப்பப் பட்டுள்ளது. ஒவ்வொரு தளத்திலும் எண்ணற்ற கற்சிற்பங்கள் காணப் படுகின்றன. திராவிட கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ள கோயிலில் ராமாயாண, மகாபாரத காட்சிகள் சிற்பங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டில்தான் காம்போஜ அரசு வீழ்ச்சியடைந்தது.


அங்கார்வாட் கோயில்

**சம்பா**

சம்பா அல்லது தெற்கு அன்னாம் கம்போடியாவிற்கு கிழக்கே அமைந்துள்ளது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஸ்ரீமாறன் என்பவரால் அங்கு முதலாவது இந்து அரசகுலம் நிறுவப்பட்டது. ஏராளமான வடமொழிக் கல்வெட்டுகள் சம்பாவின் வரலாற்றைக் கூறுகின்றன. பன்னிரண்டு இந்திய அரசு குலங்கள் சம்பாவில் ஆட்சிபுரிந்தன. பதிமூன்றாம் நூற்றாண்டில் சம்பா, கம்போடியாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்து அரசர்களின் ஆட்சிக் காலத்தில், சம்பாவில் இந்து சமயம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சைவமும் வைணவமும் தழைத்தோங்கின. புத்த சமயமும் வளர்ச்சியடைந்தது. இந்து தத்துவம், இலக்கணம், நுண்கலைகள், ஜோதிடம் குறித்த பல்வேறு நூல்கள் எழுதப்பட்டன.

**சியாம் அல்லது தாய்லாந்து**

சியாம் பகுதியில் பல்வேறு அரசுகளில் இந்தியப் பண்பாடு பின்பற்றப்பட்டது. இந்திய அறிஞர்களின் உதவியுடன் தாய் வரிவடிவம் உருவாக்கப்பட்டது. தர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் அந்நாட்டின் பழைய சட்டங்கள் எழுதப்பட்டிருந்தன. பாங்காக் நகரில் உள்ள கோயில்களில் ராமாயண, மகாபாரத கதைகளை பிரதிபலிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன.


**சுமத்ரா மற்றும் ஜாவா**

இந்தியாவிற்கும் தூரக் கிழக்கு ஆசியாவிற்கும் ஒரு இணைப்புப் பாலமாக மலேயா தீபகற்பம் விளங்கியது. அங்கு கி.பி. ஐந்து முதல் பதினைந்தாம் நூற்றாண்டுவரை பல இந்து அரசுகள் ஆட்சி புரிந்தன. சுமத்ரா தீவில் இருந்த மிகச் சிறப்பான இந்து அரசு ஸ்ரீவிஜயம் என்பதாகும். ஏழாம் நூற்றாண்டில் அது ஒரு வாணிக, கலாச்சார மையமாகத் திகழ்ந்தது. பின்னர், ஸ்ரீவிஜயம் ஒரு கடல் சார் வாணிப சக்தியாக உருவெடுத்து சைலேந்திரப் பேரரசாக புகழ் எய்தியது. அருகிலிருந்த தீவுகளான ஜாவா, பாலி, போர்னியோ மற்றும் கம்போடியாமீது அது ஆதிக்கம் செலுத்தியது. சைலேந்திர ஆட்சியாளர்கள் மகாயான புத்த சமயத்தவர்கள். தமிழ்நாட்டின் சோழர்களுடனும், வங்காளத்தின் பாலர்களுடனும் அவர்கள் நல்லுறவை மேற்கொண்டிருந்தனர். சைலேந்திர அரசன் மாற விஜயோத்துங்க வர்மன் நாகப்பட்டினத்தில் புத்த மடாலயம் அமைப்பதற்கு சோழ அரசன் ராஜராஜ சோழன் உதவிகளை வழங்கினார். ஆனால், அவரது மகன் ராஜேந்திர சோழன் சைலேந்திர அரசை சிறிது காலம் கைப்பற்றி வைத்திருந்தான். பின்னர், அவர்கள் விடுதலை பெற்றனர். கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டுவரை சைலேந்திர பேரரசு நீடித்திருந்தது.

கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே ஜாவா தீவில் ஒரு இந்து அரசு நிறுவப்பட்டது. மத்தியா ஜாவா பகுதியில் எழுச்சி பெற்ற மடாரம் என்ற அரசு இந்து சமய, கலாச்சார மையமாகத் திகழ்ந்தது. சைலேந்திரர்கள் பின்னர் அதனைக் கைப்பற்றினார். ஒன்பதாம் நூற்றாண்டுவரை ஜாவா சைலேந்திரப் பேரரசுடன் இணைந்திருந்தது. பின்னர் விடுதலையடைந்தது. சைலேந்திரர் ஆட்சியின்கீழ் ஜாவா கலைத்துறையில் புகழும் பொலிவும் பெற்று விளங்கியது.



கி.பி. 750 – 850 ஆண்டுகளுக்கிடையே சைலேந்திரர்களால் கட்டப்பட்ட போரோபுதூர் இந்தோ–ஜாவா கலையை வெளிப்படுத்தும் சின்னமாகத் திகழ்கிறது. ஒரு குன்றின்மீது அது அமைந்துள்ளது. அதில் ஒன்பது தளங்கள் உள்ளன. தலைப்பின் உச்சியில் மணி வடிவத்திலான ஸ்தூபி உருவாக்கப் பட்டுள்ளது. அதிலுள்ள படிக்கட்டுகளில் 2000 சிறிய கற்சிற்பங்கள் உள்ளன. புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்களை அவை சித்தரிக்கின்றன. கீழ்ப்பகுதி அலங்கார வேலைப்பாடுகளுடனும், மேற்பகுதி சிற்பங்களின்றியும் உள்ளன. கல்லில் வடிக்கப்பட்ட காவியம் என்று போரோபுதூர் சிற்பங்கள் போற்றப்படுகின்றன. உலகின் மிகச்சிறந்த அற்புதமான புத்த ஸ்தூபி அதுவாகும்.



போரோபுதூர்
நினைவுச்சின்னம்

பன்னிரண்டாம் நூற்றாண்டில் கிழக்கு ஜாவா பகுதியில் காதிரி நகரைத் தலைநகராகக் கொண்டு ஜாவா அரசு எழுச்சி பெற்றது. ஜாவா பண்பாட்டின் பொற்காலம் என்று கருதப்படும் பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் ஜாவா பேரரசின் தலைநகராக மஜாபாகித் விளங்கியது. இந்தியக் கலையும் இலக்கியமும் வேறெங்கிலும் காணமுடியாத அளவுக்கு அங்கு வளர்ச்சி பெற்றன. நூற்றுக்கணக்கான கோயில்களின் சிதைவுகளும், வடமொழி ஒலைச் சுவடிகளும் இன்றும் ஜாவாவில் காணப்படுகின்றன. ராமாயணமும், மகாபாரதமும் இன்றும் மக்களிடையே செல்வாக்கு பெற்றுத் திகழ்கின்றன. பொம்மலாட்ட கலையின் மையக் கருத்தாக விளங்குகின்றன. மஜாபாகித்தின் வீழ்ச்சியோடு ஜாவாவில் கலைத்துறை நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தன.

**பாலி**

ஆறாம் நூற்றாண்டில் பாலி இந்து அரசு குலங்களின் கட்டுப்பாட்டில் வந்தது. ஏழாம் நூற்றாண்டில் அங்கு புத்த சமயம் பரவியிருந்தது என இட்சிங் குறிப்பிட்டுள்ளார். அங்குள்ள கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் இந்தியர்கள் அங்கு சென்று குடியேறியதைக் குறிப்பிடுகின்றன. பின்னர், பாலி ஜாவா அரசின் கட்டுப்பாட்டில் வந்தது. இன்றும்கூட பாலியின் மக்கள் இந்துக் களாகவே திகழ்கின்றனர். ஜாதிமுறையும் பின்பற்றப் பட்டுவருகிறது.

**மியான்மர்**

தற்போது மியான்மர் என்றழைக்கப்படும் பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவு அசோகர் காலத்திலிருந்தே தொடங்குகிறது. புத்த சமயத்தைப் பரப்புவதற்காக அசோகர் பர்மாவிற்கு குழுக்களை அனுப்பிவைத்தார். பர்மாவில் பல இந்து அரசுகள் ஆட்சி புரிந்துள்ளன. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பாலியும் வடமொழியும் பர்மாவின் மொழிகளாக இருந்தன. பர்மிய மக்கள் மகாயான, ஹுனயான புத்த சமயப் பிரிவுகளை பின்பற்றினர்.

மலேயத் தீபகற்பம், இந்தோசீனா ஆகிய பகுதிகளில் கிட்டத்தட்ட 1500 ஆண்டுகள் இந்து அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இந்திய சமயங்களும் பண்பாடும் அங்கு வாழ்ந்த மக்களிடையே பரவி நாகரிகத்தின் உச்சிக்கு அவர்களை இட்டுச் சென்றன.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *மத்திய ஆசியாவில் இந்தியாவின் தாக்கம்.*
2. *இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பண்பாட்டுத் தொடர்புகள்.*
3. *இந்தியாவும் இலங்கையும்*
4. *தென் கிழக்காசிய நாடுகளிலும் இந்தோசீனாவிலும் இந்தியப் பண்பாடு பரவுதல்.*
5. *தென்கிழக்காசியாவில் இந்து கோயில்கள் – கட்டிடக் கலை.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. நாகப்பட்டினத்தில் சைலேந்திரர்கள் மடாலயம் அமைக்க உதவிய சோழ அரசன்

அ. விஜயாலயன் ஆ. ராஜராஜன்

இ. குலோத்துங்கள் ஈ. ராஜேந்திரன்

2. சுமத்ரா தீவிலிருந்த இந்து அரசு

அ. காம்போஜம் ஆ. ஸ்ரீவிஜயம்

இ. சம்பா ஈ. அன்னாம்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. லாசா நகரை நிறுவியவர் .........

2. கிழக்கு ஜாவாவின் தலைநகர் .........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. அங்கார் வாட் கோயில் | அ. சைலேந்திரர்கள் |
| 2. போரோபுதூர் | ஆ. இலங்கை |
| 3. சிகிரியா | இ. தெற்கு அன்னாம் |
| 4. சம்பா | ஈ. இரண்டாம் சூரியவர்மன் |

**IV.** சரியான சொற்றொடரை தெரிவு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. இந்தோ–ஜாவா கலையின் சிறந்த சின்னம் போரோபுதூர்.

ஆ. போரோபுதூர் ஒரு வைணவ ஆலயம்.

இ. சைலேந்திரர்கள் சைவர்கள்.

ஈ. ராமாயண காட்சிகள் போரோபுதூரில் வடிக்கப்பட்டுள்ளன.

V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. சம்பாவின் முதல் இந்து அரசை நிறுவியவர் ஸ்ரீமாறன்.

2. பாலி அரசு புத்த சமயத்தின் தாக்கத்தைப் பெற்றது.

VI. சிறு குறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. அங்கார்வாட்

2. போரோபுதூர்

3. இந்தியா–மியான்மர் பண்பாட்டு உறவுகள்

4. இந்தியாவும் பாலியும்

VII. குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. இந்தியா – சீனா இடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்புகளை விவரி.

2. இந்தோ – ஜாவா கலை பற்றி குறிப்பு வரைக.

VIII. விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. தென்கிழக்காசியாவில் இந்தியப் பண்பாடு பரவியதை விவரி.

2. ஆசியப் பகுதிகளில் இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தை மதிப்பிடுக.



# பாடம் – 15

## முந்தைய இடைக்கால இந்தியா

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *ரஜபுத்திர்கள் பற்றிய சுருக்கமான வரலாறு.*
2. *சிந்துவை அராபியர் கைப்பற்றியதற்கான காரணங்களும் விளைவுகளும்.*
3. *கஜினி முகமதுவின் படையெடுப்புகள்.*
4. *கோரி முகமதுவின் படையெடுப்புகள்.*
5. *இந்து அரசுகளின் தோல்விக்கான காரணங்கள்.*

ஹர்ஷரது மறைவுக்குப்பின், சுமார் ஐந்து நூற்றாண்டுகள் வட இந்தியாவில் அரசியல் ஒற்றுமை ஏற்படவில்லை. நாடு பல்வேறு அரசுகளாக சிதறுண்டு கிடந்ததோடு, ஒருவருக்கொருவர் போரிட்ட வண்ணம் இருந்தனர். காஷ்மீர், காந்தாரம், சிந்து, குஜராத், கனோஜ், ஆஜ்மீர், மாளவம், வங்காளம், அஸ்ஸாம் ஆகியன வட இந்தியாவிலிருந்த முக்கிய அரசுகள். எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் காஷ்மீர் ஆதிக்கம் செலுத்தியது. பின்னர், வட இந்தியாவில் பிரதிஹாரர்களின் ஆதிக்கம் ஏற்படும்வரை வங்காளத்தில் பாலர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். ஆனால், பத்தாம் நூற்றாண்டில் தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்கள் வட இந்தியாவில் தங்களது மேலாதிக்கத்தை விரிவு படுத்த முயன்று தோல்வி கண்டனர்.

**ரஜபுத்திர அரசுகள்**

ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டுகளில் எழுச்சி பெற்ற ரஜபுத்திரர்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டில் முஸ்லிம் படையெடுப்பு வரை வலிமையுடன் திகழ்ந்தனர். அதற்குப் பின்னரும், பல ரஜபுத்திர அரசுகள் நீண்ட காலம்

நிலைத்திருந்தன. முஸ்லிம் ஆக்ரமிப்பின்போது, இந்து சமயத்தையும் பண்பாட்டையும் காத்து நின்றவர்கள் ரஜபுத்திரர்களேயாவர்.

ரஜபுத்திரர்களின் தோற்றம் குறித்து பல கருத்துக்கள் நிலவுகின்றன. அந்நியப் படையெடுப்பாளர்கள் மற்றும் இந்திய ஷத்திரர்கள் ஆகியோரின் வழிவந்தவர்கள் என்றும் கருதப்படுகிறது. அந்நியப் படையெடுப்பாளர்கள் இந்திய மயமாக்கப்பட்டு இந்திய சமுதாயத்தில் இரண்டறக் கலந்தனர். ரஜபுத்திரர்கள் பற்றிய பல பழங்கதைகள் இக்கருத்தை ஆதரிப்பதாக உள்ளன. ஆகவே, ரஜபுத்திர குலம் பல்வேறு கூறுகளின் கலப்பே என்று கூறுலாம். கலப்பு மணங்களின் மூலமாகவும், பொதுவான பழக்க வழக்கங்களை பின்பற்றி வந்ததாலும் அவர்கள் ஒரே குலமாக உருவெடுத்தனர். போர்த் தொழிலையும் அவர்கள் பின்பற்றத் தொடங்கினர். இருப்பினும், வணிகமும் வேளாண்மையும்கூட செழித்தன. நகரங்களில் நடைபெற்ற வணிகம் மற்றும் செல்வ வளம் பற்றி அராபியப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர். பலம் வாய்ந்த கோட்டைகளையும் அவர்கள் கட்டிக் கொண்டனர்.

ரஜபுத்திர அரசுகளில் காலத்தால் முந்தையது கூர்ஜர பிரதிகார அரசாகும். ஹரிஸ் சந்திரன் அதன் முக்கிய தலைவர். ராஜபுதனத்தில் பரந்த நிலப் பகுதிகளைக் கைப்பற்றிய அவர் பின்மால் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். கூர்ஜரர்களில் பல பிரிவினர் இருந்தனர். ஒரு பிரிவு குஜராத்திலும், மற்றது அவந்தியிலும் ஆட்சி புரிந்தன. வங்காளத்தின் பாலர்களுடனும், தக்காணத்தின் ராஷ்டிரகூடர்களுடனும் அவர்கள் போரிட்டனர். ரஜபுத்திர இனத்திலேயே வீரமிக்கவர்களான சௌகன்கள் ஆஜ்மீரில் ஆட்சி புரிந்தனர். அவர்களின் தலைசிறந்த அரசன் விக்ரஹராஜன். அவர் டெல்லியை கைப்பற்றினார். எனவே, கோரி முகமதுவின்கீழ் முஸ்லிம்கள் படையெடுத்து வந்தபோது சௌகன்கள் அவர்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இக்காலத்திய மற்றொரு முக்கிய ரஜபுத்திரப் பிரிவினர் பரமாரர்கள். அவர்களது சிறந்த அரசன் போஜன். அவரது போர்வெற்றிகளும் பண்பாட்டுப் பங்களிப்பும் ரஜபுத்திர வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

தொடர்ந்த போர்களின் காரணமாக ரஜபுத்திரர்கள் வலிமையிழந்தனர். மேலும், அவர்கள் பொது எதிரிக்கு எதிராக ஒருபோதும் அணிவகுத்து நிற்கவில்லை. அரசியல் தொலைநோக்கும் அவர்களிடம் காணப்படவில்லை. உட்பகை மேலோங்கியிருந்தமையால், அவர்கள் முஸ்லிம் படையெடுப்பாளர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்து போரிடத் தவறினர்.



**சிந்துவை அராபியர் கைப்பற்றுதல் (கி.பி. 712)**

அரேபியாவிலுள்ள மெக்கா நகரில் பிறந்தது இஸ்லாம். நிறுவியவர் முகமது நபி. ஆனால், மெக்கா நகரைச் சேர்ந்த செல்வந்தர்கள் அவரது போதனைகளை எதிர்த்தனர். எனவே, அவர் கி.பி. 622 ஆம் ஆண்டு மெதினாவுக்குச் சென்றார். அந்த ஆண்டிலிருந்துதான் முஸ்லிம் சகாப்தமான ஹிஜிரா தொடங்குகிறது. முஸ்லிம் நாட்காட்டியும் தொடங்குகிறது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு முகமது நபி தனது சீடர்களுடன் மெக்காவிற்குத் திரும்பினார். கி.பி. 632ல் அவர் மறைந்தார்.

முகமது நபியின் சீடர்கள் காலிப்புக்களின் பேரரசை ஏற்படுத்தினர். உமையதுகளும், அப்பாசிதுகளும் காலிப்புகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் படையெடுப்புகள் மூலம் தங்களது ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்தி, இஸ்லாமிய சமயத்தைப் பரப்பி வந்தனர். கி.பி. 712 ஆம் ஆண்டு உமையதுகள் அரசின் படைத்தலைவரான முகமது பின் காசிம் சிந்துப் பகுதியின்மீது படையெடுத்தார். சிந்து அரசின் ஆட்சியாளரான தாஹிர் என்பவருடன் கடும் போரிட்டு அவரை தோற்கடித்துக் கொன்றார். சிந்துவின் தலைநகரம் அரோர் கைப்பற்றப்பட்டது. மேலும் முன்னேறிய காசிம் முல்தானைக் கைப்பற்றினார். சிந்துவில் ஆட்சிமுறையை காசிம் சீரமைத்தார். சிந்துவில் வாழ்ந்த இந்துக்களுக்கு 'சிம்மிக்கள்' என்றழைக்கப்படும் பாதுகாக்கப்படும் மக்கள் என்ற இரண்டாந்தர அந்தஸ்து வழங்கப்பட்டது. இருப்பினும், அம்மக்களின் அன்றாட வாழ்க்கையில் எவ்வித தலையீடும் இல்லை. சொத்துகள் ஏதும் பறிமுதல் செய்யப்படவில்லை. பின்னர், காசிம் காலிப்பினால் திருப்பியழைக்கப்பட்டார்.

இருப்பினும், சிந்து அராபியரின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்தது. மேற்கிந்தியாவில் வலிமையான பிரதிஹார அரசு ஆட்சி செய்து வந்தமையால், முஸ்லிம்களினால் இந்தியாவிற்குள் தங்களது ஆதிக்கத்தை விரிவு படுத்தமுடியவில்லை. அராபியர் சிந்துவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, உடனடியாக முஸ்லிம் படையெடுப்புகள் ஏதும் நடைபெறவில்லை. எனினும் இந்தியப் பண்பாடு மேலை நாடுகளில் பரவுவதற்கு அது வழி வகுத்தது. பல அராபியப் பயணிகள் சிந்துவிற்கு வருகை புரிந்தனர். அவர்கள் மூலமாக இந்திய எண் முறை ஐரோப்பாவிற்கு சென்றது. அராபியப்பேரரசின் ஒரு பகுதியாக சிந்து விளங்கியதால், இந்தியாவின் அறிவுத் தொகுதி வெளிநாடுகளுக்கு வேகமாகப் பரவியது.

**கஜினி முகமதுவின் படையெடுப்புகள்**



கஜினி முகமது

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவில் அப்பாசீதுகளின் அரசு வீழ்ச்சியடைந்தது. துருக்கிய ஆட்சியாளர்கள் சுதந்திர அரசுகளை ஏற்படுத்திக் கொண்டனர். காலிப் பெயரளவுக்கே ஆதிக்கம் செலுத்தினார். அத்தகைய ஆட்சியாளர்களில் ஒருவர்தான் கஜினியைத் தலைநகராக் கொண்டு ஆட்சிபுரிந்த அலப்டிஜின். அடுத்து ஆட்சிக்கு வந்த அவரது மருமகன் சபுக்டிஜின் வடமேற்கு வழியாக, இந்தியாவைக் கைப்பற்ற விரும்பினார். ஜெயபாலரிட மிருந்து பெஷாவரை அவர் கைப்பற்றினார். ஆனால் அவரது படையெடுப்புகள் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அடுத்து ஆட்சிக்கு வந்தவர் முகமது.

**கஜினி முகமது (கி.பி. 997 – 1030)**

கஜினி முகமது இந்தியாவின்மீது பதினேழு முறை படையெடுத்து வந்தார் எனக் கூறப்படுகிறது. அக்காலத்தில் வட இந்தியாவில் பல இந்து அரசுகள் ஆட்சியிலிருந்தன. இந்தியாவின் எல்லைப்புறத்தில், பஞ்சாப் முதல் காபூல் வரையிலான பகுதியில் இந்து சாஹி அரசு இருந்தது. கனோஜ், குஜராத், காஷ்மீர், நேபாளம், மாளவம், பண்டேல்கண்ட் போன்றவை வடஇந்தியாவிலிருந்த முக்கிய அரசுகள். முகமதுவின் தொடக்கப் படையெடுப்பை இந்து சாஹி அரசர் ஜெயபாலர் எதிர்கொண்டார். 1001ல் ஜெயபாலர் முறியடிக்கப்பட்டார். தோல்வியடைந்த ஜெயபாலர் தீயில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார். அடுத்து ஆட்சிக்கு வந்த அனந்தபாலர் முகமதுவை எதிர்த்துப் போரிட்டார். ஆனால், 1008 ஆம் ஆண்டு பெஷாவருக்கு அருகிலிருந்த இந்து சாஹி அரசின் தலைநகரான வைஹிந்த் என்ற இடத்தில் நடைப்பெற்ற போரில் அவர் தோற்றுப் போனார். இப்போரில் அனந்தபாலருக்கு ஆதரவாக கனோஜ், ராஜஸ்தான் ஆட்சியாளர்கள் இருந்தனர். வைஹிந்த் வெற்றிக்குப் பிறகு முகமது பஞ்சாபின் பெரும் பகுதியை தமது ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார்.

அதற்குப்பின் முகமது இந்தியா மீது மேற்கொண்ட படையெடுப்புகள் யாவும் செல்வம் நிறைந்த நகரங்களையும் கோயில்களையும் தாக்கி கொள்ளையடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. 1018 ஆம் ஆண்டு



முகமது மதுரா நகரைச் சூறையாடினார். கனோஜ் மீதும் தாக்குதல் தொடுத்தார். கனோஜை விட்டு ஓடிய அதன் அரசர் ராஜ்ய பாலர் விரைவில் இறந்தார். பெருத்த கொள்ளைப் பொருளுடன் கலிஞ்சார் வழியாக முகமது திரும்பிச் சென்றார். அவரது அடுத்த படையெடுப்பு குஜராத்திற்கு எதிரானதாகும். 1024 ஆம் ஆண்டு முல்தானிலிருந்து புறப்பட்ட முகமது ராஜபுதனத்தைக் கடந்து, சோலங்கி அரசர் முதலாம் பீமதேவனை முறியடித்தார். அன்ஹில்வாத் சூறையாடப்பட்டது. பின்னர், சோமநாதபுரத்தின் புகழ்மிக்க ஆலயம் தாக்கப்பட்டது. சிந்துப்பாலைவனம் வழியாக, முகமது நாடு திரும்பினார். இதுவே, அவரது கடைசிப் படையெடுப்பாகும். கி.பி. 1030 ஆம் ஆண்டு முகமது இறந்தார்.

கஜினி முகமது வெறும் கொள்ளைக்காரனாக இருக்கவில்லை. கிழக்கே பஞ்சாப் முதல் மேற்கே காஸ்பியன் கடல் வரையும், வடக்கே சாமர்கண்ட் முதல் தெற்கே குஜராத் வரையும் பரவியிருந்த ஒரு பெரும் பேரரசை அவர் உருவாக்கியிருந்தார். கஜினிப்பேரரசு, பாரசீகம், டிரான்சாக்சியானா, ஆப்கானிஸ்தான், பஞ்சாப் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. தலைமைப்பண்பையும், ஒய்வில்லாத உழைப்பையும் கொண்டிருந்த காரணத்தால் அவரால் இத்தகைய சாதனைகளை செய்ய முடிந்தது. முகமதுவை இஸ்லாமின் நாயகன் என்று இடைக்கால வரலாற்றாசிரியர்கள் போற்றியுள்ளனர். கலை, இலக்கியத்தையும் அவர் ஆதரித்தார். அவரது அவையை அலங்கரித்த அல்பெருனி புகழ்மிக்க கிதாப்–இ–ஹிந்த் என்ற இந்தியா பற்றிய நூலை எழுதினார். முகமது, முல்தானையும் பஞ்சாபையும் கைப்பற்றியதால் இந்தியாவின் அரசியல் நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன. துருக்கியர்களும், ஆப்கானியர்களும் இந்தியாமீது தொடர்ந்து படையெடுக்கவும், எந்த நேரத்திலும் கங்கைச் சமவெளிவரை செல்லும் வாய்ப்பையும் முகமதுவின் படையெடுப்புகள் வழிவகுத்தன. மேலும், அவரது தொடர்ந்த படையெடுப்புகளினால், இந்தியாவின் பொருளாதார வலிமையும் மனித வள ஆற்றலும் வற்றிப் போயின. இந்தியாவின் எதிர்கால அரசியலுக்கு இது தீங்காக முடிந்தது. அந்நியப்படையெடுப்பார்களுக்கு எதிராக இந்தியாவின் வாயிலில் அரணாக நின்றது இந்து சாஹி அரசாகும். முகமது அதனை அழித்தார். இந்திய எல்லைப்புறம் பாதுகாப்பற்று விடப்பட்டது. கஜினிப் பேரரசில் பஞ்சாபும் ஆப்கானிஸ்தானும் இடம் பெற்றிருந்ததால் அடுத்து வந்த முஸ்லிம் படையெடுப்பாளர்களின் பணி எளிதாயிற்று.

### கோரி முகமது

கஜினி அரசுக்கு கீழ்ப்படிந்திருந்த கோரிகள், கஜினி முகமதுவின் மறைவுக்குப் பிறகு சுதந்திரமடைந்தனர். கஜினிப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின், முகமது கோரி என்று அழைக்கப்பட்ட மொய்சுதீன் முகமது கஜினியை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். கஜினியில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்ட முகமது கோரி இந்தியாவின்மீது தனது கவனத்தைச் செலுத்தினார். கஜினி முகமதுவைப்போல் அல்லாமல், கோரி இந்தியாவைக் கைப்பற்றி அங்கு பேரரசை விரிவுபடுத்த விரும்பினார்.

1175 ஆம் ஆண்டு முகமது கோரி முல்தானைக் கைப்பற்றினார். அடுத்த படையெடுப்பின்போது சிந்துப் பகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். 1186ல் பஞ்சாபைத் தாக்கி குஸ்ருமாலிக் என்பவரிடமிருந்து பஞ்சாபைக் கைப்பற்றினார். பஞ்சாபை அவர் இணைத்துக் கொண்டதால் சட்லஜ் நதி வரையில் அவரது பேரரசு கிழக்கே விரிவடைந்தது. அடுத்து சௌகன்கள் மீது போர் தொடுப்பதற்கு இது வழிவகுத்தது.

### தரெய்ன் போர் (1191 – 1192)

அச்சத்தை எதிர்கொண்டிருந்த வடஇந்தியாவின் இந்து அரசர்கள் பிருதிவிராஜ் சௌகன் தலைமையில் ஒரு கூட்டிணைவை ஏற்படுத்தினர். கி.பி. 1191 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் சௌகன் முகமது கோரியை முறியடித்தார். இத்தோல்வியினால், முகமது கோரி தமக்கு தலைகுனிவு ஏற்பட்டதாகக் கருதினார். எனவே, தகுந்த பதிலடி கொடுக்கும் நோக்கத்துடன் ஒரு லட்சத்து இருபதாயிரம் வீரர் கொண்ட பெரும்படையைத் திரட்டினார். அப்படையுடன் முகமது கோரி பெஷாவர், முல்தான் வழியாக லாகூரையடைந்தார். தமது மேலாண்மையை ஏற்றுக் கொள்ளும்படியும் இஸ்லாமிய சமயத்திற்கு மாறிவிடும்படியும் பிருதிவிராஜனுக்கு தூது அனுப்பினார். ஆனால், இந்த கோரிக்கையை ஏற்க மறுத்த பிருதிவிராஜ் சௌகன் மீண்டும் படையெடுப்பாளரை எதிர்கொள்ள முடிவு செய்தார். மூன்று லட்சம் குதிரைகள், மூன்றாயிரம் யானைகள், ஏராளமான காலாட்படை வீரர்களைக் கொண்ட பெரும்படையைத் திரட்டினார். பல இந்து அரசர்களும், சிற்றரசர்களும் அவருடன் இணைந்தனர். 1192 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது தரைய்ன் போரில் முகமது கோரி பிருதிவிராஜனை இறுதியாக முறியடித்து, கைப்பற்றிக் கொன்றார்.





பிரிதிவிராஜ் சௌகான்

இரண்டாவது தரெய்ன் போர் ஒரு தெளிவான முடிவைக் கொடுத்த போராகும். ரஜபுத்திரர்களுக்கு அது மாபெரும் தோல்வியைக் கொடுத்தது. அவர்களது அரசியல் செல்வாக்கு சரிந்தது. சௌகன்களின் அரசு படையெடுப்பாளரின் காலடியில் கிடந்தது. இவ்வாறு இந்தியாவின் முதல் முஸ்லிம் அரசு ஆஜ்மீரில் நிறுவப்பட்டது. இந்தியாவில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியது. தரெய்ன் போரில் பெற்ற மாபெரும் வெற்றியைச் சுமந்து, முகமது கோரி கஜினிக்குத் திரும்பினார். இந்தியாவில் வெற்றிகொண்ட பகுதிகளை படைத்தளபதி குத்புதீன் ஐபக்வசம் விட்டுச் சென்றார். டெல்லி, மீரட் போன்ற பகுதிகளை ஆக்ரமித்துக் கொண்ட ஐபக் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார். 1193 ஆம் ஆண்டு கோரி முகமதுவின் அடுத்த படையெடுப்புக் கான ஆயத்தங்களையும் செய்து கொடுத்தார். இப்படையெடுப்பு காதவாலா அரசின் ஆட்சியாளர் ஜெயச்சந்திரனுக்கு எதிரானதாகும். முகமது, ஜெயச் சந்திரனின் படைகளை தவிடுபொடியாக்கினார். சந்தாவர் போருக்குப் பிறகு முஸ்லீம்கள் கனோஜ் நாட்டைக் கைப்பற்றினர். தரெய்ன் போரும், சந்தாவர் போரும் இந்தியாவில் துருக்கியர் ஆட்சி நிறுவப்படுவதற்கு வழிவகுத்தன.

### இந்து அரசுகளின் தோல்விக்கான காரணங்கள்

இந்து அரசுகளின் தோல்விக்கான காரணங்களை வரலாற்று ரீதியாக ஆய்வு செய்தல் வேண்டும். அவர்களுக்கிடையே ஒற்றமையில்லாததே தோல்விக்கு அடிப்படைக் காரணமாகும். பல அணிகளாக அவர்கள் பிரிந்து கிடந்தனர். தங்களுக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்த ரஜபுத்திரர்கள் வலிமையிழந்து காணப்பட்டனர். இரண்டாவதாக, பல இந்து அரசுகள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தன. அவர்களது ராணுவ முறைகள் மிகவும் பழமையானவை. முஸ்லீம்களின் படைகளைவிட தரத்தில் குறைந்தவை. இந்தியர்கள் யானைகளையே பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் முஸ்லிம்கள் விரைவாகச் செல்லக்கூடிய குதிரைப்படைகளைக் கொண்டிருந்தனர். முஸ்லிம் வீரர்கள் திறமையிலும் அமைப்பு ரீதியிலும் உயர்வாகவே காணப்பட்டனர். அவர்களுக்கிருந்த சமய உணர்வும், இந்தியச் செல்வத்தின்மீது கொண்டிருந்த ஆசையும் அவர்களுக்கு பெருத்த உற்சாகம்

அளிப்பதாக இருந்தன. இந்துக்களிடையே ஷத்திரியர்கள் என்ற ஒரு வகுப்பினர் மட்டுமே போரிடும் கடமையைப் பெற்றிருந்தனர். மேலும், இந்துக்கள் எப்போதும் தற்காப்புக்காகவே போரிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இது வலிமை குறைந்த நிலையின் வெளிப்பாடாகும்.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *வட இந்தியாவில் ரஜபுத்திர அரசுகள் பற்றிய வரலாறு.*
2. *சிந்துவை அராபியர் கைப்பற்றியதும் அதன் விளைவுகளும்.*
3. *இந்தியாவில் கஜினி முகமது படையெடுப்புக்கான காரணங்களும் விளைவுகளும்.*
4. *கோரி முகமது இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றுதல்.*
5. *முஸ்லிம் படையெடுப்பாளர்களுக்கெதிராக இந்து அரசுகள் தோற்றதற்கான காரணங்கள்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இரண்டாம் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு

அ. 1190 ஆ. 1191

இ. 1192 ஈ. 1292

2. கிதாப்–இ–ஹிந்த் என்ற நூலின் ஆசிரியர்

அ. பிர்தௌசி ஆ. பரானி

இ. முகமது ஈ. அல்பெருனி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முகமது பின் காசிம் படையெடுப்பின்போது சிந்துவின் அரசன் …………

2. இந்தியாவில் முதல் முஸ்லீம் அரசு நிறுவப்பட்ட இடம் ..........

**III.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கூர்ஜர பிரதிகாரர்கள் | அ. கனோஜ் |
| 2. | ராஜ்யபாலன் | ஆ. பின்மல் |
| 3. | சோலங்கிகள் | இ. அரோர் |
| 4. | தாஹிர் | ஈ. அன்ஹில்வாட் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. அவர்களுக்கிடையே ஒற்றுமையில்லாமையே இந்து அரசுகளின் தோல்விக்கான முக்கிய காரணம்.

ஆ. முஸ்லிம்களுக்கு எதிராக இந்தியர்கள் திறமைமிக்க குதிரைப்படைகளை பெற்றிருந்தனர்.

இ. முஸ்லிம் படையெடுப்புகளுக்கு எதிராக ரஜபுத்திரர்கள் ஒன்றுபட்டு நின்றனர்.

ஈ. கஜினி முகமது தமது இந்தியப் பகுதிகளை ஐபக் வசம் ஒப்படைத்தார்.

V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. கோரிகள் தொடக்கத்தில் கஜினி ஆட்சியாளர்களிடம் கீழ்ப்படிந்திருந்தார்.

2. முதல் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் சௌகன் கோரி முகமதுவை முறியடித்தார்.

VI. சிறு குறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. முகமது பின் காசிம்

2. இரண்டாம் தரெய்ன் போர்

3. கூர்ஜர பிரதிஹாரர்கள்

4. அல்பெருனி

VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. சிந்துவை அராபியர் கைப்பற்றியதன் விளைவுகளை மதிப்பிடுக.

2. ரஜபுத்திர அரசுகளின் வீழ்ச்சிக்கான காரணங்களை வெளிப்படுத்துக.

3. முஸ்லிம் படையெடுப்புகளுக்கு எதிராக இந்து அரசுகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை ஆய்க.

VIII. விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. கஜினி முகமதுவின் படையெடுப்புகளை தொகுத்து எழுதுக.

2. கோரி முகமதுவின் படையெடுப்புகளை ஆய்க.



# பாடம் – 16

## டெல்லி சுல்தானியம்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *டெல்லி சுல்தானியத்தின் அரசியல் வரலாறு*
2. *அடிமை வம்சம் – ஐபக், இல்துத்மிஷ், ரசியா, பால்பன்.*
3. *கில்ஜிக்கள் – அலாவுதீன் கில்ஜியின் சாதனைகள்*
4. *துக்ளக்குகள் – முகமது பின் துக்ளக் – அவரது நடவடிக்கைகள்.*
5. *பிரோஸ் துக்ளக்கின் ஆட்சி*
6. *சையதுகளும் லோடிகளும்*

இந்தியாவின்மீது முஸ்லிம்கள் நடத்திய படையெடுப்புகளின் விளைவாக டெல்லிசுல்தானியம் நிறுவப்பட்டது. அது கி.பி. 1206 முதல் 1526 ஆம் ஆண்டுவரை நீடித்தது. ஐந்து வெவ்வேறு வம்சங்கள்– அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி–டெல்லி சுல்தானியத்தை ஆட்சி செய்தன. வட இந்தியா முழுவதையும் கைப்பற்றியதோடு நிற்காமல், அவர்கள் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் நுழைந்தனர். இந்தியாவில் அவர்களது ஆட்சி, சமூகம், ஆட்சித் துறை மற்றும் பண்பாட்டு நிலைமைகளில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தின.

அடிமை வம்சம் மாம்லுக் வம்சம் என்றும் அழைக்கப்படுகிறது. மாம்லுக் வம்சம் என்ற குர்ஆன் சொல்லுக்கு அடிமை என்று பொருள். கி.பி. 1206 முதல் 1290 ஆம் ஆண்டுவரை அடிமை வம்சம் டெல்லியில் ஆட்சிபுரிந்தது. இக்காலத்தில் மூன்று மரபுகள் ஏற்படுத்தப்பட்டன. அவை,

1. குத்புதீன் ஐபக் நிறுவிய குத்பி மரபு (1206 – 1211).

2. இல்துத்மிஷ் நிறுவிய முதல் இல்பாரி மரபு (1211 – 1266)

3. பால்பன் நிறுவிய இரண்டாவது இல்பாரி மரபு (1266 – 1290).

**குத்புதீன் ஐபக் (1206 – 1211)**

கோரி முகமதுவிடம் அடிமையாக இருந்தவர் குத்புதீன் ஐபக். கோரி முகமது அவரை இந்தியப் பகுதிகளுக்கு ஆளுநராக நியமித்தார். டெல்லிக்கு அருகிலுள்ள இந்திரபிரஸ்தம் என்ற இடத்தில் ஐபக் தனது ராணுவ நிலையத்தை அமைத்துக் கொண்டார். கோரியின் வாழ்நாளிலேயே ஐபக் ஒரு நிலையான படையைத் திரட்டியதோடு, வட இந்தியாவில் தமது ஆதிக்கத்தையும் நிலைப்படுத்திக் கொண்டார். 1206 ஆம் ஆண்டு கோரி இறந்தவுடன், ஐபக் தனது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டார். கோரி அரசுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொண்டார். இவ்வாறு, அடிமை வம்சத்திற்கும் டெல்லி சுல்தானியத்திற்கும் ஐபக் அடிகோலினார். சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்ட அவர் லாகூரை தலைநகராக்கினார். அவரது ஆட்சி நான்கு ஆண்டுகளே நீடித்தது. முஸ்லிம் எழுத்தாளர்கள் ஐபக்கை 'லாக் பக்ஷ்'' என அழைக்கின்றனர். அவர்களுக்கு தாராளமாக கொடைகளை வழங்கியதால் அவ்வாறு அழைக்கப்பட்டார். ஹசன் நிசாமி என்ற சிறந்த அறிஞரை ஐபக் ஆதரித்தார். சூஃபித்துறவி குவாஜா குத்புதீன் பக்தியார் என்பவரின் பெயரில் அவர் குதுப்மினாரை கட்டத் தொடங்கினார். பின்னர் அது இல்துத்மிஷ் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. 1210 ஆம் ஆண்டு குதிரைப் போலோ விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது ஐபக் தவறி விழுந்து இறந்தார். அடுத்து அவரது மகன் ஆரம் பக்ஷ் ஆட்சிப் பொறுப்பேற்றார். எட்டு மாதங்களுக்குப் பிறகு இல்துத்மிஷ் அவரை அகற்றிவிட்டு டெல்லி சுல்தானாகப் பதவியேற்றார்.



குத்புதீன் ஐபக்

**இல்துத்மிஷ் (1211 – 1236)**

இல்பாரி குலத்தைச் சேர்ந்தவர் இல்துத்மிஷ். எனவே அவரது அரசு குலம் இல்பாரி குலம் எனப்பட்டது. அவரது ஒன்றுவிட்ட சகோதரர்களால் ஐபக்கிடம் அடிமையாக விற்கப்பட்டவர் இல்துத்மிஷ். ஐபக் தமது மகளை அவருக்கு திருமணம் செய்துவைத்து மருமகனாக்கிக் கொண்டார். பின்னர்,



அவரை குவாலியரின் இக்தாதார் பதவியிலும் அமர்த்தினார். 1211ல் இல்துத்மிஷ் ஆரம் பக்ஷை விரட்டிவிட்டு சுல்தானாக பதவியேற்றார். லாகூரிலிருந்த தலைநகரை அவர் டெல்லிக்கு மாற்றினார். அவரது ஆட்சியின் முதல் பத்து ஆண்டுகள் தமது அரியணையை போட்டியாளர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதிலேயே கழிந்தது. இதற்கிடையில், மங்கோலியர்களின் தலைவனான செங்கிஸ்கான் என்று அனைவராலும் அழைக்கப்படும் தெமுஜின் மத்திய ஆசியாமீது படையெடுப்பைத் தொடங்கியிருந்தார். அங்கு குவாரிசம் ஆட்சியாளரான ஜலாலுதீன் மங்கபர்னி என்பவரை முறியடித்தார். சிந்து நதியைக் கடந்து இந்தியாவிற்குள் ஓடிவந்த மங்கபர்னி இல்துத்மிஷிடம் புகலிடம் கேட்டார். மங்கோலியரிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக மங்கபர்னிக்கு புகலிடம் கொடுக்க இல்துத்மிஷ் மறுத்தார். நல்ல வேளையாக, செங்கிஸ்கான் இந்தியாவிற்குள் படையெடுத்து வராமல் திரும்பிச் சென்றார். இல்துத்மிஷ் பின்பற்றிய திறமையான மங்கோலியக் கொள்கையால், இந்தியா செங்கிஸ்கானின் சூறைக்குத் தப்பியது.



குதுப்மினார்

வங்காளம், பீகார் மீது படையெடுத்த இல்துத்மிஷ் அங்கு தமது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திக் கொண்டார். சிந்து, முல்தான் பகுதிகளையும் டெல்லி சுல்தானியத்துடன் இணைத்தார். ரஜபுத்திரர்களின் கிளர்ச்சிகளை ஒடுக்கிய அவர், ராந்தம்பூர், ஜாலோர், ஆஜ்மீர், குவாலியர் போன்ற அரசுகளை மீண்டும் கைப்பற்றினார். மாளவத்தின் பரமாரர்களுக்கு எதிராக அவர் மேற்கொண்ட படையெடுப்பு பலனளிக்கவில்லை.



செங்கிஸ்கான்

இல்துத்மிஷ் சிறந்த ஆட்சியாளர். 1229 ஆம் ஆண்டு காலிப்பிடம் இருந்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்று அவர் இந்தியாவின் சட்ட முறையான ஆட்சியாளரானார். பின்னர் தமது வாரிசாக ரசியா என்ற தனது மகளை அவர் நியமித்தார். டெல்லி சுல்தானியத்திற்கு பரம்பரை வாரிசு முறையை இவ்வாறு இல்துத்மிஷ் தொடங்கி வைத்தார். அவரது ஆட்சிக் காலத்தில்

இந்தியாவுக்கு வந்த அறிஞர்களையும் சூஃபி துறவிகளையும் இல்துத்மிஷ் ஆதரித்தார். மின்ஹஜ்–உஸ்–சிராஜ், தாஜுதின், நிசாம் உல் முல்க் முகமது ஜெய்னதி, மாலிக் குத்புதீன் ஹசன், பக்ருல் முல்க் ஈசாமி போன்றோர் அவரது காலத்தில் வாழ்ந்து அவரது அவையை அலங்கரித்த அறிஞர்கள். இந்தியாவின் மிக உயர்ந்த கட்டிடமான (238 அடி) குதுப்மினாரை கட்டிமுடித்த அவர் ஆஜ்மீரில் அழகிய மசூதி ஒன்றையும் கட்டினார். இந்தியாவில் அராபிய நாணய முறையை அறிமுகப்படுத்தியவர் இல்துத்மிஷ். 175 கிராம் எடைகொண்ட வெள்ளி தாங்கா என்ற அவரது நாணயம் இடைக்கால இந்தியா முழுவதும் ஏற்கப்பட்டது. தற்காலத்திய ரூபாய்க்கு அவரது வெள்ளி நாணயமே அடிப்படை என்று கூறலாம். வலிமை வாய்ந்த நாற்பது படைத் தலைவர்கள் கொண்ட நாற்பதின்மர்குழு ஒன்றையும் இல்துத்மிஷ் உருவாக்கினார்.



இல்துத்மிஷின் வெள்ளி
தாங்கா நாணயம்

### ரசியா (1236 – 1240)

இல்துத்மிஷ் தனது புதல்வி ரசியாவை அரியணைக்கு வாரிசாக நியமித்திருந்தார். ஆனால் டெல்லியின் காஸி மற்றும் வாசிர் இருவரும் ருக்னுதுதீன் பிரோஸ் என்பவரை அரியணையில் அமர்த்தினர். முல்தானில் நடைபெற்ற கலகத்தை ஒடுக்குவதற்கு ருக்னுதீன் சென்றார். அத்தருணத்தை பயன்படுத்திக் கொண்ட ரசியா டெல்லியின் அமீர்கள் ஆதரவோடு அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார். அபிசீனிய அடிமையான யாகூத் என்பவரை குதிரைப் படைத் தலைவனாகவும் நியமித்தார். ஆணுடை தரித்து அரசவையில் ரசியா அமர்ந்தார். வேட்டைக்குச் செல்வது, படைநடத்துவது உள்ளிட்ட செயல்களிலும் ரசியா ஈடுபட்டார். இதனைக் கண்டு துருக்கிய உயர்குடியினர் வெகுண்டனர். 1240 ஆம் ஆண்டு அல்தூனியா என்ற படிண்டாவின் ஆளுநர் ரசியாவுக்கெதிராக கிளர்ச்சியிலீடுபட்டார். ரசியா தானே படைநடத்திச் சென்று கிளர்ச்சியை நசுக்க முற்பட்டார். ஆனால், அல்தூனியா யாகூத்தைக் கொன்று ரசியாவை சிறைப்படுத்தினார். இதற்கிடையில் துருக்கிய உயர்குடியினர் இல்துத்மிஷின் மற்றொரு மகனான பஹ்ரம் என்பவரை அரியணையில் அமர்த்தினர். சிறையிலிருந்த ரசியா அல்தூனியாவின் அன்பைப் பெற்று அவரது துணையோடு டெல்லி நோக்கி சென்றார். ஆனால், ரசியா தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.



ரசியாவின் வீழ்ச்சி நாற்பதின்மர் குழுவின் எழுச்சிக்கு வழிவகுத்தது. அடுத்த ஆறு ஆண்டுகள் பஹ்ரம் மற்றும் மசூத் இருவரும் டெல்லியை ஆண்டனர். சுல்தான்களுக்கும் உயர்குடியினருக்குமிடையே பூசல்கள் தோன்றின. 1246ல் பால்பன் இல்துத்மிஷின் இளைய மகனான நசிருதீன் முகமதுவை சுல்தானாக நியமித்தார்.

### பால்பனது ஆட்சிக்காலம் (1246 – 1287)

உலுக்கான் என்றழைக்கப்பட்ட பால்பன் சுல்தான் நசிருதீன் முகமதுவின் நாயப் அல்லது அரசப்பிரதியாக செயல்பட்டார். தனது மகளை சுல்தானுக்கு மணமுடித்துக் கொடுத்து அவரது வலிமையையும் பெருக்கிக் கொண்டார். ஆட்சித்துறையை பால்பன் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இருப்பினும் அரசவையில் அவருக்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. அவற்றை அவர் சாமர்த்தியமாக முறியடித்தார். 1266ல் நசிருதீன் முகமது வாரிசு ஏதுமின்றி இறந்துவிடவே பால்பன் அரியணையேறினார்.

அரசப் பிரதியாக செயல்பட்ட அனுபவம் பால்பனுக்கு டெல்லி சுல்தானியத்தின் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள ஏதுவாயிற்று. நாற்பதின்மர் குழுவிலிருந்த உயர்குடியினரே தமக்கு எதிரிகள் என்பதை அவர் உணர்ந்திருந்தார். சுல்தானின் அதிகாரத்தையும், மதிப்பையும் கூட்டுவதன் மூலமே பிரச்சைகளுக்குத் தீர்வு காண முடியும் என அவர் நம்பினார். பால்பனது கருத்துப்படி 'அரசன் இறைவனது நிழல் போன்றவன்', 'இறைவனால் பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டவன்'. எனவே, பால்பன் தீவிரமான அரசவை நடைமுறைகளை அறிமுகப்படுத்தினார். சுல்தான் முன்பு மண்டியிட்டு வணங்கி காலைத்தொட்டு முத்தமிடுதல் என்ற வழக்கத்தை பின்பற்றச் செய்தார். இதனால், உயர் குடியினரைவிட சுல்தான் உயர்ந்தவர் என்பது உணர்த்தப்பட்டது. தனது செல்வத்தையும் வலிமையையும் உயர்குடியினருக்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டும் விதத்தில் நவ்ரோஸ் என்ற பாரசீகத் திருவிழாவையும் ஆடம்பரமாக அவர் கொண்டாடினார். துருக்கிய உயர்குடியினரின் நலன் நாடுபவராக அவர் திகழ்ந்தார். பிற உயர்குடியினருடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள தயாராக இல்லை. இந்திய முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை அவர் வழங்கவில்லை. உயர்குடியினரின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு ஒற்றர்களையும் பால்பன் நியமித்தார்.

துருக்கிய உயர்குடியினர் இடம் பெற்றிருந்த நாற்பதின்மர் குழுவை ஒழிக்க அவர் முடிவுசெய்தார். தனக்குக் கீழ்ப்படிந்தவர்களை மட்டும்

விட்டுவிட்டு பிறரை ஒழித்துக் கட்டினார். பதுவான் மாகாண ஆளுநரான மாலிக் பக்பக் என்பவரை அவரது பணியாளர்களைத் துன்புறுத்தினார் என்ற காரணத்திற்காக பொது இடத்தில் வைத்து சவுக்கடி கொடுத்தார். அயோத்தியின் ஆளுநரான ஹேபத்கான் குடிபோதையிலிருந்தவனைக் கொன்றான் என்ற காரணத்துக்காக தண்டித்தார். படிண்டாவின் ஆளுநர் ஷெர்கான் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார். பால்பன் தனது அரசை விரிவுபடுத்துவதற்குப் பதில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலேயே அதிக கவனம் செலுத்தினார். திவானி அர்ஸ் என்ற ராணுவத் துறையை ஏற்படுத்தி ராணுவ நிர்வாகத்தை சீரமைத்தார். மேவாடிஸ் என்ற கொள்ளையர்களால் டெல்லியின் புறநகர் பகுதிகள் அடிக்கடி சூறையாடப்பட்டன. பால்பன் அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுத்து கொள்ளைகளைத் தடுத்தார். கொள்ளையர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர். இதனால் பயணம் செய்வோருக்கு சாலைகள் பாதுகாப்புமிக்கதாகத் திகழ்ந்தன.

1279 ஆம் ஆண்டு வங்காள ஆளுநர் துக்ரில்கான் பால்பனுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார். அக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவரது தலை துண்டிக்கப்பட்டது. வடமேற்கு இந்தியாவில் மங்கோலியர்கள் மீண்டும் படையெடுத்து வந்தனர். பால்பன் தனது மகன் இளவசரன் முகமது தலைமையிலான படைகளை மங்கோலியருக்கெதிராக அனுப்பி வைத்தார். ஆனால், முகமது போரில் கொல்லப்பட்டார். இந்நிகழ்ச்சி பால்பனுக்கு துயரத்தைக் கொடுத்தது. 1287ல் பால்பன் இறந்தார். டெல்லி சுல்தானியத்தின் எழுச்சிக்கு பால்பன் ஆற்றிய பங்கு மகத்தானது. முடியாட்சியின் வலிமையை அவர் பெருக்கினார். இருப்பினும் மங்கோலியப் படையெடுப்புகளிலிருந்து இந்தியாவை அவரால் முழுமையாக காப்பாற்ற முடியவில்லை.

பால்பன் மறைந்தவுடன் அவரது பேரன்களில் ஒருவரான கைக்குபாத் டெல்லி சுல்தானாக நியமிக்கப்பட்டான். அவனது நான்கு வருடகால திறமையற்ற ஆட்சிக்குப்பின் 1290 ஆம் ஆண்டு டெல்லி அரியணையை ஜலாலுதீன் கில்ஜி கைப்பற்றினார்.

**கில்ஜி வம்சம் (1290 – 1320)**

இந்தியாவில் முஸ்லீம் பேரரசு அதன் உச்சகட்டத்தை தொட்டது கில்ஜிகளின் ஆட்சிக் காலத்தில்தான். கில்ஜி வம்சத்தை நிறுவியவர் ஜலாலுதீன் கில்ஜி. ஆட்சிக்கு வந்தபோது அவருக்கு வயது எழுபது. கருணை




மனம் படைத்தவர். பால்பனின் மருமகனான மாலிக் சஜ்ஜு என்பவரை காராவின் ஆளுநராக தொடர்ந்து இருக்க அவர் அனுமதித்தார். அவரது தாராளமனதை சஜ்ஜு தவறாகப் புரிந்து கொண்டார். சஜ்ஜு கலகத்தில் இறங்கியபோது, கலகத்தை ஒடுக்கிய ஜலாலுதீன் அவரை மன்னிக்கவும் செய்தார். தக்கர்கள் நாட்டை கொள்ளையடித்து வந்தனர். அவர்களைக் கைப்பற்றிய சுல்தான் எச்சரித்து, மன்னித்து, விடுதலை செய்தார். 1292ல் மாலிக் சஜ்ஜு இரண்டாம் முறையாக கிளர்ச்சியிலீடுபட்டபோது அவரை நீக்கிவிட்டு, தனது மருமகன் அலாவுதீன் கில்ஜியை காராவின் ஆளுநராக நியமித்தார். 1296ல் அலாவுதீன் கில்ஜி தேவகிரிமீது படையெடுத்து ஏராளமான செல்வத்துடன் காரா திரும்பினார். அப்போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்ட மாமனாரும் சுல்தானுமான ஜலாலுதீன் கில்ஜியை சதிசெய்து கொன்றுவிட்டு அலாவுதீன் கில்ஜி டெல்லி அரியணயைக் கைப்பற்றினார்.

**அலாவுதீன் கில்ஜி (1296 – 1316)**


அலாவுதீன் கில்ஜி

டெல்லிக்கு வந்த அலாவுதீன் கில்ஜி தம்மை வெறுத்த உயர்குடியினருக்கும், டெல்லி அமீர்களுக்கும் ஏராளமான செல்வத்தை வாரிக் கொடுத்து அவர்களை தம்பக்கம் சாய்த்துக் கொண்டார். எஞ்சிய எதிர்ப்பாளர்களை கடுமையாக தண்டித்தார். உயர்குடியினரின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கு அவர் விதிமுறைகளை வகுத்தார். அவர்களிடமிருந்த அளவற்ற செல்வம், உயர்குடியினருக்கிடையே காணப்படும் மண உறவுகள், திறமையற்ற ஒற்றர்முறை, மது அருந்துதல் போன்றவையே கிளர்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணங்கள் என்று அலாவுதீன் கில்ஜி கருதினார். எனவே, அவர் நான்கு அவசர ஆணைகளை பிறப்பித்தார். உயர்குடியினரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒற்றர்முறையை செம்மையாக சீரமைத்தார். உயர் குடியினரின் ரகசிய நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக சுல்தானின் கவனத்திற்கு வரும்படி செய்தார். மது விற்பனையும், போதை மருந்தும் தடை செய்யப்பட்டன. சுல்தானின் அனுமதியின்றி விழாக்களும் கேளிக்கைகளும் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டன. இத்தகைய கடும் நடவடிக்கைகளினால் அவரது ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சிகள் தவிர்க்கப்பட்டன.






**அலாவுதீன் கில்ஜியின் சீர்திருத்தங்கள்**

அலாவுதீன் கில்ஜி நிலையான பெரும்படையை வைத்திருந்தார். படைவீரர்களுக்கு ஊதியம் அரசுக் கருவூலத்திலிருந்து பணமாக செலுத்தப்பட்டது. பெரிஷ்டாவின் கூற்றுப்படி அலாவுதீன் கில்ஜி 4,75,000 குதிரை வீரர்களை பணியில் அமர்த்தியிருந்தார். குதிரைகளுக்கு 'தாக்' எனப்படும் சூடுபோடும் முறையையும் அவர் அறிமுகப்படுத்தினார். ஹுலியா என்ற படை வீரர்களின் பட்டியலும் தயாரிக்கப்பட்டது. அதிகபட்ச திறமையை உறுதிப்படுத்தும் பொருட்டு, ராணுவத்தின் அமைப்பு அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது.

படை வீரர்களுக்கு ஊதியம் பணமாக அளிக்கப்பட்டதால் பொருட்களின் விலைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டியதாயிற்று. இதனால் அங்காடி சீர்திருத்தங்களை அலாவுதீன் கில்ஜி மேற்கொண்டார். டெல்லியில் அவர் நான்கு தனித்தனி அங்காடிகளை நிறுவினார் – 1. தானியங்கள் 2. துணிமணிகள், சர்க்கரை, உலர்ந்த பழங்கள், எண்ணெய் வகைகள் 3. குதிரைகள், அடிமைகள், ஆடு மாடுகள் 4. பலவிதமான பொருட்கள்.

ஒவ்வொரு அங்காடியும் சஹானா–இ–மண்டி என்ற உயர் அதிகாரியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டது. தானியங்கள் தங்குதடையின்றி கிடைக்கும் விதத்தில் அரசு தானியக் கிடங்குகளில் போதிய இருப்பு வைக்கப்பட்டது. அனைத்து வகை பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்து அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதற்கென திவானி ரியாசத் என்ற தனித்துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நாயப்–இ–ரியாசத் என்ற அதிகாரியின்கீழ் அத்துறை செயல்பட்டது. ஒவ்வொரு வணிகரும் அத்துறையில் பதிவு செய்திருக்கவேண்டும். இந்த அங்காடிகள் செயல்படும் விதம் பற்றி சுல்தானுக்கு ரகசிய அறிக்கைகளை அனுப்புவதற்கு முன்ஹியான்கள் என்ற ரகசிய முகவர்கள் இருந்தனர். பல்வேறு பொருட்களின் விலை மற்றும் எடையை சரிபார்ப்பதற்கு சுல்தான் தனது அடிமைச் சிறுவர்களை அங்காடிகளுக்கு அனுப்பி பொருட்களை வாங்கிவரச் செய்வது வழக்கம். அங்காடி விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. கடைக்காரர் அதிக விலைக்கு விற்றாலோ, எடை குறைவாக இருந்தாலோ கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. பஞ்ச காலங்களில்கூட ஒரே விலை என்பது உறுதி செய்யப்பட்டது. டெல்லியில் நடைமுறையிலிருந்த அங்காடி விதிமுறைகள் மாகாண தலைநகரங்களிலும், பிற நகரங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்று தெரியவில்லை.

அங்காடி சீர்திருத்தங்கள் தவிர நிலவருவாய் நிர்வாகத்திலும் அலாவுதீன் கில்ஜி கவனம் செலுத்தினார். நில அளவைக்கு ஏற்பாடு செய்த முதலாவது டெல்லி சுல்தான் அவரே. பெரும் நிலச்சுவான்தார்களும் நிலவரி செலுத்துவதிலிருந்து தப்ப முடியவில்லை. படைவீரர்களுக்கு ஊதியம் வழங்க வசதியாக, நிலவரி பெரும்பாலும் பணமாகவே வசூலிக்கப்பட்டது. வருங்காலத்தில் ஷெர்ஷா, அக்பர் போன்றோர் மேற்கொண்ட நிலவருவாய் சீர்திருத்தங்களுக்கு அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

**படையெடுப்புகள்**


மங்கோலியருக்கெதிராக அலாவுதீன் கில்ஜி ஆறுமுறை படைகளை அனுப்பி வைத்தார். ஆனால், மூன்றாவது படையெடுப்பின்போது மங்கோலியத் தலைவர் குவாஜா டெல்லிவரை முன்னேறினார். இருப்பினும் தலைநகருக்குள் நுழையாமல் தடுக்கப்பட்டார். அடுத்த படையெடுப்புகள் மூன்றிலும் மங்கோலியர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். வடமேற்கு எல்லைப்புறத்தில் கோட்டைகள் கட்டப்பட்டன. அங்கு பாதுகாப்புக்கான படைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.



ராணி பத்மினி

குஜராத், மேவார், தக்காணம் ஆகியவற்றின் மீது அலாவுதீன் கில்ஜி மேற்கொண்ட படையெடுப்புகள் குறிப்பிடத்தக்கவை. 1299ல் நுஸ்ரத்கான், உலுக்கான் இருவரையும் குஜராத்தைக் கைப்பற்றும்படி அனுப்பிவைத்தார். மன்னரும் அவரது மகளும் தப்பிவிட்ட போதிலும், அரசி மட்டும் கைது செய்யப்பட்டு டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குஜராத் படையெடுப்பின்போதுதான் காபூர் என்ற அலி கைப்பற்றப்பட்டு டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டான். அவனுக்கு மாலிக் நாயப் பதவி வழங்கப்பட்டது. 1301ல் அலாவுதீன் கில்ஜி ராந்தம்பூருக்கு எதிராக போர் தொடுத்தார். மூன்று மாத முற்றுகைக்குப்பின் அது வீழ்ந்தது. ரஜபுத்திரப் பெண்கள் 'ஜவுஹர்' என்ற வழக்கப்படி தீக்குளித்து மாண்டனர். அலாவுதீனின் அடுத்த இலக்கு சித்தூர். ராஜஸ்தானில் வலிமையான அரசு அது. ராஜா ரத்தன்சிங்கும் அவனது வீரர்களும் வீரத்துடன் போரிட்டனர். ஆனால் அடிபணிந்தனர். ராணி பத்மினி உள்ளிட்ட ரஜபுத்திர மகளிர் தீக்குளித்தனர். பத்மினி கதையை பத்மாவத் என்ற நூலில் ஜெயசி அழகாக விளக்கியுள்ளார்.





அலை தர்வாசா

அலாவுதீன் கில்ஜியின் தக்காணப் படையெடுப்பும் தென்னிந்திய வெற்றிகளும் குறிப்பிடத்தக்கவை. தெற்கில் நான்கு முக்கிய அரசுகள் இருந்தன. தேவகிரி யாதவர்கள், வாரங்கல் காகதீயர்கள், துவார சமுத்திரத்தில் ஹோய்சளர்கள் மற்றும் மதுரைப் பாண்டியர்கள். தேவகிரி அரசர் ராமச்சந்திர தேவருக்கு எதிராக மாலிக் காபூரை அலாவுதீன் கில்ஜி அனுப்பி வைத்தார். அடிபணிந்த அந்நாட்டு அரசர் ஏராளமான செல்வத்தை திறையாகவும் செலுத்தினார். 1309ல் மாலிக் காபூர் வாரங்கல்மீது படையெடுத்தார். அதன் அரசர் பிரதாப ருத்ரதேவன் முறியடிக்கப்பட்டான். ஏராளமான செல்வம் கைப்பற்றப்பட்டது. மாலிக் காபூரின் அடுத்த இலக்கு துவார சமுத்திர அரசன் மூன்றாம் வீரவல்லாளன். அவனும் தோற்கடிக்கப்பட்டு பெருத்த செல்வம் கைப்பற்றப்பட்டு டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாலிக் காபூர் பின்னர் மதுரைமீது படையெடுத்தார். தலைநகர் மதுரையைவிட்டு வீரபாண்டியன் தப்பியோடினான். காபூர் பெரும் செல்வத்தை கைப்பற்றி எடுத்துக் கொண்டு டெல்லி திரும்பினார்.

1316ல் அலாவுதீன் கில்ஜி இறந்தார். அவர் எழுத்தறிவில்லாதவராக இருந்த போதிலும், அமீர் குஸ்ரு, அமீர் ஹாசன் போன்ற கவிஞர்களை ஆதரித்தார். புதிய தலைநகர் சீரி மற்றும் புகழ்வாய்ந்த நுழைவாயிலான 'அலை தர்வாசா' என்ற கட்டிடத்தையும் அவர் கட்டினார். அலாவுதீன் கில்ஜியைத் தொடர்ந்து முபாரக் ஷா, குஸ்ருஷா இருவரும் ஆட்சிக்கு வந்தனர். திபல்பூரின் ஆளுநரான காஸி மாலிக், குஸ்ருஷாவைக் கொன்றுவிட்டு 1320ல் கியாசுதீன் துக்ளக் என்ற பட்டத்துடன் டெல்லி அரியணையேறினார்.

**துக்ளக் வம்சம் (1320 – 1414)**

கியாசுதீன் துக்ளக் இவ்வம்சத்தை நிறுவியவர். அவர் தனது மகன் ஜீனாகான் என்பவரை வாரங்கல்லுக்கெதிராக படையுடன் அனுப்பி வைத்தார். பிரதாபருத்ரனை முறியடித்து பெரும் பொருளுடன் ஜீனாகான் நாடு திரும்பியவுடன் தனது தந்தையை சதி செய்து கொன்றுவிட்டு 1325 ஆம் ஆண்டு முகமது பின் துக்ளக் என்ற பட்டத்துடன் அரியணையேறினார். கியாசுதீன் தனது ஆட்சிக் காலத்தில் டெல்லிக்கு அருகில் துக்ளகாபாத் நகருக்கு அடிகோலினார்.

## முகமது பின் துக்ளக் (1325 – 1351)

இடைக்கால இந்திய வரலாற்றில் தனிச்சிறப்பான குணம் கொண்டவராக முகமது பின் துக்ளக் விளங்கினார். அவரது பேரவாமிக்க திட்டங்களும் புதிய பரிசோதனைகளும் பெரும் தோல்வியடைந்தன. ஏனெனில் அவை அக்காலத்திற்கு ஒவ்வாதிருந்தன. சமய விவகாரங்களில் சகிப்புத் தன்மையுடனேயே அவர் நடந்து கொண்டார். எகிப்து, சீனா, ஈரான் போன்ற தொலைதூர நாடுகளுடன் அவர் அரசியல் உறவுகளை வைத்திருந்தார். பல்வேறு நலம் பயக்கும் தாரள சீர்திருத்தங்களையும் அவர் அறிமுகப்படுத்தினார். ஆனால், அவரது அனைத்து சீர்திருத்தங்களும் தோல்வியிலேயே முடிந்தன. அவரது சமகால எழுத்தாளர்களான ஈசாமி, பரானி, இபன் பதூதா போன்றவர்கள்கூட துக்ளக்கின் ஆளுமை குறித்து தெளிவாக குறிப்பிடவில்லை. ஆனால், சிறந்த இலக்கிய, சமய மற்றும் தத்துவக் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றிருந்த ஒரே டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக்.

### தலைநகர் மாற்றம்

முகமது பின் துக்ளக், தேவகிரியை தனது இரண்டாவது தலைநகராக்க விரும்பினார். தென்னிந்தியாமீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதே அவரது நோக்கம். 1327 ஆம் ஆண்டு அதற்கான விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டார். அரசவை, உலேமாக்கள், சூஃபித்துறவிகள் டெல்லியிலிருந்து இடம் பெயர்வதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேவகிரிக்கு, தௌலதாபாத் என்றும் பெயரிடப்பட்டது. புதிய தலைநகருக்கு செல்ல மறுத்தவர்கள்மீது சுல்தான் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். இதனால், டெல்லி மக்கள் பெரும் துன்பங்களுக்களாயினர். இவ்விரு இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 1500 கிலோ மீட்டர்களாகும். கோடைக் காலத்தில் மேற்கொண்ட கடுமையான பயணம் பலரை பலி கொண்டது. இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு சுல்தான் தௌலாதாபாத்தைக் கைவிட்டு, மீண்டும் அனைவரையும் டெல்லிக்கு திரும்புமாறு பணித்தார்.



முகமது பின் துக்ளக்கின்
செப்பு நாணயங்கள்

### அடையாள நாணயம்

1329 - 30 ஆண்டுகளில் முகமது பின் துக்ளக் அடையாள நாணயத்தை



அறிமுகப்படுத்தினார். பதினான்காம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் வெள்ளிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அடையாள நாணயம் என்பது புதியதல்ல. ஏற்கனவே சீனாவில் குப்ளாய்கான் காகிதப் பணத்தை வெளியிட்டிருந்தார். அதே முறையில்தான், துக்ளக் வெள்ளி தாங்கா நாணயங்களுக்குப் பதில் செப்பு நாணயங்களை வெளியிட்டார். ஆனால், போலி நாணயங்களை தடைசெய்ய அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. பொற்கொல்லர்கள் பெருத்த அளவில் போலி நாணயங்களை உற்பத்தி செய்தனர். இதனால், அங்காடிகளில் புதிய நாணயங்களை வாங்க மறுத்தனர். இறுதியாக, முகமது பின் துக்ளக் அடையாள நாணயம் வெளியிடுவதை நிறுத்திவிட்டு, செப்பு நாணயங்களை வெள்ளி நாணயங்களாக அரசுக் கருவூலத்தில் மாற்றிக் கொள்ளலாம் என அறிவித்தார். இதனால் கருவூலம் காலியாகிற்று. பரானியின் கூற்றுப்படி துக்ளகாபாத் தெருக்களில் செப்பு நாணயங்கள் குவியல் குவியலாக காணப்பட்டன.

### தோ ஆப் பகுதியில் வரி விதிப்பு

சுல்தான் நடைமுறைப்படுத்திய இவ்விரண்டு திட்டங்களும் படுதோல்வியடைந்தன. அவரது கௌரவம் பாதிக்கப்பட்டதோடு, நிதிச்சிக்கலும் ஏற்பட்டது. எனவே, முகமது பின் துக்ளக் தோஆப் பகுதி குடியானவர்களின் நிலவரியை உயர்த்தினார். (தோ ஆப் என்பது கங்கை – யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியாகும்). அப்போது, கொடிய பஞ்சமும் அப்பகுதியில் தலை விரித்தாடியது. எனவே, வரிச் சுமையை தாங்கமாட்டாத குடியானவர்கள் நிலங்களை விட்டுவிட்டு ஓடத் தொடங்கினார்கள். ஆனால் முகமது பின் துக்ளக் அவர்களைக் கைப்பற்றி கடுமையாகத் தண்டித்தார். கலவரம் ஒடுக்கப்பட்டது.

### வேளாண் சீர்திருத்தங்கள்

நிவாரண நடவடிக்கை வழங்குவதும், வேளாண்மையை முன்னேற்றுவதுமே பிரச்னைக்கு தீர்வாக இருக்க முடியும் என்பதை சுல்தான் தாமதமாகவே உணர்ந்தார். குடியானவர்கள் விதைகள் வாங்கவும் வேளாண்மையைப் பெருக்கவும் தக்காவிக் கடன்கள் வழங்கும் திட்டத்தை சுல்தான் அறிவித்தார். திவானி கோஹி என்ற வேளாண்துறை ஒன்றையும் அவர் ஏற்படுத்தினார். எழுபது லட்ச ரூபாய் அரசு செலவில் 64 சதுர மைல் பரப்பில் மாதிரிப் பண்ணை ஒன்றையும் அவர் உருவாக்கினார். இத்திட்டம் பிரோஸ் துக்ளக் காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

### கிளர்ச்சிகள்

முகமது பின் துக்ளக் ஆட்சியின் பிற்பகுதியில் உயர்குடியினரும் மாகாண ஆளுநர்களும் பல்வேறு இடங்களில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். மதுரையில் ஹசன் ஷா கிளர்ச்சி செய்து சுதந்திர மதுரை சுல்தானியத்தை நிறுவினார். 1336ல் விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. 1347ல் பாமினி அரசு நிறுவப்பட்டது. அயோத்தி, முல்தான், சிந்து ஆகியவற்றின் ஆளுநர்களும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். குஜராத்தில் தகி மேற்கொண்டிருந்த கிளர்ச்சியை அடக்கச் சென்ற முகமது பின் துக்ளக் மூன்று ஆண்டுகள் அவனை விரட்டுவதில் செலவழித்தார். இதனால், நோய்வாய்ப்பட்ட அவர் 1351ல் இறந்தார். மக்களிடமிருந்து சுல்தானும், சுல்தானிடமிருந்து மக்களும் விடுதலை பெற்றதாக பதௌனி குறிப்பிட்டுள்ளார். பரானி என்ற எழுத்தாளர் அவரை முரண்களின் மொத்தக் கலவை என்று மதிப்பிட்டுள்ளார். டெல்லி சுல்தானியம் அவரது ஆட்சிக் காலத்திலிருந்து அழியத் தொடங்கியது.

### பிரோஸ் துக்ளக் (1351 – 1388)

1351ல் முகமது பின் துக்ளக் மறைந்தபின் பிரோஸ் துக்ளக்கை உயர்குடியினர் டெல்லி சுல்தானாக அமர வைத்தனர். தெலுங்கு பிராமண முஸ்லிமான கான்–இ–ஜஹான் மக்பால் என்பவரை வாசிர் (முதலமைச்சர்) பதவிக்கு பிரோஸ் துக்ளக் நியமித்தார். அவரது ஆலோசனைப்படி சுல்தான் ஆட்சி நடத்தி சுல்தானியத்தின் பெருமையைப் பாதுகாத்தார்.

### படையெடுப்புகள்

டெல்லி சுல்தானியம் சிதறிவிடாமல் காப்பாற்றுவதே பிரோஸ் துக்ளக்கின் தலையாய கடமையாக இருந்தது. தக்காணத்திலும் தென்னிந்தி யாவிலும் சுல்தானியத்தை விரிவுபடுத்துவதைவிட, வடஇந்தியாவில் அதன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே முயற்சித்தார். வங்காளத்திற்கெதிராக அவர் மேற்கொண்ட இரண்டு படையெடுப்புகளும் வெற்றியில் முடியவில்லை. டெல்லி சுல்தானியத்தின் பிடியிலிருந்து வங்காளம் நழுவியது. ஜஜ்நகர் (தற்கால ஒரிசா) மீது படையெடுத்துச் சென்ற பிரோஸ் ஷா பெரும் செல்வத்துடன் திரும்பினார். நாகர் கோட்மீது படையெடுத்து அதன் ஆட்சியாளரை திறை செலுத்தும்படி செய்தார். அப்படையெடுப்பின்போது ஜாவலமுகி ஆலய நூலகத்திலிருந்த 1300 வடமொழிச் சுவடிகளைக் கொண்டு வந்தார். அவற்றை



பாரசீக மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார். பின்னர், சிந்துப் பகுதியிலிருந்த தட்டா என்ற விடத்தில் நடைபெற்ற கிளர்ச்சியை ஒடுக்கினார்.

### ஆட்சித் துறை சீர்திருத்தங்கள்

பிரோஸ் துக்ளக்கின் ஆட்சியில் பல்வேறு ஆட்சித் துறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆட்சி நடத்துவதில் உலேமாக்களின் ஆலோசனைப்படி நடந்து கொண்டார். உயர்குடியினரை ஆதரித்த அவர், அவர்கள் தங்களது சொத்துக்களை பரம்பரை வாரிசுகளுக்கு வழங்கவும் அனுமதித்தார். இக்தா முறை மீண்டும் கொண்டு வரப்பட்டது. வாரிசுகளுக்கும் அவை சென்றுசேர வழிவகுக்கப்பட்டது. இஸ்லாமியச் சட்டப்படி அவர் வரிகளை விதித்தார்.

முஸ்லிம் அல்லாதவர்கள்மீது ஜிஸியா வரி கட்டாயம் விதிக்கப்பட்டது. நீர்ப்பாசன வரி விதித்த முதல் சுல்தான் அவரே. அதேசமயம் நீர்ப்பாசனத்துக்காக பல கால்வாய்களையும் கிணறுகளையும் அமைத்துக் கொடுத்தார். சட்லஜ்முதல் ஹான்சி வரை 200 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்ட கால்வாயே அவற்றில் மிக நீளமானதாகும். யமுனா முதல் ஹிஸ்ஸா வரை மற்றொரு கால்வாய் வெட்டப்பட்டது. டெல்லியும் அதைச் சுற்றியுமிருந்த சுமார் 1200 பழத்தோட்டங்களிலிருந்தும் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இஸ்லாமிய சட்டத்தில் இடம் இல்லை என்பதால் 28 பொருட்கள்மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரிகளையும் சுல்தான் ரத்து செய்தார். கர்கானாக்கள் என்றழைக்கப்பட்ட அரண்மனைக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் அவர் ஏற்படுத்தினார். அவற்றில் ஆயிரக்கணக்கான அடிமைகள் வேலை செய்தனர். அவரது ஆட்சிக் காலத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட நகரங்கள் நிறுவப்பட்டன. டெல்லி செங்கோட்டைக்கு அருகே அமைக்கப்பட்ட பிரோசாபாத் நகரம் புகழ் மிக்கது. அது தற்காலத்தில் பிரோஸ் ஷா கோட்லா எனப்படுகிறது. ஜீம்மா மசூதி, குதுப்மினார் போன்ற பழைய சின்னங்களையும் அவர் செப்பனிட்டார்.

அனாதைகள் மற்றும் கைம்பெண்கள் நலனுக்காக திவானி கைரத் என்ற புதிய துறை ஒன்றும் உருவாக்கப்பட்டது. இலவச மருத்துவமனைகளும், ஏழை முஸ்லிம்களுக்கு திருமண ஆலோசனை மையங்களும் ஏற்படுத்தப்பட்டன. பரானி, அபிப் போன்ற அறிஞர்களையும் பிரோஸ் துக்ளக் ஆதரித்தார். உலோமாக்களின் பேச்சை மதித்து நடந்த அவர் ஷியா

முஸ்லிம்களையும், சூஃபித் துறவிகளையும் சமய சகிப்புத் தன்மையுடன் நடத்தத் தவறினார். இந்துக்களை இரண்டாம் தர குடிமக்களாகவேக் கருதி ஜிஸியா வரியை கட்டாயமாக்கினார்.

இந்தமட்டில் அவர் வருங்கால சிக்கந்தர் லோடி, அவுரங்கசீப் ஆகியோருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். தோற்கடிக்கப்பட்ட வீரர்களை அடிமைகளாக்கியதால், அவரது ஆட்சியின்போது அடிமைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து எண்பதாயிரத்தைத் தாண்டியது. 1388ல் பிரோஸ் இறந்தபோது, சுல்தானுக்கும் உயர்குடியினருக்குமிடையிலான பூசல்கள் மீண்டும் தலையெடுத்தன. பிரோஸ் துக்ளக் உருவாக்கிய அடிமைகளின் கிளர்ச்சியை அவருக்குப்பின் வந்த ஆட்சியாளர்கள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

அடுத்த சில ஆண்டுகளில் டெல்லி சுல்தானியம் சிதைந்தது. மாளவம், குஜராத் போன்ற மாகாணங்கள் விடுதலையை அறிவித்துக் கொண்டன. 1398 ஆம் ஆண்டு நடைபெற்ற தைமூரின் படையெடுப்பு நிலைமையை மேலும் மோசமாக்கியது. டெல்லிக்குள் தைமூர் நுழைந்தபோது எதிர்ப்பதற்கு எவருமில்லை. மூன்று நாட்கள் டெல்லியை சூறையாடிய தைமூர் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று ஏராளமான செல்வத்தை கொள்ளையிட்டார். 1399ல் அவர் இந்தியாவை விட்டகன்றார். தைமூரின் படையெடுப்பு துக்ளக் வம்ச ஆட்சிக்கு பேரிடியாக அமைந்தது.

**சையதுகள் (1414 – 1451)**

தைமூர் இந்தியாவை விட்டுச் செல்லுமுன்பு, கிசிர்கான் என்பவரை முல்தானின் ஆளுநராக நியமித்திருந்தார். 1414ல் கிசிர்கான் டெல்லியைக் கைப்பற்றி சையது மரபைத் தோற்றுவித்தார். டெல்லி சுல்தானியத்தை மீண்டும் நிலைப்படுத்த அவர் முயன்றார். ஆனால் முடியவில்லை. 1421ல் அவர் மறைந்தபின் அவரது புதல்வன் முபாரக் ஷா ஆட்சிக்கு வந்தார். அடுத்து ஆட்சிக்கு வந்த முகமது ஷா தமக்கெதிரான சதிகளை முறியடிப்பதிலேயே காலம் கழித்தார். அமைச்சர் பஹ்லுல் லோடி ஆட்சியைப் பிடித்தார்.

**லோடிகள் (1451 – 1526)**

சையதுகளை அடுத்து ஆட்சிக்கு வந்த லோடிகள் ஆப்கானியர்கள். டெல்லியின் முதல் ஆப்கானிய ஆட்சியாளர் பஹ்லுல் லோடி. அவருக்கு முன்பு ஆட்சி செய்த அனைவரும் துருக்கியர்கள். 1489ல் அவர் மறைந்த பின் அவரது மகன் சிக்கந்தர் லோடி ஆட்சிக்கு வந்தார்.



லோடி ஆட்சியாளர்கள் மூவரில் சிக்கந்தர் லோடியே (1489 – 1517) புகழ்மிக்கவர். பீகார் முழுவதையும் அவர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார். பல ரஜபுத்திரத் தலைவர்களும் அவரால் முறியடிக்கப் பட்டனர். வங்காளத்தை தாக்கி அதன் ஆட்சியாளரை அடிபணியச் செய்தார். பஞ்சாப் முதல் பீகார் வரை தமது அரசை சிக்கந்தர் லோடி விரிவுபடுத்தினார். அவர் சிறந்த ஆட்சியாளரும்கூட. சாலைகள் பல அமைக்கப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இத்தகைய நற்குணங்கள் வாய்ந்த அவர் ஒரு சமய வெறியராகவும் இருந்தார். இந்துக்கள்மீது பல்வேறு கட்டுப்பாடுகளையும் விதித்தார். இருப்பினும், லோடி சுல்தான்களில் வலிமையும் அதிகாரமும் பெற்றுத் திகழ்ந்தவர் அவரே.

சிக்கந்தர் லோடிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அவரது மூத்த மகன் இப்ராஹிம் லோடி ஆணவமிக்கவர். அரசவையிலேயே உயர்குடியினரை அவர் அவமதித்தார். கலகம் செய்தவர்கள் கொல்லப்பட்டனர். அவரது சிற்றப்பா அலாவுதீன் கலகத்தில் ஈடுபட்டார். பஞ்சாபின் ஆளுநராக இருந்த தௌலத்கான் லோடியும் இப்ராஹிம் லோடியால் அவமதிக்கப்பட்டார். மனம் வெறுத்த தௌலத்கான் லோடி இந்தியாமீது படையெடுத்து வரும்படி பாபருக்கு அழைப்பு விடுத்தார். டெல்லிக்கு எதிராக படையெடுத்து வந்த பாபர் 1526 ஆம் ஆண்டு பானிப்பட்டுப் போரில் இப்ராஹிம் லோடியை முறியடித்துக் கொன்றார். ஆப்கானியர்களின் அரசு எழுபத்தி ஐந்து ஆண்டுகளே நீடித்தது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *1206 முதல் **1526** வரை டெல்லி சுல்தானியத்தின் அரசியல் வரலாறு.*
2. *அடிமை வம்ச சுல்தான்கள் – ஐபக், இல்துத்மிஷ், ரசியா, பால்பன் – அவர்களது சாதனைகள்.*
3. *கில்ஜி மரபு – அலாவுதீன் கில்ஜியின் போர் வெற்றிகளும், சீர்திருத்தங்களும்.*
4. *துக்ளக் மரபு – முகமது பின் துக்ளக்கின் சாதனைகள் ஆட்சித்துறை நடவடிக்கைகள்.*
5. *பிரோஸ் துக்ளக்கும் அவரது ஆட்சியும்.*
6. *சையதுகள், லோடிகள், டெல்லி சுல்தானிய ஆட்சி.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தாங்கா என்ற அராபிய நாணய முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்

அ. அலாவுதீன் கில்ஜி ஆ. இல்துத்மிஷ்

இ. முகமது பின் துக்ளக் ஈ. பிரோஸ் துக்ளக்

2. அலாவுதீன் கில்ஜி காலத்தில் தென்னிந்திய படையெடுப்புக்கு தளபதியாக இருந்தவர்

அ. அலாவுதீன் கில்ஜி ஆ. குத்புதீன் ஐபக்

இ. மாலிக் காபூர் ஈ. ஜலாலுதீன் கில்ஜி

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ராமச்சந்திர தேவர் ............ன் ஆட்சியாளர்.
2. பத்மாவத் என்ற நூலின் ஆசிரியர் ...........
3. ஜாவலமுகி ஆலய நூலகத்திலிருநூது வடமொழிச் சுவடிகளை எடுத்துச் சென்றவர் ..........
4. டெல்லி சுல்தானியத்தின கடைசி ஆட்சியாளர் ..........

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. முகமது பின் துக்ளக் | அ. அரசப் பதவி குறித்த கருத்து |
| 2. அலாவுதீன் கில்ஜி | ஆ. ஹசன் நிசாமி |
| 3. பால்பன் | இ. அங்காடி சீர்திருத்தக்கள் |
| 4. குத்புதீன் ஐபக் | ஈ. அடையாள நாணயம் |



**IV.** சரியான சொற்றொடரை தெரிவு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. அலாவுதீன் கில்ஜி திவானி–இ–கோஹி என்ற வேளாண் துறையை நிறுவினார்.

ஆ. அலை தர்வாசா நுழைவாயிலை கட்டியவர் முகமது பின் துக்ளக்.

இ. அனாதைகளுக்கும் கைம்பெண்களுக்கும் ஆதரவளிக்க திவானிகரத் என்ற புதிய துறையை பிரோஸ் துக்ளக் ஏற்படுத்தினார்.

ஈ. உயர் குடியினரையும், மக்களையும் வசீகரிப்பதற்காக பாரசீகத்திருவிழாவான நௌரஸ் திருவிழாவை இல்துத்மிஷ் அறிமுகப்படுத்தினார்.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. வங்காள ஆளுநர் துக்ரில்கான் பால்பனுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டான்.
2. அமீர் குஸ்ரு போன்ற புலவர்களை பிரோஸ் துக்ளக் ஆதரித்தார்.
3. பாபரை இந்தியாமீது படையெடுக்கும்படி தௌலத்கான் லோடி அழைப்பு விடுத்தார்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. ரசியா
2. நாற்பதின்மர் குழு
3. அடையாள நாணயம்
4. சையது கான்
5. லோடிகள்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. குத்புதீன் ஐபக்கின் சாதனைகளை மதிப்பிடுக.
2. அலாவுதீன் கில்ஜியின் அங்காடி சீர்திருத்தங்களை ஆய்க.
3. மாலிக் காபூரின் தென்னிந்திய படையெடுப்பு பற்றி குறிப்பு எழுதுக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. இல்துத் மிஷின் சாதனைகள் பற்றி ஒரு மதிப்பீடு தருக.
2. பால்பனின் ஆட்சி மற்றும் அரச பதவி குறித்த அவரது கருத்தை ஆய்க.
3. முகமது பின் துக்ளக்கின் ஆளுமையை மதிப்பிடுக.
4. பிரோஸ் துக்ளக்கின் சீர்திருத்தங்கள் பற்றி கட்டுரை வரைக.



# பாடம் – 17

## டெல்லி சுல்தானியத்தின்கீழ் இந்தியா

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *டெல்லி சுல்தானிய ஆட்சிமுறை*
2. *டெல்லி சுல்தானிய பொருளாதாரம்*
3. *சமூக வாழ்க்கை*
4. *கலை, கட்டிடக் கலை*
5. *இலக்கிய வளர்ச்சி*

டெல்லி சுல்தானியம் நிறுவப்பட்டு, நன்கு விரிவடைந்தபோது வலிமையும், திறமையும் மிக்க ஆட்சி முறையும் வளரத் தொடங்கியது. டெல்லி சுல்தானியம் அதன் உச்ச கட்டத்தில் இருந்தபோது அதன் ஆதிக்கம் தெற்கே மதுரை வரை இருந்தது. டெல்லி சுல்தானியம் வீழ்ச்சியடைந்த பிறகுகூட, அதன் ஆட்சி முறைக் கூறுகள் பிராந்திய அரசுகளிலும். பின்னர் முகலாயர் ஆட்சி முறையிலும் காணப்பட்டன.

இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு இஸ்லாமிய அரசாக டெல்லி சுல்தானியம் விளங்கியது. டெல்லி சுல்தான்கள் தங்களை காலிப்புகளின் பிரதிநிதிகளாக கருதிக் கொண்டனர். குத்பா என்ற வழிபாட்டு சடங்கின்போதும், நாணயங்களிலும் காலிப்பின் பெயர் இடம் பெற்றது. பால்பன் தம்மை கடவுளின் நிழல் என்று கூறிக் கொண்டாலும், நாணயங்களில் காலிப்பின் பெயரை பொறிக்கத் தவறவில்லை. இல்துத்மிஷ், முகமது பின் துக்ளக், பிரோஸ் துக்ளக் ஆகியோர் காலிப்பிடமிருந்து அனுமதிக் கடிதங்களையும் பெற்றனர்.

ஆட்சி முறையில் சுல்தானின் பதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ராணுவம், சட்டம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் அவரே இறுதி

முடிவுகளை எடுத்தார். அக்காலத்தில் தெளிவான வாரிசுரிமை முறை காணப்படவில்லை. அனைத்து ஆண்மக்களும் அரியணைக்குப் போட்டியிட்டனர். இல்துத் மிஷ் தனது புதல்வர்களை விட்டுவிட்டு மகள் ரசியாவை தனது வாரிசாக நியமித்தார். ஆனால், வாரிசுகளும், வாரிசுக்கான நியமினங்களும் உயர்குடியினரின் ஒப்புதலைப் பெற வேண்டியிருந்தது. அரியணைக்கு வாரிசுகளை நியமிப்பதில் சில சமயங்களில் உலேமாக்களும் முக்கிய பங்கு வகித்தனர். இருப்பினும், ராணுவ வலிமையே, வாரிசுரிமைப் போட்டியின்போது முக்கிய காரணியாக இருந்தது.

**மத்திய அரசாங்கம்**

ஆட்சித் துறையில் சுல்தானுக்கு உதவியாக பல்வேறு துறைகளும் அதிகாரிகளும் இருந்தனர். நாயப் என்ற பதவி மிகுந்த அதிகாரமுள்ளதாகும். சுல்தானைப் போல அனைத்து அதிகாரங்களையும் பெற்று விளங்கிய நாயப் அனைத்து துறைகளையும் தமது பொதுவான கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவருக்கு அடுத்த நிலையில் திவானி விசாரத் என்ற நிதித் துறைக்குப் பொறுப்பான வாசிர் என்ற அதிகாரி இருந்தார்.

ராணுவத் துறை திவானி அர்ஸ் என அழைக்கப்பட்டது. அரிஸ்–இ–முமாலிக் என்ற அதிகாரி அதன் தலைவர். படைவீரர்களை சேர்ப்பதும், ராணுவத்துறையை நிர்வகிப்பதும் அவரது பொறுப்பாகும். அவர் படைத் தளபதி அல்ல என்பதை குறிப்பிடவேண்டும். சுல்தானே படைக்குத் தளபதி ஆவார். பால்பன் ஆட்சிக் காலத்தில்தான் படைத்துறை உருவாக்கப்பட்டது. படையின் எண்ணிக்கை மூன்று லட்சத்தை தாண்டிய அலாவுதீன் கில்ஜி ஆட்சிக் காலத்தில் அத்துறை மேலும் விரிவுபடுத்தப்பட்டது. குதிரைகளுக்கு சூடுபோடும் முறையையும், வீரர்களுக்கான ஊதியத்தை பணமாக வழங்கும் முறையையும் அலாவுதீன் கில்ஜி அறிமுகப்படுத்தினார். டெல்லி சுல்தானியத்தில் குதிரைப் படைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

திவானி ரிசாலத் என்பது சமய விவகாரங்கள் துறை. அதன் தலைவர் சதர் என்ற அதிகாரி. மசூதிகள், கல்லறைகள் மற்றும் மதரசாக்கள் கட்டுவதற்கும், பராமரிப்பதற்கும் அந்த துறை மானியங்களை வழங்கியது. நீதித்துறையின் தலைவராக தலைமைக் காஸி இருந்தார். சுல்தானியத்தின் பல்வேறு பகுதிகளிலும் காஸிகள் அல்லது நீதிபதிகள் நியமிக்கப் பட்டிருந்தனர். உரிமையியல் குறித்த வழக்குகளில் இஸ்லாமிய தனி நபர்



சட்டம் அல்லது ஷாரியா பின்பற்றப்பட்டது. இந்துக்களுக்கு அவர்களது தனிச் சட்டம் வழக்கிலிருந்தது. அவர்களது வழக்குகளை பெரும்பாலும் கிராம பஞ்சாயத்துக்களே தீர்த்து வைத்தன. கிரிமினல் சட்டங்களைப் பொறுத்தவரை, அவ்வப்போது சுல்தான்கள் வெளியிடும் ஆணைகளும், விதிமுறைகளும் சட்டங்களாக பின்பற்றப்பட்டன. திவானி இன்ஷா என்பது போக்குவரத்துத் துறை. ஆட்சியாளருக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்துகளை அது கவனித்து வந்தது.

**உள்ளாட்சி நிர்வாகம்**

டெல்லி சுல்தானியத்தில் மாகாணங்கள் இக்தாக்கள் எனப்பட்டன. தொடக்கத்தில் அவை உயர்குடியினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆனால், மாகாண ஆளுநர்கள் முக்திகள் அல்லது வாலிஸ் என்று அழைக்கப்பட்டனர். சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பது, நிலவரி வசூலிப்பது அவர்களது முக்கிய பணியாகும். மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஷிக்தா என்ற மாவட்டங்களாகவும், ஷிக்தா ஒவ்வொன்றும் பல பர்கானாக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஷிக்தாரின் ஆட்சியாளர் ஷிக் எனப்பட்டார். பர்கானா ஒவ்வொன்றிலும் பல கிராமங்கள் இருந்தன. கிராமத்தின் தலைவர் அமில். ஆட்சியின் அடிப்படை அலகு கிராமம். கிராம கணக்கர் பட்வாரி என்பவராவார்.

**பொருளாதாரம்**

இந்தியாவில் தங்களது ஆட்சியை ஒருங்கிணைத்த பிறகு, டெல்லி சுல்தான்கள் நில வருவாய் நிர்வாகத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர். நிலங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

1. இக்தா – அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதிலாக அளிக்கப்பட்ட மான்யங்கள்.
2. காலிசா – சுல்தானின் நேரடி நிர்வாகத்தில் இருந்த நிலங்கள். அதிலிருந்து பெறப்பட்ட வருவாய் அரசவை செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட்டது.
3. இனாம் – சமயத் தலைவர்களுக்கும் – சமய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட நிலங்கள்.

பொதுவாக விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை குடியானவர்கள் வரியாக செலுத்தினர். சில சமயம் விளைச்சலில் சரிபாதிகூட வசூலிக்கப்பட்டது. வேறு பல வரிகளையும் அவர்கள் கட்ட வேண்டியிருந்த தால் வறுமை நிறைந்த வாழ்க்கையையே அவர்கள் வாழ வேண்டியதாயிற்று. அடிக்கடி தோன்றிய பஞ்சங்களால் அவர்களது நிலைமை மேலும் மோசமடைந்தது. இருப்பினும், முகமது பின் துக்ளக், பிரோஸ் துக்ளக் போன்ற சுல்தான்கள் நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுத்தும் தக்காவிக் கடன்களை வழங்கியும் வேளாண் உற்பத்தியைப் பெருக்க முயற்சித்தனர். பார்லிக்குப் பதில் கோதுமை போன்ற உயர்ந்தரக பயிர்களை பயிரிடும்படி அவர்கள் குடியானவர்களை ஊக்குவித்தனர். பிரோஸ் தோட்ட பயிர்களை ஊக்குவித்தார். முகமது பின் துக்ளக், திவானி கோஹி என்று தனியாக ஒரு வேளாண் துறையை ஏற்படுத்தினார்.

சுல்தானியர்கள் காலத்தில் நகர மயமாக்கம் மேலும் சூடுபிடித்தது. ஏராளமான பெருநகரங்களும், நகரங்களும் வளர்ச்சியடைந்தன. லாகூர், முல்தான், புரோச், அன்ஹில்வாரா, லக்னௌதி, தௌலதாபாத், டெல்லி, ஜான்பூர் என்பவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கீழை உலகில் டெல்லி மிகப்பெரிய நகரமாக விளங்கியது. அக்காலத்திய வாணிக வளர்ச்சி பற்றி சமகால எழுத்தாளர்கள் விவரித்துள்ளனர். பாரசீக வளைகுடாப் பகுதி, மேற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் போன்றவற்றுக்கு ஏராளமான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. முல்தானிகள் மற்றும் ஆப்கானிய முஸ்லிம்கள் கடல்கடந்த வாணிகத்தைக் கட்டுப்படுத்தினர். குஜராத் மார்வாரிகளும், முஸ்லிம் போரா வணிகர்களும் உள்நாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கினர். சாலைகள் அமைக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டதால் போக்குவரத்து செய்தித் தொடர்பு எளிமையாக இருந்தன. குறிப்பாக, அரசப் பெருவழிகள் நல்ல முறையில் இருந்தன. பெருவழித் தடங்களில் பயணிகள் இளைப்பாறுவதற்காக ஆங்காங்கே தங்கும் விடுதிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

அக்காலத்தில் பருத்தி மற்றும் பட்டுத் துணிகள் உற்பத்தி வளர்ச்சி பெற்றது. பட்டுப் புழு வளர்ப்பு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டதால் பிற நாடுகளிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்வது குறைந்தது. காகித உற்பத்தியும் வளர்ந்தது. 14 மற்றும் 15 நூற்றாண்டுகளிலிருந்தே காகிதம் பெருமளவு பயன்படுத்தப்பட்டது. தோல் பொருட்கள், உலோகப் பொருட்கள், கம்பள விரிப்புகள் போன்ற பிற தொழில்களும் நன்கு வளர்ச்சியடைந்தன.



சுல்தான் மற்றும் அவரது குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் அரசருக்கு சொந்தமான கர்கானாக்களில் (தொழிற்சாலைகளில்) உற்பத்தி செய்யப்பட்டன. தங்கம், வெள்ளியாலான விலையுயர்ந்த பொருட்களும் தங்க ஆபரணங்களும் அங்கு உற்பத்தியாகின. சுல்தான்களைப் பின்பற்றி உயர்குடியினரும் ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டனர். அவர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்டதால், செல்வத்தை ஏராளமாக சேர்த்தனர்.

டெல்லி சுல்தானிய ஆட்சிக் காலத்தில் நாணய முறையும் நன்கு வளர்ச்சி பெற்றது. இல்துத்மிஷ் பலவகையான வெள்ளி தாங்காக்களை வெளியிட்டார். கில்ஜிகள் காலத்தில் ஒரு வெள்ளி தாங்கா என்பது 48 ஜிடால்களைக் கொண்டதாகும். துக்ளக் ஆட்சிக் காலத்தில் அது 50 ஜிடால்களாக இருந்தது. அலாவுதீன் கில்ஜியின் தென்னிந்தியப் படையெடுப்புக்குப் பிறகு, தினார் எனப்படும் தங்க நாணயங்கள் புகழ்பெற்று விளங்கின. செப்பு நாணயங்கள் மிகக் குறைவாகவும், தேதிகள் இன்றியும் காணப்படுகின்றன. முகமது பின் துக்ளக் அடையாள நாணய முறையை பரிசோதித்ததோடு தங்கம், வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டார். அவை எட்டு வெவ்வேறு தங்கசாலைகளில் வார்க்கப்பட்டன. குறைந்தது 25 வகைப்பட்ட தங்க நாணயங்கள் அவரால் வெளியிடப்பட்டன.

**சமூக வாழ்க்கை**


டெல்லி சுல்தானியர் காலத்தில் இந்து சமுதாய அமைப்பில் ஒருசில மாறுதல்கள் காணப்பட்டன. சமுதாயத்தில் பிராமணர்கள் உயர்ந்த இடம் வகித்த பரம்பரை ஜாதிமுறை வழக்கத்திலிருந்தது. மகளிர் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். 'சதி' வழக்கமும் நடைமுறையிலிருந்தது. உயர் வர்க்க பெண்களிடையே பர்தா என்ற முகத்திரை அணியும் வழக்கமும், தனித்திருக்கும் வழக்கமும் காணப்பட்டது. இந்தியாவில் அராபியரும், துருக்கியரும் பர்தா முறையை அறிமுகப்படுத்தினர். பின்னர், வடஇந்தியாவில் உயர்ஜாதி இந்துப் பெண்களிடையே அவ்வழக்கம் பரவியது.

சுல்தானியர் காலத்தில் சமுதாயம் பல்வேறு இனங்களாக பிரிந்து கிடந்தது. துருக்கியர், ஈரானியர், ஆப்கன்கள், இந்திய முஸ்லிம்கள் தத்தம் தனிப்பட்ட அடையாளங்களை தக்கவைத்துக் கொண்டனர். அவர்களுக் கிடையே கலப்பு மணம் நடைமுறையில் இல்லை. கீழ்சாதியிலிருந்து முஸ்லிம்களாக மாறியவர்கள் சம அந்தஸ்துடன் நடத்தப்படவில்லை. முஸ்லிம் உயர்குடியினருக்கு அளிக்கப்பட்ட உயர் பதவிகள் இந்து

உயர்குடியினருக்கு மறுக்கப்பட்டன. இந்துக்கள் ‘சிம்மிக்கள்’ அல்லது பாதுகாக்கப்பட்ட குடிகள் எனக் கருதப்பட்டனர். அவர்கள் ஜிசியா வரியை கட்டாயம் செலுத்த வேண்டியிருந்தது. தொடக்கத்தில் நிலவரியுடன் சேர்த்து ஜிசியா வரி வசூலிக்கப்பட்டது. பிரோஸ் துக்ளக் அதைத் தனியாகப் பிரித்து, ஜசியா வரியை தனியாக வசூலிக்க நடவடிக்கை எடுத்தார். சில சமயங்களில் பிராமணர்களுக்கு ஜிசியா வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**கலை, கட்டிடக்கலை**

டெல்லி சுல்தானியத்தின் கலை, கட்டிடக்கலை, இந்தியப் பாணியிலிருந்து மாறுபட்டிருந்தது. வளைவுகள், குவிமாடங்கள், உயர்ந்த கோபுரங்கள் அல்லது மினாரட்டுகள் அராபிய எழுத்துக்களாலான அலங்கார வடிவமைப்புகள் போன்றவற்றை துருக்கியர்கள் அறிமுகப்படுத்தினர். இந்திய சிற்பிகளின் திறமைகளை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். சிகப்பு, மஞ்சள் நிறங்களாலான பளிங்குக் கற்களையும், மணற்பாறைகளையும் பயன்படுத்தி கட்டிடங்களை அவர்கள் பல வண்ணங்களில் அமைத்தனர்.


குவாத் உல் இஸ்லாம் மசூதி

தொடக்கத்தில் கோயில்களையும் பிற கட்டிடங்களையும் உடைத்து அவற்றை மசூதிகளாக மாற்றியமைத்தனர். எடுத்துக்காட்டாக, டெல்லி குதுப்மினாருக்கு அருகிலுள்ள குவாத் உல் இஸ்லாம் மசூதி பல்வேறு இந்து மற்றும் சமணக் கோயில்களை அழித்து அந்தப் பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும். ஆனால், பின்னர் புதிய கட்டிடங்களையும் அவர்கள் கட்டத் தொடங்கினர். பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகவும் பிராமாண்டமான கட்டிடம் குதுப்மினார். அது ஐபக்கால் தொடங்கப்பட்டு, இல்துத்மிஷால் கட்டி முடிக்கப்பட்டது. எழுபத்தியொரு மீட்டர் உயரமுள்ள அந்த கோபுரம் சூஃபித் துறவி குத்புதூன் பக்தியார் காகி என்பவரது நினைவாக எழுப்பப்பட்டது. கட்டிடத்திலிருந்து சற்று வெளியே நீட்டபட்டுள்ள பார்வையாளர் மாடங்கள் அக்கால கட்டிடக் கலையின் சிறப்புக்கு சான்றாகத் திகழ்கின்றன. பின்னர், குதுப்மினாருக்கு அலாவுதீன் கில்ஜி அலை தர்வாசா என்ற நுழைவாயிலை அமைத்தார். அதன் குவிமாடம் அறிவியல் பூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளது.



வளைவுகளும் குவிமாடங்களும் கலந்து கட்டப்பட்ட கட்டிட அமைப்புகளை துக்ளக்குகள் உருவாக்கினர். விலை குறைவானதும் எளிதாக கிடைக்கக் கூடியதுமான சாம்பல் நிலப் பாறைக் கற்களையும் அவர்கள் பயன்படுத்தினர். கியாசுதீன் துக்ளக் காலத்தில் துக்ளகாபாத் அரண்மனை வளாகம், அதனுள் அமைந்துள்ள அழகிய ஏரி ஆகியன அமைக்கப்பட்டன. உயர்ந்த மேடைமீது கியாசுதீனின் கல்லறையை முகமது பின் துக்ளக் அமைத்தார். டெல்லியிலுள்ள கோட்லா கோட்டை பிரோஸ் துக்ளக்கின் படைப்பாகும். லோடிகளின் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக டெல்லியிலுள்ள லோடி தோட்டங்களைக் கூறலாம்.

**இசை**

சாரங்கி, ரபாப் போன்ற புதிய இசைக் கருவிகள் அக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. கோரா, சானம் போன்ற பல புதிய ராகங்களை அமிர் குஸ்ரு அறிமுகம் செய்தார். இந்து மற்றும் ஈரானிய முறைகளை ஒன்றிணைத்து குவாலிஸ் என்ற புதிய வகை மெல்லிசைகளையும் அவர் உருவாக்கினார். சிதார் இசைக் கருவியும் அவரது கண்டுபிடிப்பே என்றும் கூறுவர். பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் ராகதர்பண் என்ற இந்திய இசைநூல் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. பீர்போதன் என்ற சூஃபித்துறவி அக்காலத்திய புகழ்மிக்க இசைமேதைகளில் ஒருவர். குவாலியரைச் சேர்ந்த ராஜா மன்சிங் சிறந்த இசைப்பிரியர். மன் கவுத்துகல் என்ற இசை நூல் தொகுக்கப்படுவதற்கு அவர் பெரும் ஊக்கமளித்தார்.

**இலக்கியம்**

டெல்லி சுல்தான்கள் கல்வி, இலக்கியத்தையும் போற்றி வளர்த்தனர். அவர்களில் பலர் அராபிய மற்றும் பாரசீக மொழிகளை நேசிப்பவர்களாக இருந்தனர். பாரசீகத்திலிருந்து பல அறிஞர்கள் இந்தியாவிற்கு வந்தனர். ஆட்சியாளர்கள் பாரசீக மொழியை பெரிதும் ஊக்குவித்தனர். சமயவியல், கவிதை தவிர வரலாறு எழுதுவதையும் அவர்கள் பெரிதும் ஆதரித்தனர். ஒருசில சுல்தான்களின் அரசவையில் வரலாற்று அறிஞர்களும் இடம் பெற்றிருந்தனர். ஹசன் நிசாமி, மின் ஹஜ்–உஸ்–சிராஜ், சியாவுதீன்


அமீர் குஸ்ரு

பரானி, ஹம்ஸ்–சிராஜ் அபிப் ஆகியோர் அக்காலத்திய புகழ்மிக்க வரலாற்று அறிஞர்கள். துக்ளக் வம்சத்தின் வரலாற்றை பரானி, தாரிகி பிரோஸ் ஷாஹி என்ற பெயரில் எழுதினார். 1260 ஆண்டு வரையிலான முஸ்லிம் அரச குலங்களின் வரலாற்றை தபாகத்–இ–நசாரி என்ற பெயரில் மின்ஹஜ்–உஸ்–சிராஜ் எழுதினார்.

அமிர்குஸ்ரு அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த பாரசீக அறிஞர். ஏராளமான பாடல்களை எழுதியுள்ள அவர், பல்வேறு கவிதை வடிவங்களை பரிசோதித்து, சபாக்–இ–இந்த் என்ற இந்தியப் பாணியிலான பாரசீக கவிதை வடிவத்தை உருவாக்கினார். சில இந்திப் பாடல்களையும் அவர் எழுதியுள்ளார். அமிர் குஸ்ரு அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகளைக் கூறும் காசெய்ன்–உல்–ஃபுரூ என்ற நூலையும் எழுதியுள்ளார். அவரது புகழ்பெற்ற நூலான துக்ளக் நாமா கியாசுதீன் துக்ளக்கின் எழுச்சியை விவரிக்கிறது.

வடமொழியும், பாரசீக மொழியும் டெல்லி சுல்தானியத்தின் இணைப்பு மொழிகளாகத் திகழ்ந்தன. வடமொழிக் கதைகள் பலவற்றை பாரசீக மொழியில் முதன்முதலில் மொழி பெயர்த்தவர் நக் ஷபி. துது நாமா அல்லது கிளிமொழி என்ற புகழ்பெற்ற நூல் துருக்கி மொழியிலும் பின்னர் பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. காஷ்மீர் அரசர் ஜெயினுலாபதீன் ஆட்சிக் காலத்தில் கல்ஹணர் ராஜதரங்கிணியைப் படைத்தார். பல்வேறு மருத்துவம் மற்றும் இசை தொடர்பான நூல்களும் பாரசீக மொழியில் மொழியாக்கம் பெற்றன.

அல்பரூனி எழுதிய கிதாப்–உல்–இந்த் அராபிய மொழியில் படைக்கப்பட்ட புகழ்பெற்ற நூலாகும். பிராந்திய மொழிகளும் அக்காலத்தில் வளர்ச்சியடைந்தன. சந்த் பராடி அக்காலத்திய சிறந்த இந்திக் கவிஞர். வங்காள இலக்கியமும் வளர்ச்சியடைந்தது. நுஸ்ரத் ஷா மகாபாரத்தை வங்காளத்தில் மொழிபெயர்ப்பதற்கு உறுதுணையாக இருந்தார். குஜராத்தி மற்றும் மராத்தி மொழிகள் வளர்வதற்கு பக்தி இயக்கம் வழிவகுத்தது. விஜயநகரப் பேரரசு தெலுங்கு மற்றும் கன்னட மொழி இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உதவியது.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *டெல்லி சுல்தானியத்தின் மத்திய, மாகாண ஆட்சி முறைகள்.*
2. *டெல்லி சுல்தானிய ஆட்சியில் மக்களின் பொருளாதார வாழ்க்கை.*
3. *சமூக நிலையும் இந்திய சமுதாயத்தில் முஸ்லிம் ஆட்சியின் தாக்கமும்.*
4. *டெல்லி சுல்தானியத்தின் கலைகட்டிடக் கலை.*
5. *பாரசீக மற்றும் பிற மொழி அறிஞர்களும் அவர்களது பங்களிப்பும்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. டெல்லி சுல்தானியத்தின் மாகாண ஆளுநர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

அ. ஷிக்தர்கள் ஆ. முக்திகள்

இ. பட்வாரிகள் ஈ. சௌத்ரிகள்

2. டெல்லியிலுள்ள கோட்லா கோட்டையை அமைத்தவர்

அ. பிரோஸ் துக்ளக் ஆ. இல்துத்மிஷ்

இ. அலாவுதீன் கில்ஜி. ஈ. சிக்கந்தர் லோடி

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. டெல்லி சுல்தானியத்தின் படைத் துறை .......... என அழைக்கப்பட்டது.
2. கோரா மற்றும் சனம் போன்ற புதிய ராகங்களை அறிமுகப்படுத்தியவர்.

**III.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. மின்ஹஜ்–உஸ்–சிராஜ் | அ. ராஜதரங்கிணி |
| 2. அமிர்குஸ்ரு | ஆ. தபாகத்–இ–நாசரி |
| 3. கல்ஹணர் | இ. கிதாப்–உல்–ஹிந்த் |
| 4. அல்பரூனி | ஈ. சபாக்–இ–ஹிந்த் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ. ஊழியத்திற்கு ஈடாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலம் இக்தா எனப்படும்.

ஆ. காலிசா நிலம் கிராம அதிகாரிகளின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தன.

இ. இனாம் என்பது போரில் பங்குபெற்ற வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம்.

ஈ. திவானி கோஹி என்பது நிலவருவாய்த் துறையாகும்.



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. டெல்லி சுல்தானியத்தின் நிதித்துறை திவானி விசாரத் எனப்பட்டது.
2. இந்தி நூலான ராகதர்பண் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.
3. இந்துக்கள் சிம்மிக்கள் என்று அழைக்கப்பட்டதுடன் ஜிசியா வரி செலுத்துமாறும் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**VI.** சிறு குறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. திவானி விசாரத்
2. டெல்லி சுல்தானிய நாணயங்கள்
3. அமர்குஸ்ரு
4. குதுப்மினார்

**VII.** குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. டெல்லி சுல்தானியத்தில் உள்ளாட்சி நிர்வாகம் குறித்து எழுதுக.
2. டெல்லி சுல்தானியத்தின் பொருளாதார நிலையை விளக்குக.

**VIII.** விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. டெல்லி சுல்தானிய ஆட்சிமுறையை ஆய்க.
2. டெல்லி சுல்தான்களின் பண்பாட்டுப் பங்களிப்பை மதிப்பிடுக.

# பாடம் – 18


## இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கம்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *இந்தியாவில் பக்தி இயக்கத்தின் தோற்றமும் பரவுதலும்.*
2. *இந்தியாவில் சூஃபி இயக்கத்தின் வளர்ச்சி*
3. *சங்கரர், ராமானுஜர் உள்ளிட்ட பக்தி இயக்கத்தலைவர்கள்*
4. *ராமானந்தர், கபீர், குருநானக் – அவர்களது போதனைகள்*
5. *வங்காளம், மகாராஷ்டிரப் பகுதிகளில் பக்தி இயக்கம்*
6. *பக்தி இயக்கத்தின் முக்கியத்துவம்*

ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் தோன்றிய பக்தி வழிபாடு பற்றி ஏற்கனவே அறிந்துகொண்டோம். சைவ சமய நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் பல்லவ, பாண்டிய, சோழர் ஆட்சிக் காலங்களில் பக்தி உணர்வைப் பரப்பினார்கள். ஆனால், இடைக்கால இந்திய பக்தி இயக்கத்தின் தன்மை வேறுபட்டதாகும். இந்தியாவில் இஸ்லாமிய சமயம் பரவியதால் ஏற்பட்ட விளைவுகளின் பயனாக எழுந்ததே இடைக்கால பக்தி இயக்கம். ஒரு கடவுட்கொள்கை, சமத்துவம், சகோதரத்துவம், சடங்குகளை புறக்கணித்தல் போன்றவை இஸ்லாத்தின் தன்மைகளாகும். இத்தகைய இஸ்லாமிய கருத்துக்கள் அக்கால சமயத் தலைவர்களிடையே ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும், சூஃபித்துறவிகளும் பக்தி இயக்க சீர்திருத்தவாதிகளான ராமானந்தர், கபீர், நானக் போன்றவர்களின் சிந்தனைகளை தட்டியெழுப்பினர்.



குவாஜா மொய்னுதீன் சிஸ்தி



**சூஃபி இயக்கம்**

இஸ்லாமிய சமயத்திற்குள் தோன்றிய தாராள சீர்திருத்த இயக்கமே சூஃபி இயக்கமாகும். பாரசீகத்தில் தோன்றிய சூஃபி இயக்கம் பதினொன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவியது. லாகூரைச் சேர்ந்த ஷேக் இஸ்மாயில் என்ற முதல் சூஃபித் துறவி தனது கருத்துக்களை பரப்பத் தொடங்கினார். இந்தியாவின் சூஃபித்துறவிகளிலேயே புகழ் மிக்கவர் குவாஜா மொய்னுதீன் சிஸ்தி. அவர் ஆஜ்மீரில் தங்கி தனது கருத்துக்களை பரப்பிவந்தார். அவரது சீடர்கள் சிஸ்தி அமைப்பினர் என்று அழைக்கப்பட்டனர்.

மற்றொரு சூஃபித்துறவியான ஷிகாபுதீன் சுஹ்ராவர்தி என்பவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர் பகாவுதீன் சக்காரியா. அவரது சீடர்கள் சுஹ்ராவர்தி அமைப்பினை ஏற்படுத்தினர். சிஸ்தி அமைப்பைச் சேர்ந்த மற்றொரு சூஃபித்துறவி நிசாமுதீன் அவுலியா. அவர் மக்களிடையே சிறந்த ஆன்மீகக் கருத்துக்களை பரப்பி வந்தார். இத்தகைய சூஃபித்துறவிகளை, இன்றும் கூட முஸ்லிம்கள் மட்டுமல்லாது ஏராளமான இந்துக்களும் வழிபட்டு வருகின்றர். அவர்களது கல்லறைகள் இவ்விரு வகுப்பினரும் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இடங்களாகத் திகழ்கின்றன.

இறைவனை உணர்வதற்கு அன்பும் பக்தியுமே சிறந்த வழிகள் என்று சூஃபிக்கருத்துகள் வலியுறுத்துகின்றன. மனித குலத்தின் மீது அன்பு காட்டுவதன் மூலமே கடவுள்மீது அன்பு செலுத்த முடியும். எனவே, மனித குலத்திற்கு சேவை செய்வதன்மூலமே கடவுளுக்கு சேவையாற்ற முடியும் என சூஃபிகள் நம்பினர். கடவுள் பற்றி அறிந்து கொள்ள சுய ஒழுக்கம் மிகவும் வலியுறுத்தப்பட்டது. வைதீக முஸ்லீம்கள் புற ஒழுக்கத்தை வலியுறுத்திய வேளையில், சூஃபிகள் அக ஒழுக்கத்தின் பயனை எடுத்துரைத்தனர்.

சடங்குகளை நம்பியிருந்த வைதீக முஸ்லீம்களுக்கு பதிலாக சூஃபிகள் அன்பும் பக்தியுமே முக்திக்கு வழிகள் என உரைத்தனர். ஆன்மீக வளர்ச்சிக்கு குருவின் வழிகாட்டுதல் முக்கியம் என சூஃபிக்கள் கூறினர். சகிப்புத்தன்மையும் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. தியானம், நற்செயல்கள், பாவங்களுக்கு வருந்துதல், வழிபாடு நடத்துதல், புனிதப்பயணங்களை மேற்கொள்ளுதல், தானங்களை செய்தல், துறவிகளின் நடைமுறைகளைப் பின்பற்றி ஆசைகளைத் துறத்தல் போன்ற கருத்துக்களும் சூஃபித் துறவிகளால் எடுத்துரைக்கப்பட்டன.

இத்தகைய வைதீகத்தன்மையற்ற தாராளக் கருத்துக்கள் அடங்கிய சூஃபிதத்துவம் பக்தி இயக்கப் பெரியார்களிடையே ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. பிற்காலத்தில், முகலாயப் பேரரசர் அக்பர் சூஃபிக் கோட்பாடுகளைப் பாராட்டினார். அவரது சமய நோக்கு மற்றும் சமயக்கொள்கைகளையும் அவை உருவாக்கின. சூஃபி இயக்கம் இந்தியாவில் பரவிக் கொண்டிருந்த அதே வேளையில் இந்துக்களிடையே பக்தி இயக்கம் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. அன்பு மற்றும் சுயநலம் கலவாத பக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இவ்விரு இயக்கங்களும் இரண்டு வகுப்பினரின் ஒற்றுமைக்கும் வழிவகுத்தன.



சங்கரர்

**பக்தி இயக்கம்**

ஒன்பதாம் நூற்றாண்டில் சங்கரர் இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு இந்து சமயத்திற்கு ஒரு புதிய மார்க்கத்தை காட்டினார். கேரளாவிலுள்ள காலடியில் பிறந்தவர் சங்கரர். அவரது கோட்பாடான அத்வைதம் சாமானிய மனிதனின் அறிவுக்கு எட்டக்கூடியதாக இல்லை. மேலும், அத்வைத கோட்பாடான நிர்குண பிரமத்திற்கு எதிராக சர்குணபிரமம் என்ற கருத்தும் தோன்றியது. (நிர்குண பிரம்மம் – கடவுள் குணாதிசயங்களற்றவன். சர்குண பிரம்மம் – கடவுள் குணாதியங்களை உடையவன்.)

பன்னிரண்டாம் நூற்றாண்டில், சென்னைக்கு அருகில் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இராமானுஜர், தனது 'விசிஷ்டாத்வைதம்' என்ற கோட்பாட்டைப்பரப்பினார். அவரது கருத்துப்படி கடவுள் சர்குணபிரமன் அல்லது குணாதிசங்களையுடையவன். படைப்பு, படைக்கப்பட்ட பொருட்களும் உண்மையானவை, சங்கரர் கூறியதைப் போல மாயை அல்ல என்பது அவர் வாதம். எனவே, கடவுள், ஆன்மா, பொருள் அனைத்தும் உண்மை களே. ஆனால் கடவுள் மனத்துக்கண் உள்ளது. மற்றவை அனைத்தும் அவரது குணாதிசயங்கள். ராமானுஜர்



இராமானுஜர்



பிரபத்தி மார்க்கத்தை அல்லது கடவுள் முன்பு சரண் அடைவதை போதித்தார். தாழ்த்தப்பட்ட மக்களை வைணவ சமயத்தை பின்பற்றும்படி ராமானுஜர் அழைப்பு விடுத்தார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் கர்நாடகாவைச் சேர்ந்த மத்துவர் ஜீவாத்மா, பரமாத்மாவை உள்ளடக்கிய த்வைத தத்துவத்தை பரப்பினார். அதன்படி உலகம் மாயை அல்ல, உண்மை. கடவுள், ஆன்மா, பொருள் ஒவ்வொன்றும் சிறப்பானது தெலுங்கானா பகுதியில் நிம்பார்க்கர், வல்லபாச்சாரியர் வைணவ பக்தியைப் பரப்பினர். வல்லபாச்சாரியார் வட இந்தியா சென்று அங்கு கிருஷ்ணபக்தியைப் பரப்பினார். அவர் சூத்திரர்களையும் தமது சீடர்களாகக் கொண்டிருந்தார். மீராபாய் சிறந்த கிருஷ்ண பக்தையாகத்திகழ்ந்தார். அவரது மீராபஜன்கள் ராஜஸ்தானில் பிரசித்தி பெற்றவை. துளசிதாசர் ராமபக்தராக விளங்கினார். ராமாயணத்தின் இந்தி மொழி வடிவமான 'ராம் சரித்மனஸ்' என்ற புகழ்பெற்ற நூலை துளசிதாசர் படைத்தார்.

பதினான்கு மற்றும் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ராமானந்தர், கபீர், நானக் ஆகிய மூவரும் பக்தி இயக்கத்தின் தூண்களாக விளங்கினர். தமக்கு முந்தைய பெரியோர்களிடமிருந்து அவர்கள் பக்தியுணர்வைப் பெற்றனர். ஆனால், மக்களுக்கு புதிய வழிகளைக் காட்டினர். காலங்காலமாக பின்பற்றப்பட்டுவந்த மூடநம்பிக்கைகளை விட்டொழித்து பக்திநெறியைக் கடைப்பிடித்து முக்தி பெறுமாறு அவர்கள் சாமானிய மக்களைக் கேட்டுக் கொண்டனர். முந்தைய கால சீர்திருத்தவாதிகளைப்போல, ஒரு குறிப்பிட்ட சமயத்தை அவர்கள் சார்ந்திருக்கவில்லை. சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. பல கடவுட் கொள்கையைச் சாடிய அவர்கள், ஒரு கடவுள் கோட்பாட்டை வலியுறுத்தினர். சிலை அல்லது உருவ வழிபாட்டையும் அவர்கள் இகழ்ந்தனர். பக்தி நெறிமூலமாக மட்டுமே முக்தி கிட்டும் என்று அசைக்கமுடியாத நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தனர். அனைத்து சமயங்களின் அடிப்படை ஒற்றுமையை அவர்கள் வலியுறுத்தினர்.

**ராமானந்தர்**

ராமானந்தர் அலகாபாத்தில் பிறந்தவர். தொடக்கத்தில் அவர் ராமானுஜரின் சீடராகத்திகழ்ந்தார். பின்னர், அவரது தனிப்பிரிவை நிறுவி பனாரஸ், ஆக்ரா போன்ற இடங்களில் தமது கருத்துக்களை பரப்பினார். அவர் ராமரை வழிபட்டார். முதன்முதலில் பிராந்திய மொழியில் கருத்துக்களை பரப்பியவர் அவரே. எளிமையான வழிபாட்டை அவர் அறிமுகப்படுத்தினார்.

பண்டைய சாதிச் சட்டங்களை தகர்த்தெறிந்தார். இவ்விரண்டும் பக்தி இயக்கத்திற்கு அவர் அளித்த கொடைகளாகும். சாதி முறையைச் சாடிய ராமானந்தர் தமது சீடர்களை அனைத்து பிரிவுகளிலுமிருந்தும் தேர்ந்தெடுத்தார்.

**அவரது முக்கிய சீடர்கள் வருமாறு :**

அ) கபீர் – ஒரு முஸ்லிம் நெசவாளி

ஆ) ராய்தாசர் – செருப்புத்தைக்கும் தொழிலாளி

இ) சேனா – முடி திருத்துபவர்

ஈ) சாதனா – மாமிசம் வெட்டுபவர்

உ) தன்னா – ஜாத்இன குடியானவர்

ஊ) நரஹரி – பொற்கொல்லர்

எ) பிபர் – ராஜபுத்திர இளவரசர்

**கபீர்**

ராமானந்தரின் சீடர்களிலேயே புகழ்மிக்கவர் கபீர். பனாரஸ் நகரில் ஒரு பிராமண விதவைக்கு மகனாகப் பிறந்தார். ஆனால் ஒரு முஸ்லிம் தம்பதியினரால் வளர்க்கப்பட்டார். அவர்கள் நெசவுத்தொழிலை செய்து வந்தனர். பகுத்தறியும் ஆற்றல் மிக்க அவர், இந்து சமயம் மற்றும் இஸ்லாமிய சமயம் குறித்து நன்கு அறிந்து கொண்டார். இந்து, முஸ்லிம் தத்துவங்களை அவருக்கு எடுத்துரைத்தவர் ராமானந்தர். இந்து முஸ்லிம்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே கபீரின் அடிப்படை நோக்கமாக இருந்தது. சிலை வழிபாட்டை கண்டித்த அவர், கடவுள் முன்பு மனிதர் அனைவரும் சமம் என்றுரைத்தார். அனைத்து சமயங்களும் ஒன்றே என்றும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே களிமண்ணால் வடிக்கப்பட்ட பாத்திரங்களே என்று எடுத்துக் கூறினார். ராமன், அல்லா இருவரும் அவருக்கு ஒன்றே! கோயிலும் மசூதியும் ஒன்றே! என வலியுறுத்தினார். கடவுள்மீது பக்தி செலுத்துவதே முக்திக்கு சிறந்த வழி என்று கூறினார். இதற்கு தூய இதயத்தைப் பெற்றிருப்பதுடன்




கபீர்



கொடுங்கோன்மை, நாணயமின்மை, போலிவேடம், கடமை தவறுதல் போன்றவற்றை விலக்கவும் வேண்டும் என்று கூறினார். அவரது சீடர்கள் கபீர்பந்திகள் என்று அழைக்கப்பட்டனர்.

**குருநானக்**

இடைக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு சமயத்தலைவர் குருநானக். அவர் சீக்கிய சமயத்தை நிறுவினார். தொடக்கத்தில் கபீரின் சீடராகவும் விளங்கினார். லாகூருக்கு அருகிலுள்ள தால்வாண்டி என்ற இடத்தில் குருநானக் பிறந்தார். ஜாதி வேற்றுமைகளைச் சாடிய அவர், புனித நதிகளில் நீராடுவது போன்ற சடங்குகளை இகழ்ந்தார். அவரது சமயக் கருத்துக்கள் ஒழுக்கத்தை வலியுறுத்துவதாகவும், அதே சமயம் நடைமுறைக்கு உகந்ததாகவும் இருந்தன.



குருநானக்

சுயநலம், பொய்மை, போலி வேடம் போன்றவற்றை விட்டொழிக்குமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டார். உண்மை, நேர்மை, அன்பு ஆகியவற்றைக் கொண்டு வாழ்க்கையை கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார். 'அசுத்தங்கள் நிறைந்த இவ்வுலகில் சுத்தமாக இருங்கள்' என்பது அவரது புகழ்மிக்க வாசகங்களில் ஒன்றாகும். இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்காகவே அவர் தனது வாழ்நாளை அர்ப்பணித்தார். அவரது சீடர்கள் சீக்கியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

வங்காளத்தில் கிருஷ்ண பக்தியைப் பரப்பிய சைதன்யர் மற்றொரு பக்தி நெறி பரப்பிய சீர்திருத்தவாதி. துறவறம் பூண்ட அவர் நாடெங்கும் சுற்றி தமது கருத்துக்களைப் பரப்பினர். மனித சகோதரத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். சமயம், சாதி அடிப்படையிலான வேறுபாடுகளை அவர் சாடினார். அன்பையும் அமைதியையும் வலியுறுத்திய சைதன்யர், துன்பப்படும் மக்களிடம் பரிவு காட்டினார். குறிப்பாக ஏழைகளிடமும் வலிமை குன்றியோரிடமும் கருணை காட்டினார். அன்பு, பக்தி, ஆடல், பாடல் மூலம் கடவுளைக் காணலாம் என அவர் நம்பினார். அனைத்து வகுப்பினரையும் தமது சீடர்களாக்கிக் கொண்டார். இன்றும்கூட வங்காளத்தில் சைதன்யரின் போதனைகளை மக்கள் பின்பற்றி வருகின்றனர்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் மகாராஷ்டிரத்தில் பக்தி இயக்கத்தை பரப்பியவர் நாமதேவர். அவரது கருத்துக்கள் மகாராஷ்டிர தர்மம் எனப்பட்டது. பகவத் கீதைக்கு விளக்கம் கூறும் ஞானேஷ்வரி என்ற நூலை அவர் எழுதினார். வேறு பல மகான்களும் இடைக்காலத்தில் பக்திநெறியைப் பரப்பி வந்தனர். ஞானதேவர் அன்பு நெறியைப் போதித்தார். சிலைவழிபாட்டையும் புரோகிதர் முறையையும் அவர் கண்டித்தார். சாதி முறையையும் சாடினார். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏகநாதர் சாதி வேறுபாட்டை சாடியதோடு, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு கருணை காட்டினார். ஏராளமான இசைப்பாடல்களை எழுதியுள்ளார். அவரது பஜன்களும் கீர்த்தனைகளும் புகழ்பெற்றவை. மராட்டிய சிவாஜியின் சம காலத்தவரான துக்காராம் மகாராஷ்டிரத்தை சேர்ந்த மற்றொரு பக்தி நெறியாளர். மராட்டிய தேசியம் தோன்றுவதற்குறிய பின்புலம் அவரால் ஏற்படுத்தப்பட்டது. சமூக வேறுபாடுகளை அவர் எதிர்த்தார்.

**பக்தி இயக்கத்தின் சிறப்பு**

பக்தி இயக்கத்தின் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு போதனையாளர்களும் தத்தம் பிராந்திய மொழிகளிலேயே எழுதியும் பேசியும் வந்தனர். எனவே, இந்தி, மராத்தி, வங்காளம், கன்னடம் போன்ற மொழிகள் வளர்ச்சியடைவதற்கு பக்தி இயக்கம் ஊக்கமளித்தது. இம்மொழிகள் வாயிலாக, அவர்கள் தங்களது கருத்துக்களை நேரடியாகவே மக்களுக்கு எடுத்துக் கூறினர். சாதி முறையை பக்தி இயக்கத் தலைவர்கள் ஒருமித்த குரலில் சாடியதால், தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர்வதற்கு பக்தி இயக்கம் வழிவகுத்தது.

பக்தி இயக்கம் பெண்களுக்கு சம முக்கியத்துவம் அளித்தமையால் சமுதாயத்தில் அவர்களது நிலை உயரவும் அது வழிவகுத்தது. மேலும், சிக்கலற்ற எளிய சமய வழியை பக்தி இயக்கம் மக்களுக்கு எடுத்துக்கூறியது. கடவுள்மீது தீவிர பக்தி செலுத்துமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். கொடைமிகுந்த வாழ்க்கை, மனித குலத்திற்கு சேவை போன்ற புதிய கருத்துக்கள் தோன்றி வளர்ந்தன.



**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர்கள் அறிந்து கொண்டவை*

1. *இடைக்கால இந்தியாவில் பக்திநெறியின் தோற்றம் – வளர்ச்சி*
2. *சூஃபிதத்துவம் – சிஸ்தி மற்றும் சுஹ்ராவார்டி அமைப்புகள்*
3. *சங்கரர், ராமானுஜர் போன்றோர் பரப்பிய தொடக்க கால பக்தி நெறி.*
4. *ராமானந்தர், கபீர், நானக் போன்றோரின் போதனைகள்*
5. *வங்காளம், மகாராஷ்டிரத்தில் பக்தி இயக்கம்*
6. *பக்தி இயக்கத்தின் சிறப்பு*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க

1. ராமானந்தரின் மிகச் சிறந்த சீடர்

அ) கபீர் ஆ) ராமதாஸ்

இ) நாமதேவர் ஈ) சைதன்யர்

2 மத்துவர் தமது கருத்துக்களை பரப்பிய மொழி

அ) தமிழ் ஆ) வங்காளம்

இ) கன்னடம் ஈ) மராத்தி

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ஆஜ்மீரை மையமாகக் கொண்டு கருத்துக்களை பரப்பிய சூஃபித்துறவி .....................

2. நிம்பார்க்கரும், வல்லபாச்சாரியாரும் தமது கருத்துக்களை ......... பகுதியில் பரப்பினர்.

3. துக்காராம்.......... ன் சமயகாலத்தவர்.

**III.** பொருத்துக

1. சங்கரர் அ) அலகாபாத்

2. ராமானுஜர் ஆ) காலடி

3. நானக் இ) ஸ்ரீ பெரும்புதூர்

4. ராமானந்தர் ஈ) தால்வாண்டி

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வங்காளத்தில் பக்தி இயக்கத்தை தோற்றுவித்தவர் ஞானதேவர்

ஆ) அவர் எழுதிய ஞானேஸ்வரி பகவத் கீதைக்கு விளக்கவுரையாகும்.

இ) அவர் சிவாஜியின் சமகாலத்தவர்

ஈ) அவர் குருநானக்கின் சீடர்



**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக

1. நிசாமுதீன் அவுலியா, சிஸ்தி அமைப்பைச் சேர்ந்தவர்

2. சைதன்யர் மகாராஷ்டிரத்தின் புகழ்மிக்க பக்தி நெறியாளர்

3. ராமானுஜரின் தத்துவம் விசிஷ்டாத்வைதம் எனப்படுகிறது.

**VI.** சிறுகுறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. சிஸ்தி அமைப்பு

2. ராமானுஜர்

3. குருநானக்

4. கபீர்

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. இந்தியாவில் சூஃபி தத்துவம் பரவியதை விவரி.

2. இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கத்தின் சிறப்பைக் கூறுக.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கம் தோன்றி, பரவியதை விவரி

# பாடம் – 19

## விஜயநகர், பாமினி அரசுகள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *விஜய நகரப்பேரரசு பற்றிய சான்றுகள்.*
2. *விஜய நகரப் பேரரசின் அரசியல் வரலாறு.*
3. *ஆட்சி முறையும் சமூக வாழ்க்கையும்.*
4. *பொருளாதார நிலை மற்றும் பண்பாட்டுப் பங்களிப்பு.*
5. *பாமினி அரசின் வரலாறு.*


### விஜய நகரப் பேரரசு

#### சான்றுகள்

இந்திய வரலாற்றில் விஜயநகரப் பேரரசின் வரலாறு ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. நான்கு மரபுகள் – சங்கம, சாளுவ, துளுவ, ஆரவீடு – கி.பி. 1336 முதல் 1672 வரை விஜய நகரை ஆட்சிபுரிந்தன. இலக்கியம், தொல்லியல், நாணயம் என விஜய நகர வரலாற்றுக்கான சான்றுகள் பல்வகைப்படும். கிருஷ்ண தேவராயரின் ஆமுக்த மால்யதம், கங்காதேவி எழுதிய மதுராவிஜயம், அல்லசானி பெத்தண்ணாவின் மனுசரிதம் போன்றவை விஜயநகர சமகால நூல்களாகும்.

விஜய நகரப் பேரரசுக்கு பல்வேறு அயல்நாட்டு பயணிகள் வருகைபுரிந்தனர். அவர்களது குறிப்புகளும் பயனுள்ள சான்றுகளாகும். மொரோக்கா நாட்டைச் சேர்ந்த இபன் பதூதா, வெனிஷியப் பயணி நிக்கோலோ டி கோன்டி, பாரசீகப்பயணி அப்துல் ரசாக், போர்ச்சுகீசியப் பயணி டோமிங்கோ பயஸ் போன்ற பயணிகள் விஜய நகர கால சமூக பொருளாதார நிலைமைகள் பற்றி தங்களது பயணக் குறிப்புகளில் விவரித்துள்ளனர்.





இபன் பதூதா

இரண்டாம் தேவராயரின் ஸ்ரீரங்கம் செப்பேடுகள் போன்ற செப்பேடுகள் விஜயநகர அரச வழித்தோன்றல்கள் மற்றும் அவர்களது சாதனைகளைக் கூறுகின்றன. ஹம்பி இடிபாடுகளும் பிற சின்னங்களும் விஜய நகர ஆட்சியாளர்களின் பண்பாட்டுப் பங்களிப்பை வெளிப் படுத்துகின்றன. அவர்கள் வெளியிட்டுள்ள எண்ணற்ற நாணயங்களில் காணப்படும் உருவங்கள் மற்றும் சொற்றொடர்கள் விருதுகளையும் சாதனைகளையும் எடுத்துக் கூறுகின்றன.

#### அரசியல் வரலாறு

சங்கம மரபைச் சேர்ந்த ஹரிஹரரும் புக்கரும் 1336ஆம் ஆண்டு விஜய நகரத்தை நிறுவினர். ஏற்கனவே, அவர்கள் வாரங்கல் ஆட்சியாளர்களான காகதீயர்களிடம் பணியாற்றிவந்தனர். பிறகு காம்பிலிக்கு சென்றனர். அங்கு முஸ்லிம் படையெடுப்பாளர்களால் சிறைப்படுத்தப்பட்டு இஸ்லாமிய சமயத்திற்கு மாற்றப்பட்டனர். பின்னர், வித்யாரண்யர் என்பவரின் முயற்சியால் இந்து சமயத்திற்கு திரும்பினர். தங்களது சுதந்திரத்தை அறிவித்துக்கொண்ட அவர்கள் துங்கபத்திரை நதியின் தென்கரையில் ஒரு புதிய நகரத்தை நிறுவினர். வெற்றி நகரம் என்ற பொருள்கொண்ட விஜயநகரம் என்று அது வழங்கப்பட்டது.

ஹோய்சள அரசின் வீழ்ச்சி, ஹரிஹரரும் புக்கரும் தங்களது அரசை விரிவுபடுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை எளிதாக்கியது. 1346ஆம் ஆண்டு வாக்கில் ஹோய்சள அரசுப்பகுதி முழுவதும் அவர்களது கட்டுப்பாட்டில் வந்தது. விஜயநகரத்திற்கும் மதுரை சுல்தானியத்திற்கும் இடையிலான பூசல் நாற்பதாண்டு காலம் நீடித்தது. குமார காம்பணரின் மதுரைப்படையெடுப்பு குறித்து மதுராவிஜயம் என்ற நூலில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. அவர் மதுரை சுல்தானியத்தை அழித்தார். இதனால், விஜய நகரப் பேரரசு ராமேஸ்வரம் உள்ளிட்ட தென்னிந்தியா முழுவதையும் உள்ளடக்கியதாக விரிவடைந்தது.

விஜயநகர பேரரசுக்கும் பாமினி அரசுக்கும் இடையிலான பூசலும் பல ஆண்டுகள் நீடித்தன. கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளுக்கிடையிலான பகுதியான ரெய்ச்சூர் தோஆப் பகுதியை கட்டுப்படுத்துவதும், கிருஷ்ணா

கோதாவரி டெல்டாவின் வளமான நிலங்களைக் கைப்பற்றுவதும் இம்மோதலுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தன. சங்கம மரபின் சிறந்த அரசர் இரண்டாம் தேவராயர். ஆனால், அவரால்கூட பாமினி சுல்தான்களை முழுவதுமாக வெற்றிகொள்ள இயலவில்லை. அவரது மறைவுக்குப்பிறகு சங்கம மரபு வலிமையிழந்தது. அடுத்ததாக, சாளுவநரசிம்மர் சாளுவ மரபைத் தோற்றுவித்தார். இந்த மரபு மிகவும் குறுகிய காலமே **(1486–1509)** ஆட்சியிலிருந்தது.

**கிருஷ்ண தேவராயர் (1509 – 1530)**

வீரநரசிம்மரால் துளுவ மரபு தோற்றுவிக்கப் பட்டது. விஜயநகரத்தின் மிகச் சிறந்த பேரரசரான கிருஷ்ண தேவராயர் துளுவ மரபைச் சேர்ந்தவர். அவர் சிறந்த போர் ஆற்றல் மிக்கவர். கம்பீரமான தோற்றம் கொண்ட அவர் அறிவாற்றல் மிக்கவராகவும் காணப்பட்டார். படையெடுத்து வரும் பாமினி படைகளை தடுத்து நிறுத்துவதே அவரது அப்போதைய முதல் கடமையாக இருந்தது. அச்சமயம், பாமினி அரசு மறைந்து அங்கு தக்காண சுல்தானியங்கள் நிறுவப்பட்டிருந்தன. திவானி என்ற இடத்தில் நடைபெற்ற போரில் கிருஷ்ண தேவராயர் முஸ்லீம் படைகளை இறுதியாக முறியடித்தார். இதனால், பிஜப்பூர் சுல்தானுடன் மோதல் ஏற்பட்டது. அப்போது பீஜப்பூரின் சுல்தான் இஸ்மாயில் அடில் ஷா, கிருஷ்ண தேவராயர் அவரை முறியடித்து, 1520ல் ரெய்ச்சூர் நகரைக் கைப்பற்றினார். பின்னர், பீடார் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினார்.



கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயரின் ஒரிசா படையெடுப்பும் வெற்றியில் முடிந்தது. கஜபதி மரபின் அரசரான பிரதாபருத்ரனை அவர் முறியடித்து தெலுங்கானா பகுதி முழுவதையும் கைப்பற்றினார். போர்ச்சுகீசியர்களுடன் அவர் நட்புறவையே மேற்கொண்டார். கிருஷ்ணதேவராயரின் அவைக்கு அல்புகர்க் தனது தூதுவர்களை அனுப்பிவைத்தார்.

கிருஷ்ணதேவராயர் தாம் வைணவராக இருந்தபோதிலும், அனைத்து சமயங்களையும் மதித்து நடந்தார். கலை, இலக்கியப் புரவலராகவும் அவர் திகழ்ந்தார். எனவே ஆந்திரபோஜர் என்று அவர் அழைக்கப்பட்டார்.



அஷ்டதிக்கஜங்கள் என்ற எட்டு சிறந்த அறிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். அவர்களின் முதன்மையானவர் அல்லசானி பெத்தண்ணா. ஆந்திரகவிதாபிதாமகர் என்று அவர் புகழப்பட்டார். அவரது முக்கிய படைப்புகள் மனுசரிதம் மற்றும் ஹரிகதாசாரம் என்பதாகும். பிங்கலி சூரண்ணா, தெனாலி ராமகிருஷ்ணா இருவரும் சிறந்த அறிஞர்களாகத்திகழ்ந்தனர். ஆமுக்தமால்யதம் என்ற தெலுங்கு மொழி நூலையும், ஜாம்பவதி கல்யாணம், உஷாபரிணயம் என்ற வடமொழி நூல்களையும் கிருஷ்ண தேவராயர் இயற்றியுள்ளார்.

தென்னிந்தியாவில் பெரும்பாலான கோயில்களை அவர் செப்பனிட்டார். விஜயநகரத்தில் விட்டலசுவாமி மற்றும் ஹசரராமசுவாமி ஆலயங்களையும் அவர் எழுப்பினார். தனது பட்டத்தரசி நாகலாதேவியின் நினைவாக அவர் நாகலாபுரம் எனற புதிய நகரை நிர்மாணித்தார். மேலும், ஏராளமான ராயகோபுரங்களையும் அவர் கட்டுவித்தார்.

கிருஷ்ணதேவராயரின் மறைவுக்குப்பிறகு அச்சுததேவர், வெங்கடர் ஆகியோர் அரியணையேறினர்.

ராமராயரின் ஆட்சிக்காலத்தில், பீஜப்பூர், அகமதுநகர், கோல்கொண்டா, பீடார் ஆகிய அரசுகளின் கூட்டுப்படைகள் **1565** ஆண்டு தலைக்கோட்டைப்போரில் அவரை முறியடித்தன. அப்போர் ராக்ஷஸதாங்கடி என்றும் அழைக்கப்படுகிறது. ராமராயர் கைப்பற்றப்பட்டு கொல்லப்பட்டார். விஜயநகரம் அழிக்கப்பட்டது. விஜயநகரப் பேரரசுக்கு சாவுமணி அடித்த போராக இது கருதப்படுகிறது. இருப்பினும், விஜயநகர அரசு ஆரவீடு மரபினரின் ஆட்சியில் அடுத்த நூறாண்டுகள் நிலைத்திருந்தது. திருமலா, ஸ்ரீரங்கா, இரண்டாம் வெங்கடர் ஆகியோர்அம்மரபின் முக்கிய அரசர்கள். விஜய நகர அரசின் கடைசி அரசர் இரண்டாம் ஸ்ரீரங்கர்.

**ஆட்சி முறை**

விஜயநகரப் பேரரசின் கீழ் ஆட்சித்துறை நன்கு சீரமைக்கப் பட்டிருந்தது. நிர்வாகம், நீதி, சட்டம் ஆகிய விவகாரங்களில் அரசர் முழு அதிகாரம் பெற்று விளங்கினார். பரம்பரை வாரிசுரிமை வழங்கத்திலிருந்தது. சிலசமயம் அரியணையை கைப்பற்றிக் கொள்ளும் நிகழ்ச்சியும் நடந்தது. சாளுவ நரசிம்மர் சங்கம மரபை முடித்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார் என்பதை ஏற்கனவே கண்டோம். அரசருக்கு அன்றாட ஆட்சியில் உதவுவதற்காக அமைச்சரவையும் இருந்தது.

பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலம் பல நாடுகளாகவும், நாடு பல ஸ்தலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஸ்தலம் என்பது பல கிராமங்களைக் கொண்டிருந்த பிரிவாகும். மண்டலத்தின் அளுநர் மண்டலேஸ்வரர் அல்லது நாயக் என்று அழைக்கப்பட்டார். விஜய நகர ஆட்சியாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆட்சியில் முழு அதிகாரங்களை வழங்கியிருந்தனர்.

நிலவரி தவிர, திறைகள், பரிசுகள் ஆகியவற்றை சிற்றரசர்களும் படைத்தலைவர்களும் அவ்வப்போது பேரரசுக்கு அனுப்பி வந்தனர். துறைமுகங்களில் வசூலிக்கப்பட்ட சுங்கம், பல்வேறு தொழிலாளர்கள் மீதான வரிகள் ஆகியவையும் அரசாங்கத்தின் வருவாயாக இருந்தன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. அரசரின் தனிப்பட்ட செலவுகள், அவர் அளிக்கும் கொடைகள், ராணுவத்திற்கான செலவுகள் போன்றவை அரசின் முக்கிய செலவினங்களாகும். நீதித்துறையைப் பொறுத்தவரை உடல் உறுப்புகளை சிதைத்தல், யானைக்காலால் இடறுதல் போன்ற கொடுமையான தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ன.

விஜய நகர ராணுவம் திறமையான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தது. குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, யானைப்படை என நான்கு முக்கிய பிரிவுகளை அது கொண்டிருந்தது. அயல்நாட்டு வணிகரிடமிருந்து உயர்ரக குதிரைகள் ராணுவத்திற்காக வாங்கப்பட்டன. ராணுவத்தின் உயர் அதிகாரிகள் நாயக் அல்லது பாளையக்காரர் என்று அழைக்கபட்டனர். அவர்கள் ஆற்றும் பணிக்கு ஈடாக நிலங்கள் வழங்கப்பட்டன. இந்நிலங்கள் அமரம் என்று அழைக்கப்பட்டது. படை வீரர்களுக்கு ஊதியம் பொதுவாக பணமாகவே வழங்கப்பட்டது.

**சமூக வாழ்க்கை**

பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு ஜாதிப்பிரிவுகள் விஜயநகர சமூகத்தில் இருந்ததாக அல்லசானி பெத்தண்ணா தமது மனுசரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். விஜயநகரின் வானளாவிய கட்டிடங்கள் மற்றும் ஆடம்பர சமூக வாழ்க்கை பற்றியும் அயல்நாட்டுப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பட்டு மற்றும் பருத்தி ஆடைகளை மக்கள் அணிந்தனர். வாசனைப்பொருட்கள், மலர்கள், அணிகலன்கள் போன்றவற்றையும் மக்கள் பயன்படுத்தினர். செல்வந்தர்களின் அழகான வீடுகள் அவற்றில் பணிபுரிந்த



எராளமான பணியாளர்கள் பற்றிய விவரங்களை பயஸ் குறிப்பிட்டுள்ளார். அடிமைகள் பற்றி நிக்கோலோ டி கோண்டி தனது குறிப்புகளில் கூறியுள்ளார். நடனம், இசை, மல்யுத்தம், சூதாட்டம், சேவல் சண்டை போன்றவை ஒரு சில பொழுதுபோக்குகளாகும்.

சங்கம மரபினர் சைவர்களாகத்திகழ்ந்தனர். விருப்பாட்ஷர் அவர்களின் குலதெய்வம். மற்ற மரபைச் சேர்ந்தவர்கள் வைணவர்கள். ராமானுஜரின் ஸ்ரீவைணவம் மக்களிடையே புகழ்பெற்று விளங்கியது. ஆனால், எல்லா அரசர்களும் பிற சமயங்கள் மீது சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டனர். மக்கள் அனைவரும் சமய சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் பெற்றுத்திகழ்ந்தனர் என போர்போசா குறிப்பிட்டுள்ளார். நிர்வாகத்தில் முஸ்லிம்களும் இடம்பெற்றிருந்தனர். மசூதிகள் கட்டிக்கொண்டு தொழுகை நடத்தவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பல்வேறு விழாக்கள் நடைபெற்றன. இதிகாசங்களும் புராணங்களும் மக்களிடையே பிரபலமாக இருந்தன.

மகளிர் நிலையில் முன்னேற்றம் காணப்படவில்லை. ஒரு சிலர் மட்டுமே கல்வியிற்சிறந்து விளங்கினர். குமார காம்பணரின் மனைவி கங்கா தேவி மதுராவிஜயம் என்ற நூலை எழுதினார். ஹன்னம்மா, திருமலம்மா இருவரும் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பெண்புலவர்கள்.

ஏராளமான பெண்கள் அரண்மனைகளில் பணிப்பெண்களாகவும் நாட்டிய மகளிராகவும், பல்லக்கு சுமப்பவர்களாகவும் இருந்தனர் என நூனிஸ் கூறுகிறார். ஆலயங்களுக்கு சேவை செய்த நாட்டிய மகளிரும் இருந்தனர். தேவதாசி முறை வழக்கத்திலிருந்ததாக பயஸ் குறிப்பிட்டுள்ளார். அரச குடும்பங்களில் பல தாரமணம் வழக்கத்திலிருந்தது. 'சதி' வழக்கம் பெருமையாகக் கருதப்பட்டது. நூனிஸ் அதுபற்றி விவரமாகக் கூறியுள்ளார்.

**பொருளாதார நிலை**


அக்கால உலகின் செல்வமிக்க பகுதிகளில் ஒன்றாக விஜயநகரப் பேரரசு விளங்கியது என்ற செய்தியை அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. நீர்ப்பாசன வசதிகளை செய்த கொடுத்து விஜயநகர ஆட்சியாளர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்தனர். புதிய ஏரிகள் வெட்டப்பட்டன. துங்கபத்திரா போன்ற நதிகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்பட்டன. கால்வாய்கள் அமைக்கப்பட்டதைப் பற்றி நூனிஸ்

கூறியுள்ளார். பல்வேறு தொழில்களும் சிறந்து விளங்கின. அவை ஒவ்வொன்றுக்கும் கழகங்கள் இருந்தன. உலோகத்தொழில் செய்வோரும் பிற கைவினைஞர்களும் அக்காலத்தில் தழைத்தோங்கினர். கர்நூல், அனந்தபூர் மாவட்டங்களில் வைரச்சுரங்கங்கள் இருந்தன. விஜயநகரம் ஒரு புகழ்மிக்க வர்த்தக மையமாகவும் விளங்கியது. முக்கிய தங்க நாணயம் வராகன் என்பதாகும். ஆனால், எடைகளும் அளவைகளும் இடத்துக்கு இடம் மாறுபட்டிருந்தன. உள்நாட்டு, அயல்நாட்டு வர்த்தகம் பெருகியதால் நாட்டில் பொதுவாக செல்வ செழிப்பு காணப்பட்டது.

மலபார் கடற்கரையில பல துறைமுகங்கள் இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்கது கண்ணனூர் துறைமுகமாகும். அராபியா, பாரசீகம், தென் ஆப்ரிக்கா, போர்ச்சுகல் போன்ற மேலை நாடுகளுடனும் வாணிகத்தொடர்பு நிலவியது. பருத்தி மற்றும் பட்டுத் துணிகள், நறுமணப் பொருட்கள், அரிசி, வெடியுப்பு, சர்க்கரை போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள். குதிரைகள், முத்துக்கள், செம்பு, பவழம், பாதரசம், சீனத்துப்பட்டு, வெல்வெட்துணிகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழிலும் வளர்ச்சியடைந்தது.

**பண்பாட்டுப் பங்களிப்பு**

விஜய நகர ஆட்சியில் கோயில்கட்டும் நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தது. ராயகோபுரங்கள் எனப்படும் நுழைவாயில் கோபுரங்கள் மற்றும் கோயில் வளாகங்களில் சிற்பத்தூண்களைக் கொண்ட கல்யாண மண்டபங்கள் ஆகியன விஜயநகர கட்டிடக்கலையின் சிறப்பு அம்சங்களாகும். மண்டபத்தூண்களில் வடிக்கப் பட்டுள்ள சிற்பங்கள் கலைநயமிக்கவை. இந்த தூண் சிற்பங்களில் பெரும்பாலும் குதிரை உருவங்கள் இடம்பெற்றிருந்தன. பெரிய ஆலயங்களில் நூற்றுக்கால் மண்டபங் களும், ஆயிரங்கால் மண்டபங்களும் எழுப்பப்பட்டன. திருவிழாக்காலங்களில் இறைவனை அங்கு கொண்டுவந்து வைத்து வழிபடுவது வழக்கம். ஏற்கனவே கட்டப்பட்ட ஆலயங்களின் சுற்றுப்பிரகாரத்தில் அம்மனுக்கு என தனி ஆலயங்கள் அக்காலத்தில் அமைக்கப்பட்டன.


யானை ரதம் – ஹம்பி இடிபாடுகள்



விஜய நகரம் இன்று ஹம்பி இடிபாடுகளாகக் காட்சியளித்தாலும் அங்குள்ள கோயில்கள் விஜய நகரப்பாணிக்கு சிறந்து எடுத்துக்காட்டு களாகும். விட்டலசுவாமி மற்றும் ஹசர ராமசுவாமி ஆலயங்கள் இரண்டும் குறிப்பிடத்தக்கவை. விஜய நகர கோயில் கட்டிடக்கலையின் பிரமாண்டத்துக்கு எடுத்துக் காட்டாக காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் மற்றும் வரதராஜர் ஆலயங்களைக் கூறலாம். திருண்ணாமலை மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள ராய கோபுரங்கள் விஜயநகர காலத்தின் புகழைப் பறைசாற்றுகின்றன. பின்னர், நாயக்கர் காலத்திலும் இத்தகைய கலைப்பணி தொடர்ந்தது. திருப்பதியில் காணப்படும் கிருஷ்ணதேவராயர் மற்றும் அவரது அரசிகளின் உலோகப்படிமங்கள் விஜய நகர கால உலோகக்கலைக்கு எடுத்துக்காட்டாகும். விஜய நகர அரசர்களால் இசையும் நடனமும் ஆதரிக்கப்பட்டது.


வரதராஜ பெருமாள் கோயிலின் கிழக்கு கோபுரம்

வடமொழி. தெலுங்கு, கன்னடம், தமிழ் போன்ற மொழிகள் அந்தந்தப்பகுதிகளில் புகழ்பெற்றிருந்தன. வடமொழி மற்றும் தெலுங்கு இலக்கியம் விஜய நகர காலத்தில் மகத்தான வளர்ச்சி பெற்றது. கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக்காலத்தில் இலக்கிய வளர்ச்சி உச்சம் பெற்றது. அவரே வடமொழி மற்றும் தெலுங்கு மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவரது அவைப் புலவரான அல்லசானி பெத்தண்ணா தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளர். எனவே, விஜய நகர ஆட்சியாளர்களின் பண்பாட்டுத் தொண்டு பன்முகத்தன்மை கொண்டதாகவும் சிறப்புடையதாகவும் திகழ்ந்தது.

**பாமினி அரசு**

1347ஆம் ஆண்டு பாமினி அரசை நிறுவியவர் அலாவுதீன் பாமன்ஷா அவர் ஹசன் கங்கு எனறும் அழைக்கப்பட்டார். அதன் தலைநகரம் குல்பர்கா. பாமினி அரசை மொத்தம் பதினான்கு சுல்தான்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களில், அலாவுதீன் பாமன்ஷா, முதலாம் முகமது ஷா, பிரோஸ் ஷா ஆகியோர் சிறப்பு வாய்ந்தவர்கள். பின்னர் அகமது வாலிஷா என்பவர் தலை

நகரை குல்பர்காவிலிருந்து பீடாருக்கு மாற்றினார். மூன்றாம் முகம்மதுஷாவின் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசின் புகழ்அதன் உச்சிக்கு சென்றது. அராபியக்கடல் தொடங்கி வங்காள விரிகுடா வரை பாமினி அரசு விரிவடைந்தது. மேற்கில் கோவா முதல் பம்பாய் வரை நீண்டிருந்தது. கிழக்கில் காக்கிநாடா முதல் கிருஷ்ணா நதியின் முகத்துவாரம் வரை பரவியிருந்தது. முகமது ஷாவின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவரது அமைச்சராக விளங்கிய முகமது காவன் என்பவரின் ஆலோசனைகளும் சேவைகளுமேயாகும்.

**முகமது காவன்**

முகமது காவனின் வழிகாட்டுதலால் பாமினி அரசு அதன் புகழின் உச்சியை எட்டியது. அவர் ஒரு பாரசீக வணிகர். தனது நாற்பத்தி யிரண்டாவது வயதில் இந்தியாவுக்கு வந்த அவர் பாமினி அரசின் சேவையில் சேர்ந்தார். தனது தனிப்பட்ட ஆளுமையினால் அவர் பாமினி சுல்தானியத்தின் முதலமைச்சரானார். பாமினி அரசுக்கு விசுவாசமாக அவர் இருந்தார். எளிய வாழ்க்கையை நடத்திவந்த அவர் பெருந்தன்மை கொண்டவராகவும் திகழ்ந்தார். கல்வியறிவுமிக்கவராக இருந்த அவர் கணிதத்தில் மேதைமையுடன் விளங்கினார். பீடாரில் ஒரு கல்லூரியை கட்டுவதற்காக அவர் கொடைகளை வழங்கினார். பாரசீகக் கட்டிடக் கலைப்பாணியில் அந்த கல்லூரி கட்டப்பட்டது.

போர்த்துறையிலும் அவர் வல்லவராக விளங்கினார். விஜய நகரம், ஒரிசா மற்றும் அராபிக்கடலின் கடற்கொள்ளையர்களுக்கு எதிராக அவர் போர்கள் தொடுத்து வெற்றி பெற்றார். கொங்கணம், கோவா, கிருஷ்ணா, கோதாவரி பள்ளத்தாக்கு போன்ற அவரது வெற்றிகளினால் பாமினி அரசு விரிவடைந்தது.

முகமது காவனின் சீர்திருத்தங்களும் சிறப்பானவை, உயர் குடியினர் மற்றும் மாகாணங்களை கட்டுப்படுத்துவதே அவரது குறிக்கோளாகும். இதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் அரச அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். பெரும்பாலான கோட்டைகள் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தன. கடமைதவறும் உயர்குடியினருக்கு சலுகைகள் குறைக்கப்பட்டன. எனவே, காவனுக்கு எதிராக தக்கணி உயர்குடியினர் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினர். அதன்படி சுல்தானைத் தூண்டிவிட்டு காவனுக்கு தூக்குதண்டனை வாங்கிக்கொடுத்தனர். முகமது காவனின் மறைவுக்குப்பிறகு பாமினி அரசு வீழ்ச்சியடையத்தொடங்கியது. முகமதுஷாவுக்குப் பிறகு திறமையற்ற சுல்தான்கள் ஆட்சிக்கு வந்தனர்.





கோல்கொண்டா கோட்டை இடிபாடுகள்

இக்காலத்தில் மாகாண ஆளுநர்கள் தங்களது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டனர். 1526 ஆம் ஆண்டு வாக்கில் பாமினி அரசு ஐந்து சுதந்திர சுல்தானியங்களாக சிதறுண்டன. அகமது நகர், பீஜப்பூர், பீரார், கோல்கொண்டா, பீடார் என்ற ஐந்தும் தக்கான சுல்தானியங்கள் என்று அழைக்கப்பட்டன.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *விஜய நகரப் பேரரசு பற்றி அறிந்த கொள்ள உதவும் சான்றுகள்.*
2. *விஜய நகரின் நான்கு மரபுகள் – கிருஷ்ண தேவராயரின் சாதனைகள்.*
3. *விஜய நகரப் பேரரசின்கீழ் ஆட்சிமுறை, சமூக வாழ்க்கை.*
4. *விஜய நகர பேரரசின்கீழ் பொருளாதாரம்.*
5. *விஜய நகரகால, கலை, கட்டிடக்கலை, இலக்கியம்.*
6. *பாமினி அரசும் முகமது காவனின் சாதனைகளும்.*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க

1. சங்கம ஆட்சியாளர்களின் குலதெய்வம்

அ) துர்க்கை ஆ) விட்டலா

இ) விருப்பாட்சர் ஈ) ராமர்

2. முகமது காவன் எந்த நாட்டு வணிகர்

அ) அரேபியா ஆ) மொரோக்கோ

இ) போர்ச்சுகல் ஈ) பாரசீகம்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கிருஷ்ண தேவராயர் ..... மரபைச் சேர்ந்தவர்

2. ஹசரா ராமர் கோயில் ........ என்ற இடத்தில் கட்டப்பட்டது .

3. பாமினி அரசை தோற்றுவித்தவர் .......

**III.** பொருத்துக

| | |
|---|---|
| 1. அப்துர் ரசாக் | அ) வெனிஸ் |
| 2. இபன் பதூதா | ஆ) பாரசீகம் |
| 3. டோமிங்கோ பயஸ் | இ) மொரோக்கோ |
| 4. நிக்கோலோ டி கோன்டி | ஈ) போர்ச்சுகல் |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ) பாமினி அரசின் தலைநகரம் குல்பர்க்காவிலிருந்து பீராருக்கு மாற்றப்பட்டது.

ஆ) பாமினி அரசின் தலைநகரம் குல்பர்காவிலிருந்து பீடாருக்கு மாற்றப்பட்டது.



இ) பாமினி அரசின் தலைநகரம் பீடாரிலிருந்து குல்பர்காவுக்கு மாற்றப்பட்டது.

ஈ) பாமினி அரசின் தலைநகரம் பீராரிலிருந்து குல்பர்காவுக்கு மாற்றப்பட்டது.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. குமாரகாம்பணர் மதுராவிஜயம் என்ற நூலை எழுதினார்.

2. அல்லசானி பெத்தண்ணா ஒரு கன்னடமொழி அறிஞர்.

3. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதம் என்ற நூலை தெலுங்கு மொழியில் எழுதினார்.

**VI.** சிறுகுறிப்பு எழுதுக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. சங்கம மரபு

2. விஜய நகர அரசின்கீழ் மாகாண நிர்வாகம்

3. ஹசன் கங்கு

4. விஜயநகர பேரரசில் மகளிர் நிலை

**VII.** குறுகிய விடைதருக (100 வார்த்தைகள்)

1. விஜய நகரப்பேரரசுக்கு வருகைதந்த அயல்நாட்டுப் பயணிகள் பற்றி குறிப்பு வரைக.

2. விஜய நகர அரசின்கீழ் இலக்கிய வளர்ச்சியை ஆய்க.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. கிருஷ்ணதேவராயரின் சாதனைகளை மதிப்பிடுக.

2. விஜய நகர ஆட்சியாளரின் பண்பாட்டுப் பங்களிப்பை ஆய்க.

3. முகமது காவன் பற்றி மதிப்பீடு செய்க.

# பாடம் – 20

## முகலாயப் பேரரசு

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *முகலாயப்பேரரசின் அரசியல் வரலாறு*
2. *பாபரும் அவரது சாதனைகளும்*
3. *உமாயூனின் பிரச்சனைகள் – சூர்மரபு இடைவெளி*
4. *அக்பரும் அவரது சாதனைகளும் – சமயக்கொள்கை*
5. *ஜஹாங்கீர், ஷாஜகான்*
6. *அவுரங்கசீப் மற்றும் அவரது சமயக்கொள்கை*
7. *முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்*

**அரசியல் வரலாறு**



பாபர்

**பாபர் (1526 – 1530)**

இந்தியாவில் முகலாயப்பேரரசை நிறுவியவர் பாபர். அவரது இயற்பெயர் சாகிருதீன் முகமது. தனது தந்தை வழியில் தைமூருக்கும், தாய் வழியில் செங்கிஸ்கானுக்கும் உறவினர். பாபர் தனது தந்தை உமர் ஷேக் மீர்சாவின் பர்கானாவிற்கு வாரிசாகப் பொறுப்பேற்றார். ஆனால் அவரது தூரத்து உறவினர் ஒருவரால் அது தட்டிப்பறிக்கப்படவே பாபர் தனது ஆட்சிப் பகுதியை இழந்தார். சிறிது காலம் நாடோடியாகத் திரிந்த அவர், தனது மாமன்கள் ஒருவரிடமிருந்து காபூலைக் கைப்பற்றினார். பின்னர், இந்தியாவைக் கைப்பற்றும் ஆசையை வளர்த்துக் கொண்ட பாபர், 1519 முதல் 1523 வரையிலான காலத்தில் நான்கு படையெடுப்புகளையும் மேற்கொண்டார்.



**போர் வெற்றிகள்**

பாபர் படையெடுத்தபோது இந்தியாவில் ஐந்து முக்கிய முஸ்லிம் அரசுகளும் – டெல்லி, குஜராத், மாளவம், வங்காளம், தக்காணம், இரண்டு முக்கிய இந்து அரசுகளும் – மேவாரின் ராண சங்கா மற்றும் விஜய நகரப் பேரரசு இருந்தன. 1525ஆம் ஆண்டு, காபூலிருந்து பாபர் மீண்டும் இந்தியா மீதான படையெடுப்பைத் தொடர்ந்தார். லாகூரின் ஆளுநராக இருந்த தௌலத்கான் லோடியை எளிதில் முறியடித்து அப்பகுதியைக் கைப்பற்றினார். பின்னர், டெல்லி நோக்கி முன்னேறினார். 1526 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் நாள் நடைபெற்ற முதலாம் பானிப்பட்டுப் போரில் பாபர் இப்ராஹிம் லோடியை முறியடித்தார். போரில் லோடி கொல்லப்பட்டார். பாபரிடமிருந்த குதிரைப் படையும் பீரங்கிப்படையுமே அவரது வெற்றிக்கு வழிவகுத்தன. டெல்லியைக் கைப்பற்றிய பாபர் தனது மகன் உமாயூனை ஆக்ராவைக்கைப்பற்றுவதற்காக அனுப்பிவைத்தார். பாபர் தம்மை ''இந்துஸ்தானத்தின் பேரரசர்'' என்று அறிவித்துக் கொண்டார்.

ராணா சங்கா மற்றும் ஆப்கானியர்கள் மீது அவர் கொண்ட வெற்றிகள் அவரை இந்தியாவின் உண்மையான ஆட்சியாளராக்கின. மேவாரின் ராணா சங்கா ஒரு சிறந்த ராஜபுத்திர வீரர். அவர் பாபருக்கு எதிராகப் போர் தொடுத்தார். 1527ஆம் ஆண்டு ஆக்ராவிற்கு அருகில் நடைபெற்ற கானுவாப் போரில பாபர் அவரை முறியடித்தார். இந்த வெற்றிக்குப் பிறகு பாபர் காஸி என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார்.

1528 ஆம் ஆண்டு மற்றொரு ராஜபுத்திர ஆட்சியாளரான மேதினி ராய் என்பவரிடமிருந்து பாபர் சந்தேரியைக் கைப்பற்றினார். அதற்கடுத்த ஆண்டில் பீகாரில் நடைபெற்ற கோக்ரா போரில் பாபர் ஆப்கன்களை முறியடித்தார். இந்த வெற்றிகளினால் பாபர் இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்தினார். 1530ல் தமது நாற்பத்தி ஏழாவது வயதில் ஆக்ராவில் பாபர் மறைந்தார்.

**பாபர் பற்றிய ஒரு மதிப்பீடு**

பாபர் ஒரு சிறந்த ஆட்சியாளர். நிலைத்த சாதனைகளை நிகழ்த்தியவர். அரபு மற்றும் பாரசீக மொழிகளில் புலமை மிக்கவர். துருக்கி மொழியே அவரது தாய்மொழி. துசுகி பாபரி என்ற அவரது நினைவுக்குறிப்புகள் துருக்கி மொழியில் எழுதப்பட்டதாகும். இந்தியாவைப்

பற்றிய வருணனைகள் அதில் இடம் பெற்றுள்ளன. எந்த உண்மையையும் மறைக்காமல், தான் பெற்ற தோல்விகளையும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். இயற்கையை ரசிக்கும் உள்ளத்தவரான அவர் இந்தியாவின் தாவரங்கள் மற்றும் விலங்குகள் பற்றியும்கூட தமது நினைவுக் குறிப்புகளில் விவரித்துள்ளார்.

**உமாயூன் (1530 – 1540)**

பாபரின் மூத்த மகன் உமாயூன். உமாயூன் என்றால் 'நல்வாய்ப்பு' என்று பொருள். ஆனால், முகலாயப் பேரரசில் நல்வாய்ப்புகளைப் பெறாத மன்னராக அவர் இருந்தார். உமாயூனுக்கு கம்ரான், அஸ்காரி, ஹிண்டால் என்ற மூன்று சகோதரர்கள். உமாயூன் பேரரசை தனது சகோதரர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். ஆனால், அதுவே அவருக்கு பெரும் சோதனையாக முடிந்தது. காபூல் மற்றும் காண்டஹாரின் ஆட்சியாளராக கம்ரான் நியமிக்கப்பட்டார். சாம்பல் மற்றும் ஆல்வார் பகுதிகள் அஸ்காரிக்கும் ஹிண்டாலுக்கும் அளிக்கப்பட்டன.



உமாயூன்

கிழக்கில் உமாயூன் ஆப்கன்களை எதிர்த்து போரிட்டுக் கொண்டிருந்த போது, குஜராத்தின் பகதூர் ஷா டெல்லிநோக்கி படையெடுத்து வரும் செய்தி அவருக்கு கிட்டியது. எனவே, ஆப்கானியர்களின் தலைவரான ஷெர்கானுடன் (வருங்கால ஷெர்ஷா) அவசரமாக ஒரு உடன்படிக்கையை செய்து கொண்ட உமாயூன் குஜராத் நோக்கிப் புறப்பட்டார்.

உமாயூன் பகதூர்ஷாவிடமிருந்து குஜராத்தைக் கைப்பற்றி தனது சகோதரர் அஸ்காரியை அங்கு ஆளுநராக நியமித்தார். ஆனால், பகதூர் ஷா அஸ்காரியை விரட்டிவிட்டு மீண்டும் குஜராத்தைக் கைப்பற்றி கொண்டார். இதற்கிடையில், உமாயூன் அவரக்கெதிராக மீண்டும் போர் தொடுத்தார். 1539 ஆம் ஆண்டு நடைபெற்ற சௌசா போரில் ஷெர்கான் முகாலாயப்படைகளை நசுக்கினார். உமாயூன் போர்க்களத்திலிருந்து தப்பி ஆக்ராவுக்கு சென்றார். அங்கிருந்தபடியே தனது சகோதரர்களின் உதவியை உமாயூன் நாடினார்.

ஆனால், சகோதரர்கள் ஒத்துழைக்க மறுக்கவே, உமாயூன் மீண்டும் தனியாகவே ஷெர்கானை எதிர்கொண்டார். 1540ல் பில்கிராம் போர் நடைபெற்றது. இது கனோஜ் போர் எனவும் அழைக்கப்படுகிறது. இப்போரில் ஷெர்கான் உமாயூனை மீண்டும் முறியடித்தார். நாடிழந்த உமாயூன் அடுத்த பதினைந்து ஆண்டுகள் இந்தியாவுக்கு வெளியே வாழ நேர்ந்தது.



**சூர் இடைவெளி (1540 – 1555)**

சூர்மரபை தோற்றுவித்தவர் ஷெர்ஷா. அவரது இயற்பெயர் பரீத். பீகாரிலுள்ள சசாரம் என்ற பகுதியின் ஜாகீர்தாரான ஹசன்கான் என்பவரின் மகன். பின்னர், பரீத் பீகாரின் ஆப்கானிய ஆட்சியாளரிடம் பணிபுரிந்தார். பரித்தின் வீரச் செயலைப் பாராட்டியே அந்த ஆப்கானிய ஆட்சியாளர் ஷெர்கான் என்ற பட்டத்தை அளித்தார். ஷெர்கான் சௌசாப் போரில் உமாயூனைத் தோற்கடித்தார் என்பதை ஏற்கனவே கண்டோம். 1540ல் ஷெர்கான் ஷெர்ஷா என்ற பட்டத்தோடு டெல்லியின் ஆட்சியாளரானார்.

**ஷெர்ஷா சூர் (1540 – 1545)**

ஷெர்ஷா, ராஜபுத்திரர்களுடன் பலமுறை போரிட்டு தனது பேரரசை விரிவுபடுத்திக் கொண்டார். பஞ்சாப், மாளவம், சிந்து, முல்தான், பண்டேல்கண்ட் போன்றவை அவரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் அடங்கும். அஸ்ஸாம், நேபாளம், காஷ்மீர், குஜராத் தவிர ஏனைய வட இந்தியா முழுவதையும் கொண்டதாக ஷெர்ஷாவின் பேரரசு விளங்கியது.



ஷெர்ஷா சூர்

**ஷெர்ஷாவின் ஆட்சி முறை**

குறுகிய ஐந்து ஆண்டுகளே ஆட்சியிலிருந்தாலும், ஷெர்ஷா ஒரு சிறந்த ஆட்சிமுறையை உருவாக்கியிருந்தார். மத்திய அரசில் பல்வேறு துறைகள் இருந்தன. அரசருக்கு உதவியாக நான்கு முக்கிய அமைச்சர்கள் இருந்தனர்.

1. திவானி விசாரத் – வாசிர் என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

 - வருவாய் மற்றும் நிதிநிர்வாகம்

2. திவானி அரிஸ் – படைத்துறை

3. திவானி ரஸலத் – அயலுறவுத்துறை

4. திவானி இன்ஷா – தகவல் தொடர்புத்துறை

ஷெர்ஷாவின் பேரரசு நாற்பத்தியேழு சர்க்கார்களாக பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு சர்க்காரிலும் முதன்மை ஷிக்தார் (சட்டம் ஒழுங்கு), முதன்மை முன்சீப் (நீதி வழங்குதல்) என்ற இரண்டு முக்கிய அதிகாரிகள் இருந்தனர். ஒவ்வொரு சர்க்காரும் பல பர்கானாக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஷிக்தார் (ராணுவ அதிகாரி), அமின் (நிலவருவாய்), பொடேதார் (கருவூல அதிகாரி), கர்கூன்கள் (கணக்கர்கள்) ஆகிய அதிகாரிகள் பர்கானா நிர்வாகத்தை கவனித்து வந்தனர். பேரரசில் இக்தா என்றழைக்கப்பட்ட நிர்வாகப்பிரிவுகளும் இருந்தன.

ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் நிலவருவாய் நிர்வாகம் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. நிலங்கள் கவனமாக அளக்கப்பட்டன.

விளைநிலங்கள் அனைத்தும் நல்லவை, நடுத்தரமானவை, மோசமானவை என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. சாதாரணமாக சாராசரி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ நிலவரி பெறப்பட்டது. ஷெர்ஷாவின் நிலவருவாய் சீர்த்திருத்தங்களினால் நாட்டின் வருவாய் பெருகியது. 'தாம்' என்ற புதிய வெள்ளி நாணயங்களை ஷெர்ஷா அறிமுகப்படுத்தினார். அவை 1835ஆம் ஆண்டு வரைகூட புழக்கத்திலிருந்தன.

நான்கு முக்கிய பெருவழிச் சாலைகளை அமைத்து போக்குவரத்து வசதிகளை ஷெர்ஷா மேம்படுத்தினார். அவையாவன : 1. சோனார்கான் முதல் சிந்து வரை 2) ஆக்ரா முதல் பர்ஹாம்பூர் வரை 3) ஜோத்பூர் முதல் சித்தூர் வரை 4) லாகூர் முதல் முல்தான் வரை. பயணிகளின் வசதிக்காக பெருவழிச் சாலைகளில் ஆங்காங்கே தங்குமிடங்களும் அமைக்கப்பட்டன.

காவல்துறை மிகவும் திறமையான சீரமைக்கப்பட்டிருந்தது. அவரது ஆட்சிக் காலத்தில் குற்றங்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன.

படைத்துறை நிர்வாகமும் திறமையான முறையில் அமைக்கப் பட்டிருந்தது. அலாவுதின் கில்ஜியின் குதிரைகளுக்கு சூடுபோடுதல் போன்ற நடைமுறைகளை ஷெர்ஷா பின்பற்றினார்.



**ஷெர்ஷா பற்றிய ஒரு மதிப்பீடு**


ஷெர்ஷா ஒரு பண்புமிக்க முஸ்லீமாகத்திகழ்ந்தார். பொதுவாக, பிற சமயப்பிரிவுகளை சகிப்புத்தன்மையுடன் நடத்தினார். இந்துக்களுக்கு முக்கிய பதவிகளை அளித்தார். கலை, கட்டிடக்கலையையும் அவர் ஆதரித்தார். டெல்லிக்கு அருகில் யமுனை நதிக்கரையில் ஷெர்ஷா ஒரு புதிய நகரத்தை நிர்மாணித்தார். அதில், தற்போது புராண கிலா என்ற பழைய கோட்டையும் அதனுள் ஒரு மசூதியும் மட்டுமே எஞ்சியுள்ளன. சசாரத்தில் ஒரு கல்லறை மாடத்தையும் அவர் கட்டினார். இந்தியக் கட்டிடக் கலையின் அமைப்புகளில் சிறந்தவற்றில் ஒன்றாகஅது கருதப்படுகிறது. கற்றோரையும் ஷெர்ஷா ஆதரித்தார். அவரது ஆட்சிக்காலத்தில் மாலிக் முகமது ஜெயசி என்பவர் புகழ்வாய்ந்த இந்தி நூலான பத்மாவத் என்ற நூலைப்படைத்தார்.

ஷெர்ஷாவின் மறைவுக்குப்பிறகு அவரது வாரிசுகள் 1555ஆம் ஆண்டு உமாயூன் மீண்டும் இந்தியாவைக் கைப்பற்றும் வரை ஆட்சியில் தொடர்ந்தனர்.

**உமாயூன் (1555 – 1556)**

1540 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து புறப்பட்ட உமாயூன் சிந்துவுக்கு செல்லும் வழியில் ஹமீதா பானு பேகம் என்பவரை மணந்தார். அவர்கள் அமர்கோட் என்ற இடத்தில் ஒரு இந்து அரசரான ராணாபிரசாத் என்பவரது ஆதரவில் வாழ்ந்து வந்தபோது 1542ல் அக்பர் பிறந்தார். பின்னர், ஈரானுக்கு சென்ற உமாயூன் அந்நாட்டு ஆட்சியாளரிடம் உதவிகோரி பெற்றார். கம்ரான், அஸ்காரி என்ற இரண்டு சகோதரர்களையும் உமாயூன் முறியடித்தார். இதற்கிடையில் இந்தியாவில் சூர் மரபினரின் ஆட்சியும் வேகமாக சீர்குலைந்தது.

1555 ஆம் ஆண்டு ஆப்கன்களை முறியடித்து உமாயூன் மீண்டும் முகலாய அரியணையைக் கைப்பற்றினார். ஆறுமாத காலத்திற்குப் பிறகு, 1556–ல் உமாயூன் தனது நூலகப்படிக்கட்டில் தடுக்கி விழுந்து உயிர்நீத்தார். உமாயூன் ஒரு சிறந்த படைத்தளபதியாகவோ, போர் வீரராகவோ இல்லையென்றாலும், அன்பும் கருணையும் அவரிடம் குடிகொண்டிருந்தன. கல்விமானாகவும் அவர் திகழ்ந்தார். கணிதம், வான இயல், ஜோதிடம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். ஓவியக்கலை அவருக்குப்பிடித்த ஒன்று . பாரசீக மொழியில் அவர் கவிதைகளையும் புனைந்தார்.






**அக்பர் (1556-1605)**



அக்பர்

இந்தியாவின் தலைசிறந்த பேரரசர்களில் அக்பரும் ஒருவர். தனது தந்தை உமாயுனின் மறைவுக்குப்பிறகு அவர் அரியணையேறினார். ஆனாலும், டெல்லியை ஆப்கன்கள் கைப்பற்றிக் கொண்டதால் அவரது நிலை ஆபத்தானதாகவே இருந்தது. ஆப்கன்களின் படைத்தலைவர் ஹெமு டெல்லியைத்தம் வசம் வைத்திருந்தார். 1556 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் பானிப்பட்டுப் போரில், ஹெமு வெற்றியின் விளிம்புவரை சென்றுவிட்டார். ஆனால், அவரது கண்ணில் ஒரு அம்பு பாய்ந்ததால் மயக்கமானார். தலைவனில்லாத அவரது படை சிதறி ஓடியது. அதிர்ஷ்டம் அக்பரின் பக்கம் இருந்ததால், அவரது வெற்றி உறுதிப் படுத்தப்பட்டது.

அக்பரின் முதல் ஐந்தாண்டு கால ஆட்சியின்போது பைராம்கான் அவருக்கு அரசப்பிரதியாக செயல்பட்டார். முகலாயப் பேரரசை ஒருங்கிணைத்த பெருமை பைராம்கானேயே சாரும். ஐந்தாண்டு களுக்குப்பிறகு, அரசவைப் பூசல்களின் விளைவாக அக்பர் அவரைப் பதவியிலிருந்து நீக்கி, மெக்காவிற்கு செல்லும்படி பணிந்தார். ஆனால், மெக்கா செல்லும் வழியிலேயே ஆப்கன் ஒருவனால் அவர் கொல்லப்பட்டார்.

அக்பரது ராணுவவெற்றிகள் பல. ஆக்ரா முதல் குஜராத் வரையும், பின்னர் ஆக்ரா முதல் வங்காளம் வரையும் என வட இந்தியா முழுதையும் அக்பர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். வடமேற்கு எல்லைப் புறத்தையும் அவர் வலிமைப்படுத்தினார். பின்னர், அவரது கவனம் தக்காணத்தின் பக்கமும் திரும்பியது.

**ராஜபுத்திரர்களுடன் கொண்டிருந்த உறவுகள்**

அக்பரின் ராஜபுத்திரக்கொள்கை குறிப்பிடத்தக்கது. அவர் ராஜபுத்திர இளவரசியான ராஜா பாரமஹாலின் மகளை மணந்து கொண்டார். முகலாயர் வரலாற்றில் அந்த நிகழ்ச்சி ஒரு திருப்புமுனையாகும். ராஜபுத்திரர்கள் நான்கு தலைமுறைகள் முகலாயர்களுக்கு சேவை யாற்றினர். பலர் படைத்தளபதி பதவி வரை பல்வேறு பதவி உயர்வுகளைப்

பெற்றனர். அக்பரது ஆட்சியில், ராஜா பகவான்தாஸ், ராஜா மன்சிங் ஆகியோருக்கு முக்கிய பதவிகள் அளிக்கப்பட்டன. ஒருவர்பின் ஒருவராக ராஜபுத்திர அரசுகளும் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டன.

ஆனால், மேவாரின் ராணாக்கள் மட்டும், பலமுறை தோல்விகளைத் தழுவிய போதிலும், அடிபணிய மறுத்தனர். 1576 ஆம் ஆண்டு ஹால்திகாட் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் மன்சிங் தலைமையிலான முகலாயப் படைகள் ராணா பிரதாப் சிங்கை முறியடித்தன. மேவாரின் இத்தோல்விக்குப் பிறகு, பெரும்பாலான ராஜபுத்திர ஆட்சியாளர்கள் அக்பரின் மேலாண்மைக்கு அடிபணிந்தனர்.

அக்பரது ராஜபுத்திரக் கொள்கை அவரது பரந்த சமயக் கொள்கையைத் தழுவியே இருந்தது. புனிதப்பயணவரியையும், பின்னர் ஜிசியா வரியையும் அவர் ரத்து செய்தார். அக்பரின் ராஜபுத்திரக் கொள்கை முகலாயப் பேரரசு, ராஜபுத்திரர்கள் இருசாரருக்கும் சாதகமாகவே இருந்தது. மிகச் சிறந்த போர்வீரர்களின் சேவை முகலாயர்களுக்கு கிடைத்தது. மறுபுறம், ராஜஸ்தான் பகுதியில் அமைதி நிலவியது; முகலாயப் பணியில் சேர்ந்த ராஜபுத்திரர்கள் உயர்பதவிகளையும் அடைந்தனர்.

### சமயக் கொள்கை

வரலாற்றின் ஏடுகளில் அக்பர் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதற்கு காரணம் அவரது சமயக்கொள்கையேயாகும். அக்பரின் சமயக் கருத்துக்களுக்கு பல்வேறு காரணிகள் துணைபுரிந்தன. தொடக்க காலத்தில் அவர் சூஃபித்துறவிகளுடன் கொண்டிருந்த உறவுகள், அவரது ஆசான் அப்துல் லத்தீபின் போதனைகள், ராஜபுத்திரப் பெண்களை அவர் திருமணம் செய்து கொண்டது, ஷேக் முபாரக் மற்றும் அவரது புதல்வர்களான அபுல் பெய்சி, அபுல் பசல் போன்ற அறிஞர்களுடன் அவரது தொடர்புகள், இந்துஸ்தானத்தில ஒரு பேரரசை நிறுவ வேண்டும் என்ற ஆசை போன்றவை அவரது சமய கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

அக்பர் தொடக்கத்தில் ஒரு கடமை தவறாத முஸ்லீமாகவே இருந்தார். ஆம்பர் நாட்டு இளவரசி ஜோத்பாயை மணந்த பின்னர் அவர் புனிதப் பயணவரியை ரத்து செய்தார். 1562ல் ஜிசியா வரியையும் ரத்து செய்தார். தனது இந்து மனைவியர் விருப்பம்போல் தங்களது கடவுளரை வழிபட அனுமதித்தார். பின்னர், அவர் இஸ்லாமிய சமயத்தின் மீது ஐயுறவு கொண்டார்.



1575ல், அக்பர் தனது புதிய தலைநகரான பதேபூர் சிக்ரியில் இபாதத் கானா என்ற வழிபாட்டுக் கூடத்தை அமைத்தார். இந்து சமயம், சமண சமயம், கிறித்துவ சமயம், ஸொராஸ்டிரிய சமயம் போன்ற அனைத்து சமய அறிஞர்களையும் அங்கு அழைத்து விவாதிக்க செய்தார். அரசியல் விவகாரங்களில் முஸ்லிம் உலேமாக்கள் தலையிடுவதையும் அவர் வெறுத்தார். 1579ல் அக்பர் ''தவறுபடா ஆணையை'' வெளியிட்டு தமது சமய அதிகாரங்களை உறுதிப்படுத்தினார்.

1582ல் அக்பர் 'தீன் இலாஹி' அல்லது 'இறைநம்பிக்கை' என்ற தமது புதிய சமயத்தை அறிவித்தார். அது ஒரு கடவுள் 'கோட்பாட்டின்மீது நம்பிக்கை கொண்டதாகும். அனைத்து சமயங்களின் நல்ல கருத்துக் களையும் உள்ளடக்கியதாக அது காணப்பட்டது. பகுத்தறிவே அதன் அடிப்படை. மூடநம்பிக்கைகளை அது ஆதரிக்கவில்லை. பல்வேறு சமயங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கு ஒரு பாலமாகவும் அது அமைந்தது. இருப்பினும், அக்பரது புதிய சமயம் தோல்வியே கண்டது. அவரது மறைவுக்குப்பிறகு அது சிதைந்துபோயிற்று. அக்பரது வாழ்நாளிலே கூட பீர்பால் உள்ளிட்ட பதினைந்து பேர்களே அக்கோட்பாட்டைப் பின்பற்றினர். அக்பர் தனது புதிய கோட்பாட்டை ஏற்கும்படி எவரையும் வலியுறுத்தவில்லை.

### நிலவருவாய் நிர்வாகம்

ராஜா தோடர்மால், அக்பரது ஆட்சிக்காலத்தில் நிலவருவாய் நிர்வாகத்தில் சில ஆய்வுகளை மேற்கொண்டார். அக்பரது நிலவருவாய் முறை ஐப்தி அல்லது பந்தோபஸ்து முறை என அழைக்கப்பட்டது.

ராஜா தோடர்மால் அதனை மேலும் சீரமைத்தார். அதற்கு தாஹாசாலா முறை எனப்பெயர். 1580ல் அது நிறைவேற்றப்பட்டது. அம்முறைப்படி, தோடர்மால் ஒரேமாதிரியான நில அளவையை அறிமுகப்படுத்தினார். கடந்த பத்தாண்டு காலத்தில் விளைச்சலின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு நிலவருவாய் நிர்ணயிக்கப்பட்டது. நிலங்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன– போலஜ் (ஆண்டு தோறும் பயிரிடப்படும் நிலம்), பரௌதி (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முறை பயிரிடப்படுவது) சச்சார் (மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படுவது) மற்றும் பஞ்சார் (ஐந்து அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படுவது). நிலவரி பொதுவாக பணமாகவே செலுத்தப்பட்டது.

**மன்சப்தாரி முறை**

அக்பரது ஆட்சி முறையில் மன்சப்தாரி முறை முக்கிய இடம் வகித்தது. இம்முறையின்கீழ் ஒவ்வொரு அதிகாரிக்கும் ஒரு தகுதிநிலை வழங்கப்பட்டது. குறைந்ததபட்ச தகுதிநிலை மன்சப்தார்10 என்பதாகும் அதிகபட்ச தகுதி மன்சப்தார் 5000. இது உயர் குடியினருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அரசகுலத்தை சேர்ந்தவர்களுக்கு அதற்கும் மேலான தகுதிநிலைகள் நிர்ணயிக்கப்பட்டன. மன்சப் தகுதிநிலைகள் சத் மற்றும் சாவர் என இருவகைப்படும். சத் என்பது ஒருவரது தனிப்பட்ட அந்தஸ்தைக் குறிப்பதாகும். சாவர் என்பது ஒருவர்வைத்திருக்கவேண்டிய குதிரை வீரர்களின் எண்ணிக்கை அடிப்படையிலானது. ஒவ்வொரு சாவரும் குறைந்தபட்சம் இரண்டு குதிரைவீரர்களையாவது பெற்றிருக்கவேண்டும். மன்சப் தகுதிநிலைக்கு வாரிசுரிமை கிடையாது. நியமனங்கள் பதவி உயர்வுகள், பதவிநீக்கங்கள் அனைத்தும் நேரடியாக அரசரால் மேற்கொள்ளப்பட்டன.

**ஜஹாங்கீர் (1605– 1627)**

அக்பரின் மறைவுக்குப்பிறகு, 1605 ஆம் ஆண்டு இளவரசர் சலீம் ஜஹாங்கீர் (உலகை வென்றவர்) என்ற பட்டத்தோடு ஆட்சிக்குவந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் பல்வேறு கலகங்கள் நடைபெற்றன. அவரது மகன் குஸ்ரூ கலகத்தில் ஈடுபட்டார். ஆனால், முறியடிக்கப்பட்டு சிறையிலிடப்பட்டார். அவரை ஆதரித்ததற்காக ஐந்தாவது சீக்கிய குருவான குரு அர்ஜுன் சிங் சிரச்சேதம் செய்யப்பட்டார்.



ஜஹாங்கீர்

**நூர்ஜஹான்**



நூர்ஜஹான்

1611 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் மெஹருனிசாவை மணந்து கொண்டார். அவர் நூர் ஜஹான் (உலகின் ஒளி) என்று அழைக்கப்பட்டார். நூர்ஜஹானின் தந்தை இதிமத்தௌலா ஒரு பண்பாளர். அவருக்கு தலைமை திவான் பதவி தரப்பட்டது. நூர்ஜஹானின் குடும்பத்தைச்சேர்ந்த பலருக்கு உயர்பதவிகள் வழங்கப்பட்டன. அவரது மூத்த சகோதார் ஆசப்கானுக்கு உயர்



குடியினருக்கு மட்டுமே வழங்கப்படுகிற கான்–இ–சாமன் பதவி வழங்கப்பட்டது. 1612ஆம் ஆண்டு ஆசப்கானின் மகளான அர்ஜீமந்த் பானு பேகம் (பிற்காலத்தில் மும்தாஜ்) என்பவரை ஜஹாங்கீரின் மூன்றாவது மகன் இளவரசன் குர்ரம் (பிற்காலத்திய ஹாஜகான்) மணந்து கொண்டார்.

நூர்ஜஹான் ஜன்டா என்ற ஒரு ஆதரவாளர் குழுவை அமைத்துக் கொண்டு செயல்பட்டதாகவும், இதனால் முகலாய அரசவையில் இரண்டு கோஷ்டிகள் உருவானதாகவும் சிலவரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஜஹாங்கீர் முற்றிலும் தனது மனைவி நூர்ஜஹானின் கட்டுப்பாட்டில் இருந்து செயல்பட்டதால்தான் 1622ல் ஹாஜகான் தனது தந்தைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இந்த கருத்துக்கு பிற வரலாற்று அறிஞர்கள் உடன்படுவதில்லை. ஜஹாங்கீர் நோய்வாய்ப்பட்டு வலிமை குன்றும் காலம்வரை அவரே அனைத்து அரசியல் முடிவுகளையும் எடுத்து வந்தார் என்பதை அவரது சுயசரிதம் வெளிப்படுத்துகிறது.

இருப்பினும், நூர்ஜஹான் அரச குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தார். பாரசீக பண்பாட்டு முறைகளைக்கொண்டுவந்தார். அரசவையில் பாரசீகக்கலையும் பண்பாடும் அவரால் ஊக்குவிக்கப்பட்டன. ஜஹாங்கீருடன் நெருங்கிய உறவை எப்போதும் அவர் கொண்டிருந்தார். வேட்டையின்போது கூட அவருடனேயே செல்வது வழக்கம். ஹாஜகானின் எழுச்சி அவரது தனிப்பட்ட ஆவலால் தூண்டப்பட்டதாகும். தம்மை காண்டாஹாருக்கு செல்லுமாறு பணித்த தந்தையை எதிர்த்து அவர் கிளர்ச்சியில் இறங்கினார். அக்கிளர்ச்சியால் முகலாயப்பேரரசின் நடவடிக்கைகள் நான்காண்டுகள் திசைமாறின. 1627ல் ஜஹாங்கீர் மறைந்த பிறகு, உயர்குடியினர் மற்றும் ராணுவத்தின் ஆதரவைப்பெற்று ஹாஜகான் ஆக்ராவை அடைந்தார். நூர்ஜஹானுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டது. அடுத்த பதினெட்டு ஆண்டுகள் நூர்ஜஹான் உயிர்வாழ்ந்தார்.



ஷாஜகான், மும்தாஜ்

**ஹாஜகான் (1627–1658)**

காண்டஹார் மற்றும் பிற பூர்வீகப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ஹாஜகான் வடமேற்கு எல்லைப்பகுதியில் தொடர்ந்து படையெடுப்புகளை நடத்தினார்.

1639 முதல் 1647 வரை நடைபெற்ற தொடர் படையெடுப்புகளினால் 5000 முகலாய வீரார்கள் மடிந்தனர். பின்னர், ஹாஜகான் தனது எண்ணத்தை கைவிட்டு அங்கு போரிடுவதை நிறுத்தினார்

அவரது தக்காணக் கொள்கை வெற்றிகளைத் தேடித்தந்தது. அகமது நகரை முறியடித்து முகலாயப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். பீஜப்பூரும் கோல்கொண்டாவும் பேரரசரோடு ஒப்பந்தம் செய்து கொண்டன. காந்தேஷ், பீகார், தெலிங்கானா, தௌலதாபாத் என்ற நான்கு மகாணங்களை ஷாஜகான் தக்காணத்தில் உருவாக்கினார். அவற்றை, தமது மகன் அவுரங்கசீப்பின் கட்டுப்பாட்டில் விட்டார்

**வாரிசுரிமைப்போர்**


ஷாஜகானின் நான்கு புதல்வர்களுக்கிடையே – தாரா ஷுக்கோ (பட்டத்து இளவரசர்), ஷீஜா (வங்காள ஆளுநர்), அவுரங்கசீப் (தக்காண ஆளுநர்) மற்றும் மூரத் பக்ஷ் (மாளவம், குஜராத்தின் ஆளுநர்) – அவரது ஆட்சிக்கால இறுதியில் பலத்த வாரிசுரிமைப் போர் மூண்டது. 1657ஆம் ஆண்டு இறுதியில் ஷாஜகான் சற்று நோய்வாய்ப்பட்டு பின்னர் தேறினார். ஆனால், இளவரசர்கள் நால்வரும் முகலாய அரியணைக்காக போரிடத்துவங்கினர். இப்போரில் அவுரங்கசீப் வெற்றி பெற்று ஆக்ரா கோட்டைக்குள் நுழைந்து தாராவை விரட்டியடித்தார். ஷாஜகானையும் அடிபணியச் செய்தார். ஆக்ரா கோட்டையில் அந்தப்புறப்பகுதியில் ஷாஜகானை சிறைவைத்தார். ஆனால், அவுரங்கசீப் தமது தந்தையை மோசமாக நடத்தவில்லை. அடுத்த எட்டு ஆண்டுகள் ஷாஜகான் தனது மகள் ஜகனாராவின் அன்பான சேவையில் காலத்தை கழித்தார். 1666ல் ஷாஜகான் இறந்தார். அவரது உடல் தாஜ்மஹாலில் மும்தாஜின் கல்லறைக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

**அவுரங்கசீப் (1658 – 1707)**


அவுரங்கசீப்

திறமைமிக்க முகலாய அரசர்களில் அவுரங்கசீப்பும் ஒருவர். அவர் ஆலம்கீர் அல்லது உலகை வெல்பவர் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். முதல் பத்தாண்டுகள் அவர் மேற்கொண்ட படையெடுப்புகள் யாவும் வெற்றியில் முடிந்தன. சிறுசிறு கிளர்ச்சிகளை அவர் நசுக்கினார். ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில்





பிற்பகுதியில் பெரும் சிக்கல்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஜாத்துக்கள், சத்நாமியர்கள் மற்றும் சீக்கியர்களும்கூட அவருக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். அக்கிளர்ச்சிகள்யாவும் அவுரங்கசீப்பின் கடுமையான சமயக்கொள்கையின் எதிர்விளைவுகளேயாகும்.

**தர்காணக் கொள்கை**

முகலாயரின் தக்காணக் கொள்கை அக்பரின் ஆட்சிக் காலத்திலிருந்தே தொடங்குகிறது. காந்தேஷ், பீரார் ஆகியவற்றை அக்பர் கைப்பற்றினார். அகமது நகரில் மாலிக் ஆம்பருடன் ஜஹாங்கீர் போரிட்டார். ஷாஜகான் ஆட்சிக்காலத்தில் தக்காண ஆளுநராக இருந்த அவுரங்கசீப் தீவிரமான தக்காணக் கொள்கையை பின்பற்றினார். முகலாயப் பேரரசராக பொறுப்பேற்றவுடன் அவுரங்கசீப் தமது ஆட்சிக்காலத்தில் முதல் இருபத்தியைந்து ஆண்டுகள் வடமேற்கு எல்லைப்பகுதியில் கவனம் செலுத்தினார். அத்தருணத்தில்தான் மராட்டிய அரசர் சிவாஜி வடக்கு மற்றும் தெற்கு கொங்கணப்பகுதியில் தனக்கென ஒரு தனி அரசை ஏற்படுத்திக்கொண்டார்.

மராட்டியரின் பரவிவரும் செல்வாக்கை ஒடுக்கும் நோக்கத்துடன் அவுரங்கசீப் பீஜப்பூர், கோல்கொண்டா மீது படையெடுத்தார். பீஜப்பூர் சுல்தான் சிக்கந்தர் ஷாவை முறியடித்து அப்பகுதியை இணைத்துக் கொண்டார். பின்னர் கோல்கொண்டா மீது தாக்குதல் தொடுத்து குதுப் ஷாஹி மரபை பூண்டோடு அழித்து அந்த அரசையும் இணைத்துக் கொண்டார். தக்காண அரசுகளை அழித்தது அவுரங்கசீப்பின் மாபெரும் அரசியல் தவறாகும். முகலாயருக்கும் மராட்டியருக்கும் இடைப்படு நாடாக அவை இருந்தன.

அவுரங்கசீப்பின் நடவடிக்கை முகலாயருக்கும், மராட்டியருக்கும் இடையே நேரடி மோதல் உருவாக வழிவகுத்தது. மேலும் அவரது தக்காணப்படையெடுப்புகள் முகலாய கருவூலத்தை காலிசெய்தன. ஜே.என். சர்க்காரின் கூற்றுப்படி தக்காணக் குடற்புண் அவுரங்கசீப்பை அழித்தது.

**சமயக்கொள்கை**

அவுரங்கசீப் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு வைதீக முஸ்லீமாகத் திகழ்ந்தார். இந்தியாவை ஒரு இஸ்லாமிய அரசாக மாற்றியமைப்பதே அவரது கொள்கை. ஒழுக்கநெறிகளை நடைமுறைப்



படுத்துவதற்கென முதாசீபுகள் என்ற உயர் அதிகாரம் படைத்த அதிகாரி களைக் கொண்ட ஒரு தனித் துறையை அவுரங்கசீப் ஏற்படுத்தினார். மது அருந்துவது தடைசெய்யப்பட்டது. பாங்க் என்ற தாவரம் பயிரிடுவதும் பயன்படுத்துவதும் பிற போதைப் பொருட்களும் தடைசெய்யப்பட்டன. முகலாய அரசவையில் இசை தவிர்க்கப்பட்டது. தரோக்கா தர்ஷன் என்ற பேரரசர் மணிமாடத்தில் மக்கள் முன்தோன்றும் சடங்கையும் அவர் விட்டொழித்தார். தசரா விழாவுக்கும் தடைவிதிக்கப்பட்டது. அரசவையிலிருந்த வானஇயல் மற்றும் ஜோதிடக்கலை அறிஞர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர்.

தொடக்கத்தில் அவுரங்கசீப் புதிதாக இந்துக் கோயில்கள் கட்டுவதையும் பழைய கோயில்கள் புதுப்பிக்கப்படுவதையும் தடைசெய்தார். பின்னர் இந்துக் கோயில்களை அழிக்கவும் முற்பட்டார். மதுரா, பெனாரஸ் போன்ற இடங்களிலிருந்த புகழ்பெற்ற கோயில்கள் சிதைக்கப்பட்டன. 1679ல் அவர் ஜிசியா மற்றும் புனிதப்பயண வரிகளை விதித்தார். இஸ்லாமிய சமயத்தில் பிற பிரிவினரையும்கூட அவர் சகித்துக்கொள்ளவில்லை.

மொஹரம் பண்டிகை கொண்டாடப்படுவதற்கும் தடைவிதிக்கப் பட்டது. தக்காண சுல்தானியர்கள்மீது அவர் படையெடுத்தமைக்கு முதன்மைக்காரணம் ஷியா வகுப்பினர்மீது அவர் கொண்டிருந்த வெறுப்பேயாகும். சீக்கியர்களையும் அவர் வெறுத்தார். ஒன்பதாவது சீக்கிய குருவான தேஜ் பகதூர் அவரால் தூக்கிலிடப்பட்டார். இதனால், சீக்கிய சமயத்தவர்கள் ஆயுதமேந்தத் தொடங்கினர்.

அவுரங்கசீப்பின் சமயக் கொள்கையால், ரஜபுத்திரர்கள், மராட்டியர்கள். சீக்கியர்கள் முகலாயப்பேரரசுக்கு எதிராகத் திரும்பினார். மதுராவிலிருந்த ஜாத்துக்களும், மேவாரிலிருந்த சத்நாமியர்களும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். எனவே, முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கும் அவுரங்கசீப் காரணமானார்.

**அவுரங்கசீப்பின் ஆளுமை மற்றும் குணநலன்**

தனிப்பட்ட வாழ்க்கையைப் பொறுத்தவரை, அவுரங்கசீப் கடும் உழைப்பாளர், ஒழுக்கசீலர், உணவு மற்றும் உடை போன்றவற்றில் மிகவும் எளிமையைக் கடைப்பிடித்தார். குரானைப் படியெடுத்து அவற்றை விற்று வரும் பணத்தில் தமக்கு வேண்டிய செலவுகளை செய்துகொண்டார். மது அருந்தும் வழக்கம் அவருக்கில்லை. கற்றறிவாளரான அவர், அராபிய மற்றும்

பாரசீக மொழிகளில் தேர்ச்சி பெற்று விளங்கினார். புத்தகங்கள் அவருக்குப் பிடித்தமானவை. தனது சமயத்திற்கு உண்மையானவராக நடந்து கொண்ட அவுரங்கசீப் தினம் ஐந்துவேளை தொழுகை நடத்தத்தவற மாட்டார். ரம்சான் நோன்பினை கட்டாயமாக அனுசரிப்பார்.

அரசியல் துறையில்தான் அவுரங்கசீப் பெருங்குற்றங்களை இழைத்தார். மராட்டிய அரசின் உண்மையான தன்மையை தவறாகப் புரிந்து கொண்ட அவுரங்கசீப் அவர்களைப் பகைத்துக்கொண்டார்.

மேலும், மராட்டியப் பூசலுக்கு ஒரு முடிவையும் அவர் காணத்தவறினார். ஷியா வகுப்பைச் சேர்ந்த தக்காண சுல்தானியங்களிடமும் அவர் தவறான கொள்கையையே கடைப்பிடித்தார். அவரது சமயக்கருத்துக்களை முஸ்லீம்கள் அல்லாத சமுதாயத்தின்மீது கட்டாயமாக திணிக்க அவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. முஸ்லிம் அல்லாதவர்களை பகைத்துக்கொண்டதால், முஸ்லிம்கள் அனைவரின் ஆதரவையும் அவர் பெற்றார் என்றும் கூறமுடியாது. மாறாக, முகலாயப் பேரரசின் அரசியல் எதிரிகளின் எண்ணிக்கை பெருகிறது.

**முகலாயரின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

அவுரங்கசீப்பின் மறைவுக்குப்பிறகு, முகலாயப் பேரரசு வேகமாக வீழ்ச்சியடைந்தது. முகலாய அரசவையிலிருந்த உயர் குடியினருக்கிடையே போட்டிக் குழுக்கள் மலிந்தன. 1739 ஆம் ஆண்டு நாதிர்ஷா முகலாயப் பேரரசரை சிறைப்பிடித்து டெல்லியை சூரையாடியபோதுதான் பேரரசின் பலவீனம் வெளிப்பட்டது. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் பலவகைப்பட்டவை. அவுரங்கசீப்பின் தக்காண மற்றும் சமயக் கொள்கைகள் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. திறமையற்ற வழித்தோன்றல்களும் முகலாயப் படைகளின் ஒழுக்கசீர்கேடுகளும் அதன் வீழ்ச்சிக்கு வித்திட்டன. பரந்த பேரரசை கட்டிக்காப்பதும் கடினமாக இருந்தது. தொடர்ந்து நடைபெற்ற போர்களினால் நிதிநிலைமையும் மோசமாகியது. இந்தியாவில் ஐரோப்பியர்கள் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கியபோதுதான், முகலாயரிடம் வலிமையான கடற்படை இல்லாமையை உணரத்தொடங்கினர். நாதிர்ஷா, அகமது ஷா அப்தாலி போன்றோரின் படையெடுப்புகளும் பேரரசின் வலிமையைக் குறைத்தன. எனவே, முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு அரசியல், சமூக, பொருளாதார கூறுகளின் ஒட்டு மொத்த செயல்பாடுகளே காரணங்களாக அமைந்தன.



**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது.*

1. *பாபர் முதல் அவுரங்கசீப் வரை முகலாயரின் அரசியல் வரலாறு.*
2. *பாபரின் சாதனைகளும், உமாயுனின் இடர்பாடுகளும்.*
3. *சூர் இடைவெளி – ஷெர்ஷா ஆட்சி முறை*
4. *அக்பரது ஆட்சி – ஆட்சி முறை, மன்சப்தாரி முறை, சமயக் கொள்கை.*
5. *ஜஹாங்கிர், ஷாஜகான், வாரிசுரிமைப்போர்.*
6. *அவுரங்கசீப்பின் தக்காணக் கொள்கை, சமயக் கொள்கை*
7. *முகலாயப் பேரரசின் வீழ்ச்சி*

# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க

1. பாபர் துசுகி பாபுரி நூலை எழுதிய மொழி

அ) பாரசீகம் ஆ) இந்தி

இ) அராபியம் ஈ) துருக்கி

2. ஷாஜகானின் இயற்பெயர்

அ) சலீம் ஆ) குர்ரம்

இ) தாரா ஷுக்கோ ஈ) பரித்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ............. ஆண்டில் சௌசா போர் ........... க்கும் ......... க்கும் நடைபெற்றது.

2. ஹல்திகாட் போரில் ......... தலைமையிலான முகலாயப்படை ....... ஐ முடியடித்தது.

3. ஷாஜகானின் இறுதிக்காலத்தில் அவரது மகளான ....... அவரை கனிவுடன் கவனித்துக்கொண்டார்.

**III.** பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | ஹல்திகாட் போர் | அ) 1540 |
| 2. | இரண்டாம் பானிப்பட்டுப்போர் | ஆ) 1539 |
| 3. | சௌசாப் போர் | இ) 1576 |
| 4. | பில்கிராம் போர் | ஈ) 1556 |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ) அக்பரின் தக்காணக் கொள்கை முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

ஆ) அவுரங்கசீப்பின் சமயக் கொள்கை முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்று.



இ) அவுரங்கசீப் தக்காண முஸ்லீம் சுல்தானியங்களை ஆதரித்தார்.

ஈ) அவுரங்கசீப் முஸ்லீம் அல்லாதோரை பகைத்துக் கொண்டதால் அனைத்து முஸ்லிம்களும் அவரை ஆதரித்தனர்.

**V.** பின்வருவவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. பீகாரில் நடைபெற்ற கோக்ராப் போரில் பாபர் ரஜபுத்திரர்களை முடியடித்தார்.

2. ஜப்தி முறையை தோடர்மால் மேலும் மேம்படுத்தினார்.

3. ஷாஜகான் ஒன்பதாவது சீக்கிய குரு தேஜ்பகதூரை தூக்கிலிட்டார்.

**VI.** சிறுகுறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. துசுகி பாபுரி
2. சூர் இடைவெளி
3. ராஜா தோடர்மால்
4. தீன் இலாஹி
5. நூர்ஜஹான்

**VIII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. பாபரின் சாதனைகளைக் கூறுக.
2. ஷாஜகானின் ஆட்சிக்கால இறுதியில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரை பற்றி குறிப்பு எழுதுக.
3. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆய்க.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. ஷெர்ஷா ஆட்சி முறையின் சிறப்புக் கூறுகளை தொகுத்து எழுதுக.
2. அக்பரின் சாதனைகளை மதிப்பிடுக.
3. அவுரங்கசீப்பின் சமயக் கொள்கையை மதிப்பிடுக.

# பாடம் – 21

# முகலாயரின் கீழ் இந்தியா

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *முகலாயப் பேரரசின் கீழ் பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை*
2. *முகலாய உயர் குடியினரும் அவர்களின் வாழ்க்கை முறையும்*
3. *வேளாண்மை மற்றும் வணிகம்*
4. *பண்பாட்டு வளர்ச்சி – கலை, கட்டிடக்கலை*
5. *முகலாயர்கால ஓவியங்கள், இலக்கியம்*

### பொருளாதார, சமூக வாழ்க்கை

முகலாயர் காலத்தில் நடைபெற்ற சமூக, பொருளாதார வளர்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. அக்காலத்தில், பல ஐரோப்பியர் பயணிகளும் வணிகர்களும் இந்தியாவிற்கு வந்தனர். இந்தியாவில் நிலவிய சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றி அவர்கள் ஏராளமான தகவல்களை விட்டுச் சென்றுள்ளனர். பொதுவாக, அவர்கள் இந்தியாவின் செல்வச் செழிப்பையும், செல்வந்தர்களின் ஆடம்பரமான வாழ்க்கையையும் விவரித்துள்ளனர். மறுபுறம், குடியானவர்கள், கைவினைஞர்கள் போன்ற சாதாரண மக்களின் வறுமையையும் அவர்கள் பட்ட துயரங்களையும் கூட எடுத்துக் கூறியுள்ளனர்.

### முகலாய உயர்குடியினர்

முகலாயர் காலத்தில் உயர்குடியினர் பல சலுகைகள் பெற்று வாழ்ந்த வர்க்கத்தினராவர். அவர்களின் பெரும்பாலோர் துருக்கியர் மற்றும் ஆப்கன்கள் போன்ற அயல் நாட்டினர். ஆனால், அக்காலம் முழுவதும் அவர்களுக்கிடையே கடும்பூசல்கள் நிலவின.



அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவிலேயே குடியமர்ந்து இந்தியாவையே தாய் நாடாக வரித்துக் கொண்டனர். இந்திய சமூகத்திலும் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்தனர். அதே சமயம் தங்களது ஒரு சில பழக்க வழக்கங்களையும் விட்டுவிடாமல் பின்பற்றிவந்தனர். அக்பர் காலம் தொடங்கி, இந்துக்களும், குறிப்பாக ராஜபுத்திரர்களும், உயர்குடியினரின் வர்க்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எடுத்துக்காட்டாக, ராஜா மன்சிங், ராஜா பீர்பால், ராஜா தோடர்மால் போன்றோரைக் குறிப்பிடலாம். பின்னர். மராட்டியர்களும் முகலாயரிடம் பணியில் சேர்ந்து உயர் குடியினராக ஏற்றம் பெற்றனர்.

முகலாய உயர்குடியினர் அதிக ஊதியங்களைப் பெற்ற போதிலும், அவர்களது செலவுகளும் அதிகமாகவே இருந்தன. உயர் குடியினர் ஒவ்வொருவரும், ஏராளமான பணியாளர்கள், குதிரைகள், யானைகள் போன்ற பரிவாரங்களை பராமரிக்க வேண்டும். முகலாயப் பேரரசர்களைப் போலவே அவர்களும் ஆடம்பர வாழ்க்கையை நடத்த முயற்சித்தனர். உயர்ந்த வகை ஆடைகளை அணிந்தனர். பழங்கள்கூட இறக்குமதி செய்து புசித்தனர். விலையுயர்ந்த அணிகலன்களை ஆண், பெண் இருபாலரும் அணிந்தனர். பேரரசர்களுக்கு விலையுயர்ந்த பரிசுப் பொருட்களையும் அவ்வப்போது வழங்கினர்.

### கிராமப்புற மக்கள்

செல்வச்சீமான்கள் பட்டு மற்றும் பருத்தி ஆடைகளை அணிந்தனர். ஆனால், ஏழை மக்கள் உடுக்க உடையின்றி, குறைந்தபட்ச உடையிலேயே காலம் கழித்தனர். குளிர்காலங்களில்கூட அவர்களுக்கு போதுமான உடைகள் இருப்பதில்லை. தக்காணத்தில் வாழ்ந்த மக்கள் காலணியேதுமின்றி காணப்பட்டதாக நிகிடின் என்ற அயல்நாட்டுப்பணி குறிப்பிட்டுள்ளார். தோல்பொருட்களின் உயர்ந்தவிலையே அதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும். அரிசி, தினை, பருப்பு வகைகள் போன்றவை சாதாணமக்களின் முக்கிய உணவாகும். கடற்கரைப்பகுதிகளில் மீன் உணவு தாரளமாகக் கிடைத்தது. நெய். எண்ணெய் விலை மலிவாகவும், உப்பு, சர்க்கரை விலை அதிகமாகவும் இருந்தன. கிராமப்புற மக்கள் ஏராளமான கால்நடைகளை வளர்த்து வந்தமையினால், பால் மற்றும் பால்பொருட்கள் தாரளமாகக் கிடைத்தன.

**வேளாண்மை**

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் மக்கள் தொகை 125 மில்லியனாக இருந்திருக்கவேண்டும் என ஒரு மதிப்பீடு கூறுகிறது. பயிரிடுவதற்கு ஏராளமான நிலங்கள் இருந்தமையால் வேளாண்மை தழைத்திருந்தது. கோதுமை, நெல், பருப்பு வகைகள், பார்லி போன்ற பல வகைப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. பருத்தி, அவுரி, கரும்பு, எண்ணெய்வித்துக்கள் போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் புகையிலை, மக்காச்சோளம் என்ற இரண்டு புதிய பயிர்வகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. உருளைக்கிழங்கு, சிகப்பு மிளகாய் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் அறிமுகமாயின. ஆனால், இக்காலத்தில் புதிய வேளாண் தொழில் நுட்பங்கள் ஏதும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இருப்பினும், இந்தியாவினால் அரிசி, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களை அண்டை நாடுகளுக்கு ஏற்மதி செய்ய முடிந்தது.

**வாணிப வளர்ச்சி**

இந்தியாவிலிருந்து பல்வேறு வணிகவர்க்கத்தினர் நாடு முழுவதும் பரவியிருந்தனர். அவர்கள் உயர்ந்த தொழிலறிவைப் பெற்றிருந்ததோடு அமைப்பு ரீதியாகவும் செயல்பட்டுவந்தனர். சேத் மற்றும் போரா வணிகர்கள் தொலைதூர வர்த்தகத்தில் ஈடுபட்டனர். உட்பகுதி வணிகர்கள் பானிக் எனப்பட்டனர். பஞ்சாராக்கள் என்று அழைக்கப்பட்ட மற்றொரு வணிகப் பிரிவினர் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டனர். எருதுகளின் மீது பொதிகளை ஏற்றிக் கொண்டு தொலைதூரம் சென்றுகூட அவர்கள் வர்த்தகம் செய்தனர். ஆறுகளில் படகுகள் மூலமாகவும் மொத்த வியாபாரத்துக்கான பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன. வணிகர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பை அல்லது சமயத்தை மட்டுமே சார்ந்தவர்களாக இருக்கவில்லை. குஜராத்தி வணிகர்களில் இந்துக்கள், சமணர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் இருந்தனர். ஆஸ்வால்கள். மகேஷ்வரிகள், அகர்வால்கள் அனைவரும் ராஜஸ்தானில் மார்வாரிகள் என்று அழைக்கப்பட்டனர். முல்தானிகள், கத்ரிகள், ஆப்கானிகள் மத்திய ஆசியப்பகுதிகளுடன் வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர். தென்னிந்தியாவில் சோழ மண்டலக் கடற்கரைப்பகுதியில் செட்டியார்களும் மலபார் கடற்கரைப் பகுதியில் முஸ்லிம்களும் முக்கிய வணிகப் பிரிவினராகத்திகழ்ந்தனர்.



வங்காளத்திலிருந்து சர்க்கரை, அரிசி, மெல்லிய மஸ்லின் துணிகள் மற்றும் பட்டு ஏற்றுமதியாகின. சோழ மண்டலக் கடற்கரை ஜவுளி உற்பத்திமையமாகத் திகழ்ந்தது. அவுரி மற்றும் உணவு தானியங்கள் குஜராத் வழியாக வட இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. காஷ்மீர் சால்வைகள், கம்பள விரிப்புகள் போன்ற ஆடம்பரப் பொருட்களுக்கும் குஜராத் விநியோக மையமாகவும் விளங்கியது.

காரீயம், செம்பு போன்ற சில உலோகங்கள், போர்க் குதிரைகள், தந்தம் போன்ற ஆடம்பரப் பொருட்கள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாகும். தங்கம், வெள்ளி ஆகியவற்றை இறக்குமதி செய்ததன்மூலம் வணிகச் செலாவணி ஈடுகட்டப்பட்டது. அயல்நாட்டு வாணிகம் பெருகியதால், தங்கம், வெள்ளி இறக்குமதி பதினேழாம் நூற்றாண்டில் அதிகரித்து. அந்த நூற்றாண்டில் குஜராத்துக்கு வந்த டச்சு மற்றும் ஆங்கிலேய வணிகர்கள், இந்திய வணிகர்கள் சாமர்த்தியமாகவும், சுறுசுறுப்புடனும் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

**முகலாயரின்கீழ் பண்பாட்டு வளாச்சி**

முகலாயர் ஆட்சிக் காலத்தில் சிறப்பான, பரந்துபட்ட பண்பாட்டு நடவடிக்கைகளைக் காணமுடிகிறது. கலை, கட்டிடக் கலை, ஓவியம், இசை, இலக்கியம் போன்ற துறைகளில் அது நன்கு வெளிப்பட்டது. இத்தகைய பண்பாட்டு வளர்ச்சியில், இந்தியப்பாரம்பரியமும் முகலாயர்களால் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்ட துருக்கி – ஈரானியப்பண்பாடும் ஒன்று கலந்தன.

**கலை, கட்டிடக் கலை**

பிரம்மாண்டமான கோட்டைகள், அரண் மனைகள், பொதுக் கட்டிடங்கள், மசூதிகள், கல்லறை மாடங்கள் போன்றவை முகலாயக் கட்டிடக் கலையின் முக்கிய அங்கங்களாகும். நீருற்றுகள் நிறைந்த தோட்டப் பூங்காக்களை அமைப்பதில் முகலாயர்கள் மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர்.



புராணகிலா

காஷ்மீரில் உள்ள நிஷத்பாக், லாகூரி உள்ள ஷாலிமார் பாக், பஞ்சாபிலுள்ள பங்சோர் தோட்டப் பூங்கா போன்றவை இன்றும்கூட நிலைத்திருக்கின்றன.

ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் பீகாரில் சசாரம் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட கல்லறை மாடமும், டெல்லிக்கு அருகிலுள்ள புராணகிலாவும் கட்டப்பட்டன. இடைக்கால இந்தியாவின் வியத்தகு கட்டிடங்களாக இவ்விரண்டு சின்னங்களும் கருதப்படுகின்றன.



திவானி காஸ்

அக்பரது ஆட்சிக்காலத்திலிருந்து ஏராளமான கட்டிடங்கள் அமைக்கும்பணி தொடங்கியது. அவர் கட்டியுள்ள பல கோட்டைகளில் ஆக்ராவிலுள்ள கோட்டை புகழ் வாய்ந்தது. அது சிகப்பு மணற் பாறைகளாலானது. லாகூர் மற்றும் அலகாபாத்தில் அக்பரது பிற கோட்டைகளைக் காணலாம். ஷாஜகான் ஆட்சிக் காலத்தில் கோட்டைகளை கட்டும் பணி அதன் உச்சியைத் தொட்டது. டெல்லியிலுள்ள செங்கோட்டை, அதில் அமைந்துள்ள ரங் மகால், திவானி ஆம், திவானி காஸ் போன்றவை அவரது படைப்புகளே.



பதேபூர் சிக்ரி

அக்பர், ஆக்ராவிலிருந்து 36 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பதேபூர் சிக்ரி (வெற்றி நகரம்) என்ற இடத்தில் அரண்மனைக் கோட்டை ஒன்றை எழுப்பினார். அந்த வளாகத்தில் குஜராத்தி மற்றும் வங்காளப் பாணியிலான பல கட்டிடங்கள் அமைந்துள்ளன. குஜராத்தி பாணிக் கட்டிடங்களை அக்பர் அவரது ரஜபுத்திர மனைவியருக்காக அமைத்திருக்கக் கூடும். அங்குள்ள ஜும்மா மசூதி மிகவும் பிரம்மாண்டமான கட்டிடமாகும்.

அந்த மசூதியின் நுழைவாயில் புலந்த் தர்வாசா அல்லது உயர்ந்த நுழைவாயில் எனப்படுகிறது. அதன் உயரம் 176 அடியாகும். குஜராத்தில் அக்பர் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதற்காக அது எழுப்பப்பட்டது.





பாஞ்ச் மகால்

பதேபூர் சிக்ரியில் உள்ள ஜோத்பாய் அரண்மனை, ஐந்து அடுக்குகள் கொண்ட பாஞ்ச் மகால் போன்றவையும் முக்கிய கட்டிடங்களாகும்.

டெல்லியிலுள்ள உமாயூன் கல்லறை அக்பரது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அதன் குவிகை மாடம் பளிங்கினால் ஆனது. தாஜ்மகாலுக்கு முன்னோடியாக அதனைக் கருதலாம்.



புலந் தர்வாசா

ஆக்ராவுக்கு அருகிலுள்ள சிக்கந்தராவில் அக்பரின் கல்லறையை ஜஹாங்கீர் கட்டி முடித்தார். ஆக்ராவில் தனது தந்தை இதிமத் தௌலாவின் கல்லறையை நூர்ஜஹான கட்டியுள்ளார். வெள்ளைப் பளிங்குக் கற்களால் அது அமைக்கப்பட்டுள்ளது. அதன் சுவர்களில் விலை உயாந்த கற்கள் பதிக்கப்பட்ட பூவேலைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகை அலங்கார வேலைகளுக்கு பியட்ரா டியூரா என்று பெயர். ஷாஜகான் கட்டிய தாஜ் மஹாலில் இவ்வகை அலங்கார பூவேலைப் பாடுகளை ஏராளமாகக் காணலாம். தாஜ்மகால் கட்டிடக் கலையின் மணிமகுட மாகக் கருதப்படுகிறது. முகலாயர்கள் வளர்த்தெடுத்த அனைத்து வகையான கட்டிடக்கலைப்பாணி களும் அதில் காணப்படுகின்றன. தாஜ்மகாலின் முக்கிய சிறப்பே அதன் பெரிய குவிமாடமும் நான்கு மெல்லிய உயர் கோபுரங்களுமாகும். அலங்கார வேலைப்பாடு கள் குறைவாகவே காணப்படு கின்றன.



தாஜ் மகால்

ஷாஜகான் காலத்தில் மசூதி கட்டப்படுவதும் அதிகரித்தன. ஆக்ராவில் கட்டப்பட்டுள்ள முத்து மசூதி முழுவதும் வெள்ளைநிறப் பளிங்குக்

கற்களால் ஆனாதாகும். டெல்லியிலுள்ள ஜும்மா மசூதி செந்நிறக் கற்களானவை.

முகலாயக் கட்டிடக்கலையின் தொடர்ச்சி பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும் காணப்பட்டது. மாகாண அரசுகளிலும் அதன் தாக்கம் வெளிப்பட்டது. அம்ரிட்சரில் உள்ள பொற்கோயிலில் முகலாயக் கட்டிடக்கலையின் கூறுகளைக் காண முடிகிறது.

**ஓவியங்களும் இசையும்**

ஓவியக்கலைக்கு முகலாயர்கள் ஆற்றியுள்ள தொண்டு மகத்தானதாகும். உமாயூன் பாரசீகத்தில் தங்கியிருந்த போதுதான் முகலாயர்கால ஓவியக்கலைக்கு நல்லதொரு தொடக்கம் ஏற்பட்டது. அவர் இந்தியாவிற்கு திரும்பியபோது மீர் சையது அலி, அப்துல் சமது என்ற இரண்டு ஓவியர்களையும் அழைத்து வந்தார். அக்பரது ஆட்சிக்காலத்தில் இவ்விரு ஓவியர்களும் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர். பல்வேறு இலக்கிய மற்றும் சமய நூல்களுக்கு உருவங்கள் மூலம் விளக்கமளிக்கும் பணியை அக்பர் தொடங்கிவைத்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஓவியர்கள் அவரது அவைக்கு வரவழைக்கப்பட்டனர். இந்துக்களும், முஸ்லிம்களும் இப்பணியில் ஈடுபட்டனர்.பஸ்வான், மிஸ்கினா, தஸ்வந்த் ஆகியோர் அக்பரது அரசவைக்கலைஞர்களாகவும் ஏற்றம் பெற்றனர்.



முகலாயர் கால விலையுர்ந்த கல் ஓவியம்

பாரசீக மொழியில் எழுதப்பட்டிருந்த மகாபாரதம், இராமாயணம் ஆகிய காவியங்களுக்கான விளக்கப்படங்கள் நுண் ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. அக்பர் நிறுவிய கலைக்கூடத்தில் பல்வேறு இந்தியக் கதைகளும் நுண் ஓவிய விளக்கப்படங்களாக வரையப்பட்டன.

முகலாயர்கால ஓவியங்களில், அக்பர் நாமா உள்ளிட்ட பல்வேறு வரலாற்றுப்படைப்புகளும் கருத்துருக்களாக இடம் பெற்றிருந்தன. அவற்றில் முக்கியமானது ஹம்சா நாமா. அதில் 1200 ஓவியங்கள் இருந்தன. இந்திய வண்ணங்களான மயில் கழுத்துநீலம், இந்திய சிகப்பு போன்றவற்றையும் ஓவியர்கள் பயன்படுத்தத் தொடங்கினர்.



ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் முகலாயர் ஓவியக்கலை அதன் உச்சியைத் தொட்டது. அபுல்ஹசன், பிஷன் தாஸ், மது, ஆனந்த், கோவர்தன், உஸ்தாத் மன்சூர் போன்ற ஏராளமான ஓவியர்களை அவர் பணியிலமர்த்தினார். வேட்டையாடுதல், போர் நிகழ்வுகள், அரசவைகள் போன்ற காட்சிகளைத்தவிர, உருவப்படங்களும், விலங்குகளின் படங்களும் ஓவியமாகத் தீட்டப்பட்டன. எழுத்துக்கலை, ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்ட பல செருகேடுகளும் (ஆல்பம்) முகலாயர் காலத்தில் உருவாக்கப்பட்டன. பிற்காலத்தில் ஐரோப்பிய ஓவியப்பாணியின் தாக்கத்தை காணமுடிகிறது.

முகலாயர் காலத்தில் இசைக்கலையும் நன்கு வளர்ச்சியடைந்தது. குவாலியரைச் சேர்ந்த தான்சேன் என்ற பாடகரை அக்பர் ஆதரித்தார். தான்சேன் பல ராகங்களை உருவாக்கினார். ஜஹாங்கீர், ஷாஜகான் ஆகியோரும் இசையில் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

**மொழி, இலக்கியம்**

அக்பரது ஆட்சிக்காலத்தின்போது முகலாயப் பேரரசு முழுவதிலும் பாரசீக மொழி பரவலாக வழக்கிலிருந்தது. அக்காலத்தில் சிறந்த அறிஞராகவும், வராற்றாசிரியராகவும் அபுல்பாசல் விளங்கினார். அவர் ஏற்படுத்திய உரைநடைப்பாணி பல தலைமுறைக்காலம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது.

அக்காலத்தில் பல வரலாற்றுப்படைப்புகள் உருவாக்கப்பட்டன. அய்னி அக்பரி, அக்பர் நாமா ஆகியவற்றை அபுல் பாசல் எழுதினார். அவரது சகோதரரான அபுல் பெய்சி அக்காலத்திய முன்னணி கவிஞர். அவரது மேற்பார்வையில்தான் மகாபாரதம் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. உத்பி, நாசிரி இருவரும் மற்ற பாரசீக மொழிக் கவிஞர்களாவர்.

ஜஹாங்கீரின் சுயசரிதமான துசுகி ஜஹாங்கீரி அதன் உன்னத நடைக்கு பெயர் பெற்றதாகும். கியாஸ் பெக், நாகிப்கான், நியமத்துல்லா போன்ற அறிஞர்களையும் ஜஹாங்கீர் ஆதரித்தார். பாதுஷா நாமா என்ற நூலை எழுதியவர் அப்துல் ஹமீது லாஹோரி. ஷாஜகான் நாமாவைப் படைத்தவர் இனாயத்கான். இந்த இருவர் உள்ளிட்ட பல எழுத்தாளர்களையும், வரலாற்று அறிஞர்களையும் ஷாஜகான் போன்றி ஆதரித்தார். ஷாஜகானின் புதல்வர் தாராஷுக்கோ பகவத்கீதை,

உபநிடதங்கள் ஆகியவற்றை பாரசீக மொழியாக்கம் செய்தார். அவுரங்கசீப் ஆட்சிக்காலத்திலும் பல வரலாற்றுப் படைப்புகள் உருவாக்கப்பட்டன. பாரசீக மொழியின் புகழ்வாய்ந்த அகராதிகள் முகலாயர் காலத்தில்தான் தொகுக்கப்பட்டன.

வங்காளம், ஒரியா, ராஜஸ்தானி, குஜராத்தி போன்ற வட்டார மொழிகளும் முகலாயர் காலத்தில் வளர்ச்சி பெற்றன. இராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட பல பக்திப்படைப்புகளும் வட்டார மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டன. அக்பர் காலம் தொடங்கி இந்தி கவிஞர்களும் முகலாயர் அவையில் இடம்பெற்றனர். இராமாயணத்தின் இந்தி வடிவமான ராம் சரித்மனஸ் என்ற நூலைப் படைத்த துளசிதாசர் ஒரு புகழ்மிக்க இந்திக் கவிஞராவார்.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *முகலாயர் கால சமூக, பொருளாதார நிலை.*
2. *உயர்குடியினரின் சமூக, பொருளாதார வாழ்க்கை – கிராமப்புற மக்களின் வாழ்க்கை.*
3. *முகலாயரின் கீழ் வேளாண்மை, வணிகம் – முக்கிய ஏற்றுமதி, இறக்குமதிகள்.*
4. *முகலாயர் கால பண்பாட்டு வளர்ச்சி.*
5. *கலை, கட்டிடக்கலை, அரண்மனைகள், கோட்டை, மசூதிகள், முகலாயர் தோட்டப் பூங்காக்கள்.*
6. *முகலாயர் கால ஓவியங்களின் வளர்ச்சி அதன் சிறப்பு.*
7. *மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சி.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க.

1. பாஞ்ச் மஹால் உள்ள இடம்

அ) டெல்லி ஆ) ஆக்ரா

இ) லாகூர் ஈ) பதேபூர்சிக்ரி

2. தான்சேன் எப்பகுதியைச் சேர்ந்தவர்?

அ) பாரசீகம் ஆ) குஜராத்

இ) ஆஜ்மீர் ஈ) குவாலியர்

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஹம்சா நாமா என்பது ............ அடங்கிய தொகுப்பு
2. அக்பர் ஆதரித்த இசைமேதை..........

**III.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | அபுல் பாசல் | அ) பாதுஷா நாமா |
| 2. | இனாயத்கான் | ஆ) அக்பர் நாமா |
| 3. | அப்துல் ஹமீது லஹோரி | இ) மகாபாராதத்தின் பாரசீக மொழியாக்கம் |
| 4. | அபுல் பெய்சி | ஈ) ஷாஜகான் நாமா |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது.

அ) முகலாயர் காலத்தில் புதிய வேளாண் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆ) புகையிலை, மக்காச்சோளம் போன்ற புதிய பயிர் வகைகள் பதினேழாம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இ) முகலாயர் காலத்தில் உப்பும் சர்க்கரையும் மலிவாக இருந்தது.

ஈ) அரிசி, பார்லி, பருப்பு வகைகள் ஆகியன வணிகப் பயிர்கள்.

V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக

1. முகலாய உயர்குடியினருக்கு சொற்ப ஊதியமே வழங்கப்பட்டது.
2. முகலாயர் காலத்தில் பால், பால் பொருட்கள் ஏராளமாகக் கிடைத்தன.

VI. சிறு குறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. முகலாய உயர்குடியினர்
2. பதேபூர் சிக்ரி
3. அபுல் பாசல்
4. பயிட்ரா டியூரா

VII. குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. முகலாயர் கால கிராமப்புற மக்களின் பொருளாதார நிலைமையை கூறுக.
2. முகலாயர் கால உள்நாட்டு, அயல்நாட்டு வர்த்தகம் பற்றி குறிப்பு எழுதுக.

VIII. விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. முகலாயர் காலத்திய பண்பாட்டு வளர்ச்சியை தொகுத்து எழுதுக.
2. முகலாய கலை, கட்டிடக்கலையின் சிறப்புக்கூறுகளை ஆய்க.
3. முகலாயர் ஆட்சிக் காலத்தில் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சியை வரைக.



# பாடம் – 22

## மராட்டியர்கள்

**கற்றல் நோக்கங்கள்**


*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *மராட்டியரின் எழுச்சி.*
2. *சிவாஜியின் வாழ்க்கையும் சாதனைகளும்.*
3. *சிவாஜியின் ஆட்சி முறை.*
4. *பேஷ்வாக்களின் எழுச்சி.*

### மராட்டியரின் எழுச்சி

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பல்வேறு கூறுகளின் பயனாக மராட்டியர்கள் எழுச்சி பெற்றனர். மராட்டிய தேசத்தின் புவியியல் கூறுகள் அவர்களுக்கேயுரிய ஒரு சிறப்பான குணத்தை தோற்றுவித்தன. மலைப்பாங்கான பகுதிகளும், அடர்ந்த காடுகளும் அவர்களை வீரமிக்கவர்களாகவும், கொரில்லாப்போர் முறையைப் பின்பற்றுபவர்களாகவும் உருவாக்கின. மகாராஷ்டிரத்தில் பரவிய பக்தி இயக்கம் அவர்களிடையே ஒருமித்த சமய உணர்வை ஊட்டியது. துக்காராம், ராமதாஸ், வாமன் பண்டிட், ஏக்நாத் போன்ற ஆன்மீகத் தலைவர்கள் சமூக ஒற்றுமைக்கு வித்திட்டனர். சிவாஜியால் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது. தக்கான சுல்தானியங்களான பீஜப்பூர், அகமது நகர் போன்ற அரசுகளின் படைத்துறையிலும், ஆட்சித் துறையிலும் மராட்டியாகள் முக்கிய பொறுப்புகளை வகித்துவந்தனர். மோரேக்கள், நிம்பால்கர்கள் போன்ற செல்வாக்கு மிகுந்த பல மராட்டிய குடும்பங்களும் இருந்தன. ஆனால், வலிமை வாய்ந்த மராட்டிய அரசை உருவாக்கிய பெருமை ஷாஜிபோன்ஸ்லே மற்றும் அவரது புதல்வர் சிவாஜி இருவரையுமே சாரும்.

**சிவாஜி (1627 – 1680) : வாழ்க்கையும் படையெடுப்புகளும்**


சிவாஜி

சிவாஜி 1627 ஆம் ஆண்டு ஷிவ்னேர் என்ற இடத்தில் பிறந்தார். அவரது தந்தை ஷாஜி போன்ஸ்லே. தாய் ஜீஜிபாய். 1637ல் தனது தந்தையின் ஜாகீரான பூனாவை சிவாஜி பெற்றார். 1647ல் சிவாஜியின் பாதுகாவலரான தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு சிவாஜி தனது ஜாகீரின் முழு ஆட்சியாளரானார். அதற்கு முன்பே, ராய்கார், கோண்டனா, தோர்னா ஆகிய இடங்களை பீஜப்பூர் ஆட்சியாளரிடமிருந்து சிவாஜி கைப்பற்றியிருந்தார்.

ஒரு மராட்டியத் தவைரான சாந்தாராம் மோரேயிடமிருந்து ஜாவ்லி என்ற பகுதியை அவர் கைப்பற்றினார். இதனால், மாவ்லா பகுதியின் ஆட்சியாளரானார். 1657ல், சிவாஜி பீஜப்பூர் அரசை தாக்கி கொங்கணப் பகுதியிலிருந்து பல கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டார். சிவாஜியை முறியடிப்பதற்காக பீஜப்பூர் சுல்தான் அப்சல்கானை அனுப்பிவைத்தார். ஆனால் 1659ல் சிவாஜி மிகவும் துணிச்சலான வகையில் அப்சல்கானை எதிர்கொண்டு தாக்கி கொலைசெய்தார்.

சிவாஜியின் இந்த போர் வெற்றிஇுக்குபிறகு மராட்டியப் பகுதி மக்கள் அவரை ஒரு மாவீரனாக போற்றத் தொடங்கினர். அவரது படையில் சேர்ந்து பணியாற்றவும் பலர் முன்வந்தனர். சிவாஜி தலைமையில் மராட்டியர் எழுச்சி பெற்றுவருவதை முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் அச்சத்துடனேயே கவனித்து வந்தார். அவர் தக்காண ஆளுநராக இருந்த ஷெயிஷ்டாகான் என்பவரை சிவாஜிக்கெதிராக அனுப்பிவைத்தார். முகலாயப் படைகளால் தோற்கடிக்கப்பட்ட சிவாஜி மீண்டும் ஒரு முறை துணிச்சலாக செயல்பட்டு ஷெயிஷ்டகானின் பூனா ராணுவ முகாம்மீது அதிரடித்தாக்குதலை நடத்தி அவரது மகனைக் கொன்றதுடன் அவரையும் காயப்படுத்தினார்.

சிவாஜியின் இந்த துணிச்சல் நடவடிக்கையால் ஷெயிஷ்டகானின் புகழுக்கு இழுக்கு ஏற்பட்டது. அவுரங்கசீப் அவரை திரும்ப அழைத்துக் கொண்டார். 1664ல் சிவாஜி, முகலாயரின் முக்கிய துறைமுகமான சூரத் துறைமுகத்தைத் தாக்கி அதைச் சூறையாடினார்.



இம்முறை அவுரங்கசீப் சிவாஜிக்கு எதிராக ஆம்பர் நாட்டு ராஜா ஜெய்சிங்கை அனுப்பிவைத்தார். ஜெய்சிங் படைகளை நன்கு தயார் செய்து கொண்டு சிவாஜியின் குடும்பமும், கருவூலமும் இருந்த புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டார். வேறு வழியில்லாத நிலையில், சிவாஜி, ஜெய்சிங்குடன் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார். 1665 ஆம் ஆண்டு இருவருக்கும் இடையே புரந்தர் உடன்படிக்கை கையெழுத்தாகியது. அவ்வுடன் படிக்கைப்படி, சிவாஜி தம்மிடமிருந்த 35 கோட்டைகளில் 23 கோட்டைகளை முகலாயரிடம் ஒப்படைத்தார். முகலாயப் பேரரசுக்கு விசுவாசமாக இருக்கவும், சேவையாற்றவும் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் எஞ்சியிருந்த 12 கோட்டைகள் சிவாஜியிடமே விடப்பட்டன. பீஜப்பூர் அரசுக்குச் சொந்தமான ஒரு சில பகுதிகளை வைத்திருக்கும் உரிமை சிவாஜிக்கு அளிக்கப்பட்டது. முகலாயருக்கு தாமே நேரடியாக சேவை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை விலக்குமாறு சிவாஜி கேட்டுக் கொண்டதால், அவரது சிறுவயது மகனான ஷாம்பாஜிக்கு மன்சப் 5000 என்ற தகுதிநிலை வழங்கப்பட்டது.

1666ல் சிவாஜி ஆக்ராவுக்கு சென்றபோது, முகலாயரால் சிறைப்பிடிக்கப்பட்டார். ஆனால், சிறையிலிருந்து தந்திரமாக தப்பிய சிவாஜி அடுத்த நான்கு ஆண்டுகளில் தனது படைகளை வலிமைப்படுத்திக் கொண்டார். பின்னர், முகலாயருக்கெதிரான போரை மீண்டும் தொடங்கினார். 1670ல் சூரத் துறைமுகம் மீண்டும் சிவாஜியால் சூரையாடப்பட்டது. தனது படையெடுப்புகள் மூலம் இழந்த பகுதிகளையெல்லாம் சிவாஜி மீட்டார். 1674ல் ராய்காரில் சிவாஜி முடிசூட்டிக் கொண்டதுடன் சத்திரபதி என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார். பின்னர், அவர் கர்னாடகப்பகுதியின் மீது படையெடுத்து செஞ்சி, வேலூர் ஆகியவற்றைக் கைப்பற்றினார். வெற்றிபெற்றுத் திரும்பிய சிவாஜி 1680ல் மறைந்தார்.

**சிவாஜியின் ஆட்சி முறை**

சிவாஜி ஒரு சிறந்த ஆட்சியாளராகவும் திகழ்ந்தார். ஒரு சிறந்த ஆட்சியமைப்புக்கு அவர் அடிகோலினார். அரசாங்கத்தின் மையமாக அரசர் செயல்பட்டார். அரசருக்கு உதவியாக எட்டு அமைச்சர்கள் கொண்ட அஷ்டபிரதான் என்ற அமைச்சரவை இருந்தது. இருப்பினும் ஒவ்வொரு அமைச்சரும் சிவாஜிக்கே நேரடியாக பொறுப்பு வாய்ந்தவாகளாக இருந்தனர்.

1. பேஷ்வா – நிதி மற்றும் பொது நிர்வாகம். பின்னர், பேஷ்வா பிரதம அமைச்சராகவும் செயல்பட்டார்.
2. சார்–இ–நோபத் அல்லது சேனாதிபதி – படைத் தளபதி கௌரவப்பதவி
3. அமத்தியர் – கணக்கு மேலாளர்
4. வாக்நவின் – உளவுத் துறை, அஞ்சல் மற்றும் அரண்மனை நிர்வாகம்
5. சச்சீவ் – தகவல் தொடர்பு
6. அமந்தா – சடங்குகள்
7. நியாயதீஷ் – நீதித்துறை
8. பண்டிதராவ் – அறக்கொடை மற்றும் சமய நிர்வாகம்

சிவாஜி மேற்கொண்ட பெரும்பாலான ஆட்சித்துறை சீர்திருத்தங்கள் தக்காண சுல்தானியத்தில் பின்பற்றப்பட்டுவந்த நடைமுறைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. எடுத்துக் காட்டாக, பேஷ்வா என்பது பாரசீகத்து பட்டமாகும்.

சிவாஜியின் நிலவருவாய்முறை அகமது நகரில் மாலிக் ஆம்பர் புகுத்திய நடைமுறையை ஒட்டியே இருந்தது. காதி என்ற அளவுகோலைப் பயன்படுத்தி நிலங்கள் அளக்கப்பட்டன. நெல்வயல்கள், தோட்ட நிலங்கள், மலைப்பாங்கான நிலங்கள் என நிலங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. ஏற்கனவே நிர்வாக அமைப்பிலிருந்த தேஷ்முக்குகள், குல்கார்னிகள் ஆகிய அதிகாரிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. கர்கூன்கள் என்று அழைக்கப்பட்ட தனது வருவாய்த்துறை அதிகாரிகளை அவர் நியமித்தார்.

சௌத் மற்றும் சர்தேஷ்முகி என்ற வரிகள் மராட்டிய நாட்டில் வசூலிக்கப்படவில்லை. அவை, முகலாயருக்கு மற்றும் தக்காண சுல்தானியங்களுக்குட்பட்ட அண்மைப்பகுதிகளில் வசூலிக்கப்பட்ட வரிகளாகும். மராட்டியப் படையெடுப்புகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நிலவரியின் நான்கில் ஒரு பகுதியை சொத்து வரியாக அப்பகுதிமக்கள் செலுத்தினர். மராட்டியர்கள் தங்கள் பரம்பரை உரிமைக்குட்பட்ட இடங்களாகக் கருதிய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் செலுத்திய நிலவரியின் பத்து சதவிகித கூடுதல் வரியே சர்தேஷ்முகி ஆகும்.



சிவாஜி படைத்துறை நிர்வாகத்தில் மேதமை பெற்றுத்திகழ்ந்தார். அவரது படைகள் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தன. அவரது நிலையான படையில் 30,000 முதல் 40,000 வரையிலான குதிரை வீரர்கள் இடம்பெற்றிருந்தனர். குதிரைப்படை ஹவில்தார்களின் மேற்பார்வையில் இருந்தது. வீரர்களுக்கு நிலையான ஊதியம் வழங்கப்பட்டது. மராட்டியக் குதிரைப்படையில் இரண்டு பிரிவுகள் இருந்தன. 1. பார்கிர்கள்–அரசின் மேற்பார்வையில் நேரடியாக பராமரிக்கப்பட்டது. 2. சிலாதார்கள் – உயர்குடியினரின் பராமரிப்பில் இருந்தவை. காலாட்படையில் மாவ்லா காலாட் படை வீரர்கள் முக்கிய பங்கு வகித்தனர். சிவாஜி ஒரு கப்பற்படையும் வைத்திருந்தார்.

மராட்டியரின் ராணுவ நடவடிக்கைகளில் கோட்டைகள் முக்கிய பங்காற்றின. சிவாஜி ஆட்சிக் காலத்தின் இறுதியில் சுமார் 240 கோட்டைகளை அவர் பெற்றிருந்தார். ஒவ்வொரு கோட்டையும் சம தகுதி வாய்ந்த மூன்று அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன. துரோகச் செயலை தவிர்ப்பதற்காகவே சம அதிகாரம் வழங்கப்பட்டது.

சிவாஜி ஒரு ஆக்க பூர்வமான மேதை. மராட்டியருக்கான ஒரு நாட்டை உருவாக்கியவர். ஜாகீர்தாராக இருந்து சத்திரபதியாக அவர் ஏற்றம் பெற்றது பிரமிக்கத்தக்கது. மராட்டியரை ஒன்றிணைத்து முகலாயப் பேரரசுக்கு ஒரு பெரும் எதிரியாக அவர் விளங்கினார். அவர் ஒரு துணிச்சலான வீரர், ஆற்றல்மிகு ஆட்சியாளர்.

**சிவாஜியின் வழித் தோன்றல்கள்**

சிவாஜியின் மறைவுக்குப்பின், அவரது புதல்வர்களான ஷாம்பாஜிக்கும் ராஜாராமுக்கும் இடையே வாரிசுரிமைப்போர் நடைபெற்றது. ஷாம்பாஜி அதில் வெற்றிபெற்றார். ஆனால், பின்னர் அவர் முகலாயர்களால் சிறைப்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அடுத்து ராஜராம் ஆட்சிக்கு வந்தார். முகலாயரின் விரட்டுதலுக்கு அஞ்சிய அவர் செஞ்சியில் தஞ்சம்புகுந்தார். சதாராவில் அவர் மறைந்தார். அவரது மனைவி தாராபாயை அரசப்பிரதிநிதியாகக் கொண்டு மகன் இரண்டாம் சிவாஜி ஆட்சிக்கு வந்தார். அடுத்து ஆட்சிக்கு வந்தவர் ஷாகு. அவரது ஆட்சிக் காலத்தில் பேஷ்வாக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

## பேஷ்வாக்கள் (1713 – 1818)

### பாலாஜி விஸ்வநாத் (1713 – 1720)

ஒரு சிறிய வருவாய்த்துறை அதிகாரியாக பணிக்குச் சேர்ந்த பாலாஜி விஸ்வநாத் 1713ல் பேஷ்வா பதவிக்கு படிப்படியாக முன்னேறினார். பேஷ்வா பதவியில் அவர் தனது நிலையை மேலும் வலிமைப்படுத்திக் கொண்டதோடு, அப்பதவியை வாரிசுரிமைப் பதவியாகவும் மாற்றினார். உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்த அவர் இறுதியாக ஷாகுவை மராட்டிய அரசராகவும் நியமித்தார். ஷாகுவுக்கு ஆதரவாக அனைத்து மராட்டியத் தலைவர்களின் ஆதரவையும் கோரிப்பெற்றார்.

1719ல், பாலாஜி விஸ்வநாத் முகலாயப் பேரரசர் பரூக்ஷியாரிடமிருந்து சில உரிமைகளையும் கோரிப் பெற்றார். முகலாயப் பேரரசர் ஷாகுவை மராட்டிய அரசராக அங்கீகரித்தார். மேலும், கர்நாடகம், மைசூர் உள்ளிட்ட தக்காணத்திலிருந்த ஆறு முகலாய மாகாணங்களிலும் சௌத். சர்தேஷ்முகி வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் பேரரசர் ஷாகுவிற்கு வழங்கினார்.

### முதலாம் பாஜிராவ் (1720 – 1740)

பாஜிராவ், பாலாஜி விஸ்வநாத்தின் மூத்தமகன். தமது இருபதாவது வயதிலேயே தந்தை வகித்த பதவியான பேஷ்வா பதவியில் அமர்ந்தார். அவரது காலத்தில் மராட்டியர்கள் புகழ் அதன் உச்சிக்கே சென்றது. மராட்டியத் தலைவர்கள் அடங்கிய கூட்டிணைவு ஒன்றை அவர் ஏற்படுத்தினார். அதன்படி, ஒவ்வொரு மராட்டியத் தலைவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட ஆட்சிப் பகுதியில் தன்னாட்சி உரிமைகளைப் பெற்று ஆட்சிசெய்ய வழிவகை செய்யப்பட்டது. அதன் விளைவாக, மராட்டியத்தலைவர்கள் சிலர் புகழடந்தனர். இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளின் தங்களது ஆதிக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். பரோடாவில் கெய்க் வாட், நாக்பூரின் போன்ஸ்லே, இந்தூரில் ஹோல்கர், குவாலியரில் சிந்தியா, பூனாவில் பேஷ்வா என மராட்டியத் தலைவர்கள் அந்தந்த பகுதிகளில் செல்வாக்குடன் விளங்கினர்.



### பாலாஜி பாஜிராவ் (1740 – 1761)

தனது பத்தொன்பதாம் வயதிலேயே தந்தைக்குப்பிறகு பாலாஜி பாஜிராவ் பேஷ்வா பதவியிலமர்ந்தார்.

1749ல் மராட்டிய அரசர் ஷாகு வாரிசு ஏதுமின்றி இறந்தார். வாரிசாக நியமிக்கப்பட்ட ராம்ராஜ் என்பவரை பாலாஜி பாஜிராவ் சதாராவில் சிறைவைத்தார். மராட்டிய அரசு முழுவதும் பேஷ்வாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

1752ல் பேஷ்வா முகலாயப் பேரரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி உள்நாட்டு, அயல்நாட்டு எதிரிகளிடமிருந்து முகலாயப் பேரரசரை பாதுகாப்பதாக பேஷ்வா உறுதியளித்தார். அதற்குப்பதிலாக, வடமேற்கு மாகாணங்களில் சௌத், சர்தேஷ்முகி வரிகளையும், ஆக்ரா மற்றும் ஆஜ்மீர் பகுதிகளில் மொத்த வருவாயையும் பேஷ்வா வசூலித்துக் கொள்ள பேரரசர் அனுமதித்தார்.

அதனால், அகமது ஷா அப்தாலி இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது இந்தியாவை பாதுகாக்கும் பொறுப்பு மராட்டியருக்கு ஏற்பட்டது. 1761ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் பானிப்பட்டுப் போரில் அகமது ஷா அப்தாலியை எதிர்த்து மராட்டியர்கள் வீரத்துடன் போரிட்டனர். ஆனால், தோல்வியடைந்தனர். பல மராட்டிய தலைவர்களும், ஆயிரக்கணக்கான வீரர்களும் இப்போரில் மடிந்தனர். இந்த சோகத்தைக் கண்டு அதிச்சியடைந்த பேஷ்வா பாலாஜி பாஜிராவும் இறந்தார். மேலும், இந்த போர் மராட்டியருக்கு மரண அடியாக அமைந்தது. மராட்டிய தலைவர்களுக் கிடையே ஏற்பட்ட உட்பூசல்களினால் மராட்டியக் கூட்டிணைவிலும் விரிசல் விழுந்தது.

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, மராட்டியர்கள் இந்தியாவில் ஒரு பெரும் சக்தியாக எழுச்சி பெற்றனர். ஆனால், அவர்களால் பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டதை தடுக்கமுடியவில்லை.

மராட்டியத்தலைவர்களான ஹோல்கர், சிந்தியா, போன்ஸ்லே போன்றவர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மையே அவர்களது வீழ்ச்சிக்கான காரணங்களின் முதன்மையானதாகும். மேலும், அவர்களது படையும், போரிடும் முறைகளும் மேம்பட்டு இருந்ததால், இறுதியில் பிரிட்டிஷாரே வெற்றி பெற்றனர்.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *மராட்டியரின் எழுச்சிக்கான காரணங்கள்.*
2. *சிவாஜியின் இளமைக்காலமும் போர் வெற்றிகளும்.*
3. *சிவாஜியின் கீழ் மராட்டிய ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுகள்.*
4. *பேஷ்வாக்களின் எழுச்சியும், மூன்றாம் பானிப்பட்டு போரின் முக்கியத்துவமும்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க

1. சிவாஜி பிறந்தது

அ) சதாரா ஆ) பூனா

இ) ஷிவ்னேர் ஈ) பீஜப்பூர்

2. புரந்தர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட ஆண்டு

அ) 1660 ஆ) 1665

இ) 1670 ஈ) 1675

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக

1. சிவாஜியின் பாதுகாவலர் ......
2. சிவாஜிக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவர் ......
3. மூன்றாம் பானிப்பட்டுப்போர் ....... ஆண்டில் ..... க்கும் .... க்கும் இடையே நடைபெற்றது.

**III.** பொருத்துக

1. பேஷ்வா அ) குவாலியர்
2. சிந்தியா ஆ) பூனா
3. ஹோல்கர் இ) இந்தூர்
4. போன்ஸ்லே ஈ) நாக்பூர்

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது

அ) சிவாஜியின் வருவாய் அமைப்பு சோழரது அமைப்பை ஒட்டியதாகும்

ஆ) காதி என்ற அளவு கோலால் நிலங்கள் அளக்கப்பட்டன.

இ) மராட்டியர் காலத்தில் நிலங்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

ஈ) ஏற்கனவே பதவியிலிருந்த வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு சிவாஜி மேலும் அதிகாரம் வழங்கினார்.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. அகமது ஷா அப்தாலி படையெடுத்தபோது அவரை முகலாயப் பேரரசர் எதிர்கொண்டார்.
2. மூன்றாம் பானிப்பட்டுப் போரில் நாதிர் ஷா மராட்டியப்படைகளை முறியடித்தார்.
3. மோரேக்களும் நிம்பால்கர்களும் மராட்டியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

**VI.** சிறுகுறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. புரந்தர் உடன்படிக்கை
2. அஷ்ட பிரதான்
3. சிவாஜி காலத்திய வரிகள்
4. மூன்றாம் பானிப்பட்டுப் போர்

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. மராட்டியரின் எழுச்சிக்கான காரணங்களைக் கூறுக.
2. பாலாஜி விஸ்வநாத் பற்றி குறிப்பு வரைக

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)

1. சிவாஜியின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை விவரி.
2. சிவாஜியின் ஆட்சிமுறையில் காணப்படும் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.
3. பேஷ்வாக்களின் எழுச்சி மற்றும் சாதனைகளை ஆய்க.



# பாடம் – 23

## ஐரோப்பியரின் வருகை

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர்அறிந்து கொள்வது.*

1. *இந்தியாவிற்கு போர்ச்சுசீசியரின் வருகை.*
2. *இந்தியாவில் டச்சு, பிரஞ்சு, ஆங்கிலேய, டேனிஷ் வர்த்தகமையங்கள் நிறுவப்படுதல்.*
3. *கர்னாடகப்பகுதியில் ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப் போட்டி.*
4. *வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்படுதல்.*

இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மிகவும் பழமையானவை. அவை, ஆக்சஸ் பள்ளத்தாக்கு, அல்லது சிரியா அல்லது எகிப்துபோன்ற நிலப்பகுதிகள் வழியாக ஏற்படுத்தப்பட்டவை. ஆனால், 1498 ஆம் ஆண்டு வாஸ்கோட காமா நன்னம்பிக்கை முனை வழியாக ஒரு புதிய கடல் வழியைக் கண்டுபிடித்தார். அதன்பிறகு பல வர்த்தக நிறுவனங்கள் இந்தியாவுக்கு வந்து தங்களது வர்த்தக மையங்களை ஏற்படுத்தின. வணிகர்களாக இந்தியாவுக்கு வந்த அவர்கள், காலப்போக்கில் இந்திய அரசியலில் ஈடுபட்டு இறுதியாக தங்களது குடியேற்றங்களையும் அமைத்துக் கொண்டனர். ஐரோப்பியர்களுக் கிடையே நிலவிய வர்த்தகப் போட்டி அரசியல் ஆதிக்கத்திற்கான போட்டியாக மாறியது. இறுதியில், இந்தியாவில் தங்களது ஆட்சியை அமைத்ததின்மூலம் பிரிட்டிஷார் அப்போட்டியில் வெற்றிபெற்றனர்.



வாஸ்கோட காமா

### போர்ச்சுகீசியர்கள்

1498 ஆம் ஆண்டு மே 17 ஆம் நாள் போர்ச்சுகீசியப் பயணியான வாஸ்கோடகாமா கள்ளிக் கோட்டை துறைமுகத்தை வந்தடைந்தார். கள்ளிக் கோட்டை ஆட்சியாளர் சாமரின் அவரை அன்புடன் வரவேற்றார். அடுத்த ஆண்டே அவர் போர்ச்சுகல் திரும்பினார். 1500ல் பெட்ரோ அல்வரிஸ் காப்ரல் இந்தியாவுக்கு வந்தார். 1502ல் வாஸ்கோடகாமா இரண்டாவது பயணத்தையும் மேற்கொண்டு இந்தியா வந்தார். கள்ளிக்கோட்டை, கண்ணனூர், கொச்சி ஆகிய இடங்களில் போர்ச்சுகீசியர்கள் தங்களது வாணிக நிலையங்களை நிறுவிக் கொண்டனர்.

இந்தியாவில் முதல் போர்ச்சுகீசிய ஆளுநராகத்திகழ்ந்தவர் பிரான்சிஸ் டி அல்மப்டா. பின்னர், 1509 ஆம் ஆண்டு அல்புகர்க் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 1510ல் அல்புகர்க் பீஜப்பூர் ஆட்சியாளரிடமிருந்து கோவாவைக் கைப்பற்றிக் கொண்டார். அதன்பின்னர், இந்தியாவிலிருந்த போர்ச்சுசீசியப் பகுதிகளின் தலைமையிடமாக கோவா திகழ்ந்தது. அல்புகர்க் மலாக்கா மற்றும் இலங்கையையும் கைப்பற்றினார். கள்ளிக்கோட்டையில் ஒரு கோட்டையையும் அமைத்தார். இந்தியப் பெண்களை மணந்து கொள்ளுமாறு அவர் தமது நாட்டவரை உற்சாகப்படுத்தினார். இந்தியாவில் போர்ச்சுகீசியர்களை மிகவும் வலிமையான சக்தியாக மாற்றிய அல்புகர்க் 1515ல் மறைந்தார்.

அடுத்து ஆளுநராக வந்தவர்கள் மேற்குக் கடற்கரையில் டாமன், சால்சட், பம்பாய் ஆகிய இடங்களிலும் கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கருகில் சாந்தோம், வங்காளத்தில் ஹுக்ளி ஆகிய இடங்களிலும் போர்ச்சுகீசிய குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.

இருப்பினும், பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கம் வீழ்ச்சியடையத்தொடங்கியது. அடுத்த நூற்றாண்டில் கோவா, டையூ, டாமன் தவிர ஏனைய பகுதிகள் அனைத்தையும் அவர்கள் இழந்தனர்.

### டச்சுக்காரர்கள்

1602 ஆம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய வணிகக்குழு ஏற்படுத்தப்பட்டது. டச்சு வணிகர்கள் இந்தியாவிற்கு வந்து மசூலிப்பட்டினம், புலிகாட், சூரத், காரைக்கால், நாகப்பட்டினம், சின்சுரா, காசிம்பசார் ஆகிய



இடங்களில் குடியிருப்புகளை நிறுவினர். பதினேழாம் நூற்றாண்டில் அவர்கள் போர்ச்சுகீசியரை வெற்றி கொண்டு, கிழக்கே ஐரோப்பிய வணிகத்தில் வலிமை கொண்டு விளங்கினர். இந்தியாவில் டச்சுக்காரர்களின் முக்கிய மையமாக புலிகாட் அல்லது பழவேற்காடு இருந்தது. பின்னர், நாகப்பட்டினம் தலைமையிடமாயிற்று.பதினேழாம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஆங்கிலேயர்கள் பெரிய குடியேற்ற சக்தியாக எழுச்சிபெற்றனர். ஆங்கிலேய – டச்சு ஆதிக்கப் போட்டி சுமார் எழுபது ஆண்டுகள் நீடித்தது. அப்போது, டச்சுக்காரர்கள் தங்களது குடியேற்றங்களை ஒவ்வொன்றாக பிரிட்டிஷாரிடம் இழந்தனர்.

### ஆங்கிலேயர்கள்

1600 ஆம் ஆண்டு ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதற்கான பட்டயத்தில் இங்கிலாந்து அரசி எலிசபெத் கையெழுத்திட்டார். சூரத்தில் ஒரு ஆங்கிலேய வணிக மையம் அமைப்பதற்கு அனுமதி கோரி 1609 ஆம் ஆண்டு கேப்டன் ஹாக்கின்ஸ் ஜஹாங்கீரின் அவைக்கு வந்தார்.

ஆனால் போர்ச்சுகீசியரின் தூண்டுதலினால், முகலாயப் பேரரசர் ஆங்கிலேயருக்கு அனுமதி மறுத்தார். பின்னர் 1612 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு பர்மன் அல்லது அனுமதிக் கடிதம் வழங்கினார். 1613ல் அவர்கள் சூரத்தில் வணிக நிலையத்தை நிறுவினர்.

இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்சின் தூதுவராக 1615ஆம் ஆண்டு சர் தாமஸ் ரோ இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆங்கிலேய வணிக நிலையங்களை அமைப்பதற்கு அவர் ஜஹாங்கீரிடம் அனுமதி பெற்றார்.

1619ஆம் ஆண்டு வாக்கில் ஆக்ரா, அகமதாபாத், பரோடா, புரோச் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர்கள் வணிக நிலையங்களை நிறுவினர். இங்கிலாந்து அரசரான இரண்டாம் சார்லசிடமிருந்து பம்பாயை ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக்குழு பெற்றது.

1639ஆம் ஆண்டு பிரான்சிஸ் டே என்பவர் சென்னை நகரை நிறுவினார். அங்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. 1690 ஆம் ஆண்டு ஜாப் சார்நாக் என்பவர் சுதநூதி என்ற விடத்தில் மற்றொரு ஆங்கிலேய வணிக நிலையத்தை ஏற்படுத்தினார். பின்னர், அதுவே கல்கத்தா நகரமாக வளர்ச்சியடைந்தது. அங்கு வில்லியம் கோட்டை

கட்டப்பட்டது. பிற்காலத்தில், கல்கத்தா பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகராகவும் விளங்கியது. இவ்வாறு, இந்தியாவில் ஆங்கிலேயக் குடியேற்றங்களில் பம்பாய், சென்னை, கல்கத்தா என்ற மூன்று மாகாணத் தலைநகரங்கள் நிறுவப்பட்டன.

**பிரஞ்சுக்காரர்கள்**

1664 ஆம் ஆண்டு பதினான்காம் லூயி மன்னரின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் பிரஞ்சு கிழக்கிந்திய வணிகக் குழு ஏற்படுத்தப்பட்டது. பிரான்சிஸ் கேரன் என்பவரால் சூரத் நகரில் முதலாவது பிரஞ்சு வணிக நிலையம் நிறுவப்பட்டது. பின்னர் மெர்க்காரா என்பவரால் மசூலிப்பட்டினத்தில் ஒரு வணிக நிலையம் அமைக்கப்பட்டது. பிராங்காய் மார்ட்டின் 1673ல் பாண்டிச்சேரியை நிறுவினார். சந்திர நாகூர், மாஹி, காரைக்கால் போன்றவை இந்தியாவில் நிறுவப்பட்ட மற்ற பிரஞ்சு வணிக நிலையங்களாகும். பிராங்காய் மார்ட்டின் பாண்டிச்சேரியின் முதலாவது ஆளுநராவார். இந்தியாவில் பிரஞ்சுக் குடியேற்றங்களுக்கு தலைமையிடமாக பாண்டிச்சேரி திகழ்ந்தது.

**டேனியர்கள்**

இந்தியாவில் டென்மார்க் நாடும் வணிக நிலையங்களை நிறுவியது. 1620ல் தரங்கம்பாடியில் டேனிஷ் வணிக நிலையம் ஏற்படுத்தப்பட்டது. மற்றொரு முக்கிய டேனிஷ் குடியிருப்பு வங்காளத்திலிருந்த சீராம்பூர். சீராம்பூர் இந்தியாவில் அவர்களது தலைமையிடமாகும். இந்தியாவில் அவர்கள் தங்களது நிலையை வலுப்படுத்தவில்லை. 1845ல் தங்களது இந்தியக் குடியேற்றங்களை பிரிட்டிஷாருக்கு விற்றுவிட்டனர்.

**ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப்போட்டி**

இந்தியாவில் தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து போட்டியிடத் தொடங்கினர்.

இந்தியாவில் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நிலவிய அரசியல் குழப்பத்தை பயன்படுத்திக் கொண்ட அவர்கள் இந்திய உள்நாட்டு அரசியலில் தலையிட்டனர். கர்னாடகப் பகுதியிலும் வங்காளத்திலும் ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப் போட்டி நன்கு வெளிப்பட்டது.



**கர்நாடகப்போர்கள்**

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு, நிசாம் உல் முல்க் தலைமையில் தக்காணம் தனது விடுதலையை அறிவித்துக் கொண்டது. கர்நாடகமும் தக்காணத்தின் ஒருபகுதியாகும். கர்னாடக ஆட்சியாளர் நிசாமின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டிருந்தார். 1740ல் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமை போர் தொடங்கியது. அப்போரில் இங்கிலாந்தும் பிரான்சும் எதிரெதிர் அணியில் இருந்தன. எனவே இந்தியாவிலும் இருவருக்கிடையே போர் மூண்டது. 1746ஆம் ஆண்டு பாண்டிச் சேரியிலிருந்த பிரஞ்சு ஆளுநர் டியூப்ளே ஆங்கிலேயர் மீது தாக்குதல் தொடுத்தார். இதுவே முதல் கர்நாடகப்போரின் (1746-48) தொடக்கமாகும். ஆங்கிலேயர்கள் கர்நாடக நவாப்பான அன்வாரூதீனிடம் உதவி கோரினர். ஆனால், அவரது போட்டியாளரான சந்தாசாகிப்புடன் பிரஞ்சுக்காரர்கள் உடன்படிக்கை செய்து கொண்டனர். சென்னைக்கருகில் நடைபெற்ற அடையாற்றுப் போரில் ஆங்கிலப்படைகள் பிரஞ்சுக்காரர்களை தோற்கடித்தன. இதற்கிடையில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் 1748ஆம் ஆண்டு ஐ–லா–சபேல் உடன்படிக்கைப்படி முடிவுக்கு வந்தது. அதனால் முதலாம் கர்நாடகப்போரும் முடிவுக்கு வந்தது.



டியூப்ளே

ஆனால் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் எதிரெதிர் நிலைகளை எடுத்து வந்தனர்.

அதனால் இரண்டாம் கர்னாடகப்போர் (1749–1754) தோன்றியது. ஹைதராபாத்தில் நிசாம் பதவிக்கு வரவிரும்பிய முஸபர் ஜங் என்பவரை டியூப்ளே ஆதரித்தார். ஆற்காடு அரியணையைக்கைப்பற்ற விரும்பிய சந்தா சாகிப்புடன் டியூப்ளே ஏற்கனவே நட்பு கொண்டிருந்தார். இம்மூவரின் படைகள் முதலாம் கர்னாடகப்போரில் ஆங்கிலேயருக்கு பக்க பலமாக நின்ற அன்வாருதீனின்படைகளை முறியடித்தன.

1749ஆம் ஆண்டு நடைபெற்ற ஆம்பூர் போரில் அன்வாரூதீன் கொல்லப்பட்டார். அந்த வெற்றியின் விளைவாக முஸபர் ஜங் நிசாம்பதவியை

ஏற்றார். சந்தாசாகிப் ஆற்காடு நவாப் பதவியில் அமர்ந்தார். அன்வாருதீனின் மகன் முகமது அலி திருச்சிக்கு தப்பியோடினார். அவருக்கு ஆதரவாக ஆங்கிலேயர்கள் சில துருப்புக்களை அனுப்பிவைத்தனர். இதற்கிடையில் பிரிட்டிஷ் படைத்தளபதியான ராபர்ட் கிளைவ் ஆற்காட்டைக் கைப்பற்றினார். காவேரிப்பாக்கம் என்ற இடத்தில் பிரஞ்சுப்படைகளை முறியடித்தார். சந்தா சாகிப் கைப்பற்றப்பட்டு தஞ்சாவூரில் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

போரில் பின்னடைவு ஏற்பட்டதால் டியூப்ளே திரும்பியழைக்கப்பட்டு அவருக்குப்பதிலாக கோடாஹியு பிரஞ்சு ஆளுநராக நியமிக்கப் பட்டார். 1754ஆம் ஆண்டு பாண்டிச்சேரி உடன்படிக்கைப் படி இரண்டாம் கர்னாடகப் போர் முடிவுக்கு வந்தது.

ஐரோப்பாவில் ஏழாண்டுப்போர் (1756 – 1763) வெடித்தபோது மூன்றாம் கர்நாடகப் போர் (1758 – 1763) தொடங்கியது.

பிரஞ்சுப்படைகளின் தலைவராக கவுண்ட்டிலாலி என்பவர் இருந்தார். 1760 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தளபதி சர் அயர் கூட் அவரை வந்தவாசியில் முறியடித்தார். அடுத்த ஆண்டில் ஆங்கிலேயப் படைகள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றி அந்நகரை அழித்தன. 1763 ஆம் ஆண்டு பாரிஸ் உடன் படிக்கைப்படி ஏழாண்டுப்போர்முடிவுக்கு வந்தது. மூன்றாம் கர்நாடகப்போரும் முடிந்தது. பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் பகுதிகளில் மட்டும் பிரஞ்சுக்காரர்கள் தங்கள் நடவடிக்கைகளை மட்டுப்படுத்திக் கொள்வதாக ஒப்புக்கொண்டனர்.

ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப் போட்டியில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். பிரஞ்சுக்காரர்கள் தோல்வியடைந்தனர்.

பிரஞ்சுக்காரர்களின் தோல்விக்கான காரணங்களை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.


1. ஆங்கிலேயரின் வாணிக மற்றும் கடற்படை வலிமை.
2. பிரஞ்சு அரசின் உதவிகிடைக்காமை.
3. பிரஞ்சுக்காரர்கள் தக்காணத்தின் ஆதரவை நம்பியிருந்தனர். ஆனால், ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் வலுவான அடித்தளம் இருந்தது.



4. கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று முக்கிய துறை முகங்களை ஆங்கிலேயர் பெற்றிருந்தனர். பிரஞ்சுக்காரர்களிடம் பாண்டிச்சேரி மட்டுமே இருந்தது.
5. பிரஞ்சு தளபதிகளிடம் ஒற்றுமையில்லை.
6. ஐரோப்பியப் போர்களில் இங்கிலாந்து பெற்ற வெற்றி இந்தியாவில் பிரஞ்சுக்காரரின் எதிர்க்காலத்தை நிர்ணயிப்பதாக அமைந்தது.

**வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் நிறுவப்படுதல்**

இந்தியாவில் வளமிக்க, செல்வமிக்க பகுதிகளில் ஒன்றாக வங்காளம் திகழ்ந்தது. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி பரவுவதற்கு, வங்காளத்தில் அவாகள் ஏற்படுத்திய ஆதிக்கமே அடிப்படையாக அமைந்தது. வங்காள நவாப் சிராஜ் உத் தௌலாவுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே தொடங்கிய பூசல் 1757ஆம் ஆண்டு ஜீன் 23ம் நாள் நடைபெற்ற பிளாசிப்போரில் முடிந்தது. பிரிட்டிஷ் துருப்புக்களின் தளபதியான ராபர்ட் கிளைவ் நவாப்பின் படைகளை முறியடித்து வெற்றி வீரராக எழுச்சி பெற்றார். நவாப்பின் படைத்தளபதியான மீர்ஜாபரின் துரோகச் செயலே ஆங்கிலேயரின் எளிதான வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. இருப்பினும், பிளாசிப் போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றி இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி நிறுவப்பட்டதைக் குறிப்பதாக அமைந்தது.



ராபர்ட்கிளைவ்

1764 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் மீண்டும் ஒரு முறை அயோத்தி நவாப், முகலாயப் பேரரசர், வங்காள நவாப் ஆகியோரின் கூட்டுப்படைகளை பக்சார் போரில் முறியடித்தனர். ஆங்கிலேயரின் படைவலிமை முடிவாக நிலைநிறுத்தப்பட்டது. 1765ஆம் ஆண்டு வங்காளத்தின் ஆளுநராக ராபர்ட் கிளைவ் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டில் அலகாபாத் உடன்படிக் கையும் கையெழுத்திடப்பட்டது. அதன்படி, ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவிற்கு முகலாயப்போரரசர் திவானி உரிமைகளை வழங்கினார். இவ்வாறு, இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் நன்கு நிலை நாட்டப்பட்டது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டது*

1. *இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்.*
2. *இந்தியாவில் டச்சு, பிரஞ்சு, ஆங்கிலேய,டேனிஷ் குடியேற்றங்கள்*
3. *ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப் போட்டியும் கர்னாடகப் போர்களும்.*
4. *வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிறுவப்படுதலும் பிளாசிப் போரும்.*



# மாதிரி வினாக்கள்

**I.** சரியான விடையைத் தேர்வு செய்க

1. இந்தியாவில் முதலாவது போர்ச்சுகீசிய ஆளுநர்

அ) வாஸ்கோடகாமா ஆ) அல்மெய்டா

இ)அல்புகர்க் ஈ) பிராங்காய் மார்ட்டின்

2. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1767 ஆ) 1757

இ) 1764 ஈ) 1747

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கேப்டன் ஹாக்கின்ஸ் ..... அவைக்கு வருகை புரிந்தார்.
2. சீராம்பூர் ..... வணிக மையம்.
3. பாரிஸ் உடன்படிக்கை ..... கர்னாடகப்போரைமுடிவுக்கு கொண்டுவந்தது.

**III.** பொருத்துக

| | |
|---|---|
| 1. ஜாப் சார்னாக் | அ) தரங்கம்பாடி |
| 2. டேனியர்கள் | ஆ) கல்கத்தா |
| 3. பிரான்சிஸ் டே | இ) பாண்டிச்சேரி |
| 4. பிராங்காய் மார்ட்டின் | ஈ) சென்னை |

**IV.** சரியான சொற்றொடரை தேர்வு செய்க. ஒன்று மட்டுமே சரியானது

அ) ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் மூன்றாம் கர்னாடகப் போருக்கு வழிவகுத்தது.

ஆ) ஏழண்டுப் போர் இரண்டாம் கர்னாடகப் போருக்கு வழிவகுத்தது.

இ) ராபர்ட் கிளைவ் பிளாசிப்போரில் வெற்றி பெற்றார்.

ஈ) கர்னாடகப் போர்களின் விளைவாக வங்காளத்திலிருந்து பிரஞ்சுக்காரர்கள் வெளியேறினர்.

**V.** பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக

1. சர்தாமஸ் ரோ இரண்டாம் சார்லசின் தூதுவராக இந்தியாவுக்கு வந்தார்.
2. டியூப்ளேக்குப்பிறகு கோடஹியு பிரஞ்சு ஆளுநரானார்.

**VI.** சிறுகுறிப்பு வரைக (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. வாஸ்கோடகாமா
2. அல்புகர்க்
3. இந்தியாவில் டச்சு குடியேற்றங்கள்
4. பிளாசிப் போர்

**VII.** குறுகிய விடை தருக (100 வார்த்தைகள்)

1. இந்தியாவில் போச்சுசீசியரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியை விவரி.
2. வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் எழுச்சி பற்றி குறிப்பு வரைக.

**VIII.** விரிவான விடை தருக (200 வார்த்தைகள்)


1. இந்தியாவில் ஆங்கிலேய – பிரஞ்சு ஆதிக்கப் போட்டியை தொகுத்து எழுதுக.



## காலக்கோடு

**கி.பி. 1500 முதல் கி.பி. 1600 வரை**

1 அலகு = 10 ஆண்டுகள்



1540 - கன்னோசிப் போர்

1550

1555 - உமாயூன் மறைவு

1556 - இரண்டாம் பானிப்பட்டு போர்

1560

1565 - தலைக்கோட்டைப் போர்

1570

1575 - இபாதத் கானாவை அமைத்தல்

1580

1582 - தீன் இலாஹி

1590

1600

## காலக்கோடு

**கி.பி. 1600 முதல் கி.பி. 1700 வரை**

1 அலகு = 10 ஆண்டுகள்

1600 – ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக் குழு நிறுவப்படுதல்

1605 - ஜஹாங்கீர் அரியணையேறுதல்

1608 - கேப்டன் ஹாக்கின்ஸ் இந்தியா வருகை

1610

1615 - சர் தாமஸ் ரோ இந்தியா வருகை

1620

1627 - சிவாஜி பிறப்பு

1630



1639 - பிரான்சிஸ் டே மதராஸ் நகரத்தை உருவாக்குதல்

1640

1650

1660

1665 - புரந்தர் உடன்படிக்கை

1670

1674 - சிவாஜி முடிசூட்டிக்கொள்ளல்

1680

1690

1700